
விரிஞ்சி மலர்

-: மலர்ந்த நாள் :-

12 .12 .2010




விரிஞ்சிபுரம் அருள்மிகு

மரகதவல்லி உடனாய மார்க்கபந்தீஸ்வரர் திருக்கோயில்

குடமுழுக்கு விழா மலர்




குருவருள் கூட்டும் திருவருள் - கவிஞர். மா.சோதி



உலககெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்!



திருப்பணிகள் துவங்குமுன்
திருவருளை வேண்டுகிறார்!



வழித்துணை நாதரை வழிபட்டுத் தொடங்குகிறார்...

தோரண வாயில்

கவிஞர் **மா. சோதி,** ஆர்க்காடு,
தலைவர், மலர்க்குழு.

உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவனை, நிலவுலாவிய நீர்மலி வேணியனை, அலகில் சோதியனை, அம்பலத்து ஆடுவானை, ஆலயத்தில் வைத்து அழகு பார்த்து, அகமகிழ, வேண்டி வழிபட்டு வந்தனர் பண்டைத் தமிழர்கள். மன்னர் ஆட்சிக் காலங்களில் ஆண்டவனுக்கென்று பிரமாண்ட முறையில் காண்போர் வியக்கும் கலைநயத்தோடு கருங்கல்லால் கட்டி வானளாவிய கோபுரங்கள் எழுப்பி ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும் பண்டை வரலாற்றை உணரும் வகையில் அமைத்து வைத்தனர்.

அவ்வகையில் அமைந்த மிகப்பெரிய, பழமையான ஆலயம்தான் வேலூர் மாவட்டம், விரிஞ்சிபுரத்தில் விளங்கும் அருள்மிகு மரகதவல்லி உடனாய மார்க்கபந்தீஸ்வரர் ஆலயம், சுமார் 500 ஆண்டுகளுக்கு முன் மன்னர் காலத்தில் கட்டப்பட்ட மகத்தான ஆலயம் காலப்போக்கில் சிதலமடைந்து, மேற்கு வாயில் கோபுரம் கட்டப் பெறாத நிலையில் இருந்ததைக் கண்ட நமது வணக்கத்திற்கும் வழிபாட்டிற்குமுரிய **தவத்திரு. பாலமுருகனடிமை சுவாமிகள்** மிகவும் வேதனைப்பட்டு அங்கு அருள் பாலிக்கும் வழித்துணை நாதரிடமே வழிகேட்டு வேண்டினார். இறைவனின் கருணை இவர் மனதில் ஆட்கொண்டு, எதையும் செவ்வனே நடத்தி முடிக்கும் திறம் வாய்ந்த இவரையே ஆட்படுத்த, தம் ஆலயத்தைச் சிதலம் நீக்கி, புதுப்பொலிவோடும் அழகோடும் மிளிரச்செய்துக் கொண்டார் இறைவன்.

'**அவனருளாலே அவன் தாள் வணங்கி**' என்றும், '**அவனின்றி ஓர் அணுவும் அசையாது**' என்றும் கூறிய ஆன்றோர் வாக்கின்படி மாபெரும் திருப்பணிகள் மன்னர்களால் மட்டுமே செய்ய முடியும் என்கிற மரபினை மாற்றி, மண்வாழ்வைத் துறந்த ஒரு மாபெரும் துறவியால் கூட, சுமார் 2 கோடி ரூபாய் செலவில் இந்தத் திருப்பணியை நிறைவேற்ற முடியும் என்பதை அவனருள் துணையோடு செய்து முடித்துள்ளார் நம் சுவாமி.

அம்மகான் வாழுங்காலத்தில் நாமும் அவரோடு வாழ்கிறோம் என்கிறபேறு பெற்றமையை எண்ணி பாராட்டி, இன்னும் ஆயிரம் ஆண்டு காலம் விளங்கச்செய்த தொண்டினை நெஞ்சாரப் போற்றி வணங்கி அவர் கமல மலர்ப் பாதங்களுக்கு நன்றி மலர் மாலைசூட்டி, இறையருள் பெற்ற சுவாமிகளின் அருள்பெற்று உய்வோமாக.

இந்தத் திருப்பணி நிறைவுற்று 12.12.2010 மங்கலத் திருநாளில் நடைபெற்ற நன்னீராட்டுப் பெருவிழாவை முன்னிட்டு ஒரு ஆன்மிகக் கருவூலமாய்க் காலத்தின் வரலாற்றுப் பெட்டகமாய் ஒரு சிறப்பு மலர் ஒன்று குறிஞ்சி மலர் போன்று "விரிஞ்சிமலராகப்" பூத்து பறைசாற்ற ஆவணச்செய்ய ஆணையிட்ட தவத்திரு பாலமுருகடிமை சுவாமிகளின் திருவடிமலர் தொழுது முதற்கண் நன்றி மலர்மாலை சூட்டுகிறேன்.

சுவாமிகளின் திருப்பணிக்கு உறுதுணையாக இருந்து, பெருந்தொகை அளித்து ஊக்கப்படுத்திய ஸ்ரீபுரம் உருவாக்கிய அருள்திரு. சக்தி அம்மா அவர்களுக்கு நன்றி மலர்த் தூவி வணங்குகிறேன்.

சுவாமிகளின் திருப்பணிக்கு துணைநின்ற கலவை தவத்திரு. சச்சிதானந்த சுவாமிகளுக்கும் நன்றியைத் தெரிவித்துப் பணிகிறேன்.

மலரின் மணம் நாடெங்கும் வீசி பயன்தர நல்வாழ்த்து நல்கிய தவத்திரு. மடாதிபதிகள், அமைச்சர்கள், ஆன்றோர்கள், சான்றோர்கள், கவிஞர்கள் ஆகியோர்களுக்குச் சுவாமிகளின் சார்பாகவும், மலர்க்குழுவினர் சார்பாகவும் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் திருப்பணிக்குழுவாக செயல்பட்ட முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.கிருஷ்ணசாமி அவர்களுக்கும், அறங்காவலர் குழுத்தலைவர் பரம்பரை வைத்தியர் திரு.V.S.பாபு அவர்களுக்கும், திருமதி. விமலா வாசுதேவன் அவர்களுக்கும், முன்னாள் இந்நாள் அறங்காவலர்களுக்கும் திருக்கோயில் வரலாற்றுக் குறிப்புகள் தந்து உதவிய திரு. பொய்கை வெ.ஆனந்த சுந்தரராஜன் அவர்களுக்கும், என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மலர் சிறப்பாக அமைய அல்லும் பகலும் அயராது ஒத்துழைத்து பல சமயக் கருத்துகளை முறையாகத் தொகுத்து உதவிய சென்னை வானொலி மேனாள் இயக்குநர், 'சொல்லின் செல்வர்' திருமிகு. கோ.செல்வம், அவர்களுக்கும், ஆர்க்காடு, 'திருக்குறள் மூதறிஞர்' கவிஞர். இரா.இராதாகிருட்டிணன் அவர்களுக்கும், ஆர்க்காடு 'சன்மார்க்கப் புலவர்' ச.சுந்தரேசனார் அவர்களுக்கும், ஆர்க்காடு 'படைக்களப் பாவலர்' கவிஞர். துரை மூர்த்தி அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து மகிழ்கிறேன்.

மலரைப் பல வண்ணத்தில் அழகுற அச்சிட்டு உதவிய ஆர்க்காடு ஜே.ஜி.ஆர்ட்ஸ் உரிமையாளர் திரு.பா.ஜானகிராமராஜா அவர்களுக்கும், கணிப்பொறி வல்லுனர். திரு.மா.குப்பன் அவர்களுக்கும் புகைப்பட கலைஞர்கள் திரு.இரமேஷ், திரு.கிரி ஆகியோர்க்கும் நன்றியைத் தெரிவித்து அமைகிறேன்.







விரிஞ்சை திருப்பணி வாய்த்தது எப்படி?

கவிஞர் மா.சோதி, ஆர்க்காடு.

விழித்துணை வேலவன் அடிமையாய் உற்றதோ!
விடியலாய் பக்தர்தம் நெஞ்சினில் நின்றதோ!
பழித்துளி பற்றிடாப் பணிபலச் செய்ததோ!
பன்னெடுங் காலமாய் பலதவம் புரிந்ததோ!
வழித்துணை நாதரின் வரமதைப் பெற்றதோ!
வழிவழி மன்னர்தம் பரம்பரைத் தோன்றலோ!
மொழிதமிழ் நாடதன் மோனத்தவ ஞானியே!
மரகதத்தாய் விரிஞ்சையின் திருப்பணி வாய்த்தது!

ஆயிரம் குடமுழுக்கு, அகிலத்தில் செய்ததோ!
அருங்கல்விச் சாலைகட்டி, ஏழ்மையில் உழலும்பல்
ஆயிரம் மழலையர்க்கு, அறிவுக்கண் திறந்ததோ!
அருமருந்து மனைகட்டி, ஒளியிழந்து விழிக்கும்பல்
ஆயிரம் மக்கட்கு, அரியஒளி தந்ததோ!
அருந்தமிழ் வாணர்கூட்டி, அரியகுறள் மாநாட்டில்
ஆயிரம் மக்கட்கு அதனருமைச் சொன்னதோ!
அருவிரிஞ்சைப் புதுப்பிக்க இறைஉமை அழைத்தது!





விரிஞ்சை திருப்பணி வாய்த்தது இப்படி!

தவத்திரு. பாலமுருகனடிமை சுவாமிகள், இரத்தினகிரி.

பாட்டுவித்தால் பாடுகின்றேன் பணிவித்தால்
பணிகின்றேன் பதியே நின்னைக்
கூட்டுவித்தால் கூடுகின்றேன் குழைவித்தால்
குழைகின்றேன் குறித்த ஊணை
ஊட்டுவித்தால் உண்கின்றேன் உறங்குவித்தால்
உறங்குகின்றேன் உறங்கா தென்றும்
ஆட்டுவித்தால் ஆடுகின்றேன் அந்தோஇச்
சிறியேனால் ஆவ தென்னே!

என்று வள்ளல் பெருமான் பாடியது போல் இரத்தினகிரி அருள்மிகு பாலமுருகன் கடந்த 20.03.1968-ல் அவனோடு எம்மை கூட்டுவித்துக் கொண்டபடி அப்போது மேற்கொண்ட எமது சங்கல்பம் 2003ஆம் ஆண்டில் நமது இரத்தினகிரியில் திருக்குடமுழுக்கு நிறைவுற்ற பின் என் மனதில் நிழலாடிக் கொண்டிருந்த ஆறுபடை முருகனைத் தரிசிக்கப் புறப்பட்டேன். முதலில் ஆர்க்காட்டில் உள்ள கைலாச நாதர் ஆலயம் சென்று தரிசித்துவிட்டு, திருத்தணி, திருப்பரங்குன்றம், சுவாமிமலை, பழமுதிர்ச்சோலை, பழநி, திருச்செந்தூர் சென்றுவந்தேன். பிறகு மதுரை, திருச்சி, தஞ்சாவூர், திருவாரூர், திருவண்ணாமலை, கர்நாடகாவில் உள்ள மூகாம்பிகை, சுப்ரமண்யா, தர்மஸ்தலா, உடுப்பி, ஆந்திராவில் உள்ள ஸ்ரீசைலம், மகாநந்தி, மந்திராலயம் போன்ற தலங்களில் உள்ள ஆலயங்களை எல்லாம் சென்றுவழிபட்டு, வியப்போடும் மகிழ்வோடும் திரும்பினேன்.

இடையிலே, சமுதாயப் பணியாக ஏழைகளுக்கு உதவும் வகையில் ஒரு மருத்துவமனையும், சுற்றுப்புறத்தில் உள்ள சுமார் 20 கிராமத்துப் பிள்ளைகளுக்குத் தரமானக் கல்விதர ஒரு கல்விக்கூடமும் திருமுருகன் திருவருளால் கட்டி முடிக்கப் பெற்றது. செம்மொழியாம் நமது தமிழ்ப் பணியாக அவ்வப்போது திருக்குறள், திருவிளையாடற்புராணம், பெரியபுராணம், கந்தபுராணம் போன்ற அரிய இதிகாசங்களின், தமிழ்க்காவியங்களின் சிறப்புகளையும், சிறந்த நெறிகளையும் மக்களும், மாணவர்களும் அறிந்து, உணர்ந்து நடக்க வேண்டி தமிழகத்திலுள்ள தலைசிறந்த அறிஞர்களை, பேராசிரியர்களை இரத்தினகிரி வரவழைத்துக் கூட்டங்கள் நடத்தவும், மிகப் பெரிய அளவில் திருக்குறள் மாநாடும் பெரியபுராணம் மாநாடும் நடத்தவும் திருவருள் கூட்டுவித்தது.

இரத்தினகிரி பாலமுருகன் திருப்பணி முடிந்த பிறகு, தமிழகத்தின் பெரிய கோவில்களெல்லாம் பார்த்துவிட்டு வந்த பிறகு நமது பகுதியில் ஏதாவது ஒரு சிவன் கோயிலைப் புதுப்பித்து, திருப்பணி செய்யவேண்டும் என்று ஒரு எண்ணம் கொண்டிருந்தேன்.

அந்த நேரத்தில் விரிஞ்சிபுரம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. கிருஷ்ணசாமி மற்றும் அவ்வூர் பிரமுகர்கள் அடிக்கடி இரத்தினகிரி முருகனை வழிபட வருவார்கள். பிறகு என்னைச் சந்தித்து அவர்கள் விரிஞ்சிபுரம் வாருங்கள், அருள்மிகு மரகதவல்லி உடனாய மார்க்கபந்தீஸ்வரர் என்னும் வழித்துணை நாதரை ஒருமுறை தரிசியுங்கள். அது மிகவும் புராதனக் கோயில் செப்பனிட வேண்டும் என்று அழைப்பார்கள். 2003ல் பல திருக்கோயில்கள் குடமுழக்கு விழாவில் கலந்து கொள்ள பல ஊர்களுக்கு அன்போடு அழைத்ததன் பேரில் சென்றுவந்த போது விரிஞ்சிபுரம் முதன்முதலில் சென்றேன். மிகப் பழமையும், பிரம்மாண்டமுமான, அந்த அற்புதக் கற்கோயில் பராமரிப்பு இன்றி, முறையான வழிபாடின்றி உள்ள நிலையைக் கண்டு எனது உள்மனதில் ஒருதாக்கம் ஏற்பட்டது. அவ்வப்போது சென்றுவர ஆரம்பித்தேன். ஊர்மக்கள் ஒத்துழைப்புடன் சுற்றுப்புற கிராம மக்கள் ஈடுபாடுகள் கொண்டு, இக்கோயில் திருப்பணி செய்யலாம் என்று முடிவு செய்தேன். முதலில் ஸ்தபதிகள், சிற்பிகள் ஆகியோரை அழைத்து ஒரு திட்டம் தயாரிக்க 2004-ல் ஏற்பாடு செய்தேன்.

இரத்தினகிரியில் சுமார் ½ கிலோ மீட்டர் பரப்பளவில் ஒரு சிறிய கற்கோயில் கட்ட 32 ஆண்டுகள் ஆனதே, அதற்கு எத்தனைப் பாடுபட்டோம். நமது தமிழின மூதாதையர்கள் இவ்வளவு பெரிய கோயிலைக் கட்ட எத்தனை சிரமம், எவ்வளவு சிரத்தை, உழைப்பு மேற்கொண்டிருப்பார்கள் என்று எண்ணி மிகவும் வியந்து போனேன். அப்பேர்ப்பட்ட திருக்கோயில் இன்று பராமரிப்பற்ற அவலநிலையில் உள்ளதைக் கண்ட உந்துதல் தான் இதில் ஈடுபட என்னை அர்ப்பணித்துக் கொண்டேன்.

ஒரு மங்கலத் திருநாளில் 28-02-2007ல் பணியைத் தொடங்கினேன். 2004-ல் இருந்து பலமுறை சென்று மார்க்கபந்தீஸ்வரரை வழிபட்டபின் இதில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை ஆய்ந்து, தெரிந்து மனத்திண்மையுடன் மேற்கொள்ள முனைந்தேன். இதில் தமிழக அரசும், ஊர்மக்களும் ஒத்துழைப்பு நல்கினால் தான் இத்திருப்பணி நிறைவு செய்யமுடியும் என்று எதிர்பார்த்தேன்.

ஆனால் இதில சிறுசிறு பிரச்சினைகள், நெருடல்கள் இருப்பினும் அதனைப் பொருட்டாகக் கருதவில்லை. பொதுவாழ்வில் ஆன்மிக பணியில் ஈடுபடும்போது இது தவிர்க்க முடியாத உலகியல் நிலை என்பதனை அறிவேன். திருப்பணி தொடங்கும்போது தமிழக அரசின் இந்து சமய அறநிலையத்துறை ஆட்சியாளர், அதிகாரிகள் மூலம் 12 வது நிதி ஆணையத்தின் மூலம் ரூ. 20 லட்சம் நிதியுதவி அளித்து இத்திருப்பணிக்கு முழு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கியது.

ஸ்ரீபுரம் அருள்திரு சக்தி அம்மா அவர்கள் ரூபா 10 லட்சம் தந்து உதவினார்கள். பிறகு 5 லட்சமும், பிறகு 2½ லட்சமும் கொடுத்து உதவினார்கள். அது என்னை மேலும் ஊக்கப்படுத்தியது. மேலும் பல அன்பர்கள் செய்த பொருளுதவியால் திருப்பணி சிறப்பாக நடந்தது. மேற்கு கோபுரம் கல்காரம் பிரித்துக் கட்டும்போது, இது இவரால் நிறைவு செய்ய முடியுமா? என்ற கேள்விக்குறியோடு பார்த்த அன்பு உள்ளங்கள் பல. வழித்துணை நாதன் கருணையும், அவன் பேரருளும் உற்ற துணையாக இருந்து, சுமார் 2 கோடி செலவில் எடுத்த பணியினைச் செழுமையுற நிறைவு செய்தது.

என்னால் முடிந்தது ஒன்றுமில்லை
உன்னால் முடியாதது ஒன்றுமில்லை
எல்லாம் அவன்திருவருள் சித்தம்!



Om Namo Narayani

SRIPURAM
SRI NARAYANI PEEDAM

ஓம் நமோ நாராயணி

14.08.2010

கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது ஆன்றோர் வாக்கு. காரணம், கோயில் என்பது கலைக்கூடம் மட்டுமல்ல. ஒரு மனிதனுக்குத் தேவையான பக்தி, ஒழுக்கம், பண்பு, அன்பு, அமைதி, ஆனந்தம், ஆரோக்கியம், கலை, கலாச்சாரம், சமுதாய ஒற்றுமை போன்ற எண்ணற்ற நல்லவைகளை வழங்கும் ஒரு சக்திக்கூடம் ஆகும்.

ஆரோக்கியமாக இருக்க எப்படி மருத்துவமனைகள் அவசியமோ; அறிவாளிகளாய் விளங்க எப்படிக் கல்விக்கூடங்கள் அவசியமோ; பொருளாதாரம் மேம்பட எப்படித் தொழிற்சாலைகள் அவசியமோ அப்படி, பக்தி யின் மூலம் அமைதியையும், ஆனந்தத்தையும் உருவாக்கிக்கொள்ள கோயில்கள் அவசியமானதாகும்.

அந்த வகையில் பிரம்மாண்டமான, அழகான, பழமையான, சரித்திரம் மிக்க திருக்கோயில்தான், விரிஞ்சிபுரம் - ஸ்ரீ மரகதாம்பிகை சமேத ஸ்ரீ மார்க்கபந்தீஸ்வரர் ஆலயம். இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயத்திற்குப் பல வருடங்கள் கழித்து, வரும் 18.11.2010 அன்று கும்பாபிஷேகம் நடைபெற உள்ளதை எண்ணி மனதில் மட்டற்ற ஆனந்தம் உதிக்கின்றது.

இந்தச் சீரிய பணியில் பெரும் முயற்சி எடுத்துக்கொண்ட தவத்திரு. இரத்தினகிரி பாலமுருகனடிமை சுவாமிகளின் சேவை போற்றுதலுக்கு உரியதாகும். அவர்களுடன் இந்த நற்காரியத்தில் பங்குகொண்ட அனைத்துப் பக்தர்களும் மிகவும் பாக்கியசாலிகள் ஆவார்கள்.

ஒரு கோயிலை அமைப்பது எந்த அளவிற்கு முக்கியமானதோ அதைவிட முக்கியமானது அந்தத் திருக்கோயிலை நன்றாகப் பராமரிப்பது. எனவே இத்திருக்கோயில் அமைந்துள்ள ஊர்மக்களும், சுற்றுப்புற கிராம மக்களும் இத்திருக்கோயிலைத் தங்களது உடைமையாகக் கருதிச் சீரியமுறையில் பராமரித்துச் சிறப்பான முறையில் பூஜைகளை நடத்தி ஸ்ரீ மரகதாம்பிகை சமேத ஸ்ரீ மார்க்கபந்தீஸ்வரரின் பரிபூரண அருளோடும் எல்லாம் வல்ல அன்னை நாராயணியின் அருளாசியோடும் வளமுடன் வாழவும், மேலும் உலகத்தில் உள்ள அனைத்து ஜீவன்களும் சிறப்புற்று வாழவும் அன்புடன் ஆசிர்வதிக்கின்றோம்.

சக்தி அம்மா

ஸ்ரீ சக்தி அம்மா
ஸ்ரீபுரம் – நாராயணி பீடம்
திருமலைக்கோடி

Sripuram, Sri Narayani Peedam
(A Unit of Om Sakthi Narayani Siddar Peedam Charitable Trust)
Thirumalaikodi, Vellore - 632 055, Tamil Nadu, INDIA. Phone: +91.416.220 6500 (10 lines) | Fax: +91.416.220 6666
contact@sripuram.org | www.sripuram.org | www.narayanipeedam.org

துரைமுருகன், M.A., B.L.,
சட்டம், நீதிமன்றங்கள் மற்றும்
சிறைச்சாலைகள் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009

நாள் 6.8.2010

வாழ்த்துச் செய்தி

அருள்மிகு பாலமுருகனடிமை அவர்களுக்கு,

வணக்கம்,

11.7.2010ம் தேதியிட்ட தாங்கள் எழுதிய கடிதத்தில் விரிஞ்சிபுரம் திருக்கோவிலில், பல சீர்திருத்தப் பணிகளைத் தாங்கள் மேற்கொண்டிருப்பதைக் கண்டு எனக்கு மகிழ்ச்சி.

இறைப்பணி
தமிழ்ப் பணி
பொதுப் பணி

ஆகிய மூன்றையும் ஒரு சேரத் தாங்கள் பன்னெடுங்காலமாகச் செய்து வருவதை நான் அறிவேன். விரிஞ்சிபுரம் திருக்கோவில் பணியும் அதில் ஒன்று.

எதைச் செய்தாலும் சிறப்புறச் செய்யும் தாங்கள், இப்பணியையும் சிறப்புறச் செய்வீர்கள்.

தாங்கள் ஆற்றும் பணிகளுக்கெல்லாம் என் நல்வாழ்த்துகள்.

அன்புடன்,
உங்கள்
துரைமுருகன்
(துரைமுருகன்)

எஸ். ஜெகத்ரட்சகன்
S. JAGATHRAKSHAKAN
एस. जगतरक्षकन

மத்திய இணை அமைச்சர்,
தகவல் மற்றும் ஒலிபரப்புத்துறை,
இந்திய அரசு, புதுதில்லி – 110 115

MINISTER OF STATE FOR
INFORMATION & BROADCASTING
GOVERNMENT OF INDIA
SHASTRI BHAWAN, NEW DELHI - 110 115

அணிந்துரை

'ஆலயம் தொழுவது சாலவும் நன்று ; கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்பன நம் முன்னோர் கண்ட அமுதமொழிகள். தமிழ்நாட்டில் காணப்படும் அமைதிக்கும், இணக்கமான வாழ்க்கை முறைக்கும் தமிழ் மக்கள் நெஞ்சில் நிறைந்திருக்கும் ஆன்மிக நாட்டமே காரணங்களாகும். ஆன்மிக வளர்ச்சியிலும், தமிழர் நாகரிகம், பண்பாடு, கலை, இலக்கிய வளர்ச்சியிலும் பெரும்பங்கு வகிப்பன ஆலயங்களே ஆகும். புதிய ஆலயம் ஒன்றைக் கட்டுவது புண்ணியம். அதைவிட மேலான புண்ணியம் சிதைவுற்ற ஆலயத்தைப் புனரமைத்துப் புதுப்பிப்பதாகும்.

வேலூர் மாவட்டம், திருவிரிஞ்சை அருள்மிகு வழித்துணை நாதர் ஆலயம் காலப்பழமையும், கட்டுமான எழிலும் கொண்ட சீர்மைமிக்கது. அருணகிரிநாதராலும், மார்க்கசகாயதேவராலும் பாடப்பெற்ற முருகன் எழுந்தருளியுள்ள தலம். திருப்பணி வேண்டி நின்ற இத்தலத்தின் மேற்குக் கோபுரம், நிறைவு பெறாது மொட்டைக் கோபுரமாக நின்றது.

இரத்தினகிரி முருகனால் ஆட்கொள்ளப்பட்டு, வானத்துக் கந்தகிரியைப் பூமிக்குக் கொண்டு வந்ததைப்போல, இவ்வாலயத்தைப் புதுக்கிச் சாதனை புரிந்த அருளாளர் தவத்திரு. பாலமுருகனடிமை சுவாமிகள். அவர்கள் தலைமையில் திருவிரிஞ்சைச் சிவாலயத்தில் திருப்பணிக்குழு அமைக்கப்பட்டு, சுவாமிகளின் ஈடுபாடுமிக்க பெருமுயற்சியாலும், அறக்கொடையாளர்களின் வழங்கலாலும், திருப்பணிகள் யாவும் சீரிய முறையில் நிறைவுபெற்று, எதிர்வரும் 12.12.2010 அன்று இவ்வாலயம் குடமுழுக்குக் காணவிருப்பது மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. சுவாமிகளின் அரிய முயற்சியால் மேற்குக் கோபுரம் ஐந்துநிலைக் கோபுரமாக எழுந்து நின்று, அன்னாரின் முயற்சிக்குக் கட்டியம் கூறுகின்றது.

சமய வளர்ச்சியோடு, சமூகம் மற்றும் மொழி வளர்ச்சியினும் பெருநாட்டம் கொண்டிலங்கும் தவத்திரு. பாலமுருகனடிமை சுவாமிகள் முயற்சியில் நடைபெறும் அருள்நிறை மரகதவல்லி உடனமர் வழித்துணைநாதர் குடமுழுக்கு விழாச் சிறக்கவும், விழாவின் அங்கமாக வெளியிடப்படவிருக்கும் விழாமலர் ஆன்மிக நலம் கொழிக்கும் களஞ்சியமாக உருப்பெறவும், இம்முயற்சியில் ஈடபட்டு உழைக்கும் அனைவருக்கும் நலமெலாம் பெருகவும் இறையருளைச் சிந்தித்து நெஞ்சார வாழ்த்தி மகிழ்கிறேன்.

அன்பன்

எஸ். ஜெகத்ரட்சகன்

கே.ஆர். பெரியகருப்பன்
இந்து சமய மற்றும் அறநிலையத்
துறை அமைச்சர்

வாய்மையே வெல்லும்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009

நாள் 23.11.2010

வாழ்த்துச் செய்தி

தொன்மை வாய்ந்த தண்டமிழ்த் திருநாட்டில்தான் மன்னர் காலத்தில் கட்டப்பட்ட சிவாலயங்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. அற்புதமான கலை அம்சம் நிறைந்த சிற்பங்கள், ஆகம விதிகளோடு விசாலமான முறையில் கட்டப்பட்ட ஆலயங்களைக் கண்டு அன்னிய நாட்டு மக்களும் வியந்து பாராட்டுகிறார்கள். நான் அறநிலையத் துறை அமைச்சராகப் பதவி ஏற்ற நாள் முதல் பல்வேறு ஆலயத் திருவிழாக்களில் கலந்துக் கொள்ளும் வாய்ப்பு கிடைத்தபோது மிகப்பெரிய ஆலயங்கள் எல்லாம் கட்டி முடிக்க எத்தனை ஆண்டுகள் ஆகியிருக்கும் என்று மலைத்திருப்பேன்.

அந்த வகையில் வேலூர் மாவட்டத்தில் அமைந்துள்ள மிகப்பெரிய ஆலயமான விரிஞ்சிபுரம் அருள்மிகு மரகதவல்லி உடனாய மார்கபந்தீசுவரர் ஆலயம் 800 ஆண்டுகள் பழமை வாய்ந்தது. அதன் மிகப்பெரிய பரப்பளவும், நெடிய மதில் சுவரும், இன்று கட்டவேண்டுமென்றால் 10 ஆண்டுகளுக்கும் மேலாகும். அத்தகைய சிறப்பு வாய்ந்த ஆலயத்தின் திருப்பணித் தொடக்கவிழா 28.02.2007 தேதியில் நடைபெற்றபோது நான் கலந்துகொண்டேன். தற்போது செப்பனிட்டும், மேற்கு வாயிலில் புதிய 88 அடி உயர இராஜகோபுரம் அமைத்தும் வண்ணப் பொலிவோடு திருப்பணி முடித்து குடமுழுக்கு விழாவை நடத்த, நமது அன்பிற்கும், போற்றுதலுக்கும் உரிய தவத்திரு. இரத்தினகிரி பாலமுருகனடிமை சுவாமிகள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

தவத்திரு. சுவாமிகள் இரத்தினகிரியில் செய்து வரும் ஆன்மிகப் பணியோடு, ஏழைகளுக்கு உதவும் எண்ணத்தில் கல்விப்பணி, மருத்துவப்பணி, செம்மொழியாம் தமிழ்ப்பணி என்று பல்வேறு பணிகளை மிகச் சிறப்பாகச் செய்து வருகிறார் என்பதை நன்கு அறிவேன். இன்று விரிஞ்சிபுரம் ஆலயத்தின் குடமுழுக்கு விழாவும் அதையொட்டி ஆன்மிகச் சிறப்பு மலர் ஒன்று வெளியிடுவதும் சிறப்பான தொண்டாகும்.

விழா செவ்வனே நடைபெறவும், விழா மலர் சிறப்பாக அமைந்து ஆன்மிக மனம் பரப்பவும் உளமாற வாழ்த்தி மகிழ்கிறேன்.

நன்றி.



அன்புடன்,

கே.ஆர். பெரியகருப்பன்
23/11/10

ஜி. கே. வாசன்
जी. के. वासन
G.K.VASAN

पोत परिवहन मंत्री
भारत सरकार
नई दिल्ली - 110 001
MINISTER OF SHIPPING
GOVERNMENT OF INDIA
NEW DELHI - 110 001

21-07-2010

வாழ்த்துச் செய்தி

அன்புடையீர்! வணக்கம்.

தாங்கள் அன்புடன் அனுப்பிய கடிதம் கிடைத்தது விரிஞ்சிபுரம் அருள்மிகு மரகதாம்பிகை உடனுறை மார்க்கபந்தீசுவரர் திருக்கோவில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா நடைபெறுவதும், அதனை முன்னிட்டு ஆன்மிகச் சிறப்பு மலர் வெளியிடுவதும் அறிந்தேன். மிக்க மகிழ்ச்சி. தங்களின் ஆன்மிகப்பணி தொடர இறைவன் அருள்புரிய வேண்டும் என்று வேண்டுகிறேன். திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா சிறப்புடன் நடைபெறவும், விழா ஆன்மிகச் சிறப்பு மலர் சீரிய முறையில் வெளிவரவும் என் மனம் நிறைந்த நல்வாழ்த்துகள்.

தங்கள் அன்புள்ள

G.K.V.

ஜி.கே.வாசன்

Transport Bhawan, New Delhi - 110 001. Tel : 23710356 Fax : 23752584
4, Ashoka Street, Alwarpet, Chennai - 600 018. Ph : 044 - 2499 1901, 2499 1906 Fax : 044 - 2499 8354.

M. Abdul Rahman, M.A.,
MEMBER OF PARLIAMENT
(LOK SABHA)
Vellore Constituency, Tamilnadu

95/31, Deter Line
Mosque Street,
Hussainpura
Vellore-632 001
☎ : 0416-2233400

தேதி : 7.10.2010

வாழ்த்துரை

உலகின் சிறப்பு பெற்ற சிவத்தலங்கள் 1008. அதனில் பிரசித்திப் பெற்ற சிவத்தலங்கள் 108. இவற்றுள் மிகவும் சிறப்பு வாய்ந்த சிவத்திருத்தலங்கள் 18. அவற்றுள் ஒன்று நம் மாவட்டத்தில் உள்ள திரு விரிஞ்சிபுரம் திருக்கோயில் என்பது, நமது மாவட்டத்திற்குப் பெருமை சேர்ப்பதாகும்.

1987-ஆம் ஆண்டு தமிழ்க்கடல் திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களின் பெரு முயற்சியினால் இக்கோயில் கும்பாபிஷேகம் நடைபெற்றாலும் மேற்கு கோபுர பணிகள் ஏனோ எழுப்ப முடியாமல் போனது. 20 ஆண்டுகளுக்குப் பிறகு அருள்மிகு பாலமுருகன் அடிமை அவர்களின் தலைமையின் கீழ் சுமார் ரூபாய் 2 கோடி செலவில் புதுப்பொலிவுடன் 110 அடி உயரமுள்ள ராஜகோபுரத்திற்குத் திருக்குட நன்னீராட்டு விழா நடைபெறுவது அறிந்து மிகவும் மகிழ்ச்சியுற்றேன். மத நல்லிணக்கத்திற்கும் சாதி மதங்களைக் கடந்து மனித நேயத்தோடு அனைவரும் சகோதரர்கள் என்ற நிலையில் நமது மாவட்டம் மற்ற மாவட்டங்களுக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

அதனை எண்ணி மகிழும் நான் இக் கும்பாபிஷேகப் பெருவிழா சிறப்புடன் இனிதே நடைபெறவும், தாங்கள் வெளியிடும் சிறப்பு மலர் இனிதே அமையவும் எனது இதயங்கனிந்த நல்வாழ்த்துகள்.

அன்புடன்,

M. Abdul Rahman, M.A.,

Justice M. Karpaga Vinayagam
Chairperson

APPELLATE TRIBUNAL FOR ELECTRICITY
CORE 4, 7TH FLOOR, SCOPE COMPLEX,
LODHI ROAD, NEW DELHI - 110 003
TEL.: 24368485 • FAX : 24368495
Mobile : 9990324999

வாழ்த்துரை

19.9.2010

திருவிரிஞ்சிபுரம் அருள்மிகு வழித்துணைநாதர் ஆலயத்தின் குடமுழுக்கு விழா 12.12.2010 அன்று நடைபெறும் செய்தியும், அந்த விழாவை ஒட்டி தவத்திரு. பாலமுருகன் அடிமை சுவாமிகளைத் தலைவராகக் கொண்ட திருப்பணிக்குழு திருக்குட நன்னீராட்டு மலர் வெளியிடவிருக்கிற செய்தியும் நெஞ்சத்தை நிறைக்கிற இனிமையான செய்திகள்.

காஞ்சிபுரம் திரு. சிவ. சண்முகசுந்தரம் எழுதி வெளியிட்ட திருவிரிஞ்சை தலபுராணம் படித்துப் பார்த்தேன். ஒரு சிறுவனுடைய ஆழமான பக்தியைக் கண்டு இறைவனே தனது திருமுடியை வளைத்து, குனிந்து அந்தச் சிறுவனுடைய திருமஞ்சனத்தை ஏற்றுக் கொண்டதாகக் குறிப்பிட்டிருந்தது. ஆழமான பக்தி இருந்தால் சிறுவனுக்கும் இறைவன் தலைசாய்த்து, வளைத்து வழிகாட்டுவான் என்பதுதான் இதன் பாடம்.

உண்மையான உயர்வுக்கு பக்தி தான் அடிப்படை. பக்தி என்பது ஆலயத்திற்குச் சென்று ஆண்டவனை வழிபடுவது மட்டுமன்று ; அந்த பக்தி "உண்மை, நேர்மை, பலன் நோக்காது கடமையைச் செய்யும் ஓர்மை, பிறர்க்கு ஊறு செய்யாமை" போன்ற நற்பண்புகளை நமக்கு ஊட்டுவதாக அமையவேண்டும்.

வாழ்க்கை என்பது ஒரு போராட்டம். சோதனை வந்து கொண்டுதான் இருக்கும். அதை எதிர்நீச்சல் போட்டுச் சமாளித்துக் கொண்டே இருக்கவேண்டும். அப்போது தான் அந்தச் சோதனை 'சாதனை'யாக மாறும். அதற்கான 'சக்தி'யைக் கொடுப்பதுதான் 'பக்தி'.

ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கைக்கும் ஒரு தெய்வீக நோக்கம் உண்டு. அந்த நோக்கம் நிறைவேற அந்த வாழ்க்கை பயன்படவேண்டும். அடுத்தவருக்கு உதவும்படி வாழ்க்கை அமைவதுதான் ஆன்மிக வாழ்க்கை. நாம் அடுத்தவர்க்கு உதவினால் இறைவன் நமக்கு உதவுவான். நாம் அடுத்தவருக்கு வழித்துணையாக இருந்தால், இறைவன் நமக்கு வழித்துணையாக இருப்பான். அதுதான் உண்மையான பக்தி.

இந்தப் பக்தி தழைத்து ஓங்கட்டும். அருள்மிகு வழித்துணைநாதர் அனைவருக்கும் அருள் செய்து வழிகாட்டட்டும்! குடமுழுக்கு விழா கோலாகலமாக நடைபெறவும் திருக்குட நன்னீராட்டு மலர் எங்கும் நறுமணம் பரப்பும் அழகிய மலராக மலரவும் சிவபெருமானை வேண்டுகிறேன்.

எம். கற்பகவிநாயகம்.

வாழ்த்துகள்!

Justice P. Jyothimani
Judge, High Court,
Madras.

"Pasumai"
No. 10(NB) PSKR Salai,
Adayar, Chennai-600 028.

நாள் : 11.08.2010

விரிஞ்சிபுரத்தின்கண் அமைந்துள்ள தொன்மைவாய்ந்த சிவத்தலமாகிய அருள்மிகு மரகதாம்பிகை உடனுறை மார்க்கபந்தீஸ்வரர் ஆலயத்தின் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா நடைபெறுகின்ற இந்நன்னாளில், 1300 ஆண்டுகால புராதனமான இத்திருக்கோயிலைப் புதுப்பிக்கும் பொருட்டு இறைவன் திருவருள்படி அதனை ஏற்றுக்கொண்டு அருள்மிகு பாலமுருகனடிமை சுவாமிகள் பல்வேறு சிரமங்கள், இன்னல்களையெல்லாம் கடந்து திடமான மன உறுதியோடு,

'வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றவை எல்லாம் பிற'

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க, செயல்படுத்தியுள்ள மாண்பு சிறப்பானது.

தவசீலரான வணக்கத்திற்குரிய சுவாமிகள் வழித்துணைநாதருக்கும் நாயகிக்கும் செய்துள்ள இத்தொண்டு பல நூறு ஆண்டுகள் போற்றி வழிபடக்கூடியது. பொதுவில், தொண்டைநாடு பல தொன்மை வாய்ந்த ஆலயங்களைக் கொண்டது மட்டுமின்றி, தலைசிறந்த ஞானிகள், பண்டிதர்கள், துறவிகள், ஆன்மிகச் செம்மல்கள் பலரை உட்கொண்டது. இறைவன் திருவுளம் கொண்டு அம்மையுடன் வீற்றிருக்கும் பழமைமிகு இத்திருத்தலம் சுவாமிகளின் முயற்சியில்லையெனில் இத்தகைய சிறப்போடும் பொலிவோடும் வந்திருக்க வாய்ப்பில்லை.

'பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு'

என்ற தெய்வப் புலவர் கூற்றின்படி இவ்வரிய தெய்வச் செயல் பற்றற்றானைப் பற்றிய ஞானிகளால் மாத்திரம் ஆவதாகும்.

தொண்டை மண்டலத்தில் அமைந்துள்ள இக்கோவில் இந்நிலைக்கு வந்திருப்பதில் ஆச்சரியமில்லை. ஏனெனில், இப்பகுதி ஆதியிலிருந்து ரமணர், விட்டோபா சுவாமிகள், தோப்பா சுவாமிகள், சேஷாத்திரி சுவாமிகள் போன்ற பெரிய மகான்களும் அவர்கள் காட்டிய வழியில் இன்றைய தினம் நம்மிடையே வாழ்ந்து வருகின்ற பாலமுருகனடிமை சுவாமிகள், கலவை சச்சிதானந்த சுவாமிகள், ஸ்ரீ நாராயணி பீடம் அம்மா அவர்கள், மகாதேவ மலை சித்தர் சுவாமிகள் போன்ற ஆயிரக்கணக்கான நெறியாளர்களும், சித்தர்களும் வாழ்கின்ற இடம். மேலும் ஒரு சிறப்பு, விரிஞ்சிபுரம் சிவபெருமானை வழிபட்ட மற்றொரு மகான் அப்பய்ய தீட்சிதர் அவர்கள். அவர் ஆன்ம ஞானத்தைத் தமக்குள் தேடிய பெருந்தகை.

திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களின் பெருமுயற்சியால் 1987ஆம் ஆண்டு நடைபெற்ற திருக்குடமுழுக்கிற்குப் பின் தற்போது நடைபெறுகின்ற திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாவில் ஆன்மிக பெருமக்களும், சான்றோர்களும் பெருமளவில் கலந்து கொண்டு இவ்விழாவிற்குச் சிறப்பு சேர்ப்பதுடன், தவத்திரு பாலமுருகனடிமை சுவாமிகளின் சிறப்பான முயற்சி மற்றும் செயல்திறனை வியந்து பாராட்டுவது நம்முடைய கடமை. இவ்வகையில் மிகப்பழமையான இத்திருக்கோயிலில் உறைந்துள்ள உலகத் தலைவனையும் தலைவியையும் மனதார வணங்கி வாழ்த்தும் பெருமையும் பெறுவோம்.

நன்றி! வணக்கம்!



அன்பன்,

P. [signature]

(நீதியரசர் ப. ஜோதிமணி)

சி. ஞானசேகரன்
சட்டமன்ற உறுப்பினர்,
வேலூர் தொகுதி.

மனை எண். 29, பகுதி - 1,
சத்துவாச்சாரி.
தொலைபேசி : 0416-2252545

26.9.2010

வாழ்த்து மடல்

தவத்திரு. பாலமுருகனடிமை அவர்களின் அருளால் ஆயிரமாண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட விரிஞ்சிபுரம் அருள்மிகு மரகதாம்பிகை உடனுறை ஸ்ரீ மார்கபந்தீஸ்வரர் திருக்கோயில் சிதிலமடைந்ததைப் புதுப்பிக்கும் பணியும், பல்லாண்டுகளுக்கு இடிபட்ட மேற்கு இராஜகோபுரம் நிர்மாணிக்கும் பணியும் மற்றும் அத்திருக்கோயிலின் திருக்குடமுழுக்குப் பணியும், ரூ. 2 கோடியில் நடைபெறுவது கண்டு பெருமகிழ்ச்சி.

வரலாற்று சிறப்புமிக்க அவ்வாலயம், சிதிலமடைந்திருந்ததை, தவத்திரு. பாலமுருகனடிமை அல்லும் பகலும் பாடுபட்டு, கண்விழித்து, நேரடிப்பார்வையில் குடமுழுக்கு செய்வது போற்றுதற்குரிய ஒன்றாகும். மக்களுக்கு ஆன்மிகமும், ஒழுக்கமும் மேன்மேலும் வளர தவத்திரு. பாலமுருகனடிமை செய்யும் பணி அளவிலடங்கா. எல்லாம் வல்ல இறையின் அருளால் அவர்பணி மேன்மேலும் சிறக்க வேண்டுமென எம்பெருமான் முருகனை வேண்டுகிறேன்.

இவண்,

சி. ஞானசேகரன்

இராணிப்பேட்டை
ஆர்.காந்தி, எம்.எல்.ஏ.,
மாவட்ட தி.மு.க. செயலாளர்
வேலூர் மாவட்டம்.

இல்லம் : ☎ : 04172 - 272707
அலுவலகம் : ☎ & பேக்ஸ் : 04172 - 271290
செல் : 94432 22770
7(2ஏ/3) இரயில்வே ஸ்டேஷன் ரோடு,
இராணிப்பேட்டை - 632 401.

தேதி : 10.10.2010

வாழ்த்துரை

வேலூர் மாவட்டத்தின் புகழ் பெற்ற புராதன ஆன்மிகத் திருத்தலமாம் திருவிரிஞ்சிபுரம் அருள்மிகு மரகதாம்பிகை உடனுறை மார்க்கபந்தீசுவரர் திருக்கோயிலின் ராசகோபுரங்கள் உள்ளிட்ட அனைத்துப் பணிகளும் மிகச் சிறப்பான முறையில் சுமார் 2 கோடி ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்டு வரும் 12.12.2010 அன்று திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா நடைபெறுவதை அறிந்து பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

சிறப்பு மிக்க இப்புண்ணிய திருப்பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி, மிக்க சிரமம் மேற்கொண்டு, இந்த அரிய பணியினைச் சிறப்பாக நிறைவு செய்த, ஆன்மிகப் புரவலர் தவத்திரு. பாலமுருகனடிமை சுவாமிகள் அவர்களையும், மற்றும் திருப்பணிக் குழுவினர் அனைவரையும் உளமாறப் பாராட்டி மகிழ்கிறேன்.

மிக்க நன்றி.

அன்புடன்,



74, மவுண்ட் ரோடு,
கிண்டி, சென்னை - 600 032.
அலு. 2235 0814 இல். 2499 6898
ஃபாக்ஸ் : 2235 0041

நா. மகாலிங்கம், பிஎஸ்.சி. எப்.ஐ.இ.
தலைவர், சக்தி நிறுவனங்கள்

23.07.2010

வாழ்த்துரை

தவத்திரு. பாலமுருகன் அடிமை சுவாமிகள் இரத்தினகிரி முருகனால் ஆட்கொள்ளப்பட்ட மாதவச்சீலர். அருணகிரியடிகளைச் "சும்மா இரு சொல்லற" என்று கூறி இறைவன் ஆட்கொண்டான். பாலமுருகன் அடிமை சுவாமிகளைச் 'சொல்லற! தொண்டு செய்!' என்று கூறி ஆட்கொண்டான்.

சொல்லற்ற மோனத்தவம் மேற்கொண்டிருக்கும் அடிகள் கீழ்மின்னலைத் தன்னிறைவு பெற்ற சிற்றூராக மாற்றியிருக்கிறார்கள். கற்பூரத்திற்கு வழியற்றிருந்த கூரைக் கோயிலைச் சிற்பச் செழுங்கலைக் கோயிலாக மாற்றியிருக்கிறார்கள். இன்று அது யாத்திரைத் தலமாக, சுற்றுலாத் தலமாக யாவரையும் வா என்று அழைக்கும் மாபெரிய தலமாக உருவும் திருவுங்கொண்டு பொலிகின்றது. அடிகளுடைய திருக்கண் பார்வை திருவிரிஞ்சிபுரத்தை நோக்கியிருக்கிறது. அருணகிரி சுவாமிகளும், மார்க்க சகாயதேவரும், அப்பைய தீட்சிதரும் அற்புதமான பாடல்களை அருளிச் சென்றுள்ளார்கள். சைவ எல்லப்ப நாவலர் தந்த தலபுராணம் முதலிய பல சிறப்பும் பெற்று வேலூர், காங்கேயநல்லூர், வள்ளிமலை முதலிய முருகன் தலங்களை அருகிலே பெற்றிருக்கும் திருவிரிஞ்சைத் திருக்கோயில் முழுதையும் பெரும் பொருட்செலவில் (இரண்டு கோடியை விஞ்சும் அளவில்) பாலமுருகன் அடிமை சுவாமிகள் புதுப்பித்திருக்கிறார்கள்.

கரபுரம் என்ற வைப்புத் தலமாகவும் திருவிரிஞ்சையைச் சிலர் கொள்வதுண்டு.

வரதட்சணை கொடுப்பதும் வாங்குவதும் குற்றம் என்று சட்டமியற்றிய பிரதாபசிம்மனின் கல்வெட்டு மனித குலத்துக்கு ஒரு பாடம்.

இத்தனை வரலாற்றுச் சிறப்பு, இலக்கியச் சிறப்பு, கலைச் சிறப்பு முதலியவைகளோடு பாலமுருகனடிமை சுவாமிகளின் திருப்பணிச் சிறப்பையும் பெறுவது ஒரு வரலாற்றுப் பெரு நிகழ்வு ஆகும். திருவிரிஞ்சிபுரம் குடமுழுக்கு விழா மலர் அறிஞர்களின் கருத்து மணம் வீசும் ஆன்மிகச் செழும்பொழிலாக விளங்க இருக்கிறது. குடமுழுக்கும் விழா மலரும் சிறப்புற வேண்டி வழித்துணைப் பெருமானையும் வடிவேல் அரசையும் நினைந்து வாழ்த்துகிறேன். மோனத்தவ முனிவர் பெருமானுக்கு என் வணக்கங்கள்.

அன்புடன்

(கையொப்பம்)

(நா. மகாலிங்கம்)

P.R. Ramasubrahmaneya Rajha
Chairman, Ramco Group

வாழ்த்துரை

சுமார் 1300 ஆண்டு காலப் புராதனமான சிவத்தலமாகிய வேலூரை அடுத்த விரிஞ்சிபுரம் அருள்மிகு மரகதாம்பிகை உடனுறை அருள்மிகு மார்கபந்தீஸ்வரர் திருக்கோயிலில் சுமார் 88 அடி உயரத்தில் புதியதாக இராஜகோபுரம் நிர்மாணிக்கப்பட்டும் சுமார் 2 கோடி மதிப்பீட்டில் திருக்கோயில் முழுவதுமாக திருப்பணிகள் செய்யப்பட்டு, திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா நடைபெற இருப்பதையும் அறிந்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இத்திருப்பணிகள் யாவும் செவ்வனே செய்து முடிக்க தவத்திரு. பாலமுருகனடிமை சுவாமிகள் எடுத்துக்கொண்ட பெரும் முயற்சியினை நான் போற்றுகிறேன். இத்திருப்பணிகள் யாவும் அவர்களாலும் அவர்களின் ஆத்மார்த்தமான சிஷ்யர்களாலும் இனிதே செய்து முடிக்கப்பட்டுள்ளன. தவத்திரு. பாலமுருகனடிமை சுவாமிகளின் போற்றுதலுக்குரிய ஆன்மிக சக்தி மகத்தானது. அவர்களின் தெய்வீகச் சேவை மேன்மேலும் சிறக்க எல்லாம் வல்ல எம்பெருமானைப் பிரார்த்திக்கிறேன்.

இத்திருக்கோயிலின் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாவில் ஆன்மிக அன்பர்களும் பக்தர்களும் திரளாகக் கலந்துக் கொண்டு அருள்மிகு மரகதாம்பிகை உடனாகிய அருள்மிகு மார்கபந்தீஸ்வரர் திருவருளைப் பெற்றுய்ய பிரார்த்திக்கின்றேன்.

(பி.ஆர். ராமசுப்பிரமணிய ராஜா)
சேர்மன், ராம்கோ குரூப்

Residence : "Ramamandiram", Rajapalayam - 626 117. India.
☎ : Residence : 04563-235566, Office : 04563-235523, Fax : 04563-235158
E-mail : rajamill@sancharnet.in

தினத் தந்தி
DAILY THANTHI

(சென்னை, மதுரை, திண்டுக்கல், திருச்சி, தஞ்சாவூர், கோயம்புத்தூர், ஈரோடு, சேலம், திருநெல்வேலி, நாகர்கோவில், வேலூர், கடலூர், பெங்களூர் மற்றும் பாண்டிச்சேரி ஆகிய நகரங்களில் ஒரே நேரத்தில் அச்சாகிறது)

19.7.2010

வாழ்த்துச் செய்தி

1300 ஆண்டு கால வரலாற்றுச் சிறப்பு பெற்ற ஆலயமான விரிஞ்சிபுரம் அருள்மிகு மரகதாம்பிகை உடனுறை மார்க்கபந்தீசுவரர் திருக்கோவிலின் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா, டிசம்பர்த் திங்களில் நடைபெற இருப்பதை அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

சிதிலமடைந்த மேற்கு ராஜகோபுரம் முற்றிலும் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு, சுவாமி, அம்பாள், நடராசர், ஆறுமுகர், விநாயகர், கருவறைகள், முதல்-இரண்டாம் பிரகாரங்கள், சிம்மக்குளம், நந்தி மண்டபம், உற்சவர் மண்டபம் ஆகியவை செப்பனிடப்பட்டு, ரூ. 2 கோடி செலவில் திருப்பணிகள் நிறைவேறியிருப்பது, ஆன்மிக அன்பர்களின் மனம் மகிழச் செய்வதாகும்.

விழா சிறப்பாக நடைபெறவும், விழாவையொட்டி வெளிவரும் மலர் மணம் மிக்கதாய் விளங்கவும் என் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புள்ள

பா. சிவந்தி ஆதித்தன்

(டாக்டர் பா. சிவந்தி ஆதித்தன்)

INS

தலைமை அலுவலகம் : தபால் பெட்டி எண். 467, 86, ஈ.வே.கே. சம்பத் சாலை, சென்னை - 600 007.
போன் : 26618661, 26618797 ஃபேக்ஸ் : 044-26618676.

ABC



Rathinavel Subramaniam Educational Trust

K.V.K. Thottam, Trichy Road, Sulur,
Coimbatore - 641 402.

RVS Group

Dr. K.V. Kupusamy M.A., D.Litt.
Chairman

வாழ்த்துச் செய்தி

திருப்பணியின் திலகமாக விளங்கி, இரத்தினகிரியில் பாலமுருகன் திருக்கோயிலைக் கண்டோர் வியந்து போற்றும் வண்ணம் எழில்பெற உருவாக்கியுள்ளீர். தற்போது திருப்பணிக்குழுத் தலைவராக இருந்து, 1300 ஆண்டு பழமை வாய்ந்த சிவத்தலம் விரிஞ்சிபுரத்தில் எழுந்தருளியுள்ள அருள்மிகு மரகதாம்பிகை உடனுறை மார்க்கபந்தீஸ்வரரின் திருக்கோபுரம் 88 அடி உயரம் புதிதாக நிர்மாணித்து மற்றும் சிதிலமடைந்த பணிகளைச் செப்பனிட்டு ரூ. 2 கோடி அளவில் திருப்பணிகள் செய்து சாதனை புரிந்துள்ளீர். புதுப்பொலிவுடன் விளங்கும் திருக்கோயிலின் திருக்குட நன்னீராட்டு விழாவினை ஒட்டி மலர் ஒன்று மலரவுள்ளது. சாலவும் சிறப்புடையதாகும்.

விழாவும், விழா மலரும் ஆன்மிக உணர்வை வளர்த்து, அகிலம் செழித்து, அமைதியும் ஆனந்தமும் நிலவ, இறையருள் வேண்டி இதயம் கனிந்து வாழ்த்தி மகிழ்கின்றேன்.

Residence : RVS Illam, 242-B, Trichy Road, Sulur, Coimbatore - 641 402. Ph : 2687333, 2687389

S V BALA SUBRAMANIAM
Chairman

BANNARI AMMAN SUGARS LTD
1212 Trichy Road Coimbatore - 641 018

வாழ்த்துரை

திருவிரிஞ்சிபுரம் "அருள்மிகு மரகதாம்பிகை உடனுறை மார்க்கபந்தீஸ்வரர் (வழித்துணைநாதர்) திருக்கோயில்" திருப்பணிகள் செவ்வனே நடைபெற்று, **திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா** வரும் டிசம்பர்த் திங்களில் சிறப்பாக நடைபெறவுள்ளது குறித்து மிக்க மகிழ்ச்சி. சமயச் சான்றோர்கள், ஆன்றோர்கள் முன்னிலையில், வேதவிற்பனர்கள் வேதங்களை முழக்க, இசைக்கலைஞர்கள் தெய்வீக ஒலியை எழுப்ப, கோடானு கோடி மக்கள் இறை நாமங்களை உச்சரிக்க, திருவிரிஞ்சிபுரம் மண்ணில் வீற்றிருக்கும் இத்திருக்கோயிலின் **திருக்குட நன்னீராட்டு விழா** இனிதே நடைபெற்று மக்கள் எல்லோரும் எல்லா நலமும், வளமும் பெற்று பல்லாண்டு வாழ இறைவனிடம் வேண்டிக்கொள்கிறேன்.

தொன்றுதொட்டு நமது ஆன்றோர்கள் பலர் இதுபோன்ற திருக்கோயில்களில் திருப்பணிகள் பல செய்து திருக்குட நன்னீராட்டு விழாக்கள் நடத்தி, இறைவனின் அன்பிற்குள்ளானார்கள். அந்த வகையில் இன்றைய விழாவின் பின்னணியில் இத்திருக்கோயிலின் திருப்பணிகளைத் தலைமையேற்று நடத்தி வரும் வணக்கத்திற்குரிய **தவத்திரு பாலமுருகனடிமை** அவர்கள் பாதம் தொட்டு வணங்கி, "அருள்மிகு மரகதாம்பிகை உடனுறை மார்க்கபந்தீஸ்வரர் (வழித்துணைநாதர்) திருக்கோயில்" **திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா** சிறப்பாக நடைபெற எல்லாம் வல்ல முருகப்பெருமாஸ்ன நினைந்து எனது அன்பான வணக்கங்களை எல்லோருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

எஸ்.வி. பாலசுப்ரமணியம்
(எஸ்.வி. பாலசுப்ரமணியம்)

Office : 91-422-2307799 Fax : 91-422-2307700 E-mail : cmdoffice@bannari.com
Res : 91-422-2313300 Fax : 91-422-2317979 E-mail : svb@bannari.com

த. பிச்சாண்டி, இ.ஆ.ப., (பணி நிறைவு),
முதன்மை செயலர் / ஆணையர்,
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை.

5, 14வது தெரு,
4வது செக்டர்,
கே.கே. நகர்,
சென்னை - 600 078.

வேலூர் மாவட்டம், வாலாசா வட்டம், இரத்தினகிரி அருள்மிகு பாலமுருகன் திருக்கோயிலைப் பார்போற்றும் வண்ணம், பிரமிக்கத்தக்க வகையில் நிர்மாணித்துள்ள தவத்திரு. பாலமுருகனடிமை சுவாமிகள் அவர்களை 1980 ஆம் அண்டு முதல் அறிவேன். இருப்பினும் நான் அறநிலையத்துறை ஆணையராகப் பொறுப்பேற்றுக் கொண்டது முதல் தவத்திரு சுவாமிகளிடம் அடிக்கடி தொடர்பு கொள்ளும் வாய்ப்புக் கிட்டியதை நான் எனக்குக் கிடைத்த பெரும் பேறாகக் கருதுகிறேன். தவத்திரு பாலமுருகனடிமை சுவாமிகள் என் மீது அன்பும், பாசமும் கொண்டவர்.

தவத்திரு. பாலமுருகனடிமை சுவாமிகள் அவர்கள் மனிதநேயமும், அன்பும், ஆன்மிகம் 'மிகுந்த இறைதூதர்' என்பதிலும் சிறந்த "ஆன்மிகக் குரு" என்பதிலும் எவ்வித ஐயப்பாடில்லை. சாதாரண சிறிய குன்றாக இருந்த இரத்தினகிரி திருக்கோயிலை வாடிகன் நகரில் உள்ள ஆலயத்தைப் போன்று வானுயர்ந்த வகையில் மிகப்பிரமிப்பான, எழில் தோற்றத்தில் உருவாக்கியிருக்கின்றார். சுவாமிகள் அவர்களுக்கு நான் சிரம் தாழ்த்தி வணங்குகிறேன், போற்றுகிறேன்.

சங்க கால இலக்கியங்களில் தமிழ் போற்றப்பட்டிருக்கின்றது. 'முத்தமிழையும் ஆயும் வரிசைக்கார' என்ற திருப்புகழில் பாடப்பட்ட முருகப்பெருமான் தமிழ்க்கடவுள் என்று போற்றப்படுகிறார். 'சொற்றமிழ் பாடுகென்றார் தூ மறைபாடும் வாயார்' என சிவபெருமான் தமிழை விரும்பிக் கேட்டதாகப் பெரியபுராணம் கூறுகிறது. அப்படிப்பட்ட தமிழால் முதன் முதலில் 1969 முதலே இரத்தினகிரி முருகனுக்குத் தமிழால் அர்ச்சனை நடைபெற்று இன்று இந்த நிலைக்கு வளர்ந்து வருவதனைக் கண்டு அறிஞர் பெருமக்களும் ஆன்மிகப் பெரியோர்களும் சுவாமிகளைப் போற்றிப் பாராட்டாதவர் இல்லை.

தவத்திரு. பாலமுருகனடிமை சுவாமிகள் என்மீது அன்பும், பாசமும் கொண்டவர். திருப்பணிகள் செய்வது என்பது எல்லோராலும் இயலாது. புதுப்புது கோயில்களைக் கட்டுவதைவிட, மிகப்பழமை வாய்ந்த, பழுதடைந்து, பராமரிப்பின்றிக் கிடக்கும் திருக்கோயில்களைக் கண்டு, புனரமைத்து, செப்பனிடுவது மிகவும் வரவேற்கத்தக்க செயலாகும். அந்த வகையில் வேலூர் மாவட்டம், விரிஞ்சிபுரம் அருள்மிகு மரகதாம்பிகை சமேத மார்க்கபந்தீஸ்வரர் திருக்கோயில் 13ம் நூற்றாண்டைச் சார்ந்த திருக்கோயிலாகும்.

கடந்த 140 ஆண்டுகளாகப் பழுதடைந்திருந்த மேற்கு ராஜகோபுரத்தின் கல்காரத்தைப் பிரித்து, புதிய அஸ்திவாரமிட்டு, மீண்டும் கல்காரத்தை இணைத்து, அதன்மீது 88 அடி உயரமுள்ள 5 நிலை இராஜகோபுரம் புதியதாகக் கட்டப்பட்டுள்ளது.

இதுதவிர மூலவர் சுவாமி, அம்பாள் சன்னதிகள், முகப்பு மண்டபங்கள், பிரகாரங்கள், திருக்கல்யாண மண்டபங்கள், உற்சவர் மண்டபம், மதில் சுவர் மற்றும் புதிய கொடிமரம் முதலான அனைத்து இடங்களும் புதுப்பிக்கப்பட்டு, புதுப்பொலிவுடன் விளங்குகின்றது.

தவத்திரு. பாலமுருகனடிமை சுவாமிகள் அவர்களின் இம்மாபெரும் முயற்சி, சாதனையாகப் பரிமளித்துள்ளது. இம்மாபெரும் திருப்பணி வேலைகளைச் செய்து வரும் தவத்திரு. சுவாமிகள் அவர்களை வாழ்த்துவதற்கு எனக்கு வயதும், அனுபவமும் போதாது, எனவே சுவாமிகள் அவர்களைப் போற்றி வணங்குகிறேன். அவர் வாழும் காலத்தில் நானும் வாழ்வதை இறைவன் எனக்களித்தப் பேறாகக் கருதுகிறேன்.

விரிஞ்சிபுரம் அருள்மிகு மார்க்கபந்தீஸ்வரர் திருக்கோயில் மகாகும்பாபிஷேகம் 12.12.10 அன்று நடைபெறவிருப்பதையும், அதனையொட்டி வெளியிடவிருக்கும், விழா மலருக்கு என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(தா.பிச்சாண்டி)

கோ. சந்தானம், இ.ஆ.ப.
அரசு செயலாளர்
நெடுஞ்சாலை மற்றும்
சிறு துறைமுகங்கள் துறை
தமிழ்நாடு அரசு
மற்றும் தலைவர் - TNRDC

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009.
அலுவலகம் : 044-2567 0959
நகரி : 044-2567 3035
மின் அஞ்சல் : hywaysec@tn.gov.in

வாழ்த்துச் செய்தி

20.07.2010

கோபுர தரிசனம் பாவ விமோசனம் என்பது முதுமொழி. கோபுரத் திருப்பணிகள் கோவேந்தர்களால் நடத்தப்பெறும் பெருஞ்செயலாகும்.

மாமன்னர்களைப் போலவே மனங்கொண்ட சுவாமிகள் திருக்கோபுரப் பணியைத் தொடங்குவது எல்லையில்லா மகிழ்ச்சியைத் தருகிறது.

வேலூரை அடுத்த 1300 ஆண்டுகள் பழமை கொண்ட பாடல் பெற்ற விரிஞ்சிபுரத்து வழித்துணை நாதன், அருள்மிகு வழித்துணை நாதர் திருவருள் எல்லாப் பணியையும் ஈடேற்றும் திறம் கொண்டதாகும்.

அருட்பணியாற்றும் சுவாமிகளின் சித்தப்படி திருக்கோபுரத் திருப்பணி எல்லா நிலைகளிலும் விரைந்து நிறைவேற என் மனங்கனிந்த வாழ்த்தினைத் தெரிவிக்கிறேன்.

விரிஞ்சிபுரத்தில் விளங்கித் திகழும்
பெரும்சால்பு கொண்ட திருக்கோயில்
அரும்புகழொடு அணிமிளிர் கோபுரத்தால்
அழகுபெறுகிறது அம்மம்மா! பாலமுருகனடிமை
பண்பாற்றலால் பாரில் சிறந்திடுமே!



அன்புள்ள

கோ. சந்தானம்
21.7.10

(கோ. சந்தானம்)

ப.ரா. சம்பத், இ.ஆ.ப.,
ஆணையர்,
இந்து சமய அறநிலையத்துறை,
119, உத்தமர் காந்தி சாலை,
சென்னை - 600 034.

தொலைபேசி : 2833 4815 (நேரடி)
அலுவலகம் : 2833 4811
பேக்ஸ் : 044 - 2833 4816
ஈமெயில் : endowments@sancharnet.in

நாள் : 28.9.2010

வாழ்த்துச் செய்தி

தமிழகம் திருக்கோயில்களின் தாயகம். இங்கு நோக்கும் திசையெல்லாம் விண்முட்டும் கோபுரங்களும், வான் தழுவும் விமானங்களுமாய் நம் முன்னோர்கள் தங்கள் உடல் பொருள் ஆவி அனைத்தையும் அர்ப்பணித்து உருவாக்கியதே நமது திருக்கோயில்களாகும்.

வேலூர் மாவட்டத்தில், வேலூருக்கு மேற்கு திசையில் 14 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள விரிஞ்சிபுரம், அருள்மிகு மரகதாம்பிகை உடனுறை மார்க்கபந்தீசுவரர் திருக்கோயில் சுமார் 1300 ஆண்டுக் கால பழைமை வாய்ந்த புகழ்பெற்ற பிரார்த்தனை தலமாகும்.

விரிஞ்சன், விரிஞ்சி எனும் சொற்கள் பிரமனைக் குறிப்பன. பிரமன் வழிபட்டுப் பேறு பெற்ற தலமாதலால், விரிஞ்சிபுரம் என வழங்கப்படுகிறது.

இந்தத் தலத்திலுறை இறைவன், குடகு நாட்டிலே இருந்து தொண்டை நாட்டுக்கு மிளகு விற்க வந்த சிவநேசன் எனும் வியாபாரிக்கு வழித்துணையாக வந்து, வழிப்பறி செய்ய வந்த திருடர்களிடமிருந்து காப்பாற்றினான் எனும் தல புராண வரலாற்றையொட்டி, இறைவன் வழித்துணை நாதர் - மார்க்கபந்தீசுவரர் என அழைக்கப்படுகிறார்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவற்றால் சிறப்புற்று விளங்கும் விரிஞ்சைத் திருத்தலம், இரத்தினகிரி தவத்திரு பாலமுருகனடிமை சுவாமிகள் அவர்கள் தலைமையில், 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முழுமையாகத் திருப்பணி செய்யப் பெற்று, வரும் டிசம்பர்த் திங்களில் குடமுழுக்கு விழா சிறப்பாக நடைபெற உள்ளது அறிந்து பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன்.

பழம்பெருமை வாய்ந்த இத்திருக்கோயிலைத் திருப்பணி செய்து தந்த திருப்பணிக் குழுத் தலைவர் தவத்திரு. பாலமுருகனடிமை சுவாமிகளுக்கு எனது வணக்கத்தையும், நல்வாழ்த்துகளையும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருப்பணி மற்றும் குடமுழுக்கு விழா இனிதே நிறைவேற அவருக்குத் துணை நிற்கும் திருப்பணிக் குழுவினருக்கும், நன்கொடையாளர்களுக்கும் எனது உளங்கனிந்த பாராட்டுகள்.

குடமுழுக்கு விழா முன்னிட்டு வெளியிடப்படும் ஆன்மிக மலர் சிறப்பாக அமைந்து, அருள் மணம் கமழ, எனது நல்வாழ்த்துகளை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.



ப.ரா.சம்பத்

R. SUBRAMA[illegible]
Additional Commissioner
H.R. & C.E., Department.

Off : 2833 4811
: 2833 4812
: 2833 4813
Dir : 2833 4817

நாள் : 29.9.2010

வாழ்த்துரை

இரத்தினகிரி, அருள்மிகு பாலமுருகன் மற்றும் தவத்திரு பாலமுருகனடிமை சுவாமிகள் இவர்களது ஆசி, அருளுடன் எனது இனிய உரையை இங்கு எழுதுகிறேன்.

ஆதி தமிழ் காலம் தொட்டு இன்று வரை ஆலயம் தொழுவது சாலவும் நன்று, கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது முதுமொழி ஆகும். அதிலும் அருள்மிகு மார்க்கபந்தீஸ்வரர் திருக்கோயில் என்றால் உணர்வு, உயிர், அறிவு, ஆற்றல், சமூக ஒழுக்க நெறி, சிந்தனை போன்ற அனைத்து உயர் பண்புகளையும் ஒருங்கே அமையப்பெற்ற சிவத்தலமாகும்.

நம் திருக்கோயில்கள் சமயம் சார்ந்த நிறுவனங்களாக அமைந்திருந்தாலும், சமுதாயத்தில் உயிரோட்டமாக நிலவி, மானுட வாழ்க்கையை வளப்படுத்தியுள்ளது. அன்பும், அருளுமாய் பண்பை விதைத்து மக்களைப் பக்குவப்படுத்தியுள்ளது.

வேலூர் - பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையில் வேலூருக்கு அருகில் அமைந்துள்ள விரிஞ்சிபுரம், அருள்மிகு மரகதாம்பிகை உடனுறை மார்க்கபந்தீசுவரர் திருக்கோயில் பாடல் பெற்ற 1300 ஆண்டுக் கால புராதனமான தொன்மையான, புகழ்பெற்ற சிவாலயமாகும்.

விரிஞ்சூர் என்ற சொல் பிரமதேவனைக் குறிக்கும். பிரமதேவர், இத்தலத்தில் அர்ச்சகருக்கு மகனாக அவதரித்து சுவாமியை வழிபட்டதால் இவ்வூர் விரிஞ்சிபுரம் என அழைக்கப்பட்டு வருகிறது. மேலும் சுவாமி, அம்பாள், நடராஜர், ஆறுமுகர், விநாயகர், கற்பகிரகம் முதல் இரண்டாம் பிரகாரங்கள், சிம்மக்குளம், நந்தி மண்டபம், உற்சவ மண்டபம், தரை தளம், மதிற்சுவர் வர்ணம் பூசுதல் போன்ற அனைத்துப் பணிகளிலும் சுமார் 2 கோடி மதிப்பீட்டில் செய்யப்பட்டுள்ளது பாராட்டுதலுக்கும், போற்றுதலுக்கும் வணங்குவதற்கும் உரியதாகும்.

அயன், அரன் பூசை புரிந்த திருவிரிஞ்சை என அருணாசல புராணத்தில் சிறப்பிக்கப் பெற்றுள்ளது. இத்திருத்தலம், பட்டினத்தடிகள், அருணகிரிநாதர், சைவ எல்லப்ப நாவலர், அப்பய்ய தீட்சிதர் முதலான சான்றோர் பெருமக்களால் பாடல் பெற்ற பெருமைக்குரியது. இத்திருக்கோயில் திருப்பணிகளை இரத்தினகிரி தவத்திரு. பாலமுருகனடிமை சுவாமிகள் அவர்கள் தலைமை ஏற்று சிதிலமடைந்த மேற்கு ராஜ கோபுரம் 88 அடி உயரம் நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது. கிழக்கு வாயில் 110 அடி உயரமுள்ள இராஜகோபுரம், வடக்கு மற்றும் தெற்கு இராஜ கோபுரங்களின் சுதை வேலைகள், சிதிலமடைந்த பணிகள் முழுமையாக செப்பனிட்டு வண்ணப்பூச்சு செய்து புதிய பொலிவுடன் திகழ்கிறது.

நூதனமாகக் கோயில்கள் கட்டுவதைக் காட்டிலும், பழமையான திருக்கோயில்களில் திருப்பணிகளைச் செய்து சிறப்பாகப் பராமரித்து வருவது பெரும் புண்ணியமாகும். தவத்திரு சுவாமிகள் அவர்களின் அரும்பெரும் முயற்சியினால் இத்திருக்கோயில் அனைத்துப் பணிகளிலும் முழுமையாகவும் மிகவும் நேர்த்தியாகவும் மிக மிக கடினமான முயற்சியாலும் இத்திருப்பணிகள் செய்யப் பெற்று, திருக்குடமுழுக்கு நன்னீராட்டு விழா நடைபெற உள்ளது என அறிந்து நானும் வேலூர் மண்டலத்தில் இருமுறை இணை ஆணையராக பணியாற்றியதை நினைவு கூர்ந்து உளமாற அகமகிழ்கிறேன். இந்த வாய்ப்பை வழங்கிய இரத்தினகிரி, தவத்திரு சுவாமிகள் அவர்களுக்கு எனது நெஞ்சம் நிறைந்த சிரம் தாழ்ந்த நன்றிகள் பல.

குடமுழுக்கு விழாவினை முன்னிட்டு மலரும் சிறப்பு மலர் சிவத்தின் புகழ்விரிக்கும் அரும் படைப்புகளைக் கொண்டு நன்கு மலர்ந்து ஆன்மிக மணம் வீச, எல்லாம் வல்ல இறைவனை வணங்கி வாழ்த்துகிறேன்.

எஸ். ஹரிப்ரியா
இணை ஆணையர் (திருப்பணி)

வாழ்த்துச் செய்தி

ஒரு தலம் மூர்த்தி தலம் தீர்த்தம் மூன்றாலும் சிறப்புப் பெற்றிருக்க வேண்டும். தேவார வைப்புத் தலம் கரபுரம் எனக் கருதப்படும் திருவிரிஞ்சிபுரம் என்னும் தலம் அவ்வாறு சிறப்புப் பெற்றது.

சிவசர்மன் என்னும் பாலகன் அர்ச்சனை செய்ய வந்த போது தமது திருமுடியை வளைத்து ஏற்று அருள்செய்த அற்புதம் நிகழ்ந்த தலம்.

கர்நாடகத்து மிளகு வியாபாரிக்கு வேண்டிய வழிகாட்டி, வழித்துணையாக வந்து அருள்செய்த தலம்.

இதுபோன்ற பல சிறப்புகளை உடைய மூர்த்தியைப் பெற்ற தலம் விரிஞ்சிபுரம். அதேபோல் பிரம்மன், விஷ்ணு, கௌரி என்னும் தெய்வங்களே நேரில் வந்து வழிபட்ட தலம்.

பிரம்மன் நீராடிப் பலன் பெற்ற பிரம்ம தீர்த்தம், சூரியன் நீராடி வழிபட்ட சூரிய தீர்த்தம், சோமன் ஆகிய சந்திரன் வந்து நீராடி வழிபட்ட சோமதீர்த்தம், இன்றும் நலன் பயக்கும் வகையில் அமைந்துள்ள சிம்மத்தீர்த்தம், பிரம்மன் நடத்திய வேள்வியின் போது உண்டான பாலாறு ஆகிய ஐந்து தீர்த்தங்களின் சிறப்புப் பெற்ற தலம் இதுவாகும்.

எல்லாவற்றையும் மீறி அழகிய சிற்பக் கலையுடன், சிம்மக்குள முகப்பும் வரலாற்றைச் சுட்டிக் காட்டும் கல்வெட்டுகளும், சிதிலமடைந்த 80 அடி உயரமுடைய, புதியதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள மேற்கு கோபுரம் 51 அடி உயர கொடிமரம் ஆகியவற்றைக் கொண்டு சிறந்து விளங்கும் தலம்.

வேதாரண்யம் விளக்கழகு, திருவாரூர் தேரழகு, திருவிடை மருதூர் தெருவழகு போன்ற அழகுகளில் ஒன்றான விரிஞ்சிபுரம் மதிலழகு என்ற பெயர் பெற்ற அழகு வாய்ந்த திருமதிற்சுவர் பெற்ற திருத்தலம்.

இவ்வாறான சிறப்புகளையெல்லாம் பெற்ற 1300 ஆண்டுகட்கு முற்பட்ட தொன் மையான சிவத்தலத்தின் திருப்பணிகளை முழுவதும் செப்பனிடப்பட்டு, வண்ணப்பூச்சுகள் செய்யப்பட்டு, ரூ. 2 கோடி செலவில் நிறைவு செய்யப்பட்டது மகிழ்ச்சியையும் மன நிம்மதி யையும் தருகிறது.

இத்தகைய திருப்பணி முடிந்து திருக்குடமுழுக்கு நடைபெற இறைவன் திருவுள்ளம் கொண்டதும், திருப்பணிக் குழுத் தலைவர் தவத்திரு பாலமுருகனடிமை சுவாமிகள் அவர்களின் தளராத முயற்சியினாலும் மற்றும் உறுப்பினர்கள், துறை அலுவலர்கள் அனைவரும் தொண்டுள்ளத்தோடு பாடுபட்டுள்ளது மிக்க மகிழ்வையும் நெகிழ்ச்சியையும் அளிக்கிறது.

குடமுழுக்கு விழா முன்னிட்டு ஆன்மிக சிறப்பு மலரொன்று வெளியிடப்பட உள்ளது. மேற்குறித்த திருப்பணிகளை முழுமையாக நிறைவேற்றி குடமுழுக்கு விழா காண அனைத்து ஏற்பாடுகளையும் செய்து வரும் திருப்பணிக்குழுத் தலைவர், தவத்திரு பாலமுருகனடிமை சுவாமிகள் அவர்களுக்கு எனது வணக்கத்தையும், வாழ்த்துகளையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடவுளருளால் அனைவரும் சிறக்க என் வாழ்த்தினை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. V. தனுசு, M.Sc.,
தலைவர்,
அறங்காவலர்க்குழு.



அருள்மிகு அருணாசலேஸ்வரர்
திருக்கோயில்,
திருவண்ணாமலை.
☎ : 04175 - 252438

"ஞாலம் நின்புகழே மிக வேண்டும் தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே"

உலகில் ஆன்மிகத்துறையில் சிறப்புற்றது நமது பரத கண்டம். அதனுள்ளும் திருக்கோயில்களால் மிகச்சிறப்புற்றுத் திகழ்வது தமிழகமாகிய தென்னாடு. சேக்கிழார், உபமன்னிய முனிவர் மற்றைய முனிவர் பலர்க்குக்கூறும் முறையில் வைத்து, மாதவம் செய்த தென்றிசை என்று அருளினார். தென்னாடு அத்துணைச் சிறப்புடையதாயிருத்தற்குக் காரணம் யாது என்று வினாவ, சிறந்த சிவத்தலங்களைத் தமிழகம் மிகப் பலவாகப் பெற்றிருத்தலே அதற்குக் காரணம் என்று உபமன்னிய முனிவர் எடுத்துக் கூறியதாகச் சேக்கிழார் குறிப்பிடுகின்றார்.

தொண்டை நாட்டில் வேலூர் மாவட்டத்தில் முதன்மையாகவும் பல சிறப்பு அம்சங்களை உள்ளடக்கியதுமான திருவிரிஞ்சிபுரம் சிவத்தலம், 1008 சிவத்தலங்களில் பிரசித்தி பெற்ற சிவத்தலங்கள் 108-ல் மிகவும் விசேடமான 18 சிவத்திருத்தலங்களில் திருவிரிஞ்சிபுரம் ஒன்றாகும். அருள்மிகு மரகதாம்பிகை உடனுறை வழித்துணை நாதராகிய மார்க்கபந்தீஸ்வரர் திருக்கோயில் மூர்த்தி சிறப்பையும், திருத்தலத்தின் சிறப்பையும் பெற்று விளங்குவது வணங்குவதற்குரியதாகும். பாலாறு என்ற பத்மினி நதி பிரம்மன் நடத்திய வேள்வியின்போது உண்டாகியதாகவும், இதில் நீராடுபவர்களுக்குப் பாவம் நீங்கிப் புண்ணியம் சேருவதாகவும் ஐதீகம்.

இப்பெருமைக்குரிய திருக்கோயில் திருப்பணி நடைபெற்று வருவதையும் அடுத்து இனிதே நடைபெறவுள்ள கும்பாபிஷேகம் சிறப்பாக நடக்கவிருப்பதையும் அறிந்து மட்டற்ற மகிழ்ச்சியுறுகிறோம். திருப்பணிக்கு ஒல்லும் வகையில் உதவிபுரிந்து வருகின்ற பக்தர்களையும், தியாக உள்ளம் உடையவர்களையும் திருப்பணிக்குழுத் தலைவர் வணக்கத்திற்குரிய தவத்திரு. பாலமுருகனடிமை சுவாமிகளை வணங்கி, திருப்பணிக்குழு உறுப்பினர்களையும் பாராட்டி மகிழும்.

அன்பன்

வே. தனுசு

வைத்தியர் **வி.எஸ். பாபு,**
பரம்பரை சித்த மருத்துவர்
முன்னாள் அறங்காவலர் குழுத்தலைவர்,
விரிஞ்சிபுரம்.





வேண்டுதல் நிறைவேறியது

நமசிவாய வாழ்க! நாதன்தாள் வாழ்க!

கான்சாயும் வெள்ளி மலைக்கரசே நின் கழல் நம்பினேன்
ஊன்சாயுஞ் சென்மம் ஒழித்திடுவாய் கடவூரனுக்காய்
மான்சாயச் செங்கை மழுவலஞ் சாய்வனைந்த கொன்றைத்
தேன்சாய நல்ல திருமேனி, சாய்த்த சிவக்கொழுந்தே. – பட்டினத்தார்

சீர்மிகு தென்னாட்டின் ஒரு பகுதியாக தொண்டை வள நாட்டில் பாலாற்றின் தென்கரையில் திருவிரிஞ்சைப் பதியிலே பிரம்ம தேவர்க்குத் தலைசாய்த்த நிலையில் யாவர்க்கும் வழித்துணை புரிந்து கோவில் கொண்டிருக்கிறார் அருள்மிகு மரகதவல்லி உடனுறை வழித்துணைநாதர்.

தமிழ் வரலாற்றிலும், ஸ்தல வரலாற்றிலும் இடம் கொண்டுள்ள இத்திருக்கோவிலின் மேற்கு இராஜகோபுரம் மூன்று தலைமுறைகளாக சிதிலமடைந்து கல்காரமாக இருந்தது. 30, 40 ஆண்டுகளாக முயற்சிகள் பல மேற்கொள்ளப்பட்டு, பல மடாதிபதிகளை வரவழைத்துக் காண்பித்து அடிக்கல் கூட நாட்டப்பட்டது. ஆனால் 2003ம் ஆண்டுவரை பணிகள் ஏதும் நடைபெறவில்லை. அருள்மிகு வழித்துணை நாதராம் மார்க்கசகாயர் அருளால் 2004ம் ஆண்டு எமது கிராமத்தைச் சேர்ந்த பெரியோர்களுடன் அடியேனும் சென்று இரத்தினகிரி தவத்திரு. பாலமுருகனடிமை சுவாமிகளைச் சந்தித்தோம். மேற்கு ராஜகோபுரத்தைக் கட்ட வேண்டும் என்ற எங்களது கோரிக்கைகளையும் அவரிடம் சமர்ப்பித்தோம்.

பல நாள்கள் பலமுறை கேட்டுக் கொண்டதற்கு இணங்கி தவத்திரு. சுவாமிகளும் ஆலோசனை செய்து மீண்டும் மீண்டும் வந்து கோவிலைப் பார்வையிட்டுச் சென்றார். மேலும் அருகாமையில் உள்ள ஊர்ப் பெரியோர்களைச் சந்தித்து மேற்கு இராஜகோபுரம் கட்டுவது பற்றி கூட்டங்கள் பல நடத்தினார். எந்தை இறைவன் அவர்தம் உளம்புக தவத்திரு. சுவாமிகள் அருளுள்ளம் கொண்டு ஆணையிட 28-02-2007 அன்று மேற்கு இராஜகோபுரம் கட்ட பூமிப்பூசை போடப்பட்டுப் பணிகள் துவங்கின. தவத்திரு. சுவாமிகள் கோவில் முழுவதையும் செப்பனிட முயற்சிகள் மேற்கொண்டார். தமிழகத்திலுள்ள முக்கிய பக்த கோடிகளை அழைத்து வந்து திருப்பணிகள் செய்ய நன்கொடைகளைப் பெற்று அருட்பணி செய்து வருகிறார்.

தவத்திரு. சுவாமிகளிட்ட அத்தனைப் பணிகளையும் அடியேன் சிரமேற்கொண்டு எந்தவித பிரதிபலனையும் எதிர்பார்க்காமல் செய்து வருகிறேன். எம் முன்னோர்கள் செய்த தவப்பயனாலும் வழித்துணைநாதரின் அருளாலும் என் வாழ்நாளில் கிடைத்தற்கரிய பாக்கியமாக இத்திருப்பணி செய்வதைக் கருதுகிறேன். தவத்திரு. சுவாமிகளுக்கு என்றும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோன். திருக்குடமுழுக்கு நடைபெறும் இந்நன்னாள் முதல் தவத்திரு. இரத்தினகிரி பாலமுருகனடிமை சுவாமிகள் அவர்களே நிரந்தர அறங்காவலராக இருந்து மேலும் கோவில் வளர்ச்சியடையச் செய்ய வேண்டும் என்பதே எம் விருப்பமும், ஊர் மக்களின் விருப்பமுமாகும். இதற்குக் குருவருளும் திருவருளும் துணை நிற்பதாக.

திருவிரிஞ்சை C.M. மகாலிங்கம்
முன்னாள் அறங்காவலர் குழு தலைவர்
மற்றும் முன்னாள் அறங்காவலர்கள், விரிஞ்சிபுரம்.



சிவ.... சிவ.... சிவ...

வாழ்த்துரை

புல்லு நால் 5 கோடி புது மண்ணால் 10 கோடி
செல்லுமா ஞாலம் தண்ணில் செங்கல்லால் 100 கோடி
அல்லியம் கோதை கேளாய் அரன் உரை ஆலயத்தை
கல்லினால் புதுப்பித்தார்கள் கயிலை விட்டு அகலார் அன்றே!

– சிவ புண்ணிய செய்தி

உலகை ஆளும் ஈசனுக்கு ஐந்தறிவு ஜீவராசிகளும் ஆற்றிய பணிகளை நாம் அறிவோம். ஜெகத்தை ஆளும் ஈசனுக்கு மண்ணில் பிறந்த மானிடர்கள் ஆற்றிய சிவதொண்டுகள் ஆயிரம் ஆயிரம் காலம் அழியாப் புகழ் பெற்று வருகிறது.

ஈசன் திருப்பணிக்குப் புல்லைக் கொடுத்தால் 5 கோடி புண்ணியம் கிடைக்கும். புது மண்ணால் திருப்பணிக்கு உதவினால் 10 கோடி புண்ணியம் கிடைக்கும். புது செங்கல் திருப்பணிக்கு உதவுனால் 100 கோடி பண்ணியும் கிடைக்கும். அரன் உரை ஆலையத்தை கருங்கல்லால் புதுப்பித்து ஜெகத்தை ஆளும் ஈசனை விரிஞ்சை கையிலையை விட்டு அகலாமல் இருக்க, விரிஞ்சை மேற்கு ராஜகோபுரத்தைப் பெரும் முயற்சியால் 2 கோடி செலவில் 110 அடி உயரம் 5 நிலை கோபுரத்தை முடித்துவிட்ட தவத்திரு. ஸ்ரீ பாலமுருகனடிமை சுவாமிக்கு ஆயிரம் ஆயிரம் கோடி புண்ணியம் கிடைக்கும் என்பதில் சந்தேகமே இல்லை.

1600 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட இத்திருக்கோயில் 300 ஆண்டுகளாக விரிஞ்சை மேற்கு இராஜகோபுரம் அன்னியர்களால் சிதையுண்டு கோர காட்சியாக இருந்த இராஜகோபுரம் இது யாரால் மீண்டும் கட்டப்படுமோ? நம் தலைமுறையில் இந்த நூற்றாண்டில் நம் கண்களால் காண்போமா? என ஏங்கிய தமிழக சிவ பக்தர்களின் ஏக்கங்களை நிறைவேற்ற அன்றைய குறுநில மன்னர்களும் இன்றைய சங்கரா மடமும் மற்றும் தவத்திரு. ஸ்ரீ பங்காரு அடிகள் அவர்கள் முயன்றும் இத்திருப்பணி கல்வெட்டாக நின்று இருந்தது.

இவர்களாலேயே முடியவில்லையே ஆண்டவா இதற்கு ஒரு தீர்வு கிடைக்குமா! இத்திருப்பணிக்கு யாரை அர்ப்பணம் செய்யக் காத்திருக்கிறாய் ஆண்டவா என கண்ணீர் மல்க வேண்டிய சிவ பெருடைய அறங்காவலர்க் குழு தலைமையில் வேண்டுதலுக்கு சிவன் மனம் இறங்கி என் மகனை அனுப்புகிறேன். அவனால்தான் இத்திருப்பணி முடியவேண்டும் என்ற அசிரிரி வாக்கால் உணர்த்தப்பட்டவர்தான் தவத்திரு. ஸ்ரீ பாலமுருகனடிமை சுவாமிகள்.

அன்றைய ஆட்சியர்களால் அனுமதி வழங்கப்பட்டு ஸ்ரீ புரம் சிருஷ்டித்த அருள்மிகு சக்தி அம்மா அவர்களின் முதலுதவியால் ஊக்கம் பெற்று அடிக்கல் நாட்டப்பட்டு ஈசன் அனுப்பி வைத்த தவத்திரு. ஸ்ரீ பாலமுருகனடிமை சுவாமிகள் அவர்களின் பெரும் முயற்சியால் முழுவதுமாக விரிஞ்சை மேற்கு இராஜகோபுரமும் கட்டப்பட்டும், கோயிலின் அனைத்து சன்னதிகளும் வைரம்போல் ஜொலிக்கும் வண்ணம் திருப்பணியை முடித்துக் கொடுத்த தவத்திரு. ஸ்ரீ பாலமுருகனடிமை சுவாமிக்குக் கோடான கோடி நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

உ
சிவபெருமான் பேரருள்

தொலைபேசி : 0452 : 4377116
4381005





ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

&

ஆதீனகர்த்தர்

புனித மிக்க

மதுரை ஆதீனம்

292 ஆவது குருமகாசன்னிதானம்

தெற்காவணி மூல வீதி.
மதுரை - 625 001.

தவத்திரு.

பாலமுருகனடிமை அவர்கள்,

இரத்தினகிரி (கீழ்மின்னல் - 632 517)

நமது அன்பிற்கும், பாராட்டுதலுக்கும் உரிய, தவத்திரு. பாலமுருகனடிமை அவர்களுக்கு எல்லாம் வல்ல எம்பெருமானைப் பிரார்த்தித்து, ஆசீர்வதித்து எழுதுவது.

தங்கள் அன்புமிகு மடல் கிடைத்து, விபரம் அறிந்து, மகிழ்ச்சி. திருவிரிஞ்சிபுரம், அருள்மிகு மரகதாம்பிகை உடனுறை மார்க்கபந்தீஸ்வரர் திருக்கோயில் குடமுழுக்குப் பெருவிழா டிசம்பர்த் திங்களில், 'சிறப்புற' நடக்கட்டும். மலரும், இறைப் பேரருளின் மகிமையை, கருணைக் கடலின் பெருமையை, எடுத்துரைக்கட்டும்! அனைவரும், ஞானப் பெருமக்களையும், ஞானப்பனுவல்களையும் மதித்து, மரியாதை செய்து 'மண்ணில் நல்ல வண்ணம்' வாழட்டும்.

ஸ்ரீ ஞானசம்பந்த தேசிகர்



"தன் கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணிசெய்து கிடப்பதே"

குன்றக்குடி – 630 206
சிவகங்கை மாவட்டம்
04577 - 264227.

தவத்திரு. குன்றக்குடி
பொன்னம்பல அடிகளார்

12.08.2010

வாழ்த்துரை

சான்றோர்கள் உடைய தொண்டைநாட்டில் வேலூருக்கு அண்மையில் பாலாற்றங்கரையில் உள்ள திருவிரிஞ்சைத் திருத்தலம் மிகப் பழமையான சிவத்தலம். இங்கு எழுந்தருளியுள்ள அருள்தரு மரகதவல்லி அம்பிகை உடனாய அருள்தரு மார்க்கபந்தீசுவரர் திருக்கோயில் புகழ்பெற்ற திருக்கோயில். இத்திருக்கோயிலின் சிதிலம் அடைந்த மேற்கு ராஜகோபுரம் இப்போது முற்றிலும் புதிதாக 88 அடி உயரம் நிர்மாணிக்கப்பட்டும், திருக்கோயிலின் எல்லாப் பகுதிகளும் செப்பனிடப்பட்டும் புதுப்பொலிவுடன் திருப்பணி நிறைவெய்தித் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா நடைபெற இருப்பது மிக்க மகிழ்வளிக்கிறது. இத்திருப்பணியில் இரத்தினகிரி தமிழ்முனிவர் தவத்திரு. பாலமுருகனடிமை சுவாமிகளின் அருளார்வமும் துணைநின்றது போற்றுதலுக் குரியதாகும். மேலும் இந்த மாபெரும் திருப்பணியில் ஈடுபட்டுப் பொருளுதவி வழங்கிய பெருமக்களுக்கும் உழைப்பால் உதவிய அன்பர்கள் அனைவருக்கும் நமது உளமார்ந்த பாராட்டுகள்! வாழ்த்துகள்!

திருவிரிஞ்சைத் திருக்கோயிலில் எழுந்தருளிய பெருமான் மார்க்கபந்தீசுவரர் என்ற திருநாமம் கொண்டவர். தமிழில் வழித்துணை நாதர் என்றும் அழைக்கப்படுகிறார். இப்பெருமான் வழித்துணையான காரணத்தால் இப்பெயர் பெற்றார் என்பர். மைசூரைச் சேர்ந்த தனபாலன் என்னும் மிளகு வணிகன் மிளகுப் பொதி போட்டுக்கொண்டு திருவிரிஞ்சை நகருக்கருகில் வரும்போது கதிரவன் மறைந்து மாலைப் பொழுதாகிவிட்டது என்றும், அவன் அப்போது இப்பெருமானை வணங்கி, தான் காஞ்சிநகரம் சேரும் அளவும் துணையாளாக வரவேண்டும் என்றும் வேண்டினான். அவ்வாறே இப்பெருமான், வழித்துணையாகச் சென்று மறைந்தான் என்பது இத்தலவரலாறு.

இச்செய்தியை,

"சுவரிய கொந் தளதேசத் தனபாலன் மகிழக்
குளிர்பிறையுஞ் சடைமுடியும் மழுமானும் பணியும்
வாரி இருட் கடுமிடறும் நுதல்விழியும் மறைத்தே
மறைப்புரியில் வழித் துணையாய் வந்தருள் சேவகனே"

என்று திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத் தமிழ் நூல் போற்றிப் புகழ்கிறது. தனபாலனுக்கு வழித்துணையாய் வந்த பெருமான் அவன் திருவடிகளைப் போற்றித் தொழும் அன்பர்கள் அனைவர் வாழ்க்கைக்கும் துணையாக வருவான் என்பது திண்ணம். திருக்குட நீராட்டு விழாக்கண்டு திருவருள் பொலிவுடன் எழுந்தருளியுள்ள அருள்தரு வழித்துணைநாதரை வழிபட்டு உய்வோமாக. திருக்குட நீராட்டு விழா இனிதே நிறைவெய்தவும் இவ்விழாவை முன்னிட்டு வெளியிடப்பெறும் ஆன்மிகச் சிறப்பு மலர் கருத்து வளமும் அருள் மணமும் சிறக்க வெளிவரவும் திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு,

☎ : 44-27222115
Fax : 044-27224305, 37290060

Email : skmkanci@md3.vsnl.net.in

உ

॥ Sri Chandramouleeswaraya Namaha : ॥

Sri Sankara Bhagavadpadacharya Paramparagatha Moolamnaya Sarvagnapeeta :

His Holiness Sri Kanchi Kamakoti Peetadhipathi

JAGADGURU SRI SANKARACHARYA SWAMIGAL

Srimatam Samasthanam

No. 1, Salai Street, KANCHIPURAM - 631 502.

22.07.2010

வேலூர் மாவட்டம் விரிஞ்சிபுரம் கிராமத்தில் கோயில் கொண்டுள்ள அருள்மிகு மரகதாம்பாள் ஸமேத மார்கபந்தீஸ்வரர் ஆலய திருப்பணி நிறைவுற்று இந்த ஆண்டு டிசம்பர் மாதம் திருக்குட நன்னீராட்டு விழா நடைபெற இருப்பது கேட்டு ஸ்ரீ மஹா ஸன்னிதானம் சந்தோஷமடைந்தார்கள்.

இந்தத் திருக்கோயில் மிகவும் பழைமை வாய்ந்தது. பாடல் பெற்ற ஸ்தலம். இந்தத் தலத்தில் கோயில் கொண்டுள்ள ஸ்ரீ மார்கபந்தீஸ்வரர் மீது அடையபுலத்தில் வாழ்ந்த அப்பைய்ய தீக்ஷிதர் இயற்றியுள்ள மார்கபந்தீஸ்வரர் சுலோகம் மிகவும் பிரசித்தி பெற்றது. இவரும் திருப்பணி கைங்கர்யம் செய்துள்ளார்.

மேற்படி கும்பாபிஷேக விழா சிறப்பாக நிகழவும் அவ்வமயம் வெளியிடவிருக்கும் ஆன்மிகச் சிறப்பு மலர் யாவருக்கும் பயனுள்ளதாக அமையவும் ஸ்ரீ மஹாத்ரிபுரசுந்தரி ஸமேத ஸ்ரீ சந்திரமௌலீஸ்வர ஸ்வாமியை ப்ரார்த்தித்து ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் ஆசி வழங்கினார்கள்.

For Sri Kanchi Kamakoti Peetam
Sri Sankaracharya Swamigal Mutt

Srikaryam & Agent

சிவ சிவ

கயிலை மாமுனிவர்
திருவளர்திரு காசிவாசி முத்துக்குமாரசுவாமித்
தம்பிரான் சுவாமிகள் அவர்கள்
அதிபர், காசித்திருமடம்.

Ph 24 56655
திருப்பனந்தாள் - 612 504
(தஞ்சை மாவட்டம்)
தேதி ______ 199__.

30-7-10

வாழ்த்துரை

வேலூரை அடுத்த சிவப்பதியாகிய விரிஞ்சிபுரம் ஸ்ரீ மார்க்கபந்தீஸ்வரர் திருக்கோயிலில் பற்பல திருப்பணிகள் பெரும் பொருட்செலவில் மேற்கொள்ளப்பட்டு, பக்திச் செந்நெறி பரப்பும் திருத்தொண்டை இடையறாது செய்பவரும், "தவமும் தவமுடையார்க்கு" ஆகும் என்றபடி, தவவொழுக்கங்களில் ஊன்றித் திளைப்பவருமாகிய தவத்திரு. பாலமுருகனடிமை சுவாமிகளின் தலைமையில் சிறப்புறச் செயல்பட்டு, 2010 டிசம்பர்த் திங்களில் குடமுழுக்கு விழா நிகழவுள்ளதும், சிறப்பு மலர் ஒன்று வெளியிடப்பெறுவதும் அறிய மகிழ்ச்சி.

பண்ணினால் நீடி அறிவரும் பதிகம் பாடிப் பரவி, சமய குரவர் பணிந்திட்ட பெருமை மிக்கதும், வழித்துணைநாதர் எனும் பொருளில் திருநாமம் ஏற்று, நல்லது தெரிந்துணர நம்பர் மேவிடும் பதியாம் புனிதம் மிக்கதும், பழமையும் பெருமையும் மிக்கதும் ஆய திருப்பதியில் மேவும் பெருமானின் அருள் வேட்டு, அடியார் குழுமி இயற்றி நிறைவு செய்யும் திருப்பணிகளின் பொலிவுடன் குடமுழுக்கு விழா, பக்திப் பரவசம் மிகும் விழாவாக நிகழவும் சிறப்பு மலர் இறைவனின் பொருள்சேர் புகழைப் புகலும் படைப்புகளுடன் மிளிரவும் செந்திற்கந்தன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

சுபம்.

சிவ சிவ

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருக்கயிலாய பரம்பரைத்
திருவாவடுதுறை ஆதீனம்
23-ஆவது குரு மகா சன்னிதானம்
சீர் வளர் சீர் சிவப்பிரகாச தேசிக
பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள்



திருவாவடுதுறை - 609 803
நாகை மாவட்டம்
☎ : 04364-232021

நாள் : 22.7.2010

அருள் வாழ்த்துரை

விரிஞ்சிபுரம், அருள்மிகு மரகதாம்பிகை உடனுறை மார்கபந்தீசுவரர் திருக்கோவிலில் சிதிலம் அடைந்த மேற்கு இராசகோபுரத்தை முற்றிலும் புதியதாக 88 அடி உயரம் நிருமாணிக்கப்பட்டும் சுவாமி, அம்பாள், நடராசர், ஆறுமுகர், விநாயகர், கருவறைகளும் முதல் இரண்டாம் பிரகாரங்கள் செப்பனிடப்பட்டும், கிழக்கு வாயில் 110 அடி உயரமுள்ள இராசகோபுரம், வண்ணப்பூச்சும் சுமார் ரூ. 2.60 கோடி செலவில் புதுப் பொலிவுடன் செய்து இருப்பது மகிழ்ச்சிக்குரியது.

"முரிந்து வீழ்ந்தன வெடித்தன வுடைந்தன முதிய
நெரிந்த வாகிய கோபுர நெடுமதில் பிறவுந்
தெரிந்து முன்னையிற் சீர்பெறப் புதுக்குவோர் பண்டு
புரிந்து ளோர்பெறும் புண்ணிய நான்மடங் குறுவார்"

என்று காஞ்சிப்புராணம் குறிப்பிடுகிறது. எனவே, திருக்கோயில் திருப்பணியில் பங்குகொண்டு செயலாற்றும் அன்பர்கள் யாவரும் புண்ணியப்பேற்றை அடைவர் என்பது திண்ணம்.

மேலும் விரிஞ்சிபுரம் திருத்தலம் புராணச்சிறப்பும், வரலாற்றுச் சிறப்பும் கொண்டது. விரிஞ்சிபுரம் திருக்கோயிலில் உள்ள கிருஷ்ணதேவராயர் காலத்து கல்வெட்டு ஒன்று வரதட்சணை வாங்கக்கூடாது என்று தெரிவிக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது. இத்தகு சிறப்புடைய விரிஞ்சிபுரம் அருள்மிகு மரகதாம்பிகை உடனுறை மார்கபந்தீசுவரர் திருக்கோயில் திருப்பணியைச் செவ்வனே செய்து குடமுழுக்கு நடத்தப் பெறுவதும் அதுபோழ்து ஆன்மிகச் சிறப்பு மலர் வெளியிடயிருப்பதும் பாராட்டிற்குரியது.

ஆன்மிகச் சிறப்பு மலர் திருநெறிய மணம் கமழ எல்லாம்வல்ல அருள்மிகு ஞானப்பெருங்கூத்தன் திருவடி மலர்களைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

தவத்திரு ஊரன் அடிகளார்,
வடலூர்.

வாழ்த்து

எமது பூர்வாசிரமத்தில் நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன் வேலூர் நகராட்சியில் நகரமைப்பு ஆய்வாளராகச் சிலகாலம் பணியாற்றியபோது திருவிரிஞ்சிபுரத்திற்குச் சென்று தரிசனம் செய்தோம். 1300 ஆண்டு பழமையான பெரியகோயில். "திருவிரிஞ்சிபுரம் மதிலழகு" என்றே புகழ்பெற்று ஓங்கி உயர்ந்த மதிற்சுவர்கள். அன்றைய வடஆர்க்காடு மாவட்டத்தில் திருவண்ணாமலைக்கு அடுத்தபடியாக இரண்டாவதாகச் சொல்லக்கூடிய பெரியகோயில் விரிஞ்சிபுரம்தான். பிரகாரத்தில் காலம் (மணி) காட்டும் கல் ஒன்று உண்டு. அந்நாளைய கடிகாரம் இது; விரிஞ்சிபுரம் தவிர வேறு எங்கும் இல்லாதது. சிற்ப அழகும் கட்டிடக் கலையழகும், நகரமைப்பு கட்டிட இன்ஸ்பெக்டரான எம்மை மிகவும் கவர்ந்தது. சிறிய ஊர். பெரிய கோயில். முற்காலத்தில் இன்னும் பெரிய ஊராக இருந்திருக்கலாம்.

வாரியார் சுவாமிகள் 23 ஆண்டுகளுக்கு முன் ஒரு திருப்பணி செய்து குடநீராட்டு விழா நடத்தினார். அதன்பின் யாரும் கை வைக்க முன்வராத விரிஞ்சைத் திருப்பணியை இரத்தினகிரி சுவாமிகள் கையில் எடுத்தார்கள். கிடுகிடு என்று வேலைகள் முடிந்து குடநீராட்டு நிகழ்கிறது. பணிகள் ஒன்றா இரண்டா? முழுமையான பெருந்திருப்பணி. முற்றிலும் புதியதாகவே 88 அடி உயரத்தில் ஒரு ராஜகோபுரம். ஸ்ரீரங்கம் ராஜகோபுரத்தை ஜீயர் சுவாமிகள் கட்டினார். விரிஞ்சிபுரம் ராஜகோபுரத்தை இரத்தினகிரி சுவாமிகள் கட்டியுள்ளார். சுவாமி, அம்மன், பரிவாரத் தெய்வங்களின் கருவறைகள் முதல் பிரகாரம் இரண்டாம் பிரகாரம் சிம்மக்குளம் நந்திமண்டபம் இப்படி ஒரு முழுமையான பெரிய திருப்பணி.

சென்னை கந்தகோட்டம் கோயில் வள்ளலாருக்கு முன்பே இருந்தது. ஆனால் வள்ளலாரால்தான் அது இன்றைய பெருவிளக்கத்தைப் பெற்றது. கந்தகோட்டத்தை விளக்கஞ் செய்ய வந்தவர் வள்ளலார். இரத்தினகிரி பாலமுருகன் கோயில் முன்பே இருந்தது. ஆனால் அதன் இன்றைய பெருவிளக்கம், நூறு பங்கு பெருக்கம் இரத்தினகிரி சுவாமிகளால் தான். இரத்தினகிரியை விளக்கஞ் செய்யப் பிறந்தவர் பாலமுருகனடிமை சுவாமிகள். வடலூரை வள்ளலார் நிர்மாணம் செய்தார். விரிஞ்சிபுரத்தைப் புதிய ராஜகோபுரம் கட்டி, கோயிலை முழுமையாகப் புதுக்கிப் புதுப்பொலிவு கொடுத்த புண்ணியம் பாலமுருகனடிமை சுவாமிகள் புண்ணியம். பிரம்மாவுக்கு விரிஞ்சன் என்ற ஒரு பெயருண்டு. விரிஞ்சிபுரத்தின் இன்றைய விரிஞ்சன் (பிரம்மா) நம் சுவாமிகள்தான்.

நம் சுவாமிகள் வள்ளலாரிடமும் பற்றுக் கொண்டவர். இரத்தினகிரியில் கட்டிட மேன்மாடத்தில் வள்ளலார் திருவுருவம் உண்டாக்கினார். விரிஞ்சையிலும் வள்ளலாருக்கு ஒரு சந்நிதி உள்ளது. வள்ளலார் வழியில் சமயப் பணியோடு சமுதாயப் பணியும் செய்பவர் இரத்தினகிரி பாலமுருகனடிமை சுவாமிகள். மௌனமாக இருந்து ஓசைப்படாமல் சுவாமிகள் செய்துவரும் சாதனைகள் அசுர சாதனை அல்ல, தேவசாதனை, மகாதேவசாதனை. இந்த நூற்றாண்டு ஆன்மிக சாதனையாளர்களில் முன்னோடியான சுவாமிகள் இவைபோல் இன்னும் பற்பல சாதனைகளைச் சாதிக்க வல்லவர். சுவாமிகள் எல்லா நலன்களோடும் நூறாண்டுகள் நிலவி பக்தப் பெருமக்களை உய்விப்பார்களாக.

வாழ்க! வாழ்க!

(ஊரன் அடிகளார்)

உ
சிவமயம்

கோவிலூர் மடாலயம்
கோவிலூர் - 630 307
(வழி - மானகிரி)
சிவகங்கை மாவட்டம்

☎ 04565-236246

நாள் 27.07.2010

கோவிலூர் ஆதீனம் சீர்வளர்சீர் நாச்சியப்ப ஞானதேசிக சுவாமிகளின் ஆசியுரை

வேலூர் மாவட்டம், விரிஞ்சிபுரத்தில் அமைந்துள்ள அருள்மிகு மரகதாம்பிகை உடனுறை மார்க்கபந்தீஸ்வரர் திருக்கோயில் குடமுழுக்கு விழா வரும் டிசம்பர்த் திங்களில் நடைபெற இருப்பது அறிந்து மிக்க மகிழ்ச்சி. இத்திருக்கோயிலின் சிதிலமடைந்த மேற்கு இராஜகோபுரம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டும், கிழக்கு, இராஜகோபுரங்கள் புதுப்பிக்கப்பட்டும் பெரும் பொருட்செலவில் தாங்கள் ஆற்றியுள்ள கோயில் திருப்பணி பெரிதும் பாராட்டுக்குரியது. விரிஞ்சிபுரத்தில் அமைந்து மார்க்கபந்தீஸ்வரர் நம் சமுதாயத்திற்கும் உலகிற்கும் இம்மை, மறுமைப் பேற்றினை வழங்கிட எல்லாம் வல்ல குரு முதல்வர் கோவிலூர் ஆண்டவர் திருவடி சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

வேணும்

சற்குருநாதர் துணை

தவத்திரு. குமரகுருபர சுவாமிகள்
மடாதிபதி,
சிரவணபுரம்.

கௌமார மடாலயம்
சின்னவேடம்பட்டி (அஞ்சல்)
கோயமுத்தூர் - 641 006.
போன் : 0422-2666370
செல் : 9842166373
www.Kaumaramutt.org

வாழ்த்து

பாகம் பராசக்தி பைம் பொன் சடைமுடி
ஏகம் இருதயம் ஈரைந்து திண்புயம்
மோகம் முகம்ஐந்து முக்கண் முகந்தொறும்
நாகம் உரித்து நடம்செயும் நாதர்க்கே

சிவம் என்ற சொல்லுக்கு, மங்கலம் - மகிழ்ச்சி என்பன போன்று பல பொருள் உண்டு. சிவன் என்றால் அதனை உடையவன் என்பது தானேபோதரும். சிவன் என்ற சொல், சிவபிரான் ஒருவனையே குறிக்கும். சிவன் எனும் நாமம் தனக்கே உரிய செம்மேனி எம்மான் என்பது தமிழ்மறை அவனே ஆதிமுதல்வன் ஆகும். ஆக்கல், அளித்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்தொழிலை நடத்தும் அப்பெருமானே தலைவன்.

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் ஜோதி என்றார் மணிவாசகப் பெருந்தகை. உலக ஒழுக்கத்திற்கு உரிய சங்காரக் கடவுள் அவனேயாம். ஆகவே தோற்றத்துக்கும் அவனே கடவுள் என்பதை அந்தம் ஆதி என்மனார் புலவர் என்றது சிவஞான போதநூல்.

எங்கும் நீக்கமற நிறைந்துள்ள சிவபெருமான் திருக்கோயில்கள் தமிழகத்தில் பல உள. அவ்வகையில் வேலூருக்கு அருகில் 1300 ஆண்டுகள் பழமையான சிவாலயம் அருள்மிகு மரகதாம்பிகை உடனுறை வழித்துணை நாதர் திருக்கோயில். இக்கோயிலுக்குச் சிறப்பு மதில் என்று கூறுவர். இப்பழமையான கோயிலின் மேற்கு ராஜகோபுரத் திருப்பணி தற்பொழுது இரத்தினகிரி, மௌனத்தவயோகி தவத்திரு. பாலமுருகனடிமை சுவாமிகளின் தலைமையில் நிறைவுபெறவுள்ளது. அதையொட்டி பல திருப்பணிகளும் நடைபெற்று திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா நடைபெறுவது அறிந்து மகிழ்ந்தோம்.

இவ்வாலயத் திருப்பணிக்குப் பொருளுதவி நல்கியோர், உடனிருந்து பணி செய்தோர், இப்பெருவிழாவில் கலந்து கொள்வோர், இப்பகுதி மக்கள் அனைவரும் வாழ்வில் எல்லா வளங்களும் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ எம் சிந்தையிடம் குடிகொண்டுள்ள தண்டமிழ்க் கடவுள் திருமுருகப் பெருமானின் திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம். விழா மலர்க் குழுவினருக்கும் எம்வாழ்த்துகள்.

அன்புள்ள,

குமரகுருபரர்

SWAMY SACHITHANANDA
Sri Kamalakkannai Amman Devasthanam
Sri Maha Lakshmi Amman Devasthanam
Kalavai, Vellore Dist, Pin - 632 506.
Phone : 04173-242269.




வழித்துணை நாதருக்கு வழித்துணையான பாலமுருகனடிமை சுவாமிகள்

நாள் : 10.9.2010

மனதை மயக்கும் மதிலழகு
ஒளி மங்காது நிற்கும் கலையழகு
வடக்கே வலம் வரும் பாலாறு
உயிருக்கு வழித்துணையானது விரிஞ்சை வரலாறு
சிவபூஜை செய்ய சிவசர்மனுக்கு சிரம் தாழ்த்திய செம்மல்,
கள்வர் பயம் போக்கி மிளகு வணிகனுக்கு துணைப்போன பேரருள்
அடையபுலம் தந்த அப்பய்ய தீட்சிதருக்கு அடைக்கலம் தந்த ஈசன்
கோட்டை என்று நினைத்து அன்னியர் குண்டு மாரி பொழிந்து
பின் கோட்டை இல்லை ; சிவன் கோயில் என்று உணர்த்திய நாதன்
ஆறுகால பூஜையும் அழகாக நடந்தபோது அடியேனும் சென்றதுண்டு,
ஆடிமாத பூரத்தில் அம்மன் அலங்காரம் அழகாகக் கண்டதுண்டு
பங்குனி மாதத்தில் பத்துநாள் திருவிழா பாங்குற நடந்ததுண்டு
பார்த்தவர் நெஞ்சங்கள் பரவசம் வழிந்தோட பக்தியாய் சென்றதுண்டு
அவ்வளவு சிறப்பு மிக்க விரிஞ்சை காலப்போக்கில்
கோயில் வளாகம் இன்றைய யாழ்ப்பாணம் போல் ஆனது
எண்ணெய்க் காணாது, விரிசடை திரிசடையானது
பால்படாத திருமேனியில் பூஞ்சாணம் பூத்தது
குமிழ் சிரிப்பு மலரும் கொவ்வைச்
செவ்வாயின் எழில் மறைந்தது
மொத்தத்தில் சுயம்பு சுகமாக இல்லை
மிதிலையில் இருந்த சிவதனுசுவை முறிக்காமல் சென்ற
மன்னர்களைப்போல் மேற்கு கோபுர திருப்பணியை யாரும் தொடாமல் போனார்
திருப்பணிகள் செய்வதையே தவமாகக் கொண்ட இரத்தினகிரி சுவாமிகள்,
வரும்வரை விரிஞ்சையின் நிலை இதுதான்
செல்வபுரத்து சிவனுக்கே வறுமை சூழ்ந்ததா?
இங்குதான் உள்ளது இறைவன் திருவிளையாடல்
இராமன் கைப்படக் காத்திருந்த சிவதனுசும், சீதையும்போல்,
இரத்தினகிரி சுவாமிகள் வரவிற்கு காத்திருந்தன கோயிலும், கோபுரமும்
கற்பூரம் காணாத குமரனுக்குக் கலைக்கோயில் கட்டி
சொல்லறுத்து இன்பத் தவத்தினில் திளைக்கும்
இரத்தினகிரி வாசன்
பாலமுருகன் நேசன்
குமரக் கடவுளையே கும்பிட்டு வந்தவரை
விரிஞ்சை நாதன் காண விரும்பி
வறுமை கோலம் பூண்டானோ?

SWAMY SACHITHANANDA
Sri Kamalakkannai Amman Devasthanam
Sri Maha Lakshmi Amman Devasthanam
Kalavai, Vellore Dist, Pin - 632 506.
Phone : 04173-242269.



வெறுமையாய் ஒரு கோயில் மேதினியில் இருப்பது
தன் செவிக்கு வந்ததும் சற்றும் நில்லாது
விரிஞ்சைக்கு விரைந்தார், மனம் வெதும்பி நின்றார்
வழித்துணைநாதனின் நிலைகண்டு விழிநீர் சொரிந்து நின்றார்
வேதனையால் நொந்தார்
உடுக்கை இழந்தவன் கைப்போல – சிவன்
இடுக்கண் களைய ஒரு திட்டம் போட்டார்
கோட்டம் புதுக்கினார் – அன்பர்கள்
வாட்டம் போக்கினார் – அருள்
நாட்டம் கொண்டோரை ஊக்குவித்து
மேற்கு ராஜகோபுரம் மேகம் முட்ட கட்டினார்
அதில் வானவில்லின் வர்ணஜாலம் பதித்தார்
சிம்மக் குளத்தைச் சீர்செய்தார், மேடும் பள்ளமுமாய்
சீரற்றுக் கிடந்த பிரகாரத்தைச் செப்பனிட்டுப் பிரகாசிக்கச் செய்தார்
விநாயகர் கோயில் விக்கிரத்தை நீக்கி புதுப்பொலிவு ஊட்டினார்
முருகனும் சுவாமிகளின் திருப்பணியால் புதுமுறுவல் பூத்தார்
பிச்சாண்டவர் சன்னதி, வாகன மண்டபம்
கோயிலின் நுழைவாயில் மகாமண்டபம்
புதுப்பொலிவு பூண்டு கலையெழில் மின்னியது
கொட்டும் மழை கொளுத்தும் வெய்யில்
வாட்டும் குளிர் விரட்டும் பனி
காலம் இவர் பணியினைப் பாதிக்கவில்லை
விரிஞ்சைத் திருப்பணி முடிப்பதை ஒரு தவமாகக் கொண்டார்
தவமே துணையெனக் கொண்டு திருப்பணிகள் செய்தார்

சுவாமிகள்,
கண்துஞ்சப் பார்த்தாரில்லை, காலத்தில் உண்டாரில்லை
தன்னை மறந்தார், தன் நலம் மறந்தார்
இரத்தினகிரி குளத்து திருப்பணியையும் மறந்தார்
இவரைப்போல் திருப்பணிகள் செய்தார் யார்?
இவரைப்போல் இறைபணிகள் செய்தார் யார்?
இவரைப்போல் தமிழ்ப்பணிகள் செய்தார் யார்?
இவரைப்போல் அறப்பணிகள் செய்தார் யார்?

காலம் உள்ளளவும், கடல் வான் உள்ளளவும்
மோனத்தவம் செய்யும் ஞானப் பேரரசின் புகழ் ஓங்கும்

சுவாமிகளின் பொன்னார்த் திருவடிகளில் பக்தி மலர்களைப் பொழிந்து,

வணங்கும்,
(signature)



திருச்சிற்றம்பலம்

"திருக்கயிலாய பரம்பரை" கொங்கு மண்டலக்குரு

ஸ்ரீ மாணிக்கவாசகர் திருமடாலய 57 வது மகா சந்நிதானம்

ஸ்ரீ.ல.ஸ்ரீ இராஜ. சரவணமாணிக்கவாசக சுவாமிகள்

கூனம்பட்டி கல்யாணபுரி ஆதீனம்
பல்லகவுண்டம்பாளையம் (Po), விஜயமங்கலம் - 638 056.
போன் : 04294 242056 செல் : 94421 42056



நமது நன்மதிப்பிற்குரிய தவத்திரு. சுவாமிகள் அவர்கட்கு, சந்நிதானத்திலிருந்து எழுதிக் கொண்ட நலம். தங்களின் கடிதமும், திருவிரிஞ்சிபுரம் திருக்கோவில் திருப்பணி படிவமும் கிடைக்கப் பெற்று மிக மகிழ்ந்தோம். கோவில் என்ற சொல்லுக்குப் பரமன் உறையும் இடம் என்பதே பொருள். ஆக சிவாலயத்துக்கே கோயில் என்று பெயர். அவ்வளவு சிறப்பு சிவாலயத்துக்கு உண்டு. மேலும் எந்தத் தெய்வத்தை வழிபட்டாலும் அத்தெய்வமாகி நின்று அருளை வழங்குவது சிவபெருமான் ஒருவரே. சிவனை நிகர்க்கும் தெய்வம் தேடினும் இல்லை என்பார் திருமூலர். அவ்வரிய பெருமானுக்குப் பெரும் திருப்பணிகளையெல்லாம் பெரும் ராஜாக்கள்தான் செய்திருக்கிறார்கள். அதுமட்டுமில்லை, மிகக் குறிப்பிட்டவர்கள்தான் சிவாலய திருப்பணியையே செய்யமுடியும். அத்துணை சிறப்புகளையெல்லாம் எடுத்துக்காட்டும் வண்ணமாக ஸ்ரீ விரிஞ்சிபுரம் பெருமான் திருக்கோயில் திருப்பணிகளைத் தாங்கள் தலைமையேற்று மிகச் சிறப்பாகவும் அற்புதமாகவும் செயற்கரிய திருப்பணியாம் ராஜகோபுரம் உள்ளிட்ட திருப்பணிகளையும் செய்து நிறைவு பெற்று மகா கும்பாபிஷேக விழாவினைச் செய்வது மிகமிக பாராட்டுக்குரியதாகும். இறைபணிக்காகவே தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ள தாங்கள் முன் நின்று செய்யும், இப்பணியும் மற்றும் விழா ஆகியன சிறப்புற நடைபெறவும் விழாவை முன்னிட்டு வெளிவரும் விழா மலர் நன்மணம் கமழவும் ஆசிர்வதிக்கிறோம்.



சாதிகள் ஒழியட்டும் எல்லாம் நிறைவாகட்டும் சமத்துவம் வெல்லட்டும்

கோவை காமாட்சிபுரி ஆதீனம்

ஞானகுரு சாக்தஸ்ரீ சிவலிங்கேஸ்வர சுவாமிகள்

(தமிழக இந்து துறவியர் பேரவை, மாநில இணைச் செயலாளர்)

நிறுவனர்:

ஸ்ரீ அங்காளபரமேஸ்வரி சித்தர் பீடம் அறக்கட்டளை

உலக சமாதான மக்கள் நல்வாழ்வு தெய்வீகப் பேரவை

காமாட்சிபுரம், திருச்சி சாலை, ஒண்டிப்புதூர் (அஞ்சல்), கோயமுத்தூர் - 641 016.

தொலைபேசி: 0422-2273353, 9843716211 மின்அஞ்சல்: siva_kamatchipuriadinam@yahoo.co.in

எல்லாம் நிறைவாகட்டும்

அறவழி ஆன்மிகப் பாதைக்கு ஒரு புதுவழித் திறமுடன் செய்துயர் பாலமுருகனடிமை, வேலூர் அடுத்த விரிஞ்சிபுரம் உறை சிவனுக்கு நாலுமூலையும் திருவருள் விளங்கும் நல்ராஜகோபுரம் திருப்பணி செய்து திருக்குட நீராட்டு செய்துய்யவே பெரும் பணி சித்தர் பாலமுருகனடிமை சுவாமிகள் இரு கோடி மதிப்புள்ள இனிய திருப்பணி பெரும் பொருட் செலவில் பிரியமாய்ச் செய்தார். திருவருள் சிறக்கப் பணி செய்த அன்பர்கள் அருள் நிறைவாகி வாழ்க பல்லாண்டு.

வளர்க மலர்க அருளாசி வாழ்த்து

தவத்திரு தயானந்த சந்திரசேகரன்

சிவாய நம

என் கடன் பணி செய்து கிடப்பதே

திலகவதியார் திருவருள் ஆதீனம்
1120, தஞ்சைச்சாலை, மச்சுவாடி,
புதுக்கோட்டை - 622 001.
தொலைபேசி : 04322 - 228024
அலைபேசி : 9789182825

18.8.2010

வாழ்த்துரை

தமிழகத்தில் **வேலூர்** மாவட்டத்தில் **உள்ள திருவிரிஞ்சிபுரத்தில்** அழகுற எழுந்து, அருள்பாலித்து வருகின்ற **வழித்துணை** நாதர் என அழகு தமிழிலும், மார்க்கபந்தீஸ்வரர் என வடமொழியிலும் இவ்விறைனைத் திருநாமம் சூட்டி பக்தர்கள் அழைத்து வருகின்றனர். சிறப்புப் பெற்ற திருத்தலங்கள் 1008. அதனினும் விளக்கம் பெற்ற சிவத்தலங்கள் 108. மிகவும் விசேடமான சிவத் தலங்கள் 18. அவற்றில் திருவிரிஞ்சிபுரம் எனும் சிவத்தலமும் ஒன்றாகும்.

திருமறைக்காட்டிற்கு விளக்கழகு, திருவாரூர் தேரழகு,
திருவிடைமருதூர் வீதியழகு, **திருவிரிஞ்சை மதிலழகு.**

என்ற பழமொழியிலிருந்தே, சிவத்தலங்களின் பெருமையை உணரமுடிகிறது. அதில் திருவிரிஞ்சை திருக்கோயில் மதிலழகுக்குப் பெயர் பெற்றது.

இத்தகைய வரலாற்று சிறப்புமிக்க திருத்தலத்தில் கடந்த 1987ஆம் அண்டு அருள்மொழியரசு வாரியார் சுவாமிகளின் பெரும் முயற்சியால் திருக்குட நன்னீராட்டு நடைபெற்றது. இருப்பினும், மேற்கு கோபுரம் மேல் வரக்கூடிய நிலைகளை எழுப்ப இயலவில்லை. உரியவர் வந்து குடமுழுக்கு நடத்திட வேண்டும் என இறைவன் நினைத்திருக்கக்கூடும் என கருதுகிறோம்.

வாராது வந்த மாமணி, என்பதற்கிணங்க, தனிப்பெருங் கடவுளாக முருகப்பெருமானின் முழு அருளினைப் பெற்ற திருத்தொண்டர், போற்றுதலுக்குரிய **இரத்தினகிரி தவத்திரு. பாலமுருகனடிமை சுவாமிகளின்** அரும் முயற்சியால், திருப்பணிக்குழு அமைக்கப்பட்டு சீரிய வகையில் திருப்பணியினை மேற்கொண்டு வருவது அறிந்து நாம் பெருமை கொள்கிறோம். இத்திருப்பணியினைச் சைவபெருமக்கள் மட்டுமின்றி, ஆன்மிக நாட்டம் உள்ளோர் அனைவரும் போற்றி மகிழுவார்கள் என்பது நிச்சயம்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் என மூன்றும் அமையப்பெற்ற இத்திருத்தலத்தில் எழுந்தருளி அனைத்துயிர்களையும் காத்து அருள்பாலித்து வருகின்ற அருள்மிகு மரகதாம்பிகை உடனுறை வழித்துணை நாதர் (மார்க்கபந்தீஸ்வரர்) திருக்கோயிலின் மேற்கு இராசகோபுரம் புதியதாக 88 அடி உயரம் நிர்மாணிக்கப்பட்டும், சுவாமி, அம்மாள், நடராசர், ஆறுமுகர், விநாயகர், கருவறைகள், முதல், இரண்டாம் பிரகாரங்கள், சிம்மக்குளம், நந்தி மண்டபம் உற்சவர் மண்டபம் செப்பனிடப்பட்டும், கிழக்கு வாயிலில் 110 அடி உயரமுள்ள இராசகோபுரம், வடக்கு, தெற்கு இராசகோபுரங்கள் வண்ணப்பூச்சும் சுமார் ரூ.2 கோடி அளவில் புதுப்பொலிவோடு நிறைவுற்றுள்ளதை அறிந்து பெருமகிழ்ச்சியும் அடைகிறோம். இத்திருக்கோயிலின் திருக்குட நன்னீராட்டு விழா வருகின்ற டிசம்பர் மாதம் நடைபெறவிருப்பதும், அதனை முன்னிட்டு, ஆன்மிக மணம் கமழும் சிறப்பு மலர் வெளியீட்டு மக்களின் மனங்களில் நற்சிந்தனைகளைப் பரப்புவதும் போற்றத்தக்க பணியாகும்.

திருக்குட நன்னீராட்டு விழாவும், சிறப்பு மலர் வெளியீடும் அனைத்து வகையிலும் சிறக்க, எல்லாம்வல்ல சிவபரம்பொருளை வணங்கி வாழ்த்துகிறோம். விழாக்குழுவினர் அனைவருக்கும் நமது பாராட்டுகள்.

என்றும் சமய, சமூகச் சேவையில்,

திருச்சிற்றம்பலம்
குருவே துணை

திருநாவுக்கரசு சுவாமிகள் திருமடம்

தென்சேரிமலை - 641 669
பல்லடம் வட்டம், கோவை மாவட்டம். தொலைபேசி : 04255 - 266155

தவத்திரு முத்துசிவராமசாமி அடிகள்
மடாதிபதி

நாள் : 9.8.2010

எல்லாம் வல்ல மந்திரகிரிப் பெருமான் திருவருளைச் சிந்தித்து,

அருள்மிகு மரகதாம்பிகை உடனுறை வழித்துணைநாதப் பெருமான் திருக்கோயில் திருப்பணிகள் யாவும் நிறைவு பெற்று டிசம்பர்த் திங்கள் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா நடைபெறுவது கண்டு இன்புற்றோம்.

விழிக்குத் துணை திருமென் மலர்ப் பாதங்கள் மெய்ம்மை குன்றா
மொழிக்குத் துணை முருகா எனும் நாமங்கள் முன்பு செய்த
பழிக்குத் துணை அவன் பன்னிரு தோளும் பயந்த தனி
வழிக்குத் துணை வடிவேலும் செங்கோடன் மயூரமுமே

என்கிற அருள் வாக்கின் வண்ணம், திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா எல்லா வகையிலும் சிறக்கவும், விழாவின் பெருமைகளை நினைவு கூறும் வகையில் விழா மலர் வெளியிடுவதும் கண்டு மகிழ்ச்சியடைகிறோம். பெருமானை வழிபடும் அன்பர்கள் யாவரும், அவர்கள் வாழ்வில் அபிராமிபட்டர் அருளிய பதினாறு பேறுகளும் பெற எல்லாம் வல்ல மந்திரகிரிப் பெருமான் திருவருளைச் சிந்தித்து மகிழ்கிறோம்.

திருமுறையே சைவநெறிக் கருவூலம்
தென் தமிழின் தேன்பாகாகும்
திருமுறையே கயிலையின் கண் சிவபெருமான்
செவிமிகுந்த செந்தமிழ் வேதம்
திருமுறையே நடராசன் கரம் வருந்த
எழுதியருள் தெய்வ நூலாம்

தங்கள் அன்புள்ள

(கையொப்பம்)

பகவான் ஸ்ரீ பதஞ்சலி யோக பீடம்
39, ஆக்சீலியம் கல்லூரிச் சாலை, காந்தி நகர், வேலூர் 632 006.

உலகம் உருவான நிலையை, விரிந்த விந்தையை, பிரபஞ்சத்தைத் தோற்றுவித்த மாபெரும் சக்தியை, ஆற்றலை அறிந்துக் கொள்ள முடியாமல் உலக மக்கள் அல்லாடிக் கொண்டிருந்த காலக் கட்டத்திலே,

இறைவனை, ஆண்டவனை, தெய்வத்தை, கடவுளை, பரம்பொருளை, பரமபிதாவை, பரமசிவனை இவ்வுலகிற்கு எடுத்துக் காட்டி அறிய வைத்து, உணர வைத்து, தெரிய வைத்து, தெளிய வைத்தவர்களும்,

- பாமர மக்களும் பரமசிவனைப் புரிந்துக் கொள்ளும் விதத்திலும் படிப்பறிவில்லாதவன் கூட பக்தியின் மூலமாக பரமபதம் அடைய முடியும் என வழிகாட்டிச் சென்றவர்களும்,
- அண்டமெல்லாம் அலைந்தாலும் ஆன்மிகத் தாகம் தீர, பேரின்பம் பெற, நம் நாட்டை நோக்கி மற்ற நாட்டவரெல்லோரையும் காந்தமென ஈர்க்கச் செய்த அற்புதத்தை அளித்தவர்களும்,
- உலகிலேயே வெட்டவெளியில் தேங்கி விரவிக் கிடக்கும் மாபெரும் மகத்தான சக்தியை, பூமியில் ஓரிடத்தில் சேர்த்துக் குவியச் செய்து காட்டும் அற்புத வித்தையை, கட்டிடக் கலையை, '**கோவில்**' என்றும் '**ஆலயம்**' எனவும் பெயரிட்டுச் சென்றவர்களும்,
- '**கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்**' எனக் கூறியதில் பலவேறு மெய்ஞான, விஞ்ஞான, மருத்துவ, இரகசியங்களை உள்ளடக்கப்பட்ட உண்மையை உலகிற்கு உணர்த்தி யவர்களும்,
- '**ஆலயம் தொழுவது சாலவும் நன்று**' என்ற வார்த்தையில் ஆண்டவனை அறியச் செய்து அவனோடு அவன் தாள் பணியச் செய்யும் அளப்பறிய அளவற்ற ஆனந்தமுடைய அவனோடு நம் ஆன்மாவை லயப்படுத்தும் கலையைத் தந்து சென்றவர்களும்,
- அண்டத்தில் உள்ளதே பிண்டத்தில் உள்ளது எனவும், அண்டத்திலுள்ள அளப்பரிய ஆற்றலை நம் பிண்டமாகிய உடலில் குறைவில்லாமல் சேர்த்து அதிகரித்துக் கொண்டால் நம்முடைய உடல் ஆரோக்கியமும், உள அமைதியும், உயிர் நீடிப்பும் கிடைக்கும் என்ற மாபெரும் அற்புதத்தை உலகிற்கு அரங்கேற்றிக் காட்டியவர்களும்,
- மனித பிறப்பின் நோக்கம், இலட்சியம், குறிக்கோள் இறைவனைச் சேர்வதே, கடவுளோடு கலப்பதே என்ற உயர்ந்த உண்மையை உலகிற்கு உணர வைத்து, தெய்வத்தோடு சேரும் மோட்சம், விடுதலை பரமகதி, சிவநிலை, இறைவனடி என்ற பெருநிலையை அடையச் செய்வதி ல் வெற்றி கண்டவர்களும்,
- அகவியலை, ஆன்மவியலை, ஆண்டவன்நிலையை, அளப்பரிய ஆற்றலை, அறிந்து கொள்ள ஆலயங்கள் மூலம் அறிய வைத்தவர்களும் நம் நாட்டு சித்தர் பெருமக்களே ஆவார்கள்.

அக்காலத்தில் ஆண்டவனை அறிய, ஆராதிக்க, அடிபணிய, ஆலயங்களைக் கட்டியவர்கள் நம் நாட்டு அரசர்களும், ஆன்மிக சித்தர்களும் ஆவார்கள். இப்படி ஆயிரம் ஆயிரம் ஆலயங்களும், ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டு நம் நாட்டில் மட்டுமே.

பகவான் ஸ்ரீ பதஞ்சலி யோக பீடம்

39, ஆக்சீலியம் கல்லூரிச் சாலை, காந்தி நகர், வேலூர் 632 006.

உலகில் எங்கும் நம் நாட்டில் உள்ளது போல் ஆலயங்கள் அமைக்கப்படவில்லை என்பதே நம் ஆன்மிகத்தின் பேர் அற்புதம் ஆகும்.

ஆலயங்களைக் கட்டுவதற்குச் செல்வம் இருந்தால் மட்டும் போதாது. மனம் இருந்தால் மட்டும் போதாது. கோடி கோடியாய்க் கொட்டி கிடக்கும் செல்வந்தர்களுக்கும், கட்ட வேண்டும் என்னும் மனமுள்ளவர்களுக்கும் கூட இறைவன் அப்பெரும் பாக்கியத்தை அளிப்பதில்லை. பணமோ, மனமோ ஆண்டவனுக்கு முக்கியமில்லை.

ஆன்மிக தாகம் கொண்ட, அவனியிலேயே அற்புத மாமனிதர்களை, அவன் ஆலயங்களை அமைப்பதற்கு, இறைவனே தேர்ந்தெடுத்துக் கொள்கிறான்.

வாழையடி, வாழையாக வந்த சித்தர் கூட்ட மரபில் வருபவர்களுக்கு இப்பாக்கியம் கிடைக்கப் பெறுகிறது.

இப்படிப்பட்ட மாபெரும் பாக்கியமும், ஆண்டவனின் அருளும், ஆசியும், அற்புத வரமும் கிடைக்கப் பெற்றவர் தான், இன்றைய கால கட்டத்திலேயே நம்மிடையே வாழ்ந்துவரும், வாழும் சித்தரான தவத்திரு பாலமுருகனடிமை சுவாமிகள் ஆவார்கள்.

ஆண்டவன் இவரை ஆட்கொண்டு அழகியதோர் ஏழாம்படை வீடான அருள்மிகு பாலமுருகன் திருக்கோயிலைக் கட்டச்செய்ததுடன்,

ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முந்தைய அற்புத அதிசயங்கள் அடக்கப்பட்ட மாபெரும் ஆன்மிக அறிவியல் அதிசயங்களைத் தன்னுள்ளே கொண்ட புராதனமான சிவாலயமான விரிஞ்சிபுரம் மரகதாம்பிகை உடனாய மார்க்கபந்தீஸ்வரர் திருக்கோயிலின் புனரமைப்பு பணிக்கு இறைவன் இவரைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தி உள்ளது, விசித்தி ரமான, விந்தையான, வியப்பான செயல் ஆகும்.

'எவரிடம் எப்பணி தந்தால் அப்பணி சிறப்பாக அமையும்' என்பது தெரிந்தே ஆண்டவன் ஆலய அருட்பணிக்கு இவரை ஆட்கொண்டதே அற்புதமாகும்.

இம்மாபெரும் பணியைச் சுவாமி அவர்கள் ஏற்றுக் கொண்டதில் இருந்து ஏற்பட்ட தடங்கல்களும், குறிக்கீடுகளும், கணக்கிலடங்கா? இவையெல்லாம் பெரிதெனப் பொருட்படுத்தாமல், தொடர்ந்து தொய்வில்லாமல் சீறும் சிறப்புமாக இப்பணியை முடித்துள்ள சுவாமியின் பெயர் காலம் உள்ளவரையில் காற்றில் நிறைந்திருக்கும்.

இந்த மாபெரும் ஆன்மிக ஆலய அருட்பணிக்குச் சுவாமியை ஆட்கொண்ட ஆண்டவனே அவருக்கு நல்ல உடல் ஆரோக்கியத்தையும் நீண்ட ஆயுளையும் அருள வேண்டும் என நாள் தோறும் ஆண்டவனிடம் பிராத்தனை செய்யும்.

ஆன்மிக அன்பன்
தவயோக ஞானி தவத்திரு. ஸ்ரீ சங்கரர் குருஜி
நிறுவனர் : பகவான் ஸ்ரீ பதஞ்சலி யோக பீடம்
39, ஆக்சீலியம் கல்லூரிச் சாலை,
காந்தி நகர், வேலூர் - 6
0416-2243077.



South India Sanmarga Sangam Trust
Reg. No. 166/98

ஸ்ரீ

Phone : 04175-236983, 2377377
Cell : 094434 46089

தி.மலை
22.07.2010

வான்புகழ் சித்தருக்கு வாழ்த்துமடல்

திருப்பணி சித்தர் ஏழாவது முருகபடைச் சித்தர், ஆன்மிக குரு, மௌன சித்தர், ஸ்ரீலஸ்ரீ தவத்திரு. அருள்திரு பாலமுருகனடிமை சித்தருக்கு அருள் வணக்கம். தங்கள் பிறப்பு தமிழ் மண்ணுக்கு வைரகிரீடம், ஐம்பதாண்டு கால ஆன்மிகச் சிந்தனையில் ஒரு மலையை அருள்மலையாக மாற்றி, அந்த மலையை ஏழாவது படை வீடாக மாற்றி அருள்மிகு பாலமுருகன் திருக்கோயிலை நிறுவிய வள்ளல் நீங்களே! உங்கள் பார்வை ஒரு சாந்தம், உங்கள் சிந்தனை ஆன்மிக திருப்பணி. உங்கள் நடைப்பயணம் திருக்கோயில் கும்பாபிஷேக திருப்பணிகள். உங்கள் எழுதுகோல் ஒரு ஓலைச்சுவடி. தங்கள் திருக்கரத்தால் எழுதப்பட்ட வரிகள், முருகப்பெருமானால் எழுதப்பட்ட வரிகள். தங்களை நாடிய பக்த கோடிகள் பலரும் சிறப்பு பெற்றார்கள் என்பது உண்மை.

இந்த நூற்றாண்டின் ஒரு புரட்சி ஆன்மிகத் துறவி. தங்கள் திருக்கரத்தால் தொடங்கப்பட்ட திருக்கோயில்கள் அனைத்தும் சிறப்புடையன. தற்போது ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்கத் தங்களுக்கு இறைவன் 1300 ஆண்டுகளாக புராதனமான சிவத்தலமாகிய விரிஞ்சிபுரம் அருள்மிகு மரகதாம்பிகை உடனுறை மார்கபந்தீஸ்வரர் (வழித்துணைநாதர்) திருக்கோயில் திருப்பணியை ஆதிசிவன் ஒருவரப் பிரசாதமாக தங்களிடம் ஒப்படைத்தார். அந்தப் பொறுப்பை இரவு பகலாகப் பாடுபட்டு உடலை வருத்திப் புதிய பொலிவுடன் சமர்ப்பணம் செய்துள்ளீர்கள்.

இந்தத் திருக்கோயிலில் அமைந்துள்ள 88 அடி உயரம் கொண்ட இராஜகோபுரம், சுவாமி அம்பாள், நடராஜர், விநாயகர், கருவறைகள் முதல் இரண்டாம் பிரகாரங்கள், சிம்மக்குளம், நந்தி மண்டபம், உற்சவ மண்டபம், கிழக்கு வாயில் 110 அடி உயரமுள்ள இராஜகோபுரம், வண்ணப்பூச்சு, திருப்பணிக்காக அயராத உழைப்பால் சுமார் 2 கோடியில் புதுப்பொலிவுடன் கட்டிய சாதனையாளர் நீங்களே !

இந்தத் திருக்கோயில் கும்பாபிஷேகம் தங்கள் திருக்கரத்தால் வரும் டிசம்பர்த் திங்களில் வெகு விமரிசையாக நடத்தி முடிக்க ஆதி சிவனும், நவசக்தியும், நவலிங்கேஸ்வரரும், ஸ்ரீ வடலூர் சிதம்பர இராமலிங்கப் பெருமானும் துணைபுரிய ஆண்டவர் பொற்பாத கமலத்தைப் பிரார்த்திக்கின்றேன்.

நூறாண்டு காலம் வாழ்ந்து ஆன்மிகச் சகாப்தத்தை உருவாக்க வேண்டுகிறேன். தங்கள் மீது அன்பு கொண்ட இன்றும், என்றும்,

இவண்

வள்ளலார் அருள்மணி அடிகள்
22/7/2010

இல்லம் : 61A வள்ளலார் இல்லம், ரமணா நகர் அஞ்சல், திருவண்ணாமலை - 606 603. தமிழ்நாடு.

சித்தயோகி
ஸ்ரீ சிவசங்கர் பாபா

"ஸ்ரீ ராமராஜ்யம்"
கேளம்பாக்கம் 603 103

வாழ்த்துரை

"உறக்கும் துணையதோர் ஆலம்வித் தீண்டி
இறப்ப நிழற்பயந் தாஅங்கு – அறப்பயனும்
தான்சிறி தாயினும் தக்கார்கைப் பட்டக்கால்
வான்சிறிதாப் போர்த்து விடும்"

என்கிறது நாலடியார். தக்கவர் கைப்பட்ட தர்மம் வானை விடவும் விரிவாகும் என்பது அதன் பொருள். தவத்திரு. பாலமுருகனடிமை அடிகளாரின் திருப்பணிகளைத் தெள்ளிதின் ஆராய்ந்து நோக்குவார்க்கு இவ்வுண்மை வெள்ளிடை மலையென விளங்கும்.

"நிச்சம் என் நெஞ்சில் மன்னி யானாகி நின்றானை குறுகினோர்க்கு இனி என்ன குறையே?" என்ற தேவார அனுபவமும் – அனுபூதியும் இறை அருட்பணி செய்பவர்கட்கே விளங்கும். எண்ணமிட்டாலே போதும் ; எண்ணுவதே அவ்வின்பத் தண்ணமுதை உள்ளே ததும்ப புரியும்.

"கடமையாவன தன்னைக் கட்டுதல் ; பிறர் நலம் வேண்டல் ; பிறர் துயர் தீர்த்தல்" என்ற பாரதியின் செயல் வழி தவத்திரு பாலமுருகனடிமை அடிகளாரின் சீரிய மேற்பார்வையில் திருவிரிஞ்சிபுரத் திருப்பணியாக விரிவடைந்து திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாவில் சிறப்புறுகிறது.

"செல்வத்திற்கோர் குறையில்லை
எந்தை சேமித்து வைத்த
பொன்னுக்கு அளவொன்றில்லை
துயரில்லை ; மூப்பில்லை என்றும்
சோர்வில்லை ; நோயென்றும் தொடுவதில்லை"

என்று "கண்ணன் – என் தந்தை", கவிதையில் பாரதி பகர்வார். அப்படிப்பட்ட அருளாளர் தவத்திரு அடிகளாரின் திருப்பணிகள் மேன்மேலும் சிறக்கவும், திருவிரிஞ்சிபுரம் போல விரிவடைந்து மாநிலம் பயனுறவும் எந்தை ஈசனை வேண்டி இறைஞ்சுகின்றேன்.

வணக்கத்துடன்,

பாபா –

சிவசங்கர் பாபா

செ.ராஜேந்திரன், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சியர்,
வேலூர் மாவட்டம்.

தொலைப்பேசி எண் (அலுவலகம்) : 0416-2252501, 2253512
2253516, 22552752
நிகரி (அலுவலகம்) : 0416-2253034
தனி : 0416-2252345
இல்லம் : 0416-2222000
நிகரி (தங்கும் மாளிகை) : 0416-2228029
செல் : 9444135000
மின் அஞ்சல் : collector.tnvlr@nic.in

திருவிரிஞ்சை திருக்குடமுழுக்கு-மலர் வாழ்த்து மடல்

நாள் 29.11.2010

"நற்றுணையாவது நமசிவாயவே!"

என்பது நாவுக்கரசர் நவின்ற நன்மொழி. 'நமசிவாய' என்ற ஐந்தெழுத்து மந்திரத்தின் நாயகர் சிவபெருமான் சிவலிங்க வடிவில் உலகுய்ய அருள்பாலித்து வரும் சிறப்பு பெற்ற சிவத் தலங்களில் தனிச் சிறப்பு மிக்க திருத்தலம் திருவிரிஞ்சிபுரம் ஆகும். இந்தச் சிவத்தலம் நம் மாவட்டத்தில் அமைந்திருப்பது நம் மண்ணும், மக்களும் செய்த புண்ணியமே எனலாம்.

ஆற்றங்கரைகளுக்கும், ஆன்மீகத்திற்கும் அசைக்க முடியாத தொடர்புண்டு. ஆற்றங்கரைகள் நாகரீகத்தின் தொட்டில்கள். நாகரீகங்கள் ஆன்மீகத்தின் விளைநிலங்கள். ஆன்மீகம் இறை உணர்வை மட்டுமல்ல கலை உணர்வையும் தட்டி எழுப்புவது.

அந்த வகையில், பழந்தமிழர் பண்பாட்டின் தொட்டிலாய், தொண்டை மண்டலப் பண்பாட்டின் முரசுக் கட்டிலாய் விளங்கி வந்துள்ள பல்வேறு திருத்தலங்கள் பாலாற்றங்கரையில் அமைந்தன. வேலூர் மாவட்டத்தில், பாலாற்றங்கரையில் அமைந்த திருவிரிஞ்சிபுரத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ மரகதாம்பிகை உடனுறை ஸ்ரீ மார்க்கபந்தீஸ்வரருக்கு உலகம் வியக்கும் வகையில் கருங்கல் காவியமாய் திருக்கோயில் ஒன்று 1300 ஆண்டுகளுக்கு முன் அமைக்கப்பட்டது. இத்திருக்கோயிலுக்கு நந்தி விக்கிரம பல்லவன், ராஜேந்திர சோழன், பராந்தக சோழன், கிருஷ்ண தேவராயர் என மாமன்னர்கள் திருப்பணி செய்து தம்மைப் பெருமைக்குரியவர்களாய் ஆக்கி கொண்டுள்ளனர்.

இத்திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவன் சிறுவன் ஒருவனின் பூசையைத் தம் திருமுடியை வளைத்து ஏற்றுக் கொண்டதால், 'திருமுடி வளைத்தவர்' என்றும், வணிகன் ஒருவனுக்கு வழித்துணையாகச் சென்றதால், 'வழித்துணைநாதர்' என்றும் அழைக்கப்படலானார்.

தமிழனின் கட்டடக் கலை அறிவிற்கும், சிற்பக் கலை நுட்பத்திற்கும் சான்றாக இத்திருக்கோயில் அமைந்துள்ளது.

'வேதாரண்யம் விளக்கழகு,
திருவாரூர் தேரழகு,
திருவிடைமருதூர் வீதியழகு,
திருவிரிஞ்சை மதிலழகு'

எனும் முதுமொழி இத்திருக்கோயிலின் கட்டிடக் கலை மேன்மையை விளக்கி நிற்கிறது.

பட்டினத்தடிகள், அருணகிரிநாதர், சைவ எல்லப்ப நாவலர், அப்பைய தீட்சிதர் போன்ற இறையன்பர்கள் இத்திருத்தலத்தைக் குறித்து பாடியுள்ளனர். அருணாசலப் புராணம் போன்ற புராணங்கள் இத்திருத்தலத்தின் பெருமையை விரித்துக் கூறுகின்றன.

இத்தகு சிறப்புமிக்க திருத்தலத்திற்கு, சுமார் நான்கு கோடி ரூபாய் செலவில் திருப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. அதில் பெரும்பான்மை திருப்பணிகள் ரத்தினகிரி தவத்திரு. பாலமுருகனடிமை சுவாமிகளின் முயற்சியால் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

'ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து விரிஞ்சிபுரம்' என கல்வெட்டுகள் கூறும் திருவிரிஞ்சிபுரத்தில், பாலாறு, பிரம்ம தீர்த்தம், சிம்ம தீர்த்தம், சூரிய தீர்த்தம் மற்றும் சோம தீர்த்தம் என ஐந்து தீர்த்தங்கள் உள்ளன. இதில் சிம்ம தீர்த்தத்தில் கார்த்திகை மாதம் கடை ஞாயிறு அன்று நீராடி மக்கள் தங்கள் துன்பம் நீங்கப் பெறுவது பிரசித்திப் பெற்றது. இந்த ஆண்டு அதே நாளில் (திருவள்ளுவராண்டு, கார்த்திகை 26ஆம் நாள்), திருக்குடமுழுக்கு நடக்கவிருப்பது சிறப்பான ஒன்று.

இந்தத் திருக்கோயிலுக்குப் பிரம்மாண்டமான திருப்பணியையும், திருக்குடமுழுக்கையும் செயல்படுத்தும் இந்துசமய அறநிலையத் துறைக்கும், அப்பணியைத் தனது தன்னலமற்ற இறையுணர்வாலும், அர்ப்பணிப்பாலும் செய்து முடித்துள்ள ரத்தினகிரி தவத்திரு. பாலமுருகனடிமை சுவாமிகளுக்கும், திருக்கோயில் நிர்வாகத்திற்கும், நன்கொடையாளர்களுக்கும், இந்தச் சிவத்தொண்டில் பங்கு கொண்டுள்ள அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் என் மனமார்ந்த பாராட்டுதல்களையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்!

இவ்விழா மலர் சிறந்த முறையில் அமைந்திட வாழ்த்துகிறேன்!



அன்புடன்,

கோ.பக்கிரிசாமி, பி.எஸ்.சி., பி.எல்.,
இணை ஆணையர்,
இந்து சமய அறநிலையத்துறை,
வேலூர் - 9.

வாழ்த்து செய்தி!

ஓம்

சொற்றுணை வேதியன் சோதிவானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்த கைத்தொழ
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமசி வாயவே!

உலக உயிர்களுக்கெல்லாம் நல்லதொரு துணையாக விளங்குவது யாதெனின் நமச்சிவாய என்ற ஐந்தெழுத்து மந்திரமே என்பது அப்பர் பெருமானின் வாக்கு. இந்த ஐந்தெழுத்து மந்திரத்திற்குரிய இறைவனாகிய முழுமுதற்பொருள் சிவபெருமான் என்ற நாமத்தில் இலிங்க வடிவில் பல்வேறு இடங்களில் தோன்றி அருள்பாலித்து வருகின்றனர்.

பண்டைய காலத்தில், தொண்டை மண்டலம் என்று அழைக்கப்பட்டதன் ஒரு பகுதியாகிய இன்றைய வேலூர் மாவட்டத் தலைநகருக்கு அருகில் பாலாற்றங்கரையில் விரிஞ்சிபுரம் என்ற நல்லூரில், சுயம்புவாகத் தோன்றி ஸ்ரீ மார்க்கபந்தீஸ்வரர் என்ற திருநாமம் பூண்டு அருள்பாலித்து வருகின்றார். அம்பாள் ஸ்ரீ மரகதாம்பிகை உடனுறை இத்திருத்தலம் 13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. திருவாரூர் தேரழகு, திருவிரிஞ்சை மதிலழகு என்று முன்னோர்கள் அகமகிழ்ந்து போற்றும் வண்ணம் இத்திருத்தலத்தின் மதிற்சுவர் நெடிதுயர்ந்து, அகன்று கம்பீரமாகக் காட்சிதரக்கூடியது.

பேறுபெற்ற சிறப்பிற்குரிய இத்திருத்தலத்திற்குச் சிவனடியார்களும், யோகிகளும், ஞானிகளும் புனிதப் பயணம் மேற்கொண்டு மென்மேலும் இத்தலத்தின் மகிமையை எழிற்கூட்டினர். இத்தலத்தின் தலவிருட்சம் பெண்பனையாகும். மேலும் இம்மூலவர் சிவசர்மன் என்ற அந்தணச் சிறுவனின் ஆராதனையை ஏற்றுக்கொள்ள தம் சிரசையே சாய்த்துக் கொடுத்தவர். இன்றும் அத்திருக்கோலம்தான் வழித்துணைநாதராகவும் போற்றப்படுகிறார்.

நீண்ட காலத்திற்குப் பிறகு இத்திருத்தலத்தின் எழில் கவனிப்பாரற்றுப் போனதால் ஏறத்தாழ 100 ஆண்டுகளுக்கு மேலாக புதுப்பிக்கப்படாதிருந்த நிலையில், எழில் மட்டுமல்ல ; வருகைதரும் பக்தர்களும் குறைந்து போயினர். மேலும் ஏதோ காரணத்தால் மேற்குத்திசை கோபுரம் கல்காரத்தோடு முழுமையடையாத நிலையில் அரைகுறையாகவே நின்றுபோனது!

இந்நிலையில் எம்பெருமான் திருவிரிஞ்சிநாதர் இரத்தினகிரி தவத்திரு. பாலமுருகனடிமை சுவாமிகளை ஆட்கொண்டார். தவத்திரு. சுவாமிகளை 1968-ம் ஆண்டே இரத்தினகிரி ஸ்ரீ பாலமுருகப்பெருமான் ஆட்கொண்ட வரலாறு அகிலம் அறிந்த ஒன்றுதான். அவ்வகையிலேயே மார்க்கபந்தீஸ்வரரும் ஆட்கொண்டதால் அவனருளால் அவன்தாள் வணங்கி எனும் மாணிக்கவாசகரின் திருவுளப்பாங்கின் படி அவனருளால் சுவாமிகளும் இத்திருப்பணியைச் சிரமேற்கொண்டார்.

திருப்பணித்[illegible]று சுவாமிகளும் விரிஞ்சிபுரம் சென்று இறைவன் திருக்கோலம் கண்டு மனமுருகினார். ஆதவனைக் கண்ட பனிபோல் அங்குள்ள குறைகளெல்லாம் விலகத்துவங்கி நல்லவை விளங்கத் துவங்கின. ஏராளமானோர் சுவாமிகளின் ஆணைக்கேற்ப உதவிகளைச் செய்ய முன்வந்தனர். அரசும், அறநிலையத்துறையும், இத்திருப்பணியில் சுவாமிகளுக்கு உற்ற துணையாய் விளங்கின.

மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அருளாளர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், வணக்கத்திற்குரிய அறநிலையத்துறை ஆணையர் திரு. ப.ரா.சம்பத், இ.ஆ.ப., அவர்களின் ஆலோசனையின்படியும் சுமார் 4.00 கோடி மதிப்பிலான திருப்பணிகள் அனைத்தும் நன்கொடையாளர்களின் பெரும் பங்களிப்போடு சிறப்பாக நிறைவு செய்யப்பட்டுள்ளது.

மேற்றிசை குறைகோபுரம் இன்று ஐந்து நிலைக் கோபுரமாகி விண்ணைத் தொடும் நிலையில் இம்மண்ணின் பெருமை பேசுகிறது. நீண்ட திருமதிலும் நெடிய இராஜகோபுரமும் பண்டைய கம்பீரத்தை மீட்டெடுத்தன. சிம்மக்குளம் பழைய நிலையில் பொலிவாக்கப்பெற்றது. சிற்பங்கள், தூண்கள், திருவாயில்கள், கொடிமரம், தரைதளம், மூலவர், அம்பாள் சன்னதி என அனைத்தும் பேரழகு பூண்டன.

ஈறாய்: முதல் ஒன்றாய்; இருபெண் ஆண் குணை மூன்றாய்;
மாறா மறைநான்காய் ; வரும்பூதம் அவை ஐந்தாய் ;
ஆறார் சுவை ஏழோசையொடு எட்டுத்திசை தானாய்
வேறாய் உடனானான்...

ஆதியாகவும், அந்தமாகவும், ஆண்பெண்ணாகவும், மூன்று குணங்களாகவும், நான்கு வேதங்களாகவும், ஐந்து பூதங்களாகவும், ஆறு சுவையாகவும், ஏழிசையாகவும், எட்டுத்திசைகளாகவும், தானாகவும், வேறாகவும் உடனாகவும் இப்படியெல்லாம் விளங்கக்கூடிய எம்பெருமான் திருவிளையாடல்கள் கணக்கற்றவை. அப்பேறுபெற்ற பெருமான் எழுந்தருளிய விரிஞ்சிபுரத் திருத்தலத்தின் மகிமையை வார்த்தைகளில் வடித்தல் இயலுமோ!

அப்பர் சுவாமிகளும், திருமூலநாயனாரும், பட்டினத்தாரும், அருணகிரிநாதரும் திருவடிவைத்த இத்திருத்தலத்திலே, பாதம் வைக்கும் பேற்றினை நாம் அனைவரும் பெறவேண்டும். இத்தகைய சிறப்புகொண்ட விரிஞ்சிபுரம் அருள்மிகு மரகதாம்பிகை சமேத மார்கபந்தீஸ்வரர் திருக்கோயில் திருக்குடமுழுக்கு விழா நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2041 கார்த்திகைத் திங்கள் 26-ம் நாள் (12.12.2010) நடைபெறவுள்ளதை எண்ணியும், அதில் அணில் பங்கு ஆற்றுவதற்கு இந்த எளியவனுக்கு வாய்ப்புதந்த உலகு யாத்தவனுக்குத் தலைமுறைகாலம் நன்றி கூறுவதில் பேருவகை கொள்கிறோம்!

அம்மையப்பனாக என்றென்றும் நீங்காது நிறைந்திருந்து இவ்வுலகை உயிர்களுக்கு மார்கபந்தீஸ்வரரும் மரகதாம்பிகையும் அருள்பொழிய வேண்டியும், தவத்திரு. இரத்தினகிரி பாலமுருகனடிமை சுவாமிகளின் திருப்பணிகள் மென்மேலும் பெருகி ஆலயங்கள் பேராலயங்களாய்ப் பொலிவுற திருவருள் வேண்டி அவன்தாள் பணிந்தோம்.

வணக்கத்துடன்,



விரிஞ்சிபுரம் திருக்கோயிலின் சிறப்பம்சங்கள்

பொய்கை வெ. ஆனந்த சுந்தரராஜன்

திருக்கோயிலின் சிறப்பம்சங்கள் ஆவன :

1. கட்டிட அமைப்புச் சுவாமிகள் அமைப்பு
2. சிற்ப வேலைப்பாடுகள்
3. மற்றும் சில சிறப்பம்சங்கள்

1. கட்டிட அமைப்புச் சுவாமிகள் சிலைகள் அமைப்பு :

திருக்கோயில் கிழக்கு – மேற்கு 385 (140 மீட்டர்) அடி நீளமும் வடக்கு தெற்கு 390 (142 மீட்டர்) அடி அகலமும் கொண்டது. திருக்கோயிலின் இராஜகோபுரம் எட்டு நிலைகளைக் கொண்டு ஒன்பது கலசங்களுடன் 110 (35 மீட்டர்) அடி உயரம் உடையதாக மிகக் கம்பீரமாகக் காட்சியளிக்கிறது. இத்தலத்தினைச் சுற்றி மதிற்சுவர்கள் சுமார் 60 (20 மீட்டர்) அடி உயரத்தில் மிக்க எழிலுடன் பார்ப்பவர் கண்ணைக் கவரும் வண்ணம் காட்சி அளிக்கிறது. திருக்கோயிலின் நிலப்பரப்பு அளவு சர்வே எண். 341-2-ல் 13.987 சதுர மீட்டர் ஆகும். இத்தலம் 1,300 வருடம் பழைமை வாய்ந்த திருத்தலமாகும். திருக்கோயிலின் மதிலழகுக்குப் பழமொழி உள்ளது.

அப்படி வழங்கும் மொழித்தொடர்,

வேதாரண்யம் விளக்கழகு
திருவாரூர் தேரழகு
திருவிடைமருதூர் தெருவழகு
திருவிரிஞ்சை மதிலழகு என்பதாகும்.

திருக்கோயிலின் உள்ளே நுழைந்தால் முதலில் கொடி மண்டபம், நான்கு கால் மண்டபம், பதினாறு கால் மண்டபம் தோன்றும். இவைகளைக் கடந்து மேலே சென்றால் சுமார் 20 அடி உயர சிம்ம நுழைவாயில் அமைப்புப் படித்துறையுடன் சிம்மக்குளத்தைக் காணலாம். இதனைக் கடந்து சென்றால், தென்புறம் மட்டும் நுழைவு வாயில் இல்லாமல் மதில்மேல் நான்குநிலை கொண்ட கோபுரம் உள்ளது.

நாள்தோறும் இராக்காலங்களில் தேவர்கள் வந்து எம்பிரானை பூஜை செய்துவிட்டுப் போவதால் அவ்வழி தேவர்களுக்காக ஏற்பட்டதாகவும் அதனால் மானிடர் யாரும் அப்பக்கம் செல்ல வழி ஏற்படுத்தப்படவில்லை என்றும் ஐதீகமாகக் கூறப்படுகிறது. மேலும் சென்றால், நாட்டியக் கலை மண்டபம் சிறந்த எழிலோடு தோற்ற மளிக்கும். இம்மண்டபத்தில் விநாயகர் சிலையும் உள்ளது.

கோயிலின் பின்புறம் மேற்கு வாயில் கோபுரம் இல்லாமல் அமைந்துள்ளது. இக்குறையினைப் போக்க ஐந்து நிலைகள் கொண்ட கோபுரத்தை அமைக்க எல்லா ஏற்பாடுகளும் திருக்கோயில் நிர்வாகம் செய்து வருகிறது. இந்த மேற்குக் கோபுர வாயிலின் உள்பகுதியில் உள்ள சூரியன், பிறைச்சந்திரன், வாள், வராக சின்னங்கள் மன்னர்கள் ஆட்சியைத் தெரிவிக்கின்றன. மேலும், மற்றொரு பதினாறு கால் மண்டபம், 1008 சிவலிங்கங்கள் சன்னிதியின் மீது கோபுரம் மற்றும் சுவாமி திருக்கல்யாண மண்டபம் அமைந்துள்ளது.

கோயிலின் வலது புறத்தில்

இரண்டடுக்கு மண்டபம் அமைந்துள்ளது. அதன் முன் பகுதியில் சூல தீர்த்தம் அமைந்துள்ளது. இது எழிலுடன் இருந்தது. ஆனால் தற்போது இத்தடாகம் சிதலமடைந்து இருக்கிறது. மற்றும் வசந்த நீரோட்ட கட்டிடம் அமைந்துள்ளது. மேலும் நீங்கள் 'நேரம் பார்க்கலாம் வாங்க' என்று அழைக்கும் அபூர்வமான மணிகாட்டும் கல்லை இங்குக் காணலாம். (குறிப்பு : கல் மணி காட்டுமா என்று சந்தேகம் கொள்பவர்கள் சிறு குச்சியை மணிகாட்டும் கல்லின்மேல் வைத்து அதன் நிழல் விழும் இடத்தை நோக்கினால் உண்மையான நேரத்தை அறிந்து கொள்ளலாம்). இதுபோன்று வேறு எங்கும் மணி காட்டும் கல்லைக் காண இயலாது. வடக்கே திருமஞ்சன நான்கு நிலைகள் கொண்ட கோபுரம் உள்ளது. அதனைத் தொடர்ந்து வாகன மண்டபம் உள்ளது. அடுத்து வைப்பு அறை; இதன்மீது ஓர் அடுக்கு மண்டபமும் உள்ளது. அவற்றைத் தொடர்ந்து நூற்றுக்கால் திருமண மண்டபம் அமைந்துள்ளது. இம்மண்டபத்தில் கல்லினால் செதுக்கப்பட்ட அருள்தரும் சிவகாமி உடனாய அருள்மிகு நடராஜர் சிலையைக் காணலாம். மேலும், காலபைரவர், காலபைரவி அம்மன் சன்னிதிகள் உள்ளன.

இரண்டாம் பிரகாரம் நுழையும்முன் கொடி மண்டபத்தில் உள்ள நந்தி, பலிபீடம், ஏரம்ப கணபதி, தண்டாயுதபாணி திருமேனிகளை எல்லாம் கண்டுகளித்து விட்டு, இரண்டாம் பிரகாரத்தில் மூன்று நிலை கொண்ட கோபுரம் காணலாம். அதன் இடது புறமாகச் சென்றால் சொர்ண கணபதி, நிர்வாக அலுவலகம் ஆகியவை உள்ளன.

இராமலிங்க சுவாமி நிலை, அறை மற்றும் மடப்பள்ளி அதன் உள்ளே சென்று பார்த்தால் இரண்டடுக்கு மண்டபம் மேலும் கற்களால் அமைக்கப்பட்ட கிணறு, கல்லால் செய்யப்பட்ட நீர்த்தேக்கத் தொட்டி உள்ளன. அதனையடுத்து பிச்சாண்டேஸ்வரர் சன்னிதியில் உட்சுவர்களில் பழைமை யடைந்த சித்திரங்களைக் காணலாம். மேலும், உற்சவமூர்த்தி மண்டபத்தின் உள்ளே செந்தூர கணபதி சிலை உள்ளது. இம்மண்டபத்தின் மீது கோபுரம் அமைந்துள்ளது. இரண்டாம் பிரகாரத்தின் பின்பகுதியில் பதினெட்டுப் படியைக் கொண்ட ஐயப்பன் சன்னிதி, ஆறுமுக சுவாமியுடன் வள்ளி, தெய்வானை அமையப்பெற்ற சன்னிதியின் மீது கோபுரம் உள்ளது. இதனையடுத்து நீண்ட வளாகத்தில் 9 சிவலிங்கங்களில் 8 நாகலிங்கமும், பஞ்சமுக சதாசிவலிங்கமும் மற்றும் காரைக்கால் அம்மையார் ஆகிய சுவாமிகள் தனித்தனியாக அமையப்பெற்றுள்ளன.

இரண்டாம் பிரகாரம் வலதுபுறத்தில் காசி விஸ்வநாதர் சன்னிதி, சோமதீர்த்தம் மற்றும் திருத்தல விருட்சம் பனைமரம் மற்றும் பதினொன்று இப்பிரகாரத்தில் பலிபீடமும் உள்ளன. அம்மையார் சன்னிதிக்கு முன் செல்வவிநாயகர் சன்னிதி உள்ளது. அருள்தரும் மரகதவல்லி அம்மன் சன்னிதியின் மீது கோபுரம் உள்ளது. இதன் உட்சுவர்களில் திருத்தலங்களைப் பற்றிய பல அம்மன் ஓவியங்கள் அமையப்பெற்றுச் சிறப்புடன் காட்சி தருகிறது.

அம்மன் சன்னதியின் உள்ளே சண்டிகேஸ்வரி மற்றும் காலபைரவர் சன்னிதியும், சுவாமி பள்ளியறையும் அமையப்பெற்று உள்ளன. மூன்று பக்கங்களிலும் ஒன்பது பலிபீடங்கள் உள்ளன. வெங்கடேசப் பெருமாள் அமையப்பெற்ற கண்ணாடி அறை, அருள்தரும் சிவகாமி உடனாய அருள்மிகு நடராஜர் சன்னிதியின் மேல் கோபுரம் உள்ளது. கொடிமரம், சிம்ம வாகனம், பலிபீடம், சனீஸ்வரன், நவக்கிரகங்கள், யாக சாலை, மற்றொரு வைப்பு அறை, சூரிய பகவான் மற்றும் 108 சிவலிங்கம் ஆகியவை அமையப்பெற்று உள்ளன.

மூன்றாம் பிரகாரம் நுழையும்முன் சந்திரமௌலீஸ்வரர் சன்னிதி உள்ளது. மகா மண்டபத்தில் இருபுறமும் துவார பாலகர்களைக் கடந்து இறைவன் சன்னிதிக்குள்ளே சென்றால் நால்வர், பொள்ளாப் பிள்ளையார், அருள்மொழித் தேவர், (சேக்கிழார்) நம்பியாண்டார் நம்பி, அறுபத்து மூன்று நாயன்மார்கள், சப்த கன்னியர், நர்த்தன கணபதி, தட்சணாமூர்த்தி, லக்ஷ்மி, சரஸ்வதி, சுந்தரேஸ்வரர், வாசுதேவ பெருமாள், பிரம்மதேவர், சண்டிகேஸ்வரர், துர்க்கை ஆகிய வழிபடு சுவாமிகள் அமையப் பெற்றுள்ளன. மேலும் பிரம்மா, விஷ்ணு, கரன், கௌரி, பட்டினத்தார், அருணகிரிநாதர் ஆகியவர்களின் ஓவியங்கள் உட்சுவர்களில் வரையப்பெற்று உள்ளன.

சுயம்புலிங்கமாக அருள்மிகு வழித் துணைநாதர் மிகவும் கம்பீரமாக ஆறு அடி உயரத்தில் மிகவும் எழிலாகக் கோலம் கொண்டு உள்ளார். இறைவன் சன்னிதியின் மீது கோபுரம் அமையப்பெற்று உள்ளது.

சிறப்பான கட்டிட அமைப்பு கொண்ட எழில் மிக்க சிற்பங்கள், இறைவன் சன்னிதி, அம்மன் சன்னிதி மற்றும் சில சன்னிதிகள் மண்டபங்கள், மதிற்சுவர் இவை அனைத்தும் கட்டியவர் யார் ? – என்ற முழு விவரங்கள் இன்னும் தெரியவில்லை. இத்தலத்தைச் சுற்றிலும் பல்லவர்களின் கல்வெட்டு களும், சோழர்களின் கல்வெட்டுகளும், பாண்டியர்களின் கல்வெட்டுகளும், விஜய நகர மன்னர்களின் கல்வெட்டுகளும் மற்றும் கர்நாடகப் பகுதி சேர்ந்த முதலாம் வேங்கடபதி கல்வெட்டுகளும் உள்ளன. அவற்றை முழுமையாக ஆராய்ந்து பார்த்தால் ஒருவேளை கட்டிய காலமும் மன்னர்கள் யார் யார் என்றும் தெரியவரலாம். அதே போன்று இத்தலத்தில் அம்மையார் சன்னிதியில் இருந்து வேலூர் அருள்தரும் அகிலாண்டேஸ்வரி உடனாய அருள்மிகு ஜலகண்டேஸ்வரர் திருக்கோயிலில் உள்ள நடராஜர் சன்னிதிக்கும் இடையில் சுரங்கப்பாதை உள்ளதாகச் செவிவழிச் செய்தி ஒன்றும் உள்ளது. அவற்றை முழுமையாக ஆராய்ந்து பார்த்தால் இதனைப் பற்றித் தெரியவரலாம்.

இவ்வாலயத்தின் தெற்கு முகமாக அமைந்துள்ள பிரம்ம தீர்த்தத்தின் அமைப்பும், எழிலும் கண்கொள்ளாக் காட்சியாகும். இத்தடாகத்தின் மத்தியில் நீராழி மண்டபம் மற்றும் பிரம்மபுரீஸ்வரர் ஆலயம் உள்ளன. இத்திருக்குளத்தின்

நிலப்பரப்பளவு சர்வே எண். 342-8ல் 4,822 சதுர மீட்டர் ஆகும்.

2. திருக்கோயிலின் சிற்ப வேலைப் பாடுகள்

திருக்கோயிலின் சிற்ப வேலைப் பாடுகளை முழுமையாக நாம் முதல் பிரகாரம் முழுவதிலுமே காணலாம்.

முதலில் கொடி மண்டபம் நுழைந்து கொள்வோம். கொடி மண்டபத்தின் மையப் பகுதியில் *உண்மையிலேயே உயிர் உள்ள எருது அமர்ந்திருப்பது போன்ற சிறப்பான வேலைப்பாடுகளைக் கொண்ட நந்தி பகவான்* சிலையினைக் காணலாம். இந்த மண்டபத்தில் 28 கால்கள் உள்ளன. இங்கு உள்ள ஒவ்வொரு தூணின் சிற்பமும் மிகவும் நேர்த்தியானது. இத்தூண்களில் 63 நாயன்மார்களில் ஒருவரான கண்ணப்ப நாயனார் தன் ஒரு காலைச் சிவபெருமான் கண்ணில் வைத்தபடி தன் கண்ணை அகழ முயலும் சித்திரமும், மார்க்கண்டேயர் சிவனை அணைத்தபடியுள்ள சிற்பமும், இரணியன் வயிற்றைக் கிழிக்கும் நரசிம்மன் சிற்பமும், ஆஞ்சநேயர் அற்புதங்கள் எனப் பல்வேறு புராணக் கதைகளின் சிற்பங்கள் மிகவும் துல்லியமாகவும் தத்ரூபமாகவும் புடைப்புச் சிற்பங்களாக வடிக்கப் பெற்று உள்ளன.

இம்மண்டபத்திற்குத் தெற்கே 20 அடி உயரத்திற்குச் சிம்மம் மிகவும் நேர்த்தியாகக் காட்சிதரும். சிற்பங்களை மேலும் காண வேண்டுமாயின் நாம் நாட்டியக் கலை மண்டபம் செல்லவேண்டும். நாட்டியக் கலை மண்டப விதானத்தில் அலங்காரத் தோரணம் போன்ற கற்சிற்பம், இப்படியும் கல்லில் சமைக்க முடியுமா என்று நம்மை பிரமை கொள்ளச் செய்யும்.

இம்மண்டபத்தின் பக்கச் சுவர்கள் கார்த்திகைத்திங்கள் கடை ஞாயிறு விசேஷங்களைக் குறிக்கும் சிற்பங்களும், வெளிப்புறத் தூண்களில் குதிரை, யானை முகம் கொண்ட சிம்மம், சிம்ம முகமும் யானை முகமும் கலந்தாற் போன்ற குதிரையும், இந்த வாகனங்கள் மீது மனிதன் அமர்ந்த நிலையில் இருப்பது போன்றும் மற்றும் பாம்பாட்டிச்சித்தர், மாகாளி, கிருஷ்ணர், ராமர், விநாயகர் முதலான பல சிற்பங்களும் மிகவும் எழிலாகக் காட்சிதரும்.

அடுத்தபடியாக சுவாமி திருக்கல்யாண மண்டபம் சென்றோமானால் அங்கேயும் மேற்கூறியது போன்றே சிற்ப வேலைப்பாடு கொண்ட விதானமும், தூண்களையும் காணலாம். இங்கு ஆறுமுகப் பெருமான், பஞ்சமுக விநாயகர் போன்ற ஆன்மிகச் சிற்பங்களும் இரண்டு அடுக்கு மண்டபத்தில் அதேபோன்று அகப்பொருள் சம்பந்தமான சிற்பங்களும், மற்றும் பலவகையான வேறு சில சிற்பங்களும் ஆங்காங்கே உள்ளன. சிற்பங்களின் எழிலை ரசித்துக் கொண்டே வருகையில் ஆங்காங்கே சில சிற்பங்கள் வேண்டுமென்றே சிதைக்கப்பட்டிருப்பதைக் காண்கையில் நம் நெஞ்சம் கொதிப்படை வதையும் தவிர்க்க இயலாது.

அடுத்தபடியாக நூற்றுக்கால் மண்டபம் காண்போம். அங்கிருக்கும் தூண்கள் வெறுமையாகக் காட்சிதரும். ஆனால், அக்குறைகளை எல்லாம் களையும்படி முழு கற்சிலையாகக் காணப்படும் நடராஜரைக் காணலாம். *முழுக்க முழுக்கக் கல்லால் சமைக்கப்பட்ட*

நடராஜர் சிலை. வெளிப்புற மதிற்சுவர்களின் நடுவில் சென்றும் அழகான சிற்பங்களைக் காணலாம்.

3. சில சிறப்பம்சங்கள்

1. பிரம்மன் சிவனை வழிபட்டு சாபவிமோசனம் அடைந்த இடம் இது. விஷ்ணு, கௌரி, கரன் ஆகியோர் வழிபட்டு உய்ந்த திருத்தலமுமாகும் இது. இவர்கள் வழிபட்ட வரலாற்றைப்பற்றி விரிவாக *திருவிரிஞ்சைப் புராணத்தில் திரு சைவ எல்லப்ப நாவலர் அவர்கள் பாடல்கள் பாடியுள்ளார்.*

2. சிறப்பு பெற்றச் சிவத்தலங்கள் 1008, மிகவும் பிரசித்தி பெற்ற சிவத்தலங்கள் 108. இவற்றுள் மிகவும் விசேஷமான சிவத்தலங்கள் 18, அந்த 18 சிவத்தலங்களில் விரிஞ்சிபுரமும் ஒன்றாகும்.

3. 1008 சிவலிங்கம், 108 சிவலிங்கம், பஞ்சமுக சதாசிவலிங்கங்கள் ஆகிய மூன்று சிவலிங்கங்கள் இத்திருக்கோயிலில் அமைந்து உள்ளன. இதுபோன்று இம்மூன்று வகைச் சிவலிங்கங்களும் ஒரு சில திருக்கோயில்களில் மட்டுமே இருப்பதாகத் தெரியவருகிறது.

4. திருமணத் தடைகள் அகல இவ்விறைவனை வணங்குதல் சிறப்பாகும்.

திருமணத் தடைகள் நீங்க

திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்

சடையாய் எனுமால் சரண் நீ எனுமால்
விடையாய் எனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவள்உள் மெலிவே.

சிந்தாய் எனுமால் சிவனே எனுமால்
முந்தாய் எனுமால் முதல்வா எனுமால்
கொந்தார் குவளை குலவும் மருகல்
எந்தாய் தகுமோ இவள் ஏசறவே.

அறையார் கழலும் அழல் வாயரவும்
பிறையார் சடையும் உடையாய் பெரிய
மறையார் மருகல் மகிழ்வாயிவளை
இறையார் வளைகொண்டெழில் வவ்வினையே.

ஒலிநீர் சடையில் கரந்தாயுலகம்
பலிநீதிரிவாய் பழியில் புகழாய்
மலிநீர் மருகல் மகிழ்வாயிவளை
மெலிநீர் மையள் ஆக்கவும் வேண்டினையே.

துணிநீல வண்ணமும் முகில் தோன்றியன்ன
மணிநீலகண்டம் உடையாய் மருகல்
கணி நீலவண்டார் குழலாள் இவள்தன்
அணிநீல ஒண்கண் அயர்வு ஆக்கினையே.

வயஞானம் வல்லார் மருகல் பெருமான்
உயர் ஞானம் உணர்ந்து அடி உள்குதலால்
இயல்ஞான சம்பந்தன பாடல் வல்லார்
வியன்ஞாலம் எல்லாம் விளங்கும் புகழே.

பலரும் பரவப்படுவாய் சடைமேல்
மலரும் பிறை ஒன்றுடையாய் மருகல்
புலரும் தனையும் துயிலாள் புடைபோந்து
அலரும் படுமோ அடியாள் இவளே.

வழுவாள் பெருமான் கழல் வாழ்களனா
எழுவாள் நினைவாள் இரவும் பகலும்
மழுவாள் உடையாய் மருகல் பெருமான்
தொழுவாள் இவளைத் துயர் ஆக்கினையே.

இலங்கைக்கு இறைவன் விலங்கல் எடுப்பத்
துலங்கவ் விரல் ஊன்றலும் தோன்றலனாய்
வலங்கொள் மதில்சூழ் மருகல் பெருமான்
அலங்கல் இவளை அலர் ஆக்கினையே.

எரியார் சடையும் அடியும் இருவர்
தெரியாததோர் தீத்திரள் ஆயவனே
மரியார் பிரியா மருகல் பெருமான்
அரியாள் இவளை அயர்வாக்கினையே.

ஐந்து தீர்த்தங்களின் சிறப்புகள்

தேவ. சிவனார் அமுது, இரத்தினகிரி.

1. பாலாறு

இதன் இயற்பெயர் பத்மினி நதி. பிரம்மா காயத்ரி தேவியுடன் எம்பெருமானை வேண்டிக்கொண்டு யாகம் செய்தபோது இங்குப் பால் பெருகியோடியதாம். அன்று முதல் இந்த நதிக்குப் பாலாறு என்று பெயர். இந்தப் பாலாற்றுத் தீர்த்தத்தில் குளித்தால் பாவம் நீங்கிப் புண்ணியம் உண்டாக்கும்.

2. பிரம்ம தீர்த்தம்

திருக்கோயிலின் தென்புறம் பிரம்ம தீர்த்தம் உள்ளது. இந்தத் தடாகம் பிரம்மனால் உண்டாக்கப்பட்டதால் பிரம்ம தீர்த்தம் என்று வழங்கப்படுகிறது. இதன் நடுவில் நீராழி மண்டபம் மற்றும் பிரம்மபுரீஸ்வரர் திருச்சந்நிதி உள்ளன. அஷ்டவசுக்கள் தலங்கொண்டுள்ள படித் துறையைக் கொண்டது. இது இறைவன் சிவசர்மன் என்னும் பாலகனுக்குப் பிரம்மோபதேசம் செய்வித்த சிறப்பான இடமாகும். ஆண்டுதோறும் மாசி மகம் பௌர்ணமி தொடங்கி மூன்று நாட்கள் தெப்பத்திருவிழா இந்தப் பிரம்ம தீர்த்தத் தடாகத்தில் நடைபெறுகிறது.

3. சிம்ம தீர்த்தம்

இதற்கு ஸ்ரீ கௌரி தீர்த்தம் என்றும் பெயர் உண்டு. இது திருக்கோயிலின் முதல் பிரகாரத்தின் இடதுபக்கம் உள்ளது. கார்த்திகை கடைசி ஞாயிறு திருவிழா அன்று தேவர்கள் அனைவரும் இத்தலத்தில் எழுந்தருளுவதாக ஐதீகம். எனவே, அன்றுசிம்ம தீர்த்தத்தில் நீராடி நனைந்த ஆடையுடன் இறைவனை வேண்டி படுத்துறங்க கனவில் இறைவன் திருவருள் செய்கிறார். இதன்படி தீயசக்திகள் அகலவும் இல்லம் சிறக்கவும் செய்கிறது. குழந்தை இல்லாதவர் சந்தான (குழந்தை) பாக்கியம் பெறுவர் என்பது ஐதீகம்.

4. சூலத்தீர்த்தம்

திருக்கோயிலின் முதல் பிரகாரத்தில் மணிகாட்டும் கல் அருகில் திருமஞ்சன வாயில் பக்கத்தில் இந்தத் தடாகம் உள்ளது. இந்தத் தீர்த்தத்தில் நீராடின் விசேஷ பலன்கள் உண்டாகும்.

5. சோமதீர்த்தம்

கோயிலின் இரண்டாம் பிரகாரத்தில் உள்ள கிணறே சோம தீர்த்தமாகும். இது ஆலய மூர்த்திகள் அபிஷேகத்திற்காகச் சந்திர பகவானால் உண்டாக்கப்பட்டது.

மூர்த்தி தலம் தீர்த்தம் முறையால் தொடங்கினார்க்கு ஓர்
வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே.

– தாயுமானவர் பராபரக்கண்ணி

அங்கங்குள்ள சிவலிங்கத்தையும் புண்ணிய தலத்தையும் தீர்த்தத்தையும் முறைப்படி வணங்கி வருபவர்க்கும் ஒப்பில்லாத மொழி எனப்படும் திருவைந்தெழுத்து மந்திரத்தை உணர்த்த சற்குரு திரு அருளாய் வந்து சேர்தல்.

வழித்துணை நாதர்க்கு வழங்கும் வேறு பெயர்கள்

1. சோழர் காலக் கல்வெட்டுகளில் **சோமீ வர மகாதேவர்** என்றும், **ஸ்ரீ மார்க்கபந்தீஸ்வரர்** என்றும்,
2. விஜயநகர மன்னர் காலக் கல்வெட்டு களில் **மார்க்க சகாயதேவர்** என்றும்,
3. கரன் என்னும் கர்த்தப முகத்தோடு இருந்த கந்தர்வன் தன் சாபம் நீங்க பூஜித்ததால் **விரிஞ்சை விமலர், கௌரீசர், விஷ்ணு ஈசர், சுரேஸ்வரர்** என்றும்,
4. சாவித்திரன் என்ற ஆரியவர்த்தன வாசியின் வேண்டுகோளுக்கு மன மிரங்கி அவனுக்கு மானிடப் பிறவியுடனேயே மோட்சம் கொடுத்த தால் **இகபரநாதன்** என்றும்,
5. **மருந்தீஸ்வரர்** என்றும்,
6. சிவசர்மன் எனும் பால பக்தனின் பூஜையைத் தம்திருமுடி வளைத்து ஏற்று அருள் செய்ததால் **முடிவளைத்தவர்** என்றும்,
7. **வழித்துணைநாதர்**நசஎன்றும் அழைக்கப்படும்சசஇவ்விறைவன் வட மொழியில் **ஸ்ரீ மார்க்கபந்தீஸ்வரர்** என்று வழங்கப்படுகிறார்.



ஒருநாமம் ஒருவரும் ஒன்றும் இலார்க்கு
ஆயிரம் திருநாமம்பாடித் தெள்ளேணம் கொட்டோமோ?

– மாணிக்கவாசகம்

❖❖❖

பேராயிரம் பரவி வானோர் ஏத்தும் பெம்மானைப் பிரிவிலா அடியார்க்கு என்றும்
வாராத செல்வம் வடுவிப்பானை, மந்திரமும் தந்திரமும் மருந்தும் ஆகித்
தீராத நோய் தீர்த்தருள வல்லான் தன்னைத் திரிபுரங்கள் தீஎழத் திண்சிலை கைக்கொண்ட
பேரானைப் புள்ளிருக்கு வேளூரானைப் போற்றாதே ஆற்ற நாள் போக்கினோமே.

– திருநாவுக்கரசர்

❖❖❖

விரிஞ்சிபுரத்தின் வேறு பெயர்கள்

1. பிரம்மா அவதார வழி அறிந்து சிருஷ்டி தந்திரம் கண்டு உலகியற்றியதால் **பிரம்மபுரம்.**

2. திருமால் (விஷ்ணு) சிவபெருமானிடம் இருந்து சக்ராயுதம் பெற ஆயிரம் மலர்களால் வழிபாடு செய்ததால் **விஷ்ணுபுரம்**.

3. கரன் என்னும் அசுரன் ஒரு சாபத்தால் கழுதை முகத்தோடு இருந்தான். அவன் மார்க்க சகாயரை வழிபட்டு சாபவிமோசனம் பெற்றதால் **கரபுரம்**.

4. கம்பன், நிகம்பன் என்னும் இரு அரக்கர்களையும் கொன்ற பாவம் நீங்க (கௌரி) இறைவி பாலாற்றில் நீராடி வழிபட்டதால் **கௌரிபுரம்**.

5. இறைவன் வழித்துணைநாதராக இருந்ததால் **மார்க்கபந்தீஸ்வரம்** என்றும் இவ்வூரின் வேறுபெயர்களைப் புராணம், பிள்ளைத்தமிழ் மற்றும் கல்வெட்டுகள் மூலம் அறியலாம். மேலும்,

6. சைவ எல்லப்ப நாவலர் இயற்றிய அருணாசல புராணத்தில் திருநகரச் சருக்கத்தில் **திருவிரிஞ்சைமூதூர்** (பா.எ. 17) என்றும்

7. வரகவி மார்க்கசகாயதேவர் அருளிய திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத் தமிழில் காப்புப் பருவப் பாடலில் (பா.எண்.3) **மறைப்புரி** என்றும் பாடியுள்ளனர்.

8. சோழர் காலக் கல்வெட்டுகளில் **1. இருஞ்சுரம் 2. கங்க மார்தாண்டபுரம்** என்றும்,

9. சம்புவராயர் காலக்கல்வெட்டுகளில் **விரிஞ்சிபுரம்** என்றும்,

10. **விரிஞ்சையம்பதி** என்றும் பல்வேறு பெயர்களில் அழைக்கப்பட்ட இவ்வூர் பிரம்மா (விரிஞ்சன்) சிவசர்மாவாக அவதரித்து இறைவனடி திருமுடி கண்டதால் விரிஞ்சிபுரம் என்று தற்போது அழைக்கப்படுகிறது.

திருநாவுக்கரசர் வைப்புத் தல தொகுதியாகத் தேவாரப் பாடல்கள் பாடியுள்ளார். நடுபாடல் கீழே தரப்பட்டுள்ளது. அதில் 'கரபுரமும் காபாலியால்' அவர்தம் காப்புக்களே! என்று குறிப்பிடுகிறார்.

'தெண்ணீர் புனல் கெடில வீரட்டமும் சீகாழி வல்லம் திருவேட்டியும்
உண்ணீரார் ஏடகமும் ஊறல் அம்பர் உறையூர் நறையூர் அரணநல்லூர்
விண்ணார் விடையார் விளமர் வெண்ணி மீயச்சூர் வீழிமிழலை மிக்க
கண்ணார் நுதலார் கரபுரமுங் காபாலியாரவர்தம் காப்புக்களே'

கரபுரம் என்பது கழுதை முகமுடைய அசுரன் வழிபட்டான் என்ற தலம்.

விரிஞ்சிபுரத் திருத்தலத்தைப் போற்றிப் பாடியவர்கள்

1. **மருணீக்கியார்** என்ற இயற்பெயர் உடைய திருநாவுக்கரசர் (அப்பர்) அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர். இத்திருத்தலத்தைத் தேவார காப்புத் திருத்தாண்டகத்தில் (திருமுறை எண். 6, பதிகம் 7, பாடல் எண். 7) வைப்புத் தலமாகப் போற்றிப் பாடியுள்ளார். இவர் கடலூர் மாவட்டம் திருவாமூரில் அவதரித்தவர். காலம் கி.பி. 7–ஆம் நூற்றாண்டு.

2.**பட்டினத்தார்** திருக்கைலாயத்தைப் பரவியுள்ள எட்டு பாடல்களில் முதற்பாடலில், பட்டினத்தார் பாடல் திருவிரிஞ்சையைக் குறிப்பிட்டுள்ளார். இவர் பூம்புகாரில் பிறந்தவர். காலம் கி.பி. 10–ஆம் நூற்றாண்டு. இவர் அருளிய அனைத்துப் பாடல்களும் சிறப்பானவையாகும். அவற்றில் தன்னைப் பத்து மாதம் சுமந்து பெற்ற தாயாருக்குத் தகனக்கிரியைச் செய்யும் போது "ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்து பெற்று"ப் பாடலை மிகவும் உயர்வாகப் பாடியிருக்கிறார் மற்றும் உடல் கூற்றுவண்ணம் (ஞானத்தில்) "ஒரு மடமாதும் ஒருவனும் ஆகி இன்பசுகம் தரும்" என்று பாடிய பாடலும் மிகப் பிரபலமானது என்பது குறிப்பிடத்தக்கது.

3. **அருணகிரிநாதர்** திருப்புகழில் ஐந்து பாடல்கள் பாடியுள்ளார். இவர் திருவண்ணாமலையில் பிறந்தவர். இவர் நமக்கு அருளிய 16,000 (பதினாறாயிரம்) திருப்புகழ் பாடல்களில் நாம் பெற்றவை 1,328 மட்டும் ஆகும். இதில் தமிழகத்தில் பரவி நாமறிந்த தலங்கள் 163; வைப்புத்தலங்கள் 20; பிறமாநிலத் தலங்கள் 11; இலங்கைத் தலங்கள் 3; ஆக மொத்தம் 217. திருத்தலங்களுக்குச் சென்று பாடி திருவண்ணாமலையில் இறைவனடி சேர்ந்தார். இவரின் காலம் கி.பி. 15–ஆம் நூற்றாண்டு.

இவர், 'நிகரில் பஞ்சபூதமும்' எனத் தொடங்கும் திருப்புகழில் *திருவிரிஞ்சை மேவிய பெருமாளே* என்றே குறிப்பிட்டுள்ளார். '*கரன்*' என்னும் அசுரனால் *கரபுரம்* என்றும் கரனூர் என்றும் விரிஞ்சிபுரம் அழைக்கப்படுகின்றது. அருணகிரியாரின் திருப்புகழ் 'குலைய மயிரோதி என்று தொடங்கும் திருப்புகழில் கழனிநெடு வாளை கமுகு ஒடிய மோது *கரபுரியில்!* மேவு பெருமாளே!' என்று முடிக்கின்றார் (பக்கம் 12இல் திருப்புகழ் பார்க்கவும்) கரபுரம் என்ற பெயர்க்குறிப்பைப் பக்கம் 3இல் விரிஞ்சிபுரத்தின் வேறு பெயர்கள் கட்டுரையில் காணலாம்.

4. **இரட்டைப் புலவர்கள்** தங்களது பிரபந்தத் திரட்டில் எட்டுப் பாடல்கள் பாடினர். இவர்கள் ஆடுதுறைக்கு அருகிலுள்ள இலந்துறை என்னும் கிராமத்தினர். இவர்களின் காலம் 15–ஆம் நூற்றாண்டு. இளஞ்சூரியர், முதுசூரியர் என்னும் இவர்களில் ஒருவர் முடவர், மற்றொருவர் குருடர். உறவு முறையில் அத்தை மகனும் அம்மான் மகனுமாவர். இவர்களில் முடவர் குருடருக்குக் கண்ணாகவும், குருடர் முடவருக்குக் காலாகவும் விளங்கினார். முடவர் குருடரின் தோள்மேல் ஏறிக்கொள்ளக்

குருடர் அவரைச் சுமந்து பல திருத்தலங்கள் சென்று முடவர் வெண்பாவின் இரண்டடிகளைப் பாடுவார், குருடர் அவ்வடிகளை ஒட்டி, பின் இரண்டடிகளைப் பாடி முடிப்பார். இவர்கள் பாடிய பாடல்கள் சொற்சுவையும் பொருட்சுவையும் நிரம்பியவை. எடுத்துக் காட்டாக, இத்திருத்தல வரலாற்றின் பாடல் பகுதியில் தேன்பாயும் சோலைத் திருவிரிஞ்சை மார்க்கேசா என்ற பாடலை நாம் காணலாம்.

5. **அப்பைய்ய தீட்சிதர்.** இவர் ஸ்ரீ மார்க்கபந்து ஸ்தோத்ரம் 6 பாடல்கள், ஸ்ரீ மார்க்க ஸஹாய லிங்க ஸ்துதி 7 பாடல்கள், ஸ்ரீ கங்காதராஷ்டகம் ஒரு பாடல், நிக்ரஹாஷ்டகம் ஒரு பாடல் ஆக மொத்தம் 15 பாடல்கள் பாடியுள்ளார். இவர் ஆரணி அருகிலுள்ள அடையபுலம் என்னும் கிராமத்தைச் சேர்ந்தவர். இவரது காலம் கி.பி. 15-ஆம் நூற்றாண்டு. (இவர் வேலூர் கோட்டைத் திருக்கோயிலைக் கட்டிய சின்னபொம்மி நாயக்கர் அரசுக் காலத்தில் அவரது அமைச்சர் அவையில் ராஜகுருவாக இருந்தவர். மற்றும் *இவரது தாயார் விரிஞ்சிபுரத்தைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.*

6. **சைவ எல்லப்ப நாவலர்** திருவிரிஞ்சைப் புராணத்தில் இத்தலத்தைப் புகழ்ந்து 370 பாடல்கள் பாடியுள்ளார். இந்நூலின் ஓலைச்சுவடி (புகைப்படப் பகுதியில் காணலாம்) இன்றும் திருக்கயிலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதீனம், சரஸ்வதி மகால் சுவடி நூலகத்தில் உள்ளதைக் காணலாம் (எண். 23). இந்தச் சுவடி முதல் பதிப்பாக கி.பி. 1863 ஆம் ஆண்டில் வெளிவந்ததாகத் தெரிய வருகிறது. இந்நூல் இன்றும் ரோஜா முத்தய்யா ஆராய்ச்சி மையம் மற்றும் நூலகம் சென்னை, தரமணியில் உள்ளது. (இந்தப் பதிப்பின் தலைப்புப் பகுதியைப் புகைப்படப் பகுதியில் காணலாம்). மற்றும் அருணாசலப் புராணத்தில் திருநகரச் சருக்கத்தில் (பா.எண். 17) ஒரு பாடலும் பாடியுள்ளார். இவர் திருவெண்காடு அருகில் உள்ள பூந்தாழை என்னும் கிராமத்தில் பிறந்தவர். இந்நூல் ஆசிரியர் எளிய சொற்களால் இனிய சந்தங்களைப் பாடுவதில் வல்லவர். இவருடைய கவி அழகை இத்திருத்தல வரலாற்றின் திருவிரிஞ்சைப் புராணம் பாடல் பகுதியில் 'அந்திப் போதழகுறவே நடித்தருளும்' என்ற பாடலை நாம் காணலாம். (பாயிரம் பா. எண். 5). இவரின் காலம் 16 அல்லது 17ஆம் நூற்றாண்டு.

7. **வரகவி மார்க்கசகாயதேவர்.** இவரைப்பற்றிய விவரங்கள் கிடைக்கப் பெறவில்லை. இவர் தாம் இயற்றிய திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத்தமிழ் நூலில் காப்புப் பருவம் (பா. எண். 10) அருணகிரி நாதருக்குத் துதி எழுதியுள்ளார். எனவே, இவர் அருணகிரி நாதர் காலத்திற்குப் பிந்தியவர் எனலாம். பிள்ளைத்தமிழ் நூல் என்பது 101 பாடல்களைக் கொண்டதாகும். இந்நூல் ஓலைச்சுவடி புகைப்படப் பகுதியில் காணலாம். இன்றும் இந்நூல் ஓலைச்சுவடி சென்னை அரசினர் கீழ் திசைச் சுவடி நூலகத்தில் உள்ளதைக் காணலாம். எண். D329. (இடம் சென்னைப் பல்கலைக் கழகம்)

கி.பி. 1891 ஆம் ஆண்டில் வெளியீடு செய்த இந்நூலின் பிரதி இன்றும் திருவண்ணாமலை பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி நூலகத்தில் உள்ளதைக் காணலாம். (இந்தப் பதிப்பின் தலைப்புப் பகுதியைப் புகைப்படப் பகுதியில் காணலாம்). பிள்ளைத்தமிழ் நூல்கள் பல உண்டு. அவற்றில் தமிழ்த்தாயின் நெஞ்சை அள்ளிய படையல்களில் இப்பிள்ளைத் தமிழும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

8. **படிக்காசுப் புலவர்** தொண்டை மண்டல சதக நூலில் (பா.எ. 16) ஒரு பாடல் பாடியுள்ளார். இவர் வேலூர் மாவட்டம் காவேரிப்பாக்கம் அருகில் பொன்விளைந்த களத்தூர் என்னும் கிராமத்தில் பிறந்தவர். இவரது இயற்பெயர் இன்னதென்று தெரியவில்லை. தென்னாட்டில் பல திருத்தலங்களுக்கு யாத்திரை சென்று தில்லையை அடைந்து நடராஜப் பெருமானைத் தரிசித்து சிவகாமி அம்மையாரை வழிபட்டார். அம்மையார் திருவருளால் அன்றைய செலவுக்குத் தேவையான ஐந்து பொற்காசுகளைப் பஞ்சாக்காரப்படியில் பெற்றார். அதனால் படிக்காசர் என்னும் பெயர் பெற்றார். இவரது காலம் கி.பி. 17 ஆம் நூற்றாண்டு.

9. **சிவஞான சுவாமிகள்.** இவர் காஞ்சிப் புராணத்தில் இத்தலத்தை வைப்புத் தலகமாகத் தலவிசேடப் படலத்தில் (பா.எண்.15) பாடியுள்ளார். திருநெல்வேலி நகரத்திற்கு அருகில் உள்ள விக்கிரமசிங்க புரம் என்னும் ஊரைச் சேர்ந்தவர். இவரின் காலம் கி.பி. 18 ஆம் நூற்றாண்டு. இவர் தமிழ்நாட்டில் தோன்றிய சிற்றிலக்கியத்திலும் பேரிலக்கியத்திலும் புதுத்துறைகண்ட பெரும்புலவர் ஆவார்.

10. **சிதம்பர முனிவர்** ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுள் க்ஷேத்திரக் கோவைப் பிள்ளைத் தமிழ் நூலில் (சிறுபறைப் பருவத்தில் பா. எண். 3) ஒரு பாடல் பாடியுள்ளார். இவர் காஞ்சிபுரத்தைச் சேர்ந்தவர். (இவரது காலம் கிடைக்கப் பெறவில்லை) பிள்ளைத் தமிழ் நூலில் விநாயகர் துதிப் பாடலும் முதல் பருவத்திலிருந்து பத்தாம் பருவம் வரை நூறு திருத்தலங்கள் பற்றிய பாடல்களும் பாடியுள்ளார். பிள்ளைத் தமிழ் நூல் என்பது 101 பாடல்கள் கொண்டதாகும்.

11. **டாக்டர் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்** இத்திருத்தலத்தைப் பற்றி இரண்டு பாடல்கள் பாடியுள்ளார். வேலூரை அடுத்த காங்கேயநல்லூர் கிராமத்தில் பிறந்தவர். இவர் காலம் கி.பி. 19 ஆம் நூற்றாண்டு. இவர் கந்தபுராணம் பெரியபுராணம், இராமாயணம், வில்லி பாரதம், திருப்புகழ் முதலான பல ஞான நூல்களிலிருந்து பக்திச்சுவை மிகுந்த சொற்பொழிவுகள் ஆற்றுவதில் வல்லவர்.

12. **புலவர் சந்தக்கவிமணி ஈரோடு சு.மா. சண்முகசுந்தரப் பாவலர்** மார்க்கபந்தீஸ்வரர் பதிகத்தில் 11 பாடல்களும் மரகதவல்லியம்மைப் பதிகத்தில் 11 பாடல்களும் பாடியுள்ளார். இவரது காலம் 19-ஆம் நூற்றாண்டு.

13. வடமொழியில் உள்ள 1. சிவரகசியம் (11-ம் அத்தியாயம்), 2. காளத்தி மான்மியம் (3-ம் அத்தியாயம்),

3. பிரமாண்டபுராணம் (76-ஆம் அத்தியாயம்), 4. காஞ்சிப் புராணம் (30-ஆம் அத்தியாயம்) ஆகிய புராணங்களில் இத்திருத்தலத்தைப் பற்றிய பாடல்கள் இடம் பெற்றுள்ளன. (இப்புராணங்களைப் பாடிய புலவர்களின் பெயர்கள் இல்லாமல் பாடல்கள் கிடைக்கப்பெற்றன).

மேலும் இத்திருத்தலத்தைப் பற்றிப் பல பாடல்கள் உள்ளன. (நூல்களின் பெயர்களும், புலவர்களின் பெயர்களும் இல்லாமல் பாடல்கள் கிடைக்கப் பெற்றன). மேற்குறிப்பிட்டோர் இத்திருத் தலத்தைப் பற்றிப் பாடிய பாடல்களைத் திருத்தலப் பாடல்கள் பகுதியில் காணலாம்.

குறிப்பு : இத்திருத்தலத்தைப் பற்றி இன்றும் நவநீத கவியென்பவர் விரிஞ்சிபுர நாதசரிதம் என்னும் நூல் எழுதியிருக்கிறார் என்ற செய்தியைத் திருமுருகன் திருத்தலங்கள் நூலில் மலேஷியா திரு. வைத்தியநாதன் என்பவர் குறிப்பிட்டுள்ளார். மேலும் முத்துதாசர் என்பவர் இத்திருத்தலத்திற்கு ஒரு புராணம் பாடியிருப்பதாகத் தமிழில் தல புராணங்கள் (முதற்பகுதி நூலில், முனைவர் திரு. வே.இரா. மாதவன் (நூலின் பெயரில்லாமல்) குறிப்பிட்டுள்ளார். இவர் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தைச் சார்ந்தவர். மற்றும் மார்க்கசகாயம் சரிதம் என்ற நூல் உள்ளது எனச் செவி வழிச் செய்திகள் உள்ளன. இதைப் பாடியவர் முத்துதாசராகவும் இருக்கலாம். மேலும் ஆராயப் பட்டு வருகிறது.

திருவாசகம்

வேண்டத் தக்கது அறிவோய் நீ
வேண்ட முழுதும் தருவோய் நீ
வேண்டும் அயன்மாற்கு அரியோய் நீ
வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயாது அருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன்று உண்டென்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே.

திருவிசைப்பா

தத்தையங்கு அனையர் தங்கள்மேல்வைத்த
தயாவை நூறாயிரம் கூறிட்டு
அத்திலங் கொருகூறு உன்கண் வைத்தவருக்(கு)
அமருலகு அளிக்கும் நின்பெருமை
பித்தனென்று ஒருகால் பேசுவ ரேனும்
பிழைத்தவை பொறுத்தருள் செய்யும்
கைத்தலம் அடியேன் சென்னிமேல் வைத்த
கங்கைகொண்ட சோழேச்சரத் தானே.

பட்டினத்தார் அருளிய பாடல்

உரை : சித்தாந்த பண்டிதர் திரு. **ப. இராமநாத பிள்ளை**

கான்சாயும் வெள்ளி மலைக்கர
சே!நின் கழல் நம்பினேன்
ஊன்சாயுஞ் சென்ம மொழித்திடு
வாய்கர வூரனுக்காய்
மான்சாயச் செங்கை மழுவலஞ்
சாய வனைந்த கொன்றைத்
தேன்சாய நல்ல திருமேனி
சாய்த்த சிவக்கொழுந்தே.

திருமுறை 6, பதிகம் 7, ப.எண். 7

தெளிவுரை :

கான்சாயும் வெள்ளி மலைக்கு அரசே – நறுமண மிக்குக் கமழ்தற்கிடனான வெள்ளி மலைக்கு அரசனே! கரவூரனுக்காய் கரவூரன் என்னும்ஒரு மெய்யன்பன் பொருட்டு, செங்கை மான்சாய மழுவலம்சாய வனைந்த கொன்றைத் தேன்சாய நல்ல திருமேனி சாய்த்த சிவக்கொழுந்தே! – நின் சிவந்த கையிலேந்திய மான் ஒரு புறத்தே சாயும்படியும் மழு வலப்பக்கத்தே சாயும்படியும் அமைந்து, கொன்றை மலரினின்றும் தேன்துளிகள் வீழும்படியும் பலமிக்க அழகிய திருமேனியை வளைத்துக் கொடுத்த சிவக்கொழுந்து என்னும் திருப்பெயர் பூண்ட பெருமானே! நின் கழல் நம்பினேன் – நின் திருவடிகளையே நம்பியுள்ளேன். ஊன் சாயும் சென்மம் ஒழித்திடுவாய் – ஊனாகத் தோன்றி இறந்து வீழும்இப் பிறவிப் பிணியைத் தீர்த்தருள்வாயாக!

கான் – மணம் ஊனாய்த் தோன்றிப் பின்பு வீழும் சென்மம் என்க.

திருவாசகம்

திருவாசகத்தைப் படித்து அதிலேயே ஒன்றிப்போய், ஆன்மலாபம் பெற்றவர்கள் எத்தனையோ பேர் இருந்திருக்கிறார்கள், இருக்கிறார்கள், இருப்பார்கள். அவர்களைப் பற்றியெல்லாம் நமக்குத் தெரியாது.

நாம் அறிந்தவரையில் சொல்வதானால், வடலூர் வள்ளல் திருவருட்பிரகாசர்தான் திருவாசகத்தை நன்றாக அனுபவித்து, அதிலேயே திளைத்து, அதுவாகவே ஆனவர்.

பாலில் கலந்த சர்க்கரை போலத் திருவாசகத்தில் தானறக் கலந்தவர் வள்ளல் பெருமான்.

அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ்ப் பாடல்கள்

உரை : டாக்டர் **திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்**

1. குலையமயி ரோதி குவியவிழி வீறு
குருகினிசை பாடி முகமீதே
குறுவியர்வு லாவ அமுதினினி தான
குதலையுமொ ராறு படவேதான்

பலவிதவி நோத முடனுபய பாத
பரிபுரமு மாட அணைமீதே
பரிவுதரு மாசை விடமனமொவாத
பதகனையு மாள நினைவாயே

சிலைமலைய தான பரமர்தரு பால
சிகிபரிய தான குமரேசா
திருமதுரை மேவு மமணர்குல மான
திருடர்கழுவ வருவோனே

கலின்வடிவ மான அகலிகைபெ ணான
கமலபத மாயன் மருகோனே
கழனிநெடு வாளை கமுகொடிய மோது
கரபுரியில் வீறு பெருமாளே

பதவுரை :

மலை சிலையது ஆன – மேருமலையை வில்லாகக் கொண்ட, பரமர்தரு பால – சிவபெருமான் தந்த குமாரக் கடவுளே, சிகிபரியது ஆன – மயிலைக் குதிரையாகக் கொண்ட, குமர ஈசா – குமாரக் கடவுளே, திரு மதுரை மேவும் – அழகிய மதுரையில் இருந்த, அமணர் குலம் ஆன– சமணர் குலத்தினராகிய, திருடர் – திருடர்கள், கழு ஏற – கழுவில் ஏற, வருவோனே – வந்தவரே, கலின் வடிவம் ஆன – கல் வடிவாய்க் கிடந்த, அகலிகை – அகலிகா தேவி, பெண் ஆன – பெண்ணாக வரும்படிச் செய்த, கமல பத மாயன் – தாமரை போன்ற திருவடியைக் கொண்ட திருமாலின், மருகோனே – திருமருகரே, கழனி நெடுவாளை – கழனியில் இருக்கும் பெரியவாளை மீன்கள், கமுகு ஒடிய மோதும் – பாக்கு மரம் ஒடியும்படி மோதுகின்ற, கரபுரியில் வீறு – திருவிரிஞ்சிபுரத்தில் வீற்றிருக்கும், பெருமானே – பெருமையில் மிகுந்தவரே! மயிர் ஓதி குலைய – கூந்தல் மயிர் கலைந்துபோக, குவிய விழி – கண்கள் குவிய, வீறு குருகின் இசைபாடி – விளக்கத்துடன் கோழி முதலிய பறவைகளின் இசைபாடி, முகமீதே – முகத்தின் மேல், குறு வியர்வு உலாவ – சிறு வியர்வை தோன்றி உலவ, அமுதின் இனிது ஆன – அமுதம்போல இனிமை கொண்ட, குதலையும் ஒராறுபடவேதான் – குதலைச் சொற்களும் ஒரு வழியாகத் தோன்றவே, பலவித விநோதமுடன் – பலவகைப்பட்ட விநோதங்களுடன், உபயபாதம் – இரண்டு கால்களிலும் உள்ள, பரிபுரமும் ஆட – சிலம்பும் அசைந்து ஒலிக்க, அணை மீதே – படுக்கையின் மேல், பரிவு தரும் – அன்பு எழுகின்ற, ஆசைவிட – ஆசையை விடுவதற்கு, மனம் ஒவாத – மனம் ஒத்துக்கொள்ளாத, பதகனையும் – இப்பாதகனையும், ஆள நினைவாயே – ஆண்டருள நினைந்தருளுவீராக.

பொழிப்புரை :

மேருமலையை வில்லாகக் கொண்ட

சிவபெருமானுடைய புதல்வரே! மயிலைக் குதிரையாகக் கொண்ட குமாரக் கடவுளே! அழகிய மதுரையிலிருந்த சமணர்களாகிய கள்வர்கள் கழுவிலேற ஞானசம்பந்தராக வந்தவரே! கல்லின் வடிவமான அகலிகையைப் பெண்ணாக்கிய திருவடியை உடைய இராமபிரானுடைய திருமருகரே! வயலில் வாழும் வாளைமீன்கள் பாக்குமரம் ஒடி மோதுகின்ற திருவிரிஞ்சிபுரத்தில் வீற்றிருக்கும் பெருமையில் மிகுந்தவரே! கூந்தல் மயிர் குலைந்துபோக, கண்கள் குவிய விளக்கத்துடன் பறவைகளின் இசைபாடி, ஒலி செய்து முகத்தின் மேலே சிறு வியர்வைகள் தோன்றி உலவ, அமுதம் போன்ற இனிய குதலைச் சொற்களும் ஒரு வழியாகத் தோன்றவே, பலவகைப்பட்ட வினோதங்களுடன் இரண்டு கால்களிலு முள்ள சிலம்பு அசைந்து ஒலிக்கவும், படுக்கையின்மேல் அன்பு எழுகின்ற ஆசையை விடுவதற்கு மனம் ஒத்துக்கொள்ளாத இப்பாதகைனயும் ஆண்டருள நினைந்தருளுவீராக.

விரிவுரை :

குலைய மயிர் ஓதி :

ஓதி – பெண்மயிர்

கலவியிலே கூந்தல் மயிர் கலைந்து போகும்.

குருகின் இசைபாடி :

கலவியிலே நெஞ்சில் அநேக பறவைகளின் குரல் ஒலிக்கும்

ஆசைவிட மனம் ஒவாத பதகன் :

மாதர்களுடன் அணையும் படுக்கையில் காமுகர்கள் மிகவும் ஆசை வைப்பார்கள். அந்த ஆசையை விட்டு மீளுவதற்கு முடியாமல் பரிதவிப்பர்.

மாதர்யம னாம்அவர்தம்
மைவிழியே வன்பாசம்
பீதிதரும் அல்குல் பெரு நரகம் –
ஓத அதில்
வீழ்ந்தோர்க்கும் ஏற
விரகில்லை போரூரைத்
தாழ்ந்தோர்க்கும் இல்லை
தவறு.
– திருப்போரூர் சந்நிதிமுறை

சிலை மலையதான :

திரிபுரம் எரித்தபோது சிவபெரு மானுக்கு மேருகிரி வில்லாக இருந்தது. அதனால், குன்றவில்லி என்று சிவபெருமானை அழைப்பர்.

சிகி பரியதான :

பரி – குதிரை

பரித்தல் – தாங்குதல்

சுமை தாங்குவதனால் குதிரை பரியெனப் பெயர் பெற்றது. முருகப் பெருமானுக்கு மயில் குதிரைபோல் வாகனம் ஆயிற்று.

'பட்சியெனும் உக்ர துரகமும்'
'ஆடும் பரிவேல் அணிசேவல்'

என்று வரும் பிரயோகங்களைப் பார்க்க.

கருத்துரை :

விரிஞ்சிபுரத்து வேலவரே! மாதர் மயலற அருள் புரிவாய்.

2.நிகரில் பஞ்ச பூதமு நினையு நெஞ்சுமாவியு

நெகிழ வந்து நேர்படு மவிரோதம்
நிகழ்த ரும்ப்ர பாகர நிரவ யம்ப ராபர
நிருப அங்கு மாரவெ ளெனவேதம்

சகர சங்க சாகர மெனமு ழங்கு வாதிகள்
சமய பஞ்ச பாத றறியாத
தனிமை கண்ட தானகிண் கிணிய தண்டை சூழ்வன
சரண புண்ட ரீகம தருள்வாயே

மகர விம்ப சீகர முகர வங்க வாரிதி
மறுகி வெந்து வாய்விட நெடுவான
வழிதி றந்து சேனையு மெதிர்ம லைந்த சூரனு
மடிய இந்தி ராதியர் குடியேறச்
சிகர துங்க மால்வரை தகரவென்றி வேல்விடு
சிறுவ சந்த்ர சேகரர் பெருவாழ்வே
திசைதொ றும்ப்ர பூபதி திசைமு கன்ப ராவிய
திருவி ரிஞ்சை மேவிய பெருமாளே.

பதவுரை :

மகர – மகர மீன்களையும், விம்பர் – ஒளி உள்ளதும், சீகரம் – லட்சுமிகரமானதும், முகரம் – ஒலி கொண்டதும், வங்க வாரிதி – கப்பல்களை உடையதுமான கடல், மருகி வெந்து – கலங்கி சூடுண்டு, வாய்விட – கொந்தளிக்கவும், நெடுவான் – நீண்ட ஆகாயத்தில், வழி திறந்து – வழியைத் திறந்து வந்த, சேனையும் எதிர் மலைந்த – சேனைகளும் எதிர்த்துப் போர் செய்த, சூரனும் மடிய – சூரபன்மனும் மாண்டுபோக, இந்திராதியர் – இந்திரன் முதலிய இமையவர், குடியேற – விண்ணுலகில் குடியேற, சிகரதுங்க – சிகரங்களுடன் உயர்ந்த, மால்வரை – மாயையில் வல்ல கிரௌஞ்சமலை, தகர – பொடிபட்டு அழிய, வென்றி வேல்விடு – வெற்றி வேலைச் செலுத்திய, சிறுவ – இளையவரே! சந்த்ரசேகரர் – சந்திரனை முடியில் சூடிய சிவபெருமானுக்கு, பெரு வாழ்வே – பெருஞ் செல்வமாகத் திகழ்பவரே! திசைதொறும் – திசைகள்தோறும் உள்ள, ப்ரபூபதி – மேலான அரசர்களும், திசைமுகன் – பிரமதேவனும், பராவிய – துதி செய்த, திருவிரிஞ்சை மேவிய – திருவிரிஞ்சிபுரத்தில் வீற்றிருக்கும், பெருமாளே – பெருமையில் சிறந்தவரே! நகரில் பஞ்ச பூதமும் – சமானமில்லாத ஐந்து பூதங்களும், நினைவும் நெஞ்சும் – நினைக்கின்ற நெஞ்சும், ஆவியும் – உயிரும், நெகிழ வந்து – நெகிழும்படி வந்து, நேர் படும் – கூடுகின்ற, அவிரோதம் – விரோதம் இன்மையை, நிகழ்தரும் ப்ரபாகர – கூட்டுவிக்கின்ற ஞான ஒளி வடிவினரே! நிரவபயம் – அழிவில்லாத, பராபர – மேலான பொருளே! நிருப – அரசரே! அம் குமாரவேள் – அழகிய குமாரவேளே! என வேதம் – என்று வேதங்கள் முழங்குவதும், சகர – சகரர்களால் உண்டாக்கப்பட்டதும், சங்க சாகரம் என – சங்குகள் உள்ளதுமான கடல்போல், முழங்கு – ஆரவாரம் செய்யும் சமயவாதிகள் – சமயவாதிகளாகிய, பஞ்ச பாதகர் – பஞ்ச பாதகர்கள், அறியாத – அறியாததும், தனிமை கண்டது ஆன – தனித்து நிற்பதும் ஆன, கிண் கிணிய – கிண் கிணியும், தண்டை சூழ்வன – தண்டையும் சூழ்ந்துள்ள, சரண் – உமது திருவடியாகிய, புண்டரீகம் அது அருள்வாயே – தாமரை அதனைத் தந்தருளுவீராக.

பொழிப்புரை :

மகர மீன்களும், ஒளியும், அலைகளும், ஒலியும், லட்சுமீகமும், சங்குகளும், மரக்கலங்களும் உடைய கடல் கங்கி சூடுண்டு கொந்தளிக்கவும், பெரிய ஆகாய வழியைத் திறந்து வந்த சேனைகளும், எதிர்த்துப் போர் புரிந்த சூரபன்மனும் மாண்டுபோக, இந்திரனாதி இமையவர்கள் விண்ணுலகில் குடியேற, சிகரங்களை உடையதாய் உயர்ந்து மாயையில் வல்ல கிரௌஞ்சமலை பொடிபட்டு அழிய, வெற்றி வேலைச் செலுத்திய இளையவரே! சந்திரனைத் தலையில் சூடிய சிவபெருமானுடைய பெருஞ்செல்வமே! திசைகள் தோறும் உள்ள சிறந்த அரசர்களும், பிரமதேவனும் புகழ்ந்து போற்றுகின்ற திருவிரிஞ்சிபுரத்தில் வாழும் பெருமையில் சிறந்தவரே! சமானமில்லாத பஞ்சபூதங்களும், நினைக்கின்ற நெஞ்சும், உயிரும் நெகிழும்படி வந்து கூடுகின்ற அவிரோத ஞானத்தைக் கூட்டவிக்கின்ற ஒளி வடிவினரே! அழிவில்லாத பரம்பொருளே! அரசரே! அழகிய குமரவேளே! என்று வேதங்கள் முழங்குவதும், சகரர்கள் தோன்றிய சங்குகள் நிறைந்த கடல்போல் ஆரவாரம் செய்து வாது புரிகின்ற சமயவாதிகளாகிய பஞ்சபாதகர்கள் அறியாததும், தனித்து நிற்பதுமான, கிண்கிணியும் தண்டையும் சூழ்ந்துள்ள உமது பாத தாமரையைத் தந்தருளுவீராக.

விரிவுரை :

நிகரில் பஞ்சபூதமும் ;
பஞ்ச பூதங்கள்.

மண், நீர், அனல், காற்று, ஆகாயம் என்ற இந்தப் பஞ்ச பூதங்கள் சமானமில்லாதவை.

அவிரோதம் :

விரோதம் இல்லாதது. யாரையும் பகைக்காமல் இருப்பது உயர்ந்த தன்மை. இதனை அவிரோத ஞானம் என்பர்.

செந்தில் வேலவனுக்குத் தொண்டாகிய
என் அவரோ ஞானச் சுடர் வடிவாள்

என்று கந்தரலங்காரத்தில் அருணகிரிநாத சுவாமிகள் கூறுகின்றார்.

இதற்குச் சான்று அப்பர் பெருமான். அப்பர் பெருமானை சமண முனிவர்கள் பகைத்தார்கள். சமண முனிவர்களை அப்பர் பெருமான் பகைக்கவில்லை. அவிரோத ஞானம் விளைகின்ற பொழுது ஐந்து பூதங்களும், எண்ணுகின்ற மனமும், உயிரும் நெகிழ்ந்துவிடும்.

சிவன்

சிவாய நம என்பதில் **சி** என்பது சிவபெருமானையும், **வா** என்பது லோகமாதாவான அம்பிகையையும், **ய** என்பது ஜீவாத்மாக்களான மனிதர்களையும், **நம** என்பது (மாயாமலம், ஆணவ மலம், கன்ம மலம் ஆகிய) மும்மலங்களையும் உணர்த்துகிறது.

ஓம் நமச்சிவாய, ஓம் சிவாய நம – இவற்றில் எதை ஜபம் செய்யவேண்டும்?

இறைவனின் எந்தத் திருநாமத்தை ஜபம் செய்தாலும் பலன் உண்டு.

சிவஞான சுவாமிகள் காஞ்சிப் புராணத்தில் அருளிய பாடல்

உரை : **பொன். சண்முகம்**

திருச்சேது ஆலவாய் சிராப்பள்ளி
 திருவழுவூர் திருவையாறு
தருச்சூழும் இடைமருதூர் யாம் என்றும்
 நடம்புரியச் சலியாத் தில்லை
கருச்சாடு முதுகுன்றம் அருணகிரி
 திருவிரிஞ்சை கவினார் ஒத்தூர்
மருச்சூழுங் குழல்உமையே
 நின்னொடுயாம் மகிழ்ந்துறையும்
வளஞ்சூழ் காஞ்சி

தல விசேடப் படலம்
பா. எண். 15

தெளிவுரை :

மணங்கமழும் கூந்தலையுடைய உமையே, திருச்சேது (இராமேஸ்வரம்), திருஆலவாய் (மதுரை), திருச்சிராப்பள்ளி, திருவழுவூர், திருவையாறு, சோலை சூழும் திருவிடைமருதூர் யாமென்றும் தளராது நடம்புரியுந் தில்லை, பிறவியைப் போக்குகின்ற திருமுதுகுன்றம் (பழமலை), திருவண்ணாமலை, விரிஞ்சிபுரம், அழகு நிறைந்த திருவோத்தூர் (செய்யாறு) யாம் நின்னுடன் மகிழ்ந்து வீற்றிருக்கும் வளஞ்சூழ் காஞ்சி யாவும் யாம் விரும்பியுறையும் தலங்களாகும்.

சிவன் கோயில்களில் உள்ள சிவன் சந்நதியை மூன்று தடவை அல்லது ஏழு தடவை பிரதட்சணம் செய்யவேண்டும். இதற்கும் அதிகமாக எத்தனை தடவை வேண்டுமானாலும் பிரதட்சணம் செய்யலாம்.

❖❖❖

சிலர் மனிதர்கள் சமாதியில் சிவலிங்கங்களை வைத்து வழிபடுகிறார்கள். இது சரியா?

நடமாடும் தெய்வமாக உலகில் வாழ்ந்த மகான்கள் மறைந்த பிறகு, அவர்கள் சமாதியில் சிவலிங்கத்தை வைத்து அல்லது வைக்காமல் பூஜை செய்வது பண்டைக்காலத்து வழக்கம். அது நல்லதுதான்.

❖❖❖

சந்நியாசியோ, ஞானியோ சிவபதம் அடைந்த பிறகு, அவரது பூத உடலை அடக்கம் செய்த இடத்தில் ஒரு சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து, கட்டிடம் கட்டிப் பூஜை செய்கிறோம் அல்லவா? அந்தச் சிவலிங்கத்துக்கு எதிரில் நந்தியின் உருவம் அமைப்பது அவசியமா?

அவசியமில்லை.

❖❖❖

சிவதாண்டவம் என்று சொல்வதேன்?

தண்டு என்ற பெயரில் ஒரு மகரிஷி இருந்தார். அவருக்குச் சிவபெருமான் தமது நடனத்தைக் கற்றுக் கொடுத்தார். எனவே அந்த நடனம் சிவதாண்டவம் என்று அழைக்கப்படுகிறது.

சிதம்பர முனிவர் அருளிய
க்ஷேத்திரக்கோவைப் பிள்ளைத் தமிழ்ப் பாடல்

உரை : சைவ சித்தாந்தப் பேராசிரியர் **சோளிங்கர் மு. செல்வநாதன்**

உவமைதா மானசிறு
மறையோர் அனேகரில்
ஒருவர் சிவ லோகமுறவே
உம்பர்கோன் பூசைக்கு
அவர்க்கா ளிலாமையால்
ஊரிலுள் ளாரவர்மனை
யவள்முன்பு வந்துவந்
துன துமறை பங்கிடென
அன்னையாள் முன்போய்அழ
அமலன்வளர் பாலனுக்
கருள்செய்து முந்நூல்
அணிந்துநீ யின்றுநம்மைக்
குவலயத் தோர்முன்பு
பூசைசெய் யென்னவே
குழந்தையெட் டாமல்நிற்பக்
குழந்தைவே லாயுத னுன்பூசை யென்னக்
குனிந்துஅவன் பூசைகொண்ட
சிவன்வாழ் விரிஞ்சிபுரம் வருகுமர நாயகா
சிறுபறை முழக்கியருளே
செகதண்ட நின்றுபணி தேவர்சே னாபதி
சிறுபறை முழக்கியருளே.

சிறுபறைப்பருவம்
பா. எண். 3

தெளிவுரை :

விரிஞ்சிபுரம் என்னும் சிற்றூரில் தங்களுக்குத் தாங்களே ஒப்பாகின்ற சிவாச்சாரியார்களில் ஒருவர் இறைவன் திருவடி அடைகிறார். அடையவே, இறந்தவர்க்குப் பதிலாகச் சிவபூசை செய்ய எவரும் இல்லை. ஆதலின், ஊரினர் இறந்தவர் வீட்டிற்குச் சென்று அவர் மனைவியிடம், 'உங்கள் குடும்ப சிவபூசை முறைக்கு ஏற்பாடு செய்க' என வற்புறுத்தினர். வற்புறுத்தவே, அந்தப் பெண்மணி தன் மகன் சிறுவனாய் இருக்க, வேறு வழி தெரியாது இறைவனிடம் சென்று கண்ணீர்விட்டுக் கசிந்துருகி முறையிட்டாள். முறையிடவே, இறைவனும் ஞானாசிரியனாக எழுந்தருளிச் சிறுவனுக்குத் தீக்கை செய்துவைத்து, முப்புரி நூல் அணிவித்து, 'மகனே உலகினர் காண, இன்று நம்மைப் பூசை செய்க' என்று கட்டளையிட்டருளி மறைந்தார். மறையவே, சிறுவன் வேலாயுதனும் திருக்கோயிலின் உள்ளே சென்று இறைவனுக்குத் திருமுழுக்காட்டுச் செய்ய முற்படும்போது தன்னைவிட இறைவன் திருமேனி உயரமாக இருந்ததனால் வருந்தி, 'பெருமானே! உனக்குத்தானே பூசை செய்கிறேன். கருணை செய்ய மாட்டாயோ?' என்று உள்ளம் உருகிப் பிரார்த்தித்தான். பிரார்த்தனையை ஏற்றுக் குனிந்துகொடுத்து அச்சிறுவனின் பூசையை ஏற்றருளிய அருள்மிகு வழித்துணைநாதர் எழுந்தருளியுள்ள விரிஞ்சிபுரத்தில் எழுந்தருளி வருகின்ற குமர நாயகனே! சிறுபறை முழக்கி அருளுக! தனது ஞான வேலாயுதத்தால் உலகைப் பணிவிக்கின்றவனும், தேவர்களின் சேனாபதியும் ஆகிய முருகப் பெருமானே! சிறுபறை முழக்கியருளுக!

திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் அருளிய பாடல்கள்

உரை : **ஆரணி வாழைப்பந்தல் அ. குணசேகர்**

1. ஆர்க்கும் அருள்செய் அநாதியிறை
அமரர்க் கிறைவன் அருவினைகள்
தீர்க்கும் தேவன் திரிசூலி
திகைத்து வாடும் அடியரைக்காண்
பார்க்கும் பரமன் மறைபோற்றும்
பரமா னந்தன் திருவிரிஞ்சை
மார்க்க பந்து மலர்ப்பதத்தை
மறவார் மீண்டும் பிறவாரே.

தெளிவுரை :

வேறுபாடு கருதாது யாவர்க்கும் அருளும்அநாதி இறைவன் – அமரர்க்கு இறைவன்; உயிர்களின் தீவினைகளைத் தீர்க்கும் தேவன்; திரிசூலமேந்தியவன்; திகைத்து வாடும் அடியவர்க்கு அருள கண்பார்வைசொரியும் பரமன்; வேதம் போற்றும் பரமானந்தன்; திருவிரிஞ்சையில் கோயில் கொண்ட மார்க்கபந்து ஈசன் மலர்ப்பதத்தை மறவாதவர் மீண்டும் பூமியில் பிறவாதவரே!

2. நலமே வருக நலம் பூத்த நாதா வருக
தலம் படுந்தவமே, அருள் பொழிந்த
அண்ணா வருக
மயிலேறிய மன்னா வருக,
திருவிரிஞ்சைப்
பதிவாழ் முருகா வருக! வருகவே!!

தெளிவுரை :

நலங்களேயருளும் நாதனே வருக. நன்மையே வடிவான மெய்ப்பொருளே வருக. திருவிரிஞ்சைப் பதி செய்த தவநிதியே வருக. அருளைப் பொழியும் அண்ணா வருக. மயிலேறு மாமன்னனே வருக. திருவிரிஞ்சிபுரத்தை மிகவிரும்பி வாழ்கின்ற முருகப் பெருமானே வருக! வருக!!



மெய்கண்ட சாத்திரங்கள் என்பதில் 14 நூல்கள் அடங்கியுள்ளன. அவை வருமாறு:

1. திருவுந்தியார், 2. திருக்களிற்றுப்படியார், 3. சிவஞானபோதம், 4. சிவஞானசித்தியார், 5. இருபா இருபஃது, 6. உண்மை விளக்கம், 7. சிவப்பிரகாசம், 8. திருவருட்பயன், 9. வினாவெண்பா, 10. போற்றிப் பஃறொடை, 11. கொடிக்கவி, 12. நெஞ்சுவிடுதூது, 13. உண்மைநெறி விளக்கம், 14. சங்கற்பநிராகரணம்.

❖❖❖

ஸ்ரீமத் அப்பைய்ய தீக்ஷிதேந்திரர் அருளிச்செய்த ஸ்ரீ மார்கபந்து ஸ்தோத்திரம்

உரை : வித்யாவாசஸ்பதி பிரம்மஸ்ரீ மாயூரம் **எம். ராமநாத தீக்ஷிதர்**

சம்போ மஹாதேவ தேவ,
சிவசம்போ மஹாதேவ
தேவே சம்போ சம்போ
மஹாதேவ தேவ!

1. நித்யம் சிதானந்த ரூபம்
நிஹ்னுதா சேஷ
லோகே வைரி ப்ரதாபம்
கார்தஸ்வராகேந்த்ர சாபம்,
க்ருத்திவாஸம் பஜே
திவ்யஸன்மார்கபந்தும் (சம்போ)

அழிவற்றவரும் அறிவையும் ஆனந்தத்தையும் வடிவமாய்க் கொண்டவரும், தேவர்களின் எதிரியான அசுரர்களின் ஆணவத்தை அடக்கியவரும், மஹாமேருமலையை வில்லாகக் கொண்டவரும், யானையின் தோலை ஆடையாகக் கொண்டவரும், வழியில் நடப்பவர்களின் பயத்தை நீக்கும் பந்துவாயுமுள்ள பரமசிவனைச் ஸேவிக்கின்றேன்.

2. அங்கே விராஜத் பஜங்கம், அப்ரகங்கா
தரங்காபி ராமோத்த மாங்கம்!
ஓங்காரவாடீ குரங்கம், ஸித்த ஸம்
ஸேவிதரங்க்ரிம்
பஜே மார்கபந்தும் !! (சம்போ)

ஸர்ப்பங்கள் விளங்கும் அவயவமுள்ளவரும், ஆகாய கங்கையின் அலைவரிசையினால் அழகிய சிரத்தினையுடையவரும், ஓங்காரமாகிய தோட்டத்தில் மான்போல் தோன்றுபவரும், ஸித்தி பெற்ற முனிவர்கள் ஸேவிக்கும் பாதங்கள் உள்ளவரும், வழி நடப்பவர்களின் ஆபத்துகளை நீக்குபவருமான பரமசிவனைப் பஜனம் செய்கின்றேன்.

3. மந்தார பூதேருதாரம்,
மந்தராகேந்த்ர ஸாரம்
மஹாகௌர்யதூரம்!
ஸிந்தூரதூர ப்ரசாரம், ஸிதுராஜாதி தீரம்
பஜே மார்கபந்தும் !! (சம்போ)

மந்தாரமென்ற கற்பகத்தருவைக் காட்டிலும் கொடையாளியாயும் மந்தரமலை போல் பலமுள்ளவரும், அம்பாளை பாதி தேகமாயுடையவரும், ரிஷபம் மீது ஏறி தூரம் செல்பவரும், ஸமுத்ரம் போல் மிக கம்பீரமாயுள்ளவருமான மார்க்கபந்துவைத் துதிக்கிறேன்.

4. கந்தர்ப தர்பக்னமீசம்,
கால கண்டம் மஹேசம்
மஹாவ்யோம கேசம்
குந்தாபதந்தம் ஸுரேசம்
கோடிஸூர்ய ப்ரகாசம்
பஜே மார்கபந்தும்!! (சம்போ)

மன்மதனின் ஆணவத்தை அடக்கியவரும், உலகிற்கு நாயகனும், விஷத்தால் கருத்த கழுத்துள்ளவரும், சிறந்த நாயகனும், ஆகாயத்தைக் கேசமாயுடையவரும், குந்தபுஷ்பம் போன்ற பற்களை உடையவரும், கோடி ஸூர்யன் போல்

ப்ரகாசமுள்ளவருமான மார்க்கபந்துவை ஸேவிக்கிறேன்.

5. பாலாவநம்ரத்கிரீடம், பாலநேத்ரார்சிஷா
தக்த பஞ்சேஷு கீடம்
சூலாஹததாராதி கூடம், சுத்தமர்த்தேந்து
சூடம் பஜே மார்கபந்தும்!! (சம்போ)

நெற்றி வரையில் விளங்கும் கிரீடமுள்ளவரும் நெற்றிக் கண்ணால் மன்மதனை எரித்தவரும், சூலத்தினால் எதிரிகளை அழித்தவரும், பரிசுத்தரும் சந்த்ர கலையை தரித்தவருமான மார்கபந்துவைத் துதிக்கிறேன்.

6. அப்பய்ய யஜ்வேந்த்ர கீதம்,
ஸ்தோத்ர ராஜம்
படேத்யஸ்து பக்த்யா ப்ரயாணே
தஸ்யார்த்த ஸித்திம் விதத்தே, மார்க
மத்யே (அ)பயம் சாசுதோஷோ
மஹேச : !! (சம்போ)

அப்பய்ய தீக்ஷிதேந்திரர்களால் செய்யப்பெற்ற இந்த சிறந்த ஸ்தோத்திரத்தைப் பிரயாணம் செய்யும் பொழுது ஜபிப்பவர்கள் விரும்பிய பயனை அடைகிறார்கள். மேலும் விரைவில் சந்தோஷிக்கின்ற மஹேச்வரன் வழியின் நடுவில் பயமின்றி நம்மைக் காப்பாற்றுகிறார்.

திருவாசகம்

திருவாசகத்திலுள்ள சிவபுராணத்தில் ஓர் அடி ‘கண்ணுதலான் தன் கருணைக் கண் காட்ட வந்தெய்தி’ என்று வருகிறது.

இது தவிரவும் அருளாளர்களின் பல பாடல்களில் கண்ணுதற் கடவுள், கண்ணுதலான் என்று இறைவன் குறிப்பிடப் பெறுகிறான். கண்ணுதற் கடவுள் என்று இறைவன் அழைக்கப் பெறுவது ஏன்?

‘நுதல்’ என்றால் நெற்றி.

நெற்றியில் கண்ணை உடையவன், நெற்றிக்கண் படைத்தவன் என்ற பொருளில் சிவபிரானைக் கண்ணுதற் கடவுள் என்று போற்றி வணங்குகிறோம்.

திருவாசகத்தில் ‘நமச்சிவாய வாழ்க’ என்று பெயரை வைத்திருக்கிறார். அந்தப் பகுதியில் அவர், ‘சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை’ என்று ஓர் இடத்தில் குறிப்பிடுகிறார்.

சமஸ்கிருதத்திலுள்ள சிவ புராணமும், திருவாசகத்திலுள்ள சிவ புராணமும், பழமைக்கும் பழமையான சிவபரம்பொருளைப் பற்றியே பேசுகின்றன என்பதே. இந்த இரண்டு நூல்களுக்கிடையில் உள்ள ஒற்றுமை.

சமஸ்கிருதத்திலுள்ள சிவமகாபுராணம், சிவபெருமானைப் பற்றிய புராணக் கதைகளைக் கொண்டது.

திருவாசகத்திலுள்ள சிவ புராணம் சிவ கதைகளைச் சொல்லாமல், தத்துவங்களைக் கூறுகிறது. அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள் என்று ஔவையார் கூறியதுபோல், பல ஆழ்ந்த தத்துவங்களைச் சுருக்கமாகத் திருவாசகத்திலுள்ள சிவ புராணம் உணர்த்துகிறது.

திருவாசகத்திற்குப் பிறகு பிற்காலத்தில் குட்டித் திருவாசகம் என்றொரு நூல் எழுந்தது. அது போல், சமஸ்கிருதச் சிவ புராணத்திற்குப் பிற்காலத்தில் திருவாசகச் சிவ புராணம் எழுந்துள்ளது எனலாம்.

வடமொழி புராணங்களின் பாடல்கள்

உரை : ஆரணி வாழைப்பந்தல் அ. குணசேகர்

1. காஞ்சி புராணம் 30-வது அத்தியாயம்

விருத்தாசலாக்ய மபரம்
வேதாத் யாபக மத்புதம்
அருணாத்ரி ஸ்ததப் பச்சாத்
விரிஞ்சிபுர முத்தமம்

2. பிரமாண்ட புராணம் 76-ஆம் அத்தியாயம்

துக்த நத்யாஸ்தடே ஸம்ஸ்த
மந்த்ரே லோக கந்தரே
மார்கே சாக்யச் சிவஸ்ஸாக்ஷாத்
பக்தானாம் முக்தி தாயக

3. ஸ்ரீ காளஹஸ்தி மஹாத்மியம் 3-ஆம் அத்தியாயம்

க்ஷேத்திரம் கிருத்ரத் வயாவாஸம்
பக்ஷபாரண்யம் த்ரிகாண்டகம்
விரிஞ்புரம் வேதபுரம்
தக்ஷிணா லயம் மஹத்

4. சிவரகசியம் 11-ஆம் அத்தியாயம்

சிவோ மார்க்க சாயேச:
ஸ்ரீ மதப் ரஸ பேச் வர:
க்ஷலஸ் தானேச் வரஸ் தத்ர
தர்சனாதேவ முக்தித:

‘சித்தாந்த அஷ்டகம்’ என்றால் என்ன?

சைவ சமய ஆச்சாரியர்களில் ஒருவர் உமாபதி சிவாச்சாரியார். இவர் இயற்றிய எட்டு நூல்களையும் சித்தாந்த அஷ்டகம் என்ற பெயரால் சைவ சமயத்தினர் குறிப்பிடுவர். அந்த எட்டு நூல்களின் பெயர் வருமாறு :
1. சிவப்பிரகாசம், 2. திருவருட்பயன், 3. வினாவெண்பா, 4. போற்றிப் பஃறொடை, 5. கொடிக்கவி, 6. நெஞ்சுவிடுதூது, 7. உண்மைநெறி விளக்கம், 8. சங்கற்ப நிராகரணம்.

❖❖❖

சிவாகமங்கள் வேதத்தைச் சேர்ந்தவையா?

சிவாகமங்கள் வேதத்தின் ஒரு பகுதி அல்ல. வேதத்தில் சுருக்கமாகச் சொல்லப்பட்ட கருத்துக்களைச் சிவாகமங்கள் விரிவாக விளக்குகின்றன. காமிகம் முதல் வாதுளம் வரை மொத்தம் இருபத்தெட்டுச் சிவாகமங்கள் உள்ளன.

❖❖❖

மும்மலங்கள் என்றால் என்ன?

மாயாமலம், கன்மமலம், ஆணவமலம் ஆகிய மூன்றும் மும்மலங்கள் ஆகும். இவை மனிதனைப் பந்தப்படுத்தி பாசத்தில் வைக்கின்றன.

இயற்றியவர் பெயர், நூல் பெயர் தெரியாத பாடல்கள்

உரை : சைவசித்தாந்தப் பேராசிரியர். **சோளிங்கர் மு. செல்வநாதன்**

அம்மானை என்பது பழங்கால மகளிர் விளையாட்டு. ஞானிகள் இறையுணர்வுக் கருத்துகளை அம்மானை ஆடலில் வைத்துப் பாடியிருக்கிறார்கள். மணிவாசக பெருந்தகையின் திருவம்மானை சிறந்த எடுத்துக்காட்டு.

1. மாசிலாத் தென்விரிஞ்சை
   மார்க்கசகாய லிங்கர்
   வேசியர் பாற்றூது சொல்லிமீண்டனர்
   காணம்மானை
   வேசியர் பாற்றூது சொல்லிமீண்டனரே
   யாமாயின்
   வீசைமுனை வெட்கமவர்க்கில்லையே
   யம்மானை
   இல்லாமற் றலையிறக்க மேன்வந்த
   தம்மானை.

இ–ள், குற்றமே இல்லாத விரிஞ்சிபுரத்தில் எழுந்தருளியுள்ள மார்க்கசகாயராகிய வழித்துணைநாதர், சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்காக, கணிகையர் குலத்தில் தோன்றிய பரவை நாச்சியாரிடத்துத் தூது சென்று திரும்பி வந்தார். இப்படி மனிதனுக்காகத் தூது சென்று வந்ததில் அவர்க்கு வெட்கம் இல்லையோ? வெட்கம் இல்லையேல் ஏன் தலை சாய்த்து நிற்கின்ற நிலை வந்தது? (பாலகன் சிவசர்மனின் பூசைக்காகத் தலைசாய்த்து நின்றார் மார்க்கசகாயர்)



விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்று சைவசித்தாந்தத்தில் உயிர்களை மூன்று விதமாகச் சொல்கிறார்கள்.

ஆணவமலர், கன்மமலம், மாயாமலம் என்ற மும்மலங்களில் கட்டுப்பட்டு ஜீவர்கள் பிறப்பதிலும் இறப்பிலும் உழல்கிறார்கள்.

இவற்றில் ஆணவம் என்ற ஒரு மலம் உடையவர் விஞ்ஞானகலர், ஆணவம், கன்மம் என்னும் இருமலம் உடையவர் பிரளயாகலர். ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலம் உடைய சகலர் எனப்படுகின்றனர்.

❖❖❖

ஆதிசைவர் என்று முப்போதும் இறைவன் திருமேனியைத் தீண்டி வழிபடுபவர்களை ஆதிசைவர் என்று கூறுவார்கள். இவர்கள் பரார்த்த பூஜை செய்பவர்களாக இருப்பார்கள். சிவாலயங்களில் குருக்களாக இருந்து சிவத்தொண்டு புரிவார்கள்.

சுந்தரமூர்த்தி நாயனார் ஆதிசைவர் குலத்தில் பிறந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இயற்றியவர் பெயர், நூல்பெயர் தெரியாத அருள்மிகு வழித்துணைநாதர் அம்மானைப் பாடல்

ஸ்ரீ மார்க்கசஹாயர் ஸ்தோத்திர பஞ்சகம்

1. ஹாமாபிஸம்ஸேலித சாந்தரூபம்
காமாஹி பத்ரீசவர மாதி தேவம்
ஸீமா நதிப்ரஸ்த மஹா மஹத்வம்
ஸ்ரீ மார்க்கபந்தும் சரணம் பஜாமி!

2. க்ஷேமாக ராகார மனந்த போதம்
பூமான மானந்த ரஸம் பரேசம்
ஸீமான மந்தாவிதி தம் மஹேசம்
ஸ்ரீ மார்க்கபந்தும் சரணம் பஜாமி!

3. ஹேமாதி கோதண்ட மனோக்ஞ பாணிம்
வாமார்த்த ஜானீம் வரணீ ப ரூபம்
ஹைமாசலீலாலித பாத பத்மம்
ஸ்ரீ மார்க்கபந்தும் சரணம் பஜாமி!

4. ஸமார்த்த கண்டம் சசிகண்ட கூடம்
நாமானு ஸங்கீர்த்தன நிர்துதாகம்
ஸீமானமத்தம் விநிதம் மஹேசம்
ஸ்ரீ மார்க்கபந்தும் சரணம் பஜாமி!

5. வ்யோமாதி பூபத்பிரபத பிரபாவம்
ச்யாமாதி வித்வாயமய ஸ்வமூர்த்திம்
வ்யோமாவ காலங்க்ருத ஸத்ச பர்த்தம்
ஸ்ரீ மார்க்கபந்தும் சரணம் பஜாமி

பலஸ்ருதி

ஸ்ரீ மார்க்கபந்து ஸ்தோத்ரமிதம்
யோதீமானனு தினம் படேத
சாமானா யருத்ய ஸகலாந்
பூமான் பவத நிர்மலஹ

சோமவார விரதத்தை மணிவாசகரின் சிவபிரானைச் சிவபுராணத்தாலோ, வேறு துதிகளாலோ காலையில் போற்றி பூஜித்து தொடங்கலாம்.

உண்ணாவிரதம் அல்லது ஒரு பொழுது பகலிலோ இரவிலோ பலகார உணவு, அன்று கேளிக்கைகளிலோ கூட்டங்களிலோ வீண்பேச்சுகளிலோ ஈடுபடாமல் இருத்தல், கூடிய வரையில் பேச்சைக் குறைத்து மௌனம் அனுஷ்டித்து சிவபரமான நூல்களைப் படித்தல், பஞ்சாக்ஷர ஜபம், பஜனை முதலியவற்றை மேற்கொண்டு நாளைக் கழித்து, மறுநாள் காலை பூஜை செய்து நிவேதனம் செய்து பிரசாதம் உட்கொண்டு, விரதத்தைப் பூர்த்தி செய்யலாம்.

❖❖❖

இறைவன் ஒருவனின் உள்ளத்தைத்தான் பார்க்கிறானே தவிர, புறச் செயல்களை அல்ல என்று, பொதுவாக நாம் எல்லோரும் சொல்கிறோம்.

சாக்கிய நாயனார் சிவபிரானைக் கல்லால் அடித்தார். அவருக்குச் சிவனார் முக்தி வழங்கினார். மன்மதன் சிவபிரானை மலரால் அடித்தான். அவனை நெற்றிக்கண்ணாலேயே சிவபெருமான் எரித்தார். இவை இறைவன் உள்ளத்தைத்தான் பார்க்கிறாரே தவிர, புறச்செயல்களை அல்ல என்பதை உணர்த்தும்.

இயற்றியவர் பெயர், நூல்பெயர் தெரியாத பாடல்கள்

1. ஸ்ரீ மார்க்கபந்து மாம் பரிபாலய
ஸ்ரீ மரகதவல்லீ பதே
தினோ ஹம்சம் பஜாமி ஸததம்
தகிதேவி அபயம் பஜே!
மாபாலய ஜயமம பால ஹர
ஸ்ரீ ஸ்யாம வல்லீம் பஜே!!
(ஸ்ரீ மார்க்கபந்து)
ஸ்ரீ மார்க்கபந்து கீர்த்தனம்

ராகம் – காம்போதி தாளம் – ஆதி

பல்லவி

மரகதவல்லீம் மனஸாம் ஸ்மராமி
மதனஜன காதி தேவபாலினி!! (மரகத)

சரணம்

ஹரி ஹரதய வேதினி மோஹினி
ஹரி ஹரபுத்ர ஜனனீ நளினி
க்ருத தைத்யாதிப்ருந்த மாத்தனி
குருகுஹாதினுத வந்தி வாஸினி நமாமி
(மரகத)
ஸ்ரீ மரகதவல்லி கீர்த்தனம்

2. மரகதவல்லீ ஸஹஸரமமர தரும்
கமபி ஸுலபமான மதாம்
மார்க ஸஹாயா பிக்ய குலதைவதம்
ஆஸ்ரயாமி ஸுரமுக்யம்

3. வெண்ணை நல்லூர் காசி
விரிஞ்சிபுரங் கேதாரம்
அண்ணலொற்றியூர்
கழுக்குன்றாடுதுறை
எண்ணுநல்லூர் எட் டீசருங்
குடியீத்த பணம் பாதி.



'பசுபதி' என்ற சொல்லுக்கு 'உயிர்களின் தலைவன்' என்று பொருள்.

'பரமன்' என்றால், 'எங்கும் வியாபித்திருப்பவன், அல்லது பரந்த அண்டங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டவன்' என்பது பொருள்.

❖❖❖

இறைவனின் ஆற்றலை, அருளை, அவனது ஒப்பற்ற பெருங்கருணையை, அவன் அன்பர்களை அரவணைத்துக் காக்கும் அற்புதத்தை எடுத்துரைப்பது பெரியபுராணம்.

❖❖❖

பொதுவாக மூவர் பாடியவை தேவாரம் எனப்படுகிறது. எனினும் சம்பந்தர் பாடியது திருக்கடைக்காப்பு எனவும், நாவுக்கரசர் பாடியது தேவாரம் எனவும், சுந்தரர் பாடியது திருப்பாட்டு எனவும் சிறப்பாகக் குறிப்பிடுகிறார்கள். ஆகவே தேவாரத்திலும் தேவாரமாக நாவுக்கரசரின் தேவாரம் விளங்குகிறது எனலாம்.

அன்பே சிவாய நம!

திருக்குறள் மூதறிஞர் **இரா. இராதாகிருட்டிணன்,** ஆர்க்காடு.

துன்ப நிலைமாற்றித் தூய மனமளித்(து)
இன்பப் பெருக்காக்கும் எம்மானே– அன்பு
நிலைதந்(து) அறவழியில் செல்லப் பணித்த
தலைவ சிவாய நம! 1

ஆட்டுகிறாய் ஆடுகிறேன் அன்பர் குழுக்குள்ளே
கூட்டுகிறாய் கூடுகிறேன் வேறறியேன் – நாட்டமுடன்
பண்ணும் பணிகளில் பண்ணிசைபோல் தோயமனம்
நண்ணும் சிவாய நம! 2

சொந்தம் எனச்சொல்வேன் சொக்கேசன் உன்னைத்தான்
எந்தைதாய் எல்லாமே நீதானே – விந்தை
பலசெய்து பாசமுடன் காக்கின்ற தெய்வ
நலமே சிவாய நம! 3

வண்ணத் தமிழ்மீது வற்றாத காதலினால்
எண்ணமெலாம் இன்ப நிலைபெற்றேன் – பண்ணாக
என்நெஞ்சில் எப்போதும் எங்கும் நிறைந்துள்ள
அன்பே சிவாய நம! 4

அன்பு நிலைக்கென்னை ஆளாக்கி வைத்துவிட்டால்
என்பும் பிறருக்கே ஈந்திடுவேன் – இன்பக்
கடலாக ஏழிசையின் காவலனாய்ப் போற்றும்
இடமே சிவாய நம! 5

இரவுபகல் எப்போதும் என்நெஞ்சில் நீங்கா
உரமெனக்குத் தந்தென்னை ஊக்கும் – பரம்பொருளே
தப்பேதும் இன்றித் தடுத்தென்னை ஆதரிக்கும்
அப்பா சிவாய நம! 6

உரையாற்றும் போதெனக்கு உற்ற துணையாய்
திரைபோல் கருத்தீயும் தேவே – தரைமீதில்
தண்ணார்த் தமிழ்சுரந்து தக்க உயர்வளிப்பாய்
அண்ணே சிவாய நம! 7

அன்பர் குழுவில் அடியேனை ஆளாக்கி
இன்பமுறச் செய்வாய் இறைவனே – நின்பால்
நிறையன்பு கொண்டேன் நெகிழ்ந்துருகி நின்றேன்
மறையே சிவாய நம! 8

உய்யும் வகையறியேன் ஊருக் குழைக்கின்றேன்
செய்யும் தொழிலையே தெய்மென்பேன் –அய்யன்
திருவள் ளுவரைப் பிடித்தேன் தெளிவாய்
இருப்பேன் சிவாய நம! 9

சங்கத் தமிழ்ப்புலவர் சாற்றும் கருத்தனைத்தும்
அங்கமெலாம் ஊற அருள்செய்வாய் – தங்கத்
திருமேனி எம்மானே தேனார்சொல் ஈந்தால்
பெருமை சிவாய நம! 10

படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களையும் இறைவன் இயற்றுகிறார். இவற்றில் அழித்தல் என்ற தொழிலை நடராஜர் ஏந்தியுள்ள தீ உணர்த்துகிறது. இதுவே பிரபலமாக வழக்கத்தில் உள்ளதும் முதலாவது பொருளும் ஆகும்.

நடராஜர் ஏந்தியிருப்பது சாதாரண நெருப்பு அல்ல. அது ஞானாக்கினி என்ற பெரும் சிறப்புக்கு உரியது. இந்த ஞானம் என்ற நெருப்பு, உயிர்களைப் பிணைத்திருக்கும் எல்லாவிதமான ஜன்ம சம்சார பந்தங்களையும் அழித்துவிடுகிறது. இது இரண்டாவது பொருள்.

கையில் நெருப்பை வைத்துக்கொண்டு சொன்னால், சொல்வது சத்தியம் என்று பொருள். என்னை நம்பி வாழ்ந்தால் யம பயமில்லை. இது சத்தியம் என்று, நடராஜர் நெருப்பைக் கையில் வைத்துக் கொண்டு சத்தியம் செய்கிறார் என்று மூன்றாவது ஒரு பொருள் கொள்ளலாம்.

தவமுனிவர் வெண்ணீற்றின் மகிமையாலே!

புலவர் **வே. பதுமனார்,** நிறுவனர், முத்தமிழ்ச் சுவைச் சுற்றம், குடியேற்றம் - 632 602.

மதிலுயர்ந்த நாயகனார் நாதர் தாளில்
மனம்வைத்த சிவசர்மப் பிள்ளைக் காகப்
பதிலுயர்ந்த வாய்த்தலையைத் தாழ்த்தி நின்ற
பசுபதியார் பதம்போற்றிச் சுற்றிச் சுற்றிச்
செதிலுயர்ந்த சிற்பநிறை கோபு ரத்தைச்
செறிவேற்றிச் செப்பமேற்றிக் கும்ப நீரால்
அதிலுயர்ந்த ஆகத்தால் சாந்தி செய்யும்
இரத்தினகிரி சுவாமிதாள் சூடு வோமே!

பிள்ளையாரைத் தருகின்ற தாழ்வா ரத்தில்
பிடித்தவாழைப் பழத்தோடு தூங்கு வார்க்குக்
கொள்ளைவரம் தருகின்ற கோமான் கோயில்
கோபுரத்தில் கலசங்கள் நிறுத்தி வைத்துச்
சொள்ளைகொட்டை யுள்ளமன மெல்லாம் அன்பால்
சுரக்குமனம் மாகவைத்த சுவாமி போற்றி
அள்ளையுள்ளத் தடியார்க்கும் அடிய ராகி
அரும்பிறவிப் பயன்பெறுவோம் அலக்கண் தீர்வோம்!

பாலாறு கரையுள்ள விரிஞ்சை மூதூர்ப்
பரிவுவளர் சிவனேயர் பாடு தீரச்
சூலாறு நீந்திவளர் கருவைத் தந்து
சுடர்மரங்கள் விளக்கான கான கத்தில்
வேலாறு அலைக்குறும்பர் அச்சம் போக்க
வழித்துணையாய் வந்தநாதர் கோயில் கொண்டார்
மாலாறு கொண்டகோயில் கோபு ரத்தின்
மனமுழுக்கு விழாவாழ்க யோகத் தாயே!

வெறுமலையின் திருமணியாய் நின்ற பாலன்
திருமுருகன் தாள்பணிந்த சச்சி தானக்
குருமலையார் அடிமையானார் துறவே பூண்டார்
குணம்மறந்தார் குலம்மறந்தார் குன்றம் நின்றார்!
திருமலைபோல் கோயிலினை அங்குக் கண்டு
திசைவிளங்கு திருவிரிஞ்சைக் கோயில் நின்ற
பெருமலையார் கைலாய நாதர் வாழும்
பெருஞ்சாந்தி காண்கின்றார் தவத்தி னாலே!

காவடிக்கீழ் தோள்நிறுத்தும் பக்தர் பந்திக்
களிவிருத்தும் பாலமுரு கடிமை யாக
நாவடிக்கீழ் சொல்லடக்கி சுகம டக்கி
நலமடங்கா நமசிவாய மந்தி ரத்தால்
சேவடிக்கீழ் செம்மைவைத்த செவ்வேள் போற்றிச்
செந்திலெனச் சீர்கோயில் கண்ட தாசர்
பூவடிக்கீழ் வருந்தேனாய் அமுத முண்ணப்
புதுக்குகின்றார் பொற்கலசம் கோயில் தோறும்!

கோடிதொகை கொடுக்கின்றார் கொள்கை போற்றிக்
கோபுரத்தில் கலைச்சிற்பம் கோடி வைத்தார்!
நாடிநகை புரிவார்தம் உழைப்பைப் பெற்று
நல்லநல்ல வண்ணத்தால் கலசம் செய்தார்!
பாடிவகை பூசனைகள் பூத்தி ருக்கப்
புதுயாகச் சாலைகளில் வேதம் வைத்தார்
தாடிநகை யொளிக்காமல் கருணை காட்டும்
தவமுனிவர் வெண்ணீற்றின் மகிமை யாலே!

விரிஞ்சையம்பதியும் பாலமுருகனடிமையும்

கவிஞர் **இரா. ஞானசேகரன்,** எம்.ஏ., (சைவ சித்தாந்தம்)

விரிஞ்சிபுரம் என்றுசொல்ல வேத னைகள்
விடைபெறும்! திருவிரிஞ்சை எனவும் சொல்ல
பரி,களிறு பசுவெல்லாம் வாழ்வில் சேர்ந்து
பல்வளமை கிட்டுமாமே! இறையு ணர்வே
தெரியாரின் பெருங்கவலை வாட்டம் கூட
தெரியாமல் இத்தலத்தின் மண்மி திக்கப்
பிரிந்தோடும்! என்றுபல நூல்கள் செப்பும்
பெருங்கருணைத் திருத்தலமே விரிஞ்சை யாகும்!

தனபாலன் வணிகனுக்குத் துணையாய்ச் சென்றும்
சிவசர்ம பாலகனின் பூசை தன்னை
மனமகிழ்ந்து தலைசாய்த்து ஏற்றுக் கொண்டும்
மரகதாம்பி கையோடு காட்சி நல்கும்
மனவாளா! என்றுடனி ருக்கும் மன்னா!
மார்கபந்தீ சனே!என்று அடியார் போற்றும்
கனகமணி அழகுடைய நாதன் மேவும்
கருணாக ரத்தலமே விரிஞ்சை யாகும்!

சிம்மக்கு ளமும்நீண்ட மதிலும் தூய
தீர்த்தமும்பல் வகைச்சிற்பங் களும்ப ரந்த
அம்மனுறை சந்நதியும் நெடிது நீண்ட
அய்யனுறை சந்நதியும் கொடியும் எங்கும்
பம்மிக்கி டக்கின்ற எழிலும் வையம்
பாராட்ட மண்ணாளும் அரச ரெல்லாம்
எம்பிரானைக் காணநிற்கும் வரிசை கொண்ட
ஏற்புடைய திருத்தலமே விரிஞ்சை யாகும்!

பழம்பெருமை கொண்டஇந்தத் திருத்த லத்தில்
பல்வகையில் திருப்பணிகள் தொடர அந்தப்
பழம்ஞான இரத்னகிரி முருகன் எண்ண
பாலமுரு கனடிமையாம் சுவாமி வந்தார்!
அழகழகாய் இறைசேவை செய்வ தில்தான்
அவருக்கு இணையாக யாரு முண்டோ?
குழவிமனம் கொண்டஅந்த அண்ணல் தாளைக்
கும்பிடாதோர் புவிமீதில் எவரு முண்டோ?

பாலமுரு கனடிமையாய் ஆன வர்தான்
பக்திமேவும் விரிஞ்சிபுரம் கண்டே நின்றார்!
ஆலகால விடமுண்டோன் ஆல யத்தின்
அற்றநிலை கண்டுகண்டு மனம்நெ கிழ்ந்தார்!
வேலவனை மனதிலெண்ணிப் பணிகள் தன்னை
வேண்டிவேண்டிச் செய்யலானார்! நாளும் நாளும்
கோலவெழில் கூடியது திருத்த லத்தில்!
கூட்டங்கள் பெருகியது ஆல யத்தில்!

வண்ணவண்ணப் பூச்சு!திருக் கோபு ரத்தில்!
வடிவுமிக்க கலைநுணுக்க சிற்பத் தூய்மை!
எண்ணமதில் வைத்திருந்த திட்டம் யாவும்
ஏற்றமிகு செயல்வடிவில் சுவாமி செய்தார்!
அண்ணலிவர் கைப்படவே கோயி லெல்லாம்
அற்புதங்கள் பெருகினவே! தெய்வ அம்சம்
மண்ணெல்லாம் பரவியது சுவாமி யால்தான்!
மார்கபந்து ஈசனுமே மகிழ்ந்து நின்றார்!

திருவிரிஞ்சை வழித்துணைநாதர் பதிகம்

நல்லாசிரியர் புலவர் ச. சுந்தரேசன்

கலிநிலைத்துறை

1. அடியா ருளமே அமரும் அரனார் அறவிடையார்
கடியார் மதில்சூழ் விரிஞ்சைப் பதியார் கண்ணுதலார்
செடியார் உடலார் சிறியேற் கருளும் சேவடியார்
துடியார் கரத்தார் துணையாய் வருமெண் தோளாரே.

2. ஆரூர் உடையார் அயனார் அரியார் அறிவரியார்
பேரூர் இல்லார் எங்கும் நிறைந்தார் பிச்சானார்
சீரூர் விரிஞ்சைத் திருநகர் வாழ்வார் சிவசருமன்
சாரூர் பணிக்குச் சாய்த்துத் திருமுடி வளைத்தாரே

3. வளையார் கரத்து மரகத வல்லி உடனானார்
தளையார் தனபால் வணிகன் தனக்கு வழித்துணையார்
உளையா வண்ணம் உயிர்கட் கருளும் ஒளியானார்
அளைபாப் பரையார் ஐந்தெழுத் தேநம் அரணாமே.

4. மேவார் புரங்கள் மூன்றும் எரித்தார் அயனாரும்
தேவா எனச்சீர் விரிஞ்சை வழிபட் டருள்பெற்றார்
ஓவா தமரரும் உலகோ ரும்கண் டுய்ந்திடவே
சேவார் பெருமான் வீற்றிருந் தாளும் திருநகரே.

5. கரபுர நகராம் கரனவன் வழிபட் டுய்ந்தமையால்
வரமுற விட்டுணு வழிபட விட்டுணு புரமாகும்
உரமுற கோபுரத் திருப்பணி பால முருகடியார்
சிரமுறக் கொள்வார் சீருறச் செய்வார் சிவனருளே.

6. அருளார் உருவார் அரவார் புனலார் அணிசடையார்
இருளார் கண்டர் எரிவிழி நுதலார் இராவணனைப்
பருவார் தோள்கள் நெறிபட முறித்தார் பரசிவனார்
தெருளார் வழித்துணை யாரருள் சேர்க்கும் தரிசனமே.

7. சனனம் மரணம் தவிர்க்கும் சிவசிவ மந்திரமே
மனமார் கரண மடங்கப் புலனும் மயலறவே
தினமும் உருகித் திருமுறை ஓதிடத் திருவடியின்
தனமாம் அமுதைத் தருவார் தொழுவோம் தரணியிலே.

8. தரணி வாழுயிர் அண்ட சராசரம் தன்வடிவார்
அரணமக் காவார் அருளொடு பாகத் தணியுருவார்
முரணிய அசுரரை முடித்திடும் எந்தை முழுமுதலார்
சரணம் அருள்வார் வழித்துணை நாதர் சங்கரரே

9. சங்கரர் சண்முகர் ஐங்கரர் யாவரும் தம்முருவார்
பொங்கர வோடு புனல்பிறை முடியார் புலியதளார்
சங்கம் அமர்ந்தார் தமிழிசை கேட்டுத் தாமகிழ்வார்
எங்கும் இருப்பார் இன்ப மளிப்பார் எமதிறையே.

10. ஏமம் அருள்வார் ஏத்தும் அடியார்இடர்களைவார்
காம னெரித்தார் காலனை உதைத்தார் கருதினர்க்குத்
தாம மளிப்பார் தமிழ்மறை கேட்டருள் தயவுடையார்
சேமம் அருளெம் வழித்துணை நாதர் திருவடியே.

சைவத் திருமுறைகளில் பதினோராம் திருமுறையில், 'சிவபெருமான் திருவந்தாதி' இடம் பெற்றுள்ளது. இதைக் கபிலதேவ நாயனார் என்பவர் இயற்றியுள்ளார்.

காரைக்கால் அம்மையார் அற்புதத்திருவந்தாதி பாடியுள்ளார்.

'ஈசன்' என்பதற்கு எப்பொருளையும் (எல்லாவற்றையும்) உடையவன் அல்லது ஆள்பவன் என்று பொருள். 'இறைவன்' என்பற்கு எப்பொருளிலும் (எல்லாவற்றிலும்) தங்குகின்றவன் என்று பொருள்.

நடராஜரின் கையிலுள்ள தீ ஞானத்தைக் குறிப்பிடுகிறது. அதை அவர் கையில் வைத்திருப்பதன் மூலம் பக்தர்கள் ஞானத்தினால் அவரைக் காண விரும்பினால், அவர் தரிசனம் அளிப்பார் என்பதை உணர்த்துகிறார்.

இறைவன் வழித்துணையாக வந்த சிறப்பு

மைசூர் குந்தளபுரியைச் சார்ந்த மிளகு வியாபாரி தனபாலன் என்ற வணிகன். ஒருநாள் மிளகு வியாபாரம் செய்யும் பொருட்டுக் காஞ்சி நகருக்கு மிளகுப் பொதிகளை எருதுகளில் ஏற்றிக்கொண்டு புறப்பட்டான். வரும் வழியில் விரிஞ்சையம் பதியில் தங்க நேரிட்டது. காஞ்சிக்குச் செல்லும் வழியில் வேடர்கள் வழிப்பறி செய்வதாக அறிந்த தனபாலன் காஞ்சிக்குச் செல்வதா? ஊர் திரும்புவதா? என்று சிந்திக்கலானான். ஊர் திரும்பினாலும் வந்த இடத்திலேயே மிளகை விற்றாலும் பொருள் நஷ்டமேற்படும் என்று உணர்ந்த தனபாலன் விரிஞ்சைப் பெருமான் முன்னே நின்று, 'பரமனே நீ எனக்கு வழித் துணையாய் வந்து காப்பாற்றினால் பத்துப்பொதி மிளகு காணிக்கை யளிக்கிறேன்' என வேண்டிக் கொண்டான். அன்றிரவு அங்கேயே தங்கினான். அவன் கனவில் தோன்றிய சிவபிரான் 'தனபாலா, நாளை உனக்கு நல்ல துணைவரும், அச்சமின்றிப் புறப்படு' என்று திருவாய் மலர்ந்தருளினார். சொல்லிய படியே சிவபிரான் வேடர்குலத் தலைவனாக வெள்ளைக் குதிரையின் மேல் அமர்ந்து வணிகனுக்கு வழித்துணையாகச் சென்றார்.

இறைவன் குதிரையில் முன்னே செல்ல, தனபாலன் மிளகுப் பொதிகளுடன் பின் தொடர்ந்தான். இவ்வாறாகப் பருத்திக் குன்றம் என்ற இடத்தை அடைந்தனர். அடியவர்களைச் சோதிப்பதே தன் திருவிளையாடலாகக் கொண்ட பெருமான் தனபாலனின் பக்தியைச் சோதிக்க எண்ணி வேறு திசைசென்று மறைந்தார். அங்கிருந்த வேடர்கள் தனபாலனைப் பிடித்துத் துன்புறுத்தி மிளகுப் பொதிகளைக் கவர்ந்து சென்றனர். தனபாலன் மனம் வருந்தி விரிஞ்சையம்பதியில் எழுந்தருளியுள்ள இறைவனை மனம் உருக வேண்டினான்.

கருணைக் கடலான இறைவன் மிளகுப் பொதிகளுடன் வேடர்களையும் கொண்டுவந்து நிறுத்தினார். வேடர்களின் நெற்றியில் திருநீற்றைக் கண்ட தனபாலன் அவர்களைச் சிவனடியார்களாகக் கருதி அவர்களுக்குத் தக்க பொருளைக் கொடுத்தனுப்பிப் பின்னர் தானும் காஞ்சி சென்று அடைந்தான். அவர்கள் காஞ்சியை அடைந்ததும் வேடர் தலைவன் போல் வந்த இறைவன் மறைந்துவிட்டார்.

மிளகுப் பொதிகள் நல்ல விலைக்கு விற்கவே பணம் ஒன்றே குறியாகக் கொண்டு அனைத்துப் பொதிகளையும் தனபாலன் விற்றுப் பணமாக்கினான். இறைவனுக்குக் காணிக்கையளிக்க எண்ணி இருந்த பத்துப்பொதி மிளகையும் சேர்த்து விற்றுவிட்டான். மறுநாள் விற்கப்பட்ட மிளகுப் பொதிகள் அனைத்தும் பயிறானதைக் கண்ட சிறுவணிகர்கள் தனபாலனை முற்றுகையிட்டனர்.

தனபாலன் தான் இறைவனுக்குக் காணிக்கையளிக்கத் தவறியதே இதற்குக் காரணம் என்று உணர்ந்து செய்த தவறுக்காக மேலும் ஒரு மிளகுப்பொதி சேர்த்து பதினொரு பொதி மிளகைக் காணிக்கையளிப்பதாகவும் பயிறுகளை

மீண்டும் மிளகாக்குமாறும் இறைவனை வேண்டினான். இறைவனின் திருவருளால் பயிறுகள் மீண்டும் மிளகுகளாக மாறின.

தனபாலனும் மற்ற வணிகர்களும் இறைவனின் அருளைப் போற்றிப் புகழ்ந்தனர். தனபாலன் விரிஞ்சையம் பதியை அடைந்து தான் சொன்னதுபோலப் பதினொரு மூட்டை மிளகுப் பொதிகளைக் காணிக்கையாக அளித்தான். மேலும், அத்திருக்கோயிலில் பல திருப்பணிகளைச் செய்தான். தனபாலன் பிரம்மதீர்த்தக் கரையையடுத்து ஒரு விநாயகர் கோவிலைக் கட்டினான் என்று திருத்தலப் புராணம் கூறுகிறது.

மேலும், தனபாலன் தன்னூர் சென்ற பின்பும் வழித்துணைநாதரை மறவாமல் வழிபட்டு இறைவனடி சேர்ந்தான். இந்த வரலாற்றைக் கூறும் சிற்பங்கள் கோயிலின் மதிற்சுவர்களில் காணப்படுகின்றன.

இந்நிகழ்ச்சியைப் புகழ்ந்து திரு. சைவ எல்லப்ப நாவலர் அவர்கள் திருவிரிஞ்சைப் புராணத்தில் வழித்துணைச் சருக்கத்தில் 47 பாடல்கள் பாடியுள்ளார்.

இந்நிகழ்ச்சி விரிஞ்சிபுரத்தில் இன்றளவிலும் ஆண்டுதோறும் பங்குனி மாதம் நிகழும் பிரம்மோற்சவத் திருவிழாவில் எட்டாம் நாளில் சிறப்பாகக் கொண்டாடப் படுகிறது.

இச்செய்தியை அடிப்படையாகக் கொண்டு 14–ஆம் நூற்றாண்டில் சம்புவ ராயர்கள் ஆட்சிக்காலத்தில் விரிஞ்சி புரத்திற்கு வடமேற்குத் திசையில் சுமார் 7 கி.மீ. தொலைவில் உள்ள ஓர் ஊருக்குக் கீழ்வழித்துணையான்குப்பம் என்று பெயரிட்டுள்ளனர். அது இப்போது காலப்போக்கில் K.V. குப்பம் என்று சுருக்கமாக அழைக்கப்படுகிறது.

சிவ விரதங்கள்

கந்த புராணத்திலுள்ள உபதேச காண்டம் சிவனுக்கு எட்டு விரதங்களைக் குறிப்பிடுகிறது. அவை வருமாறு :

1. சோமவார விரதம். இது ஒவ்வொரு வாரமும் வரும் திங்கட்கிழமை நாட்களில் அனுஷ்டிக்கப்படுகிறது.
2. உமாமகேஸ்வர விரதம். இது கார்த்திகை மாதத்தில் பௌர்ணமியில் வருகிறது.
3. திருவாதிரை விரதம் என்பது மார்கழியில் வரும்.
4. மாசியில் வரும் மகா சிவராத்திரி விரதம்.
5. இறைவன் இறைவியைத் திருமணம் செய்துகொண்ட நாள் பங்குனி உத்தரம். இது கல்யாண விரதம் எனப்படும்.
6. பாசுபத விரதம் என்பது தைப்பூசமாகும்.
7. அஷ்டமி விரதம். இது வைகாசி பூர்வபட்ச அஷ்டமியில் வரும்.
8. கேதார மாவிரதம் என்பது தீபாவளி நாள் ஆகும்.

கார்த்திகைக் கடை ஞாயிறு திருவிழா ஒரு விளக்கம்

விரிஞ்சிபுரத்தில் ஆதிவைச மரபினரான சிவநாதன் என்னும் சிவாச்சாரியாருக்கும் 'நயனாநந்தினி' என்ற உத்தமிக்கும் சிவசர்மன் என்னும் பாலகன் பிறந்து வளரலானான். அவன் சிறுவனாக இருக்கும்போதே அவனது தந்தையார் சிவநாதன் இறைவனடி சேர்ந்தார். சிறுவனான சிவசர்மனுக்கு உபநயனம், சிவதீட்சை செய்து பூஜை செய்ய உதவுமாறு நயனாநந்தினி தன் தாயாதிகளைக் கேட்டுக்கொண்டார். கருணையற்ற தாயாதிகள் அவனுக்குரிய பாகத்தையும் தாங்களே கைக்கொள்ள எண்ணினர். எனவே, நயனாநந்தினியின் வேண்டுகோளை மறுத்ததுடன், 'நீவிர் செய்ய வேண்டிய பூஜை முதலிய அனைத்தையும் நாங்களே செய்து வருவதினால் உமக்குரிய பூஜை உரிமைகளும், சொத்துகளும் எமக்கே உரியன. எனவே, அவையனைத்தையும் ஆவணம் எழுதி எங்களிடம் ஒப்படைக்க வேண்டும்' என்று அச்சுறுத்தினர்.

இதனால் கலக்கம் அடைந்த நயனாநந்தினி சிவபிரானை நினைந்து மனமுருக வேண்டிக் கொண்டாள். 'பெருமானே, உம்மைத் தவிர எனக்கும் என் மகனுக்கும் வேறு கதியில்லை எங்களைக் கத்தருள்வாய் ஈசா!' என்று கண்ணீர் சிந்தினாள். அன்று இரவு கருணைக் கடலாகிய இறைவன் நயனாநந்தினியின் கனவில் தோன்றி 'நாளை உன் மகனுடன் பிரம்மதீர்த்தத்தில் அதிகாலை நீராடி காத்திரு, அதன்பின் யாம் நன்னெறி காட்டுவோம்' என்றார்.

இறைவனின் ஆணைப்படி நயனாநந்தினி தன் மகன் சிவசர்மனை அதிகாலையிலேயே பிரம்மதீர்த்தத்தில் நீராட்டி வைக்கக் குளக்கரைக்கு அழைத்துச் சென்றார். அப்போது தாயாதிகள் அனைவரும் ஒன்றுகூடி தீட்சை பெறாத பாலகன் சிவபூஜை செய்வது முறைகேடானது என உரைத்து கோயில் கதவைப் பூட்டி சாவியைத் தங்கள் வசம் வைத்துக் கொண்டனர். அப்போது பரம்பொருளான சிவபெருமான் வயது முதிர்ந்த ஒரு ஆசாரியராகக் குளக்கரைக்கு வந்து சிவசர்மனுடன் குளத்தில் இறங்கி மூழ்கி ஒரு முகூர்த்தக் காலத்தில் பாலகனான சிவசர்மனுக்கு உபநயனம், பிரம்மோபதேசம், சிவதீட்சை ஆகிய அனைத்தையும் முறைப்படி செய்து வைத்து கரையேறி சிவலிங்கமாக உருமாறி நின்றார். (இதனையே பிரம்மதீர்த்தக் கரையில் சிவபெருமான் பிரம்மபுரீஸ்வரராகக் காட்சி தருவதை இன்றும் காணலாம்). இதனைக் கண்ட மக்கள் பக்திசிரத்தையுடன் 'அரகர மகாதேவா' என்று முழங்கினர். தேவர்கள் பூமாரி பொழிந்தனர்.

சிவபெருமான், கார்த்திகை மாதம் ஒரு சனிக்கிழமை இரவில் தத்தம் கனவில் தோன்றி கட்டளையிட்டபடி குறுநில மன்னர்கள் அங்கு கூடி சிவசர்மனுக்கு முழுமரியாதையும் செய்து பல்லக்கில் அமர்த்தித் திருமஞ்சனக் குடத்துடன்

ஊர்வலமாக அழைத்து வந்து கோயிலின் முன் நிறுத்த, பூட்டப்பட்ட கோவில் கதவுகள் தானாகவே திறந்துகொண்டன. இவற்றை யெல்லாம் கண்ட தாயாதிகள் திகைப்புற்று நிற்க, பாலகன் நன்கு பழகியவன்போல ஆகம முறைப்படி பஞ்ச சுத்திகளையும் முடித்து கையில் திருமஞ்சனக்குடத்துடன் பரம்பொருளுக்கு அபிஷேகம் செய்விக்க முயலுகையில் இறைவனின் திருமுடி எட்டாததைக் கண்டு 'ஐயனே, எனக்குத் திருமுடி எட்டவில்லையே' என்று வேண்டி கண்ணீர் சிந்தினான். சிவபெருமான் பாலகன் மனம் மகிழும்படி தம் திருமுடியினை பாலகனுக்கு எட்டக்கூடிய அளவிற்குச் சாய்த்து நின்றார். அந்தத் திருக்கோலத்திலேயே இன்றும் முடி சாய்த்த மகாதேவராக இறைவன் காட்சி தருகிறார்.

இந்நிகழ்ச்சியைத் சித்திரிக்கும் வண்ணம் இன்றளவிலும் விரிஞ்சிபுரத்தில் ஆண்டுதோறும் கார்த்திகைக் கடை ஞாயிறு அன்று சிறப்பான முறையில் விழா எடுக்கப்படுகிறது. இந்நிகழ்ச்சியைப் புகழ்ந்து திரு சைவ எல்லப்ப நாவலர் அவர்கள் விரிஞ்சைப் புராணத்தில் பாலகனுக்குத் திருமுடி வளைத்த சருக்கத்தில் 41 பாடல்கள் பாடியுள்ளார்.

இந்நிகழ்ச்சியைக் குறிக்கும் ஐதீகச் சிற்பங்கள் நாட்டியக்கலை மண்டபத்தில் வலதுபுற அடிப்பாகத்தில் உள்ளன. அவற்றைத் திருக்கோயிலின் புகைப்பட பகுதியில் காணலாம்.

நாயன்மார்கள் பதிகம், பாடல்

பாடல் என்பது ஒரு பாட்டைக் குறிக்கும். பதிகம் என்பது இறைவன் மீது பாடப்பெற்ற பத்துப் பாடல்களைக் குறிக்கும். நாயன்மார்களின் தேவாரத்தில் பதிகம் என்று பல உள்ளன.

பாடல் பெற்ற ஸ்தலம் என்பது, அந்த ஊர் இறைவனைப் பற்றி அருளாளர்கள் பல பாடல்கள் பாடியிருக்கிறார்கள் என்ற கருத்தில் வரும்.

❖❖❖

மூன்று வயதில் திருஞானசம்பந்தர், 'தோடுடைய செவியன்' என்ற பதிகம் பாடினார் என்று கூறுகிறார்கள்.

பொதுவாகக் குழந்தைகள் மூனறு வயதில்தான பேசவே செய்யும். ஆனால் திருஞானசம்பந்தரின் விஷயமோ வேறு. அவர் அசாதாரணமான குழந்தை; கருவிலேயே திரு வாய்த்த குழந்தை.

❖❖❖

மாணிக்கவாசகர் எந்த நூற்றாண்டில் வாழ்ந்தவர் ?

இதைப்பற்றி இரண்டு விதமான கருத்துக்கள் நிலவுகின்றன. முதலாவது கருத்து, கி.பி. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து ஐந்தாம் நூற்றாண்டுக்கு இடையிலுள்ள ஏதோ ஒரு காலக் கட்டத்தில் இவர் வாழ்ந்திருக்க வேண்டும் என்பது. இரண்டாவது கருத்து கி.பி. எட்டாம் நூற்றாண்டில் இவர் வாழ்ந்தார் என்பது. இவற்றில் இரண்டாவது கருத்தே ஏற்புடையது போல் தோன்றுகிறது.

திருக்கோயிலின் திருவிழா நாட்கள்

சித்திரை மாதம்

- சித்திரா பௌர்ணமி வசந்த விழா

வைகாசி மாதம்

- விசாகத் திருவிழா உற்சவம்

ஆனி மாதம்

- உத்திர நட்சத்திரம் ஸ்ரீ நடராஜர் ஆனித் திருமஞ்சன அபிஷேகம்

ஆடி மாதம்

- ஆடிப்பூர விழா பத்து நாட்கள் (தேரோட்டத்துடன்)

ஆவணி மாதம்

- ஸ்ரீ விநாயக சதுர்த்தி
- ஸ்ரீ கோகுலாஷ்டமி கிருஷ்ண ஜெயந்தி

புரட்டாசி மாதம்

- நவராத்திரி கொலு
- விஜயதசமி
- பார்வேட்டை

ஐப்பசி மாதம்

- பௌர்ணமி அன்னாபிஷேகம்

கார்த்திகை மாதம்

- கார்த்திகை கடைசி வெள்ளியன்று 108 சங்கு அபிஷேகம்
- சனிக்கிழமை ரிஷப மூர்த்தி ஈசன் கனவிடை தந்த காட்சி, மாலை தெப்பல் உற்சவம் 1-ம் நாள்
- ஞாயிறு காலை 6.30 மணிக்கு பிரம்ம குளத்தில் தீர்த்தவாரி
- காலை 7 மணிக்குமேல் பாலக பிரம்மாவான சிவசர்மனுக்கு உபநயன சிவதீட்சையும், 9 மணிக்குமேல் திருமாட வீதி உலாவும், 12 மணிக்குமேல் அபிஷேகம்
- மாலை அபிஷேகம் மகா தீபாராதனைகள், இரவு பஞ்ச மூர்த்திகள் இடபமூர்த்தி மகாமேரு உற்சவம்
- திங்கள் காலை 8 மணிக்கு அபிஷேகம், 10 மணிக்கு திருமாட வீதி ருத்ராட்ச விமான உற்சவம்
- காலை 11 மணிக்குமேல் உச்சிகால அபிஷேகம், மாலை 3 மணிக்கு அபிஷேகம்
- இரவு பஞ்சமூர்த்திகள் ரிஷபவாகன உற்சவம்.

மார்கழி மாதம்

- திருவாதிரை நட்சத்திரம்
- மாணிக்கவாசகர் உற்சவம்

தை மாதம்

- புனர்வசு நாள் தென்கயிலாயகிரி பிரதட்சணம் பரிவேட்டை

பங்குனி மாதம்

- கிருத்திகையிலிருந்து பத்து நாட்கள் பிரம்மோற்சவம் விவரம்

1. பகல் – துவஜா ரோஹணம்
   இரவு – ரிஷப வாகனம்
2. பகல் – பல்லக்கு
   இரவு – காமதேனு அதிகார நந்தி வாகனம்
3. பகல் – பல்லக்கு
   இரவு – திருக்கல்யாணம் ரிஷப வாகனம்

4. பகல் – பல்லக்கு

இரவு – திருக்கல்யாணம் ரிஷப வாகனம்

5. பகல் – பல்லக்கு

இரவு – திருக்கல்யாணம் அன்ன வாகனம்

6. பகல் – பல்லக்கு

இரவு – யானை வாகனம்

7. பகல் – இரதோற்சவம்

8. பகல் – பல்லக்கு குதிரை வாகனம்

இரவு – மாலை பிச்சாடனர்

9. பகல் – பல்லக்கு நால்வர் உற்சவம்

இரவு – ரிஷப வாகனம்

10. பகல் – காலை சபாநாயகர் தரிசனம், இராவணேஸ்வர தரிசனம், அவரோஹணம், பகல் அபிஷேகம்

திருக்கோயில் தரிசன நேரங்கள்

காலை 6.00 மணி முதல் பகல் 12.00 மணி வரை

மாலை 4.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை

கார்த்திகைக் கடை ஞாயிறு திருவிழா தரிசன நேரம்

கார்த்திக் கடை சனிக்கிழமை

காலை 6.00 மணி முதல் பகல் 12.30 மணி வரை

மாலை 3.00 மணி முதல் மறுநாள் ஞாயிறு இரவு 10.00 மணி வரை

மகா சிவராத்திரி அன்று தரிசன நேரம்

காலை 6.00 மணி முதல் 12.30 மணி வரை

மாலை 3.00 மணி முதல் மறுநாள் பகல் 12.00 மணி வரை

மாலை 4.00 மணி முதல் இரவு 7.40 மணி வரை

குறிப்பு : மேலும் இவ்வூரில் அருள்தரும் தர்மசம்வர்த்தினி உடனாய அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில் அமைந்துள்ளது.

பேருந்து வசதி

வேலூர் நகரிலிருந்து (சென்னை – பெங்களூர் தேசிய நெடுஞ்சாலை) மேற்கே 12 கி.மீ. தொலைவிலும் வேலூர் மாவட்டம் திருப்பத்தூர் நகருக்கு கிழக்கே 70 கி.மீ. தொலைவிலும் செதுவாலை என்னும் கிராமத்திற்கு வடக்கே 1 கி.மீ. தொலைவிலும் இத்திருத்தலம் அமைந்துள்ளது.

இரயில்வண்டி வசதி

காட்பாடி சந்திப்பு – விரிஞ்சிபுரம் வழி பொய்கை 17 கி.மீ. ஜோலார்பேட்டை சந்திப்பு – விரிஞ்சிபுரம் வழி பள்ளிக்கொண்டா 65 கி.மீ.

விரிஞ்சிபுரம்-வழித்துணை (நாயனார்) கோயில் கல்வெட்டுகள்

மா. கலைவாணன், உதவி இயக்குநர், தொல்லியல்துறை, ஆர்க்காடு.

'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்பது நம் சான்றோர் வாக்கு. நம் முன்னோர்கள் ஏன் அப்படிச் சொன்னார்கள் தெரியுமா? பண்டைக் காலத்தில் நம் திருக்கோயில்கள் இறைவழிபாட்டுக்காக மட்டுமே பயன்படுத்தப்படவில்லை மாறாக அரசின் அனைத்துப் பணிகளுமே அக்காலத்தில் கோயில்களை மையமாக வைத்தே நடைபெற்றன. ஊர்ச்சபையும், மகாசபையும் கோயிலில்தான் கூடி ஊரில் அனைத்து நடைமுறைகளையும் வகுக்கும். ஊரின் நீதி மன்ற நடைமுறைகள் இங்குதான் செயல்படுத்தப்படும். பண்டாரம் என்ற பெயரில் ஊரின் செல்வங்கள் கோயிலில்தான் சேர்த்து வைக்கப்பட்டது. ஆதுலர் சாலை என்ற முறையில் நோயுற்ற மனிதர்களுக்கும், கால்நடைகளுக்கும் கூட கோயிலில்தான் மருத்துவம் செய்யப்பட்டது. ஊர்ச்சபைக்கான தேர்தல்கள், வாரியப் பெருமக்களுக்கான தேர்தல்கள் முதலிய அனைத்தும் கோயிலில் நடைபெற்றதால் தான் கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என நம் முன்னோர்கள் சொல்லி வைத்தனர்.

சுமார் இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழர்கள் தாங்கள் செய்த நற்செயல்களையும் திருப்பணிகளையும் கோயில்களிலும், கற்பாறைகளிலும் அவை அழிந்து விடாமல் பாதுகாக்க கல்வெட்டுகளாக வெட்டி வைத்தனர். இக் கல்வெட்டுகளே நம் முன்னோரின் வரலாற்றையும் சமுதாய நெறிமுறைகளையும் நாம் அறிந்து கொள்ள நமக்கு இன்றளவும் துணை நிற்கின்றன. விரிஞ்சிபுரம் வழித்துணை நாயனார் கோயிலிலும் இவ்வாறான கல்வெட்டுகள் சோழப் பெருமன்னர்களாலும், சம்புவராயர்களாலும், விசய நகர மன்னர்களாலும் வெட்டப்பட்டுள்ளன.

சோழர்காலக் கல்வெட்டுகளில் விரிஞ்சிபுரத்தில் உறையும் இறைவன் 'சோமீசுவர மகாதேவர்' என்றும், சம்புவராயர்களின் கல்வெட்டுகளில் 'வழித்துணை நாயனார்' என்ற அழகிய தமிழ்ப் பெயராலும், விசய நகர மன்னர்கள் காலத்தில் 'மார்க்கசகாய ஈசுவரர்' என்றும் 'மார்க்கபந்து ஈசுவரர்' என்றும் அழைக்கப் படுகின்றார். இம்மூன்று அரசினைச் சேர்ந்த அரசர்களாலும் இக்கோயிலுக்கு மானியங் களும் நிவந்தங்களும், நிலக்கொடையும் வழங்கப்பட்டுள்ளன. இதை இக்கோயிலில் உள்ள கல்வெட்டுகள் நமக்கு விளக்குகின்றன. இக்கோயில் அப்பர், திருமூலர், அருணகிரி நாதர், பட்டினத்தடிகள், எல்லப்ப நாவலர், அப்பைய தீட்சதர் ஆகியோரால் பாடப்பெற்ற பெருமையுடைய தலமாகும்.

எல்லாவற்றிற்கும் மேலாக கி.பி. 1425-ஆம் ஆண்டு விசயநகர மன்னரான தேவராயர் காலத்தில் இக்கோயிலில் வெட்டப்பட்டுள்ள ஒரு கல்வெட்டு மிகவும் சிறப்பு வாய்ந்த

கல்வெட்டாகும். வரதட்சணை வழங்குவதும் பெறுவதும் சமுதாயக் கேடான ஒன்று என்பதையும், அதனைச் செய்பவர்கள் அரச தண்டனைக்கு ஆளாக்கப்படுவதுடன் இனத்தில் இருந்தும் விலக்கி வைக்கப்படுவர் என்றும் கண்டிப்புடன் கூறுகின்றது. சுமார் 600 ஆண்டுகளுக்கு முன்பே வரதட்சணை என்பது எவ்வளவு பெரிய சமுதாயக் கொடுமை என்பதை சிந்தித்து வெட்டப்பட்ட கல்வெட்டாகும். இக்கல்வெட்டு, இக்கல் வெட்டை வெட்டுவதையும், அதில் கூறப்பட்டுள்ள கருத்துகளையும் 27.2.1426 அன்று படைவீட்டு இராஜ்ஜியத்தைச் சேர்ந்த பெருமக்கள் விரிஞ்சிபுரம் கோயிலில் கூடி முடிவெடுத்துச் செயல்படுத்தினர். அக்காலத்தில் திருமணத்தின் போது பெண்வீட்டார், பிள்ளை வீட்டாரிடமிருந்து பொன்னையும், பணத்தையும் வரதட்சணையாகப் பெற்றுக் கொண்டு திருமணம் செய்து கொடுக்கும் வழக்கம் இருந்தது. இதனால் பிள்ளை வீட்டார் மிகுந்த அல்லல்பட்டனர். இதனை நீக்குமாறு மன்னன் தேவராயரிடம் பிள்ளை வீட்டார்கள் முறையிட இச்சமுதாயக் கொடுமையை நீக்குமாறு மன்னன் பிறப்பித்த ஆணையைக் கல்வெட்டாக வெட்டப் பட்டுள்ளது. இவ் ஆணையை, மக்கள் ஏற்றுக் கொண்டதற்குச் சான்றாக இக்கல்வெட்டின் இறுதியில் ஊர்ப் பெரியவர்கள் பெயர் இருப்பது குறிப்பிடத் தக்கது. பெண்களை அனைவரும் கன்னிகா தானம் செய்வதாக ஏற்றுக் கொண்டனர். அக்கல்வெட்டின் வாசகம் பின்வருமாறு.

1. சுபமஸ்து
2. ஸ்வஸ்திஸ்ரீ மண்மகா இராதிராஜ பரமேஸ்வரரான ஸ்ரீவீரப் பராய தேவராயமகராஜா வீர
3. பிராஜ்ஜியம் பண்ண அருளாநின்ற சகாப்தம் 1347–ன் மேல் செல்லா நின்ற விசுவாசு
4. வருஷம் பங்குனி மாதம் 3–ந் தேதி சஷ்டியும், புயன் (புதன்) கிழமையும் பெற்ற அத்தத்து நாள் படைவீடு ராஜபத்து
5. கஸ்ஷவித மகாஜனங்களும்.......
6. தம்ம சாஸ்வதம் பண்ணி குடுத்தப்படி இற்றைநாள் முதலாக இந்தப்
7. படைவீட்டு ராஜ்யத்து பிராமணரில் கன்னடிகர் தமிழிர் தெகெங்கர், இலாளர் முதலா
8. காஸ்யப கோத்தரத்து, காஸ்ய கோத்திரதத்தில் விவாசம் பண்
9. ணுமிடத்து கன்னிகா தானமாக விவாகம் பண்ணக் கடவராகவும் கன்னிகாதானம் பண்ணாமல்
10. பொன் வாங்கிப் பெண் கொடுத்தால் பொன் கொடுத்து விவாகம் பண்ணினால் இராஜ தண்டத்துக்கு உட்பட்டு
11. பிராமணத்துக்கும் புறம்பாகக் கடவாரென்று பண்ணின தம்ம சாசனப் பிரகாரம் இப்படிக்கு அறிவோம்
12. மஹாசனங்கள் எழுத்து

(கல்வெட்டு எளிமையாகப் புரியும்

வண்ணம் கிரந்த எழுத்துகள் தமிழில் கொடுக்கப்பட்டுள்ளது)

இவ்வாறு பொன் கொண்டு பெண் எடுத்தலும், பெண் கொடுத்தலும் இராஜ்ஜியத் தண்டனைக்கு உட்பட்டது என இக்கல்வெட்டு வரதட்சணையின் கொடுமையை விளக்குகின்றது. இச்சிறப்பு வாய்ந்த இக்கல்வெட்டு இக்கோயிலில் சிதைக்கப்பட்டுவிட்டது தான் வருத்தத்திற் குரிய ஒன்றாகும்.

இதனைத் தவிர இக்கோயிலில் நந்தி விக்கிரம வல்லவன், பராந்தகச் சோழன், இராசேந்திரச் சோழன், அதிராசேந்திரச் சோழன், அழகியச் சோழ சம்புவராயன், இராச கம்பீரச் சம்புவராயன், வீர சம்பன் சம்புவராயன், ஏகாம்பரநாத குலசேகர சம்புவராயன், முதலாம் இராச நாராயணச் சம்புவராயன், மூன்றாம் இராசநாராயணச் சம்புவராயன், அச்சுதராயர், கிருஷ்ண தேவராயர், இம்மிடி நரசிம்மராயர், வேங்கடபதி மகாராயர் ஆகியோரின் கல்வெட்டுகள் இக்கோயிலில் காணப்படுகின்றன. இரண்டாம் நந்திவர்மன் (கி.பி. 731–796) கல்வெட்டு இக்கோயிலில் காணப்படுவதால் இக்கோயில் பல்லவர்கள் காலத்தில் கட்டப்பட்டிருக்கலாம் என அறிய முடிகின்றது.

மூன்றாம் இராசராச சோழன் காலத்தில் (கி.பி. 1225) அழகிய சோழ சம்புவராயர் இக்கோயிலின் விமானம், கோபுரம் முதலியவற்றைத் திருப்பணி செய்ததைக் கல்வெட்டு குறிப்பிடுகின்றது. இராச கம்பீர சம்புவராயரின் கல்வெட்டு இவருடைய மனைவி ஆராயும் பெருமாள் என்பவர் வழித்துணை நாயனார்க்கு நந்தா விளக்கு ஒன்று அளித்ததைக் குறிப்பிடுகின்றது.

இவ்வாறு விரிஞ்சிபுரம் வழித்துணை நாயனார் கோயிலில் பல்லவர் காலம் முதல் நாயக்கர்கள் காலம் வரை தொடர்ச்சியான கல்வெட்டுகள் காணப்படுவதுடன் அக்கால சமுதாய நிலைகளையும் அம்மன்னர்களின் திருப்பணிகளையும் நமக்கு விளக்கும் காலக் கண்ணாடியாகக் கல்வெட்டுகள் விளங்குகின்றன.

திரிசூலம் உணர்த்தும் தத்துவம் என்ன?

ஒவ்வொரு தெய்வ உருவத்திலும் கைகளில் ஆயுதங்கள் இருக்கும். இந்த ஆயுதங்கள் இறைவன் அல்லது இறைவியின் எல்லையற்ற தெய்விகமான பேராற்றல்களை உணர்த்துகின்றன. அந்த ஆயுதங்கள் பக்தர்களைக் காப்பாற்றும் பொருட்டுச் செயல் புரியும். விக்கிரக சாஸ்திர விதியின்படி கைகளில் ஆயுதங்களுடன் தெய்வ உருவங்கள் அமைக்கப் பெறுகின்றன.

இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி ஆகியவற்றை உணர்த்தும் புற அடையாளமாகத் திரிசூலம் விளங்குகிறது.

கையில் ஆயுதம் உள்ள இறைவன் அல்லது இறைவியின் வடிவம் காக்கும் கடவுள் என்பதை உணர்த்துகிறது. கையில் ஆயுதம் இல்லாத மதுரை மீனாட்சி போன்ற தெய்வ வடிவங்கள் அனுக்கிரகச் சக்தி என்பதைக் குறிக்கும்.

வாழ்வுக்கு ஒரு வழித் துணை

தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான், இ.ஆ.ப., ஆட்சியர், முன்னாள் வடார்க்காடு மாவட்டம்.

சில வருஷங்களுக்கு முன் நான் கும்பகோணத்துக்கு வடமேற்கே பதினான்கு மைல் தொலைவில் உள்ள திருப்பனந் தாளுக்குச் சென்றிருந்தேன். என்னுடன் இலக்கிய நண்பர் ஒருவரும் வந்திருந்தார். அவருக்குக் கோயில், குளம், மூர்த்தி தலம் என்பதில் எல்லாம் நம்பிக்கை இல்லை. என்றாலும் என்னுடன் வந்தால் தமிழ் நாட்டின் கலை அழகைக் காணக்கூடும் என்ற நம்பிக்கை. இருவரும் அங்குள்ள தாடகேச்சுரம் என்ற கோயிலுக்குச் சென்றோம். அங்குள்ள சடையப்பர் சந்நிதிக்கே வந்தோம். சந்நிதியில் வணங்கி எழுந்ததும் 'இத்தலத்தைப் பற்றி இரண்டு கதை இருக்கிறது தெரியுமா?' என்றேன். 'என்ன? சொல்லுங்கள்' என்றார்.

"தாடகை என்று ஒரு பெண் (இராமாயணத்தில் வரும் தாடகை அல்ல) நல்ல சிவநேசச் செல்வி. அவள் இந்தத் தலத்தில் இறைவழிபாட்டுக்கு உரிய புஷ்பக் கைங்கர்யம் செய்து வருகிறாள். ஒரு நாள் கட்டிய மாலையோடு இறைவனை அணுகும்போது மேலாக்கு நழுவியிருக் கிறது. அதைச் சரிசெய்ய மாலையையே கீழே வைக்க வேண்டியிருக்கும். இந்த நிலையில் தவித்துக் கொண்டிருக்கிறாள் அவள். அப்போது இறைவனே அவளது இக்கட்டான நிலையை உணர்ந்து தம் தலையையே சாய்த்து மாலையை ஏற்றிருக்கிறார். அன்று சாய்த்தவர் தலையை நிமிர்க்கவில்லை. இதனால் ஏதாவது உத்பாதம் விளையுமோ என எண்ணி, அந்த நாட்டு அரசன் சாய்ந்த தலையை நிமிர்த்தும் பணியில் ஈடுபட்டிருக்கிறான். யானை, சேனை யெல்லாம் கொண்டு கயிறு கட்டி இழுத்துப் பார்த்திருக்கிறான். இறைவன் அசைய வில்லை. தாடகை என்ற பெண் மகளின் அன்புக்காகத் தலை சாய்த்த தலைவன் மற்றொரு ஆண்மகனின் அன்புக்காகக் காத்திருக்கிறான். அப்போது திருக் கடவூரிலே, கலையர் என்று ஓர் அன்பர். குங்கிலிய தூபம் போட்டுவந்த காரணமாகக் குங்கிலியக் கலையர் என்ற பெயரோடு வாழ்கிறார். அவர் ஒரு நாள் திருப்பனந்தாளுக்கு வருகிறார். தலை வளைத்து நிற்கும் இறைவனைக் காணுகிறார். பின்னர் கயிறு ஒன்றைத் தன் கழுத்தில் கட்டி, அதை இறைவனது லிங்கத் திருவுருவில் மாட்டி இழுக்கிறார். யானைக்கும் சேனைக்கும் அசைந்து கொடாத இறைவன் கலையரது அன்புக்குக் கட்டுப்பட்டு நிமிர்ந்து விடுகிறான். மாலை சாத்தும் தாடகையின் மானங்காப்பான் தாழ்ந்த சடையப்பன் கயிறு இட்டு இழுக்கும் கலையன் அன்பில் நிமிர்ந்திருக்கிறான்" என்றேன்.

அவர் இலேசாகச் சிரித்துவிட்டு, 'என்ன சார்! கதை அளக்கிறீர்கள். பிரதிஷ்டை செய்த போதிருந்த திருக்கோலத்தோடு ஆடாது அசையாது இருக்கும் இந்த லிங்கத் திருவுரு சாய்ந்ததற்கு ஒரு கதை, நிமிர்ந்ததற்கு ஒரு கதை. எல்லாம் உங்கள் கற்பனையோ?' என்றார். கற்பனையாகவே

இருந்தாலும் அது என்னுடைய கற்பனை அல்ல; நம் முன்னோர்கள் கற்பித்த கற்பனையே. 'கற்பனையே யானாலும், மக்கள் அன்புக்கு இறைவன் எவ்வளவு கட்டுப்பட்டவன் என்பதை விளக்க எழுந்த கதை என்று விரித்துரைக்கவாவது நாம் தெரிந்து கொள்ளலாம் அல்லவா?' என்றேன். பின்னும் சொன்னேன்; 'உம்மைப் போன்றவர்கள், குனிந்ததையும் நிமிர்ந்ததையும் திருப்பனந்தாள் மூர்த்தியைக் கண்டு நம்ப மாட்டார்கள் என்று தெரிந்தே, இன்னொரு தலத்தில் குனிந்தவர் தலையை நிமிர்த்தாமலேயே இன்னும் நின்று கொண்டிருக்கிறாரே!' என்று விளக்கினேன். அப்படித் தலை சாய்ந்த தலைவராம் மார்க்கசகாயர் இருக்கும் தலம் தான் விரிஞ்சிபுரம். வட ஆற்காடு மாவட்டத்திலே வேலூருக்கு மேற்கே எட்டு மைல் தொலைவில் உள்ள ஊர். அந்த தலத்துக்கே இன்று செல்கிறோம் நாம்.

இங்கு இறைவன் முடிசாய்ந்ததற்கு ஒரு அழகான கதை. பிரம்மாவுக்கும் விஷ்ணுவுக்கும் ஒரு போட்டி. தங்களில் யார் பெரியவர் என்று. இவர்கள்தம் சிறுமையை உணர்த்த விரும்பிய சிவபெருமான் பொங்கழல் உருவனாக அண்ணா மலையில் நிற்கிறான். இந்த அண்ணா மலையான் திருவுருவின் அடியையோ முடியையோ யார் முதலில் கண்டறிந்து வந்து சொல்கிறார்களோ அவர்களே பெரியவர் என்று தீர்மானிக்கலாம் என்று திட்டமிட்டுக் கொள்கிறார்கள். வராக உருவில் அதள பாதாளங்களை யெல்லாம் குடைந்து சென்று இறைவனது அடியைக் காணாமலேயே திரும்பி விடுகிறார் விஷ்ணு. அன்ன உருவில் வானுலகில் பறந்து சென்று முடி காணச் சென்ற பிரமனுக்கும் அதே நிலைதான். என்றாலும் பிரமன் தன் தோல்வியை ஒப்புக்கொள்ளாமல், தான் இறைவன் முடியைக் கண்டு விட்டதாகவும் அதற்கு இறைவன் முடியில் உள்ள தாழம்பூவே சான்று என்றும் கூறுகிறார். பொய் சொல்லிய பிரமனைப் பூவுலகில் மனிதனாகப் பிறக்கும்படி சபிக்கிறார் இறைவன். அந்த விரிஞ்சனே இந்த விரிஞ்சிபுரத்தில் சம்பு சருமர் என்ற கோயில் அர்ச்சகருக்கும் நயனநந்தினி என்பவருக்கும் மகனாய்ப் பிறக்கிறான். சிவசருமன் என்ற பெயரோடு வளர்கிறான். சிவ சருமனுக்கு ஐந்து வயது நிறையுமுன்னே சம்புசருமன் இறைவன் திருவடி சேர்கிறான். கோயில் பூஜை செய்யும் உரிமையைக் கைப்பற்ற தாயாதிகள் விரைகின்றனர், சிவசருமன் சிறுவன் என்ற காரணத்தால். ஆனால் இறைவன் அளப்பரிய கருணை உடையவன் ஆயிற்றே. வழித்துணை நாதனான அவன் வழி காட்டாமல் கை விடுவானா?

கார்த்திகை மாதம் கடைசிச் சனிக்கிழமை இரவு சிவசருமன் தாயின் கனவில் தோன்றி மறுநாள் 'காலையில், சிவசருமனைக் கோயிலுக்கு அனுப்பி வைக்கச் சொல்கிறான் இறைவன். கட்டளை இட்டபடியே சிவசருமன் கோயிலுக்குச் செல்கிறான். விருத்த வேதிய வடிவில் சிவபெருமானே வந்து சிவசருமனுக்கு உபநயனம் எல்லாம் செய்து வைக்கிறான். பின்னர் கோயிலுள் நுழைந்து பூஜா

கைங்கர்யங்களையெல்லாம் தவறுகள் செய்யாமலேயே நிறைவேற்றுகிறான். கடைசியில் இறைவனுக்கு அபிஷேகம் *செய்ய மங்கள கவசத்தையே தன் கைகளில் எடுக்கிறான். நீண்டு உயர்ந்திருந்த லிங்கத் திருவுருவின் முடி பாலகனான சிவசருமனுக்கு எட்டவில்லை. என்ன சோதனை? அன்றுதான் உன் திருமுடியைக் காணவில்லை. இன்றும் எனக்கு எட்டவில்லையே என்று கதறுகிறான் பழைய விரிஞ்சனான புதிய சிவசருமன்.* அவ்வளவில் அன்பினால் கட்டுண்ட இறைவன் அவன் தனக்கு அபிஷேகம் செய்யத் தன் தலையையே வளைத்துக் கொடுக்கிறான். அவனது அபிஷேகம் ஏற்ற பின்னும் தலையை நிமிர்த்தாமலேயே நின்று விடுகிறான். ஏன்? இன்றுமே அப்படித்தான் நின்று கொண்டிருக்கிறான்.

இந்த அற்புத நிகழ்ச்சியை நினைத்துத்தான், இன்றும் கார்த்திகைக் கடைசி ஞாயிறு உற்சவம் இக்கோயிலில் சிறப்பாக நடக்கிறது. பல அற்புதங்களும் நிகழ்கின்றன. இந்த வட்டாரத்தில் உள்ளவர்கள், முக்கியமாகப் பிள்ளைப்பேறு கிட்டாதவர்களும், பில்லி சூன்யம், தீக்காற்று முதலியவைகளால் துயர் உறுகிறவர்களும் பிரார்த்தனை செய்து கொள்கிறார்கள். அப்படிப் பிரார்த்தித்துக் கொள்கிற பெண்கள் ஒவ்வொரு கார்த்திகை மாதமும் கடைசிச் சனிக்கிழமை இரவு இக்கோயிலுக்கு வந்து சிம்மக் குளத்தில் முழுகி எழுந்து, நனைந்த உடையோடேயே அங்குள்ள மண்டபங்களில் குப்புறப் படுத்துக் கொள்கிறார்கள். தூங்கியும் போய் விடுகிறார்கள். அப்போது விருத்த வேதியராக ஒருவர் வந்து புஷ்பம், பழம், பாலடை எல்லாம் கொடுப்பதாகக் கனவு கண்டால், அடுத்த ஆண்டுக் குள்ளேயே எண்ணிய எண்ணியாங்கு எய்துகின்றார்கள். தூக்கம் வராமலோ, கனவு காணாமலோ இருப்பவர்களுக்கு இறைவன் அருள் இல்லை என்று தெளிகிறார்கள். அதற்காக அடுத்த வருஷமும் வருகிறார்கள். நோன்பு இருக்கிறார்கள். சிம்மக் குளத்தில் முழுகுகிறார்கள். விழுந்து வணங்கி அருள் பெறுகிறார்கள்.

சென்ற வருஷம் கார்த்திகைக் கடை ஞாயிறு அன்று நான் கோயிலுக்குச் சென்றிருந்தேன். அன்று இப்படிப் பிரார்த்தனை செய்த பெண்கள் இரண்டாயிரம் பேருக்குக் குறைவில்லை என்று கண்டேன். என்ன? எண்ணிப் பார்த்தீரோ? என்று கேளாதீர்கள். சிம்மக் குளத்தில் முழுகி எழுவதற்கு உரிய சீட்டு நபர் ஒன்றுக்கு எட்டணா கட்டணம் கட்டித்தான் பெறவேண்டும். இந்தச் சீட்டு விற்பனை உரிமையைக் குத்தகைக்கு விட்டிருக் கிறார்கள். அந்த வருஷத்துக் குத்தகைப் பணம் கடந்துதான் உள்பிரகாரம் செல்லவேணும். அதையும் கடந்துதான் அர்த்தமண்டபம், கர்ப்பக் கிருஹம் எல்லாம். கோயில் பிரகாரத்திலே இரண்டு பிரசித்தி பெற்ற மண்டபங்கள், தென் பகுதியில் கல்யாண மண்டபம், வட பக்கத்தில் வசந்த மண்டபம். இரண்டு மண்டபங்களிலும் உள்ள தூண்களில் எண்ணிறந்த சிற்ப வடிவங்கள், தசாவதாரக் காட்சிகள். சிவபெருமானது பல மூர்த்தங்கள். பஞ்சமுக

விநாயகர் முதலிய எண்ணற்ற வடிவங்களைக் கண்டு மகிழலாம். இந்த மண்டபங்களிலே, வேலூர் ஜலகண்டேசுவரர் கோயில் கல்யாண மண்டபம் கட்டிய சின்ன பொம்ம நாயக்கன் – பெரிய பொம்ம நாயக்கன் என்பவர்களே இம் மண்டபங்களையும் கட்டியிருக்க வேண்டும்.

இக்கோயிலுக்கும் பக்தி சிரத்தை உள்ளவர்கள் கடை ஞாயிறு காலையிலேயே சென்று வந்தித்து வணங்கலாம். இல்லை, கூட்டம் என்றாலே எனக்குப் பிடிக்காது என்று சொல்லுபவர்கள் என்றைக்காவது வசதியான ஒருநாளில் சென்று காணலாம். கோயில், கோபுரம், சிம்மக்குளம், தலை தாழ்த்திய மார்க்கசகாயர் மரகத சிலை வடிவில் இருக்கும் மரகதவல்லி உண்மையாகவே அழகு கொஞ்சும் பச்சைப் பசுங்கொடி. ஞாயிறு காலை கோயிலுக்குச் சென்று,

முளைத்தவரை முளை இடத்தில்
முழுத்தவரை, மகிழ்ந்தவரை
முருகன் வேலால் துளைத்தவரை, எனது
பழவினையை அலைத்தவரை,
சுடர்க் குன்றாகக் கிளைத்தவரை,
வளைத்தவரை ஒரு சிறுவன் கிளையோடு
கிளரச் சென்னி வளைத்தவரை,
வணிகனுக்கு வழித் துணையாய்
நடந்தவரை வழுத்துவோமே.

என்று பாடி மகிழலாம்.

திருநாவுக்கரசர் தேவாரம்

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.

நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நா நவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே.

பூக்கைக் கொண்டரன் பொன்னடி போற்றிலார்
நாக்கைக் கொண்டரன் நாமம் நவில்கிலார்
ஆக்கைக்கே இரைதேடி அலமந்து
காக்கைக்கே இரையாகிக் கழிவரே.

எழுது பாவை நல்லார் திறம் விட்டுநான்
தொழுது போற்றி நின்றேனையும சூழ்ந்துகொண்டு
உழுத சால்வழியே உழுவான் பொருட்டு
இழுதை நெஞ்சம் இதுஎன்படு கின்றதே.

குறிகளும் அடையாளமும் கோயிலும்
நெறிகளும் அவர் நின்றதோர் நேர்மையும்
அறிய ஆயிரம் ஆரணம் ஓதிலும்
பொறியிலீர் மனம் என் கொல் புகாததே.

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்ந்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேன் நெடுங்காலமே.

நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும் பொன்னார்சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவு நீருங்கண்டு
நக்கு நிற்பர் அவர்தம்மை நாணியே.

விறகில் தீயினன் பாலிற் படு நெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல் நட்டுணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடைய முன்நிற்குமே.

சிவ வழிபாடு

புலவர்மணி **வீர. இராமலிங்கம்** (இளங்கோ)

முழுமுதற்கடவுள்

அகரத்தை முதலாக உடையன எழுத்துகள். அனைத்துயிர்களும், உலகங்களும் இறைவனை முதலாக உடையன. காரணம் இல்லையேல் காரியம் நிகழ்வதில்லை. அகிலமனைத்தும் உண்டா வதற்குக் காரணமாகிய படைப்பாற்றல் ஒன்று இருப்பது உறுதிப்படுகின்றது. அத்தகு ஆற்றல் குறைவிலா நிறைவாக விளங்குதல் வேண்டும். அல்லது முதன்மையாக, முழுமையாக, செம்மையாக இருத்தல் வேண்டும். செம்மையுடையவன் சிவன். செம்மையென்னும் பெயர் வண்ணம், வடிவு, செயல் ஆகிய மூன்றையும் ஒருங்கே உணர்த்தும் பொதுப்பொருளாகும். எனவே சிவனை முழு முதற் கடவுள் என நம் முன்னோர் அழைத்தனர்.

இருவினையகலச் சிவனை வணங்குவோம்

'எல்லாம் வல்லவன்; எங்கும் நிறைந்தவன்; என்றும் உள்ளவனாகிய இறைவனுக்குப் பல்பிணி, சின்னாள், சிற்றறிவுடைய நாம் செய்யும் வழிபாடும் வேண்டுமோ? அவன்தான், வேண்டுதல் வேண்டாமை யிலாதவனாயிற்றே!' என்பார்க்குக் கூறுவோம். எல்லாமாய், இல்லதுமாய் இருந்ததனை இருந்தபடி இருந்து காட்டிச் சொல்லாமற் சொன்னவரை நினையாமல் நினைந்துபவத் தொடக்கை வெல்வாம் என்பார் பரஞ்சோதியார். அவனடி சேர்ந்தார்க்கு யாண்டும் இடும்பை இல என்பார் வள்ளுவர். சிவனை வழிபட்டால் இரு வினைகளும் மாய்கின்றன. 'இருள்சேர் இருவினையும் சேரா; இறைவன் பொருள்சேர் புகழ் புரிந்தார் மாட்டு' என்பது தமிழ்மறை. *பொருள்சேர் புகழ் புரிதலே வழிபாடாகும்.*

வெண்ணிற ஆடையில் தன்னியல் பாகவே அழுக்குப் படிகின்றது. ஆடை தூய்மை பெற, அதனை உவர் மண்ணீரில் நனைக்கின்றோம். அப்பொழுது முன்னிருந்த அழுக்குடன் மண்ணின் அழுக்கும் சேர்கின்றது. இருவகை அழுக்கையும் போக்க நீராவியில் வேகவைக்கின்றோம். பின்னர், தண்ணீரில் நனைத்துக் கல்லில் தோய்க்கின்றோம். இப்பொழுது ஆடை தன்னியல்பாம் தூய்மை பெறுகிறது. இவ்வண்ணம் உயிர்களை ஆணவமலம், மாயாமலம் ஆகிய இருவகை மாசுகள் பிணிக்கின்றன. பிணிப்புற்ற உயிர்கள், விடுபட வழிபாடு ஒன்றே சிறந்த மருந்தாகும்.

யாவர்க்கும் வழிபாடு வேண்டப்படுவது

சிவ வழிபாடு மன்னுயிர்களுக்கு மட்டும் உரியதன்று. மண்ணவரும் விண்ணவரும் சிவ வழிபாட்டால் கடைத் தேறியுள்ளனர். முழுமுதற் கடவுளாம் சிவபெருமானை அம்பிகை வழிபட்ட இடம் திருவானைக்கா. பிள்ளையார் வழிபட்ட இடம் திருச்செங்காட்டங்குடி. வேலன் முருகவேள் வழிபட்டது திருச்சேய்ஞலூர். பிரமன் வழிபட்ட தலம் சீர்காழி. திருமால் இராமனாக வழிபட்ட இடம் இராமேச்சுரம்.

வழிபாடு இயற்றுவோர் யாவராயினும் யாதானும் ஒரு பொருளால் இறைவனை வழிபடுதல் மரபாகும். சாக்கியர் கல்லாலும், நாவரசர், சம்பந்தர், சுந்தரர் தமிழிசைப் பாட்டாலும், பாணபத்திரர் இசையாலும், மணிவாசகர் அருள் வாசகத்தாலும், குசேலர் அவலாலும், குகன் மீனாலும், கண்ணப்பர் ஊனாலும், வந்தி பிட்டாலும், சபரி கனியாலும், கசேந்திரன் மலராலும் வழிபட்டு உய்யப்பெற்ற காட்சியைச் சமய உலகம் நன்கறியும்.

உலகில் உயிர்கள் உடம்பொடு பொருந்துகின்றபொழுது படைப்பாற்றல் முகிழ்க்கின்றது. வாழ்வுக்குத் தேவையான உடம்பையும், உடம்பை வளர்ப்பதற்குத் துணையாக உலகையும், உலகத்திற்குத் தேவையான பொருள்களையும், பொருள் களை உணர்வுவழித் துய்ப்பதற்கான இன்பங்களையும் (தனு, கரண, புவன, போகம்) இறைவன் படைத்துள்ளான்.

இவ்வாறு படைக்கப்பெற்ற உயிர்கள், துய்ப்பதற்குரிய உலகினையும், உலகியற் பொருள்களையும் நிலைநிறுத்தல், காத்தல் எனப்படும். உயிர்கள் தமக்கென வரையறுக்கப்பெற்ற காலவெல்லை கடந்தவுடன், விசைமுடுக்கப்பெற்ற கடிகாரம் கால எல்லை முடிந்த பின்னர் அடங்கிவிடுதல் போல, அவைகளையும், அவை துய்க்கும் போகப் பொருள்களையும் இறைவன் தமக்குள் ஒடுக்குதல் *அழித்தலாகும்.*

ஆன்மாக்களை இருவினைப் பயனாகிய மாயையில் ஆழ்த்துதல் *மறைத்தல்* எனப்படும். அவ்வினைப் பயன்களாகிய பாசங்களினின்றும் பசுக்களாகிய உயிர்களை விடுவித்தல் *அருளுதல்* எனப்படும். இதனை ஆக்குவாய், காப்பாய், அழிப்பாய், அருள் தருவாய், போக்குவாய் என்று மணிவாசகரின் சிவபுராணம் பேசுகின்றது. இவ்வைந்தொழில்கள் இறைவனது அலகிலா விளையாட்டென்பர் கம்பர்.

வழிபாட்டுமுறை : இனி சிவபெருமானை வழிபடும் முறைகளை ஈண்டுக் காண்போம். *இயமம், நியமம், சந்தியா வந்தனம், சிவலிங்கபூசை, துதித்தல், திருப்பணிபுரிதல், திருக்கோயில் செல்லுதல், குருமொழி போற்றல்* ஆகிய எண் வகையாகச் சைவ நூல்கள் வழிபாட்டை வகுத்துள்ளன.

மக்கள் நாடோறும் வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகவேண்டிய அறநெறிகள் *இயமம், நியமம்* எனப்படும். வள்ளுவர் தம் குறளின் அறத்துப்பாலில் பெரிதும் வலியுறுத்தியுள்ள *அன்புடைமை முதல் தவம் ஈறாக இடம்பெறும் பண்புகள் யாவும் இறைவழிபாட்டை மேற்கொள்வோர் கடைப்பிடிக்கத்தக்க இயம, நியமங்களாகும்.*

மாலைப்பொழுதில் நீராடித் தூய உடம்பினராக இறையுணர்வுடன் செய்ய வேண்டிய கடமைகள் *சந்தியாவந்தனம்* எனப்படும். *பூசை* என்பது பாவிப்பார் நெஞ்சப்பான்மைக் கேற்ப வழிபடும் முறையாகும். பண்ணேன் உனக்கான பூசையொருவடிவிலே பாவித் திறைஞ்ச ஆங்கே, பார்க்கின்ற மலரூடு நீயே யிருத்தி, அப்பனிமலர் எடுக்க நண்ணேன், நான் கும்பிடும்போது அரைக்கும்பிடாகையால் யான் பூசை செய்தல் முறையோ? என்பார்

தாயுமானவர். மனத்தால் பூசனை செய்தவர் பூசலார்.

இல்லத்தில் பூசனை புரிவர் சிலர். கோயிலில் பூசைகள் செய்வர் பலர். நீரால், மலரால், நறும்புகையால், இன்னடிசிலால் பூசனை செய்தல் முறையாகும்.

திருக்கோயிலில் திருவலகிடல், திருமெழுக்கிடல், திருவிளக்கிடல், மாலை தொடுத்தல், உழவாரப்பணிபுரிதல் ஆகியன திருப்பணிகளாகும். தேவாரம், திருவாசகம், திருமந்திரம், திருப்புகழ், திருவருட்பா முதலானவற்றை நாவாரப்பாடிப் பரவுதல் *துதித்தல்* எனப்படும். சிவனடியார் ஒருவரை ஞானாசிரியராக மனத்தில் இருத்தி அவர் அருளிய நெறியில் நிற்றலும், தொண்டு புரிதலும் *குருமொழிபோற்றல்* என்பர்.

இல்லம் ஒரு கோயில் : உள்ளம் பெருங்கோயிலாகக் கொள்ளுதல் எல்லார்க்கும் இயலாததொன்றாகும். 'காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக, வாய்மையே தூய்மையாக, மனம் அணி இலிங்கமாக, நேயமே நெய்யும் பாலா – நிறையநீர் அமைய ஆட்டிப் பூசனை ஈசனார்க்குப் போற்ற அவிக் காட்டினோமே' என்ற அப்பரின் முறைகள் நம்மால் இந்நாளில் இயலுமோ? எனவே நாம் வாழும் இல்லத்தில் ஓர் அறையைத் தேர்ந்தெடுத்தல் நல்லது. அவ்வழிபாட்டு அறை, வீதியை அடுத்திராமலும், பிறமக்களின் பேச்சொலி கேளாமலும் இருத்தல் நன்று.

அறையின் கண் அளவான பீடம் அமைத்து ஆங்குச் சிவபெருமான், உமாதேவி, முருகவேள், பிள்ளையார், நாராயணன், திருமகள் முதலான தெய்வத் திருவுருவங்களை ஏற்றவிடத்தில் வைத்தல் வேண்டும். திருவிளக்கு, திருநீற்றுமடல், நீர்க்குவளை, மணைப்பலகை, தூப, தீபங்கட்கு வேண்டிய கலன்கள் ஆங்கு வேண்டப்படுவனவாம்.

சிவாய நம எனக் கூறி வைகறைத் துயிலெழுந்து, நீராடி, வில்வம், மருக்கொழுந்து, மல்லிகை, முல்லை, மந்தாரம், செவ்வந்தி, தாமரை ஆகிய மலர்களைக் கொண்டு வருதல் வேண்டும். ஈர ஆடையுடன் அல்லது ஒற்றையுடையுடன் வழிபாட்டில் ஈடுபட லாகாது. *நமசிவாய* என்னும் திருவைந் தெழுத்தைச் சிந்தையில் நிறைத்துத் திருநீற்றை நீரில் குழைத்து, வடக்கு, கிழக்கு முகமாக அமர்ந்த வண்ணம், *தலை, நெற்றி, மார்பு, கொப்பூழ், புயங்கள், முழங்கைகள், முன்கைகள், முழந்தாள்கள், விலாப்புறங்கள், முதுகு, கழுத்து ஆகிய பதினாறு இடங்களில் முக்குறியாகவும், வளையாமலும், இடையறாமலும், ஒன்றையொன்று தீண்டாமலும், மிக அகலாமலும் தரித்தல் வேண்டும்.* எவ்வகையானும் திருநீறு நிலத்தில் சிந்தவோ, கையிலிருக்கும் திருநீற்றை வாயால் ஊதவோ கூடாது என்பன நினைவுக்குரியன. பின்னர் நெற்றியில் சந்தனமிட்டு அதன்மேல் பராசக்தியின் அடையாளமாகக் குங்குமத் திலகம் இடல் வேண்டும்.

இறைவன் திருமுன் அமர்ந்து திருவிளக்கேற்றிப் பூமாலை சூட்டி, யாதானும் பழமோ, இனிய பண்டமோ, படைத்து, மணம்

நாறும் புகையும், கற்பூர ஒளியும் காட்டித் துதித்து வணங்குதல் முறையாகும்.

நிலைபெறுமா றெண்ணுதியேல், நெஞ்சே! நீவா
நித்தமும்எம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்தும் ஆடிச்
சங்கரா! சயபோற்றி! போற்றி!! யென்றும்
அலைபுனல் சேர் செஞ்சடையெம் ஆதியென்றும்
ஆரூரா! என்றென்று அலறா நில்லே!

எனும் அப்பர்பெருமான் அருள்வாக்கு நமக்கு வழிகாட்டுகின்றது.

'ஆலயந்தொழுதல் சாலவும் நன்று' இறையுணர்வும், சிந்தனையும், மனிதன் மனத்தகத்தே அரும்பிடினும், அவை மலர்தல் வேண்டுமன்றோ? அதற்காகவே நம் முன்னோர் வானளாவிய ஆலயங்களை எழுப்பினர். உயரமும், எழிலும், பெருமையும் பொருந்திய விண்ணுயர் கோபுரங்கள் காண்பவன் கண்ணையும் கருத்தையும் ஈர்க்கின்றன. அவன் தன்னைமறந்து, தன் போக்கை மறந்து, நோக்கைக் கோபுரத்தின் உயர்ச்சியில் செலுத்துகின்றான். செலுத்துங்கால் அவனருளாலே அவன் தாள் வணங்கும் தகுதிபெறுகின்றான். இங்ஙனம் உள்ளம் ஒன்றிய பேரின்பத்தில் உயிர்களைத் திளைக்கச் செய்வதால் அவை ஆலயங்கள் என்று பெயர்பெற்றன.

கோயில்தத்துவம் : நீக்கமற நிறைந்துள்ள இறைவனது அருள்பெருக்கு ஆலயங்களில் வெளிப்படுகின்றது. கோபுர வாயிலைக் கடந்து செல்லும்பொழுது திருச்சுற்று, கொடிமரம், பலிபீடம், விடையேறு (நந்தி), முன்மண்டபம், மணிமண்டபம், கருவறை எனப் பலப்பல இடங்களை அமைத்துள்ளனர். இவை ஒவ்வொன்றிற்கும் தனித்தனித் தத்துவங்களைச் சாத்திரங்கள் கூறுகின்றன. எடுத்துக் காட்டாகக் கோபுரங்களின் உயர்ச்சியும், திருச்சுற்றின் அகலமும், கருவறையின் ஒடுக்கமும் காண்போர், 'உய்யஎன் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற-மெய்யா! விமலா! விடைப்பாகா! வேதங்கள் – ஐயா! என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே!' என்னும் திருவாசகத்தின் தத்துவங்களை உணர்தல் வேண்டும். விண்ணெட்டும் கோபுரத்தின் முன்னின்று நோக்குவார்க்கு, தாம் எத்துணை தாழ்ந்துள்ளோம் என்ற உணர்வு எழாமல் இராதன்றோ! அகன்ற திருச்சுற்று, அகிலாண்டகோடியெல்லாம் இறைவனது திருவடி நிழலில் தங்கும் நிலையினையும், கருவறை உலகம், உயிர்கள் யாவும் முடிவில் இறைவன் திருவடியில் ஒடுங்கிவிடும் நிலையினையும் காட்டுகின்றன.

வாழ்த்தவாய்

கோயிலுக்கு வழிபடுதற்கு வருவோர் நீராடி, தூய ஆடையணிந்து, கையுறையாகப் பூவும், நீரும், பொருளும் கொண்டுவருதல் வேண்டும். திருச்சுற்றை வலம் வருதல், கொடிமரம், பலிபீடம், விடையேறு ஆகியவற்றை முறையே வணங்குதல். பின்னர் சிவலிங்கம் இடம்கொண்ட கருவறையை அணுகுதலும் வேண்டும். *அம்பலத்தில் ஆடும் பெருமானை நெடுஞ்சாண் கிடையாக விழுந்து வணங்குதல் வேண்டும்.*

கையுறையாகக் கொண்டுவந்த மலர்கள் முதலானவற்றை அர்ச்சகரிடம் அளித்தல் வேண்டும். வாழ்த்த வாயும், நினைக்க மடநெஞ்சும், தாழ்த்தத்தலையும் தந்தருளிய இறைவனை நாம் மனத்தினால் நினைந்து வாயினாற்பாடிக் கைகளால் கும்பிட்டு வணங்கி நிற்றல் வேண்டும்.

சிவவழிபாட்டிற்குப் பின்னர், அம்பாள் சந்நிதியை வலம் வருதலும் கருவறைத் திருச்சுற்றில் தென்திசைக் கடவுளாம் தட்சிணாமூர்த்தி, பின்புறத்தில் லிங்கோத்பவர், மேல், கீழ்ப்புறங்களில் பிள்ளையார், முருகவேள், வடபுறச் சுற்றில் துர்க்கை, சண்டீசர் ஆகியவர்களை முறைப்படி வணங்கி, ஒன்பது கோள்களையும் வலம் வந்து அவற்றோடு தொடர்புடைய பிற தெய்வக் கருவறைகளையும் கண்டு வணங்குதல் முறையாகும். பின்னர் கொடிமரத்தின் முன்னின்று கருவறையின்கண் வீற்றிருக்கும் பெருமானை, மீண்டும் பலிபீடம், விடையேறு ஆகியவற்றின் வாயிலாகக் கண்டு ஆறங்கமாகவோ, எண்வகை அங்கமாகவோ *நிலந்தோய விழுந்து வணங்கி* எழுந்து மண்டபத்தில் சிறுபொழுது அமர்ந்து சிவனை நினைந்து, எழுந்து புறப்படுதல் வழிபாட்டு முறையாகும் என்பர் சான்றோர்.

சிவானுபூதி : ஆயினும் இன்றைய மக்கள் நிலை என்ன? பிறந்துணர்வு தொடங்கிய நாள் முதல் பிறைக்கண்ணிப் பெருந்தகைபால் நினைவும் வழிபாடும் இன்றிப் புன் புலால் யாக்கைக்கே இரைதேடி அலைகின்றனர். இறுதியாகக் காக்கைக்கே இரையாகிக் கழிகின்றனர் என நாவரசர் பாடுகின்றார். ஓயாதோ என்கவலை? உள்ளே ஆனந்த வெள்ளம் பாயாதோ? என அடியாரொருவர் ஏங்குகின்றார். இறைவனது பேரின்ப நிலையெனும் சிவானுபூதி எய்தச் சிந்தைத் தெளிவும், பொறி புலன்களின் ஒருமைப்பாடும் இன்றியமையாதன.

திருநாவுக்கரசு சுவாமிகள் அருளியவை

பட்டி ஏறுஉகந்து ஏறிப் பலஇ(ல்)லம்
இட்ட மாக இரந்துண் டுழிதரும்
அட்ட மூர்த்தி அண்ணாமலை கைதொழக்
கெட்டுப்போம்வினை கேடில்லை காண்மினே.

கண்டந்தான் கறுத்தான் காலன் ஆருயிர்
பண்டு கால்கொடு பாய்ந்த பரமனார்
அண்டத் தோங்குஅண் ணாமலை கைதொழ
விண்டு போகுநம் மேலை வினைகளே.

தேடிச் சென்று திருந்தடி யேத்துமின்
நாடி வந்தவர் நம்மையு மாட்கொள்வர்
ஆடிப் பாடிஅண்ணாமலை கைதொழ
ஓடிப் போநம துள்ள வினைகளே.

முந்திச் சென்றுமுப் போதும் வணங்குமின்
அந்தி வாயொளி யான்றன் அண்ணாமலை
சிந்தி யாமு வார்வினை தீர்த்திடும்
கந்த மாமலர் சூடுங் கருத்தனே.

கட்டி யொக்குங் கரும்பி னிடைத்துணி
வெட்டி வீணைகள் பாடும் விகிர்தனர்
அட்ட மூர்த்திஅண்ணாமலை மேவிய
நட்ட மாடியைநண்ணநன் காகுமே.

மறையி னானொடு மாலவன் காண்கிலா
நிறையும் நீர்மையுள் நின்றருள் செய்தவன்
உறையும் மாண்பின் அண்ணாமலை கைதொழப்
பறையும் நாஞ்செய்த பாவங்க ளானவே.

சிவலிங்கம்

ஸ்தபதி **இரா. செல்வநாதன்,** ஸ்ரீ வைத்யநாத ஸ்தபதி அசோசியேட்ஸ், சென்னை.

உருவுடன் அருவுமாகி அருவுருவாகித் தோன்றி
சொல்லினால் சொல்லிக் காணா சூக்குமம் காட்டி
அருளுருக் கொண்ட கோலம் அம்மையும் அப்பனுமாகி
சிவ பரம்பொருளே போற்றி! போற்றி!
– (மயன்)

திருக்கோயில் எனப்படுவது கடவுள் திருமேனிகளை வரிசையாக வைத்து அழகு பார்த்திடும் கூடமன்று. மாறாக மனிதனுக்கு வேண்டிய மன அமைதியும் ஆன்ம சுகத்தையும் வாரி வழங்கப்பயன்படும் புனிதம் நிறைந்த அருள் நிலையமாகும்.

மனிதனின் மனம் ஒரு நிலையில் ஒன்றிடச் செய்வதற்கு இறைவனின் உருவத்தைப் பல்வேறு வகையில் வடிவமைத்துள்ளனர். நம்முடைய முன்னோர்கள், பெரும்பாலும் இவை புராணத்தையும் அவதார புருசர்களையும் ஒட்டியே அமைக்கப்படுகின்றன. இதன் தொடர்ச்சியாக திருக்கோயில்களில், மடாலயங்களில், வீடுகளில் கடவுளை வைத்து வணங்கும் பொருட்டு கடவுள் திருமேனிகள் மனங்கவர் கலையம்சத்துடன் நிறுவப்படுகின்றன.

இந்நிலையில் திருக்கோயில் கருவறையின் உள்ளே வீற்றிருக்கும் மூலத் திருமேனியானது உருவமாகவோ (சகளம்), அருவமாகவோ (நிட்களம்) அல்லது அருவுருவமாகவோ (சகளநிட்களம்), உருவ–அருவுருவமாகவோ (மிச்ரம்) அமைந்து காணப்படுகின்றது.

இதனையே, அகத்தியரின் சகளாதிகாரத்தில், ‘சகள நிட்கள மிச்ர விபாபத்தா த்திரிவிதமேவ பரமேஷ்த்தினா வாப்பூ....’ என்று குறிப்பிடுகின்றது.

சந்திரசேகரர், நடராஜர், பார்வதி, நாராயணர், முருகர் போன்ற மனிதனுக்குரிய அவயவங்களோடு அமைக்கப்படும் கடவுள் திருமேனிகள் சகளம் என்று குறிப்பிடப்பெறும்.

கண்களுக்குப் புலப்படாத வண்ணமும் உணர்வால் அறியப்படும் வகையில் அமைகின்ற **இறைப் பொருளே** அருவ வடிவிற்கு எடுத்துக் காட்டாகும்.

இலிங்கத் திருமேனி என்று உருவமும் அருவமும் அல்லாத ஒரு வடிவத்தைக் குறிப்பிடுவதே அருவுருவமாகும்.

உருவ–அருவுருவம் என்பது முகத்துடன் கூடிய சிவலிங்கத் திரு மேனியின் வடிவத்தையே குறிப்பிடுகின்றது. இதனை **முகலிங்கம்** என்று குறிப்பிடுவர்.

சிவனுடைய அடையாளத்தைக் குறிப்பிடுகின்ற இலிங்கமும் ஆவுடையாரும் கருத்தாழமிக்க மறைப்பொருளை உள்ளடக்கியதாகும். இது பாமர மனிதனை விட ஆன்மிகப் பெருமக்கள், சிறப்பாச்சாரியார்கள், சிவாச்சாரியர்கள், ஆய்வறிஞர்கள் போன்றோர் மட்டுமே எளிதில் புரிந்துக் கொள்ளக்கூடியதாகிறது.

சிவன் திருத்தலங்களில் மூல மூர்த்தியாகக் கருவறையில் வீற்றிருக்கும் சிவலிங்கத் திருமேனியைப் போற்றி வணங்குவோருக்கு அப் படிமமானது சிவசக்தியின் ஐக்கியத்தைப் பிரதிபலிக்கின்ற மூர்த்தமாக மட்டுமே தெரிகின்றது. அதற்கும் மேலாக இவ்வடிவமைப்பில் பல தத்துவச் செய்திகள் அடங்கியிருப்பது பற்றி அறிய முடிவதில்லை.

அருவுருவத் திருமேனியனான சிவபரம்பொருளை முழுமை பெற்றவனாக ஆகம சிற்ப சாத்திர நூல்கள் குறிப்பிடு கின்றன. சுருங்கச் சொல்லிடின் ஒரு கோயிலானது நிறைவு பெறுகின்றதெனில் அங்கே சகளநிட்களமாகிய அருவுருவத் திருமேனி வடிவில் சிவலிங்கம் இருந்தாக வேண்டும் என்பதே மரபின் முடிபாகும்.

உலகில் காணப்படும் அனைத்து உருவங்களும் அருவுருவமாகிய சிவலிங்கத்திலிருந்து தோன்றுவன என்று லிங்க புராணம் சுட்டிக்காட்டுவது இங்கே குறிப்பிடத்தக்கதாகும்.

இத்தகைய சிறப்பம்சங்களை உள்ளடக்கிய இலிங்கமானது பல வகையினதாகும். திருக்கோயில்களில் காணப்படுகின்ற சிவலிங்கத் திருமேனிகள் யாவும் ஒன்று போல் காணப்படுவதில்லை. அவை கருங்கல், உலோகம், போன்றவற்றினால் அமைக்கப்பட்டு சிறியதும் பெரியதுமான, குட்டையும் நெட்டையுமான, சிறுத்ததும், பருத்ததுமான வடிவங்களில் காணப்படுகின்றன.

சிவலிங்கத் திருமேனியின் வடிவ மைப்பு பற்றிச் சிற்பநூல்களில் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. சிவலிங்கத்தின் பாணமானது மூன்று பாகமாக ஒரே கல்லில் வடிவமைக்கப்படுகின்றது. அதாவது சதுரம், எண்கோணம் மற்றும் வட்டம் ஆகிய மூன்றின் கூட்டுவடிவமைப்பினால் ஆனதுதான் லிங்க பாணமாகும். சதுர வடிவம் தமோ நிலையான பிரம்மனையும், நடுவில் உள்ள எண்கோண வடிவம் ராஜச நிலையான விட்டுணுவையும் அதன் மேல் வரக்கூடிய வட்ட வடிவம் சாத்வீக நிலையான சிவனையுமே குறிப்பிடுகின்றது.

மேலும் இலிங்கமானது ஆவுடை என்ற சக்தியின் அம்சமாகப் போற்றப்படும் அழகிய பீடத்தினுள் முறையாக வைக்கப்பட்டு வழிபாட்டிற்காகக் கருவறையின் மையத்தில் நிறுவப்படுகின்றது. அவ்வாறு கருவறையில் ஆராதிக்கப்படும் சிவலிங்கத்தைக் கண்ணுறும்போது ஆவுடையின் மீது மூன்றில் ஒரு பாகம் அதாவது ருத்திர பாகத்தை மட்டுமே நம்மால் பார்க்க முடிகிறது. இதை பூஜாம்சம் என்றும் குறிப்பிடுவதுண்டு.

திருக்கோயில் வழிபாட்டிற்குக் கல்லினாலான சிவலிங்கத் திருமேனிகளே உகந்தவையென மரபு நூலோர்கள் குறிப்பிட்டுள்ளனர். பல வகையைச் சார்ந்த அந்த லிங்கத் திருமேனிகளானவை சுயம்பு, தைவதம், காணபம், ஆருசம், ராசஸம், மானுசம் மற்றும் பாணம் என்பனவாம்.

சுயம்பு லிங்கமானது அடர்ந்த காடுகளிலும் நதிகளிலும் தானாகவே வெளிப்பட்டதாகும். சுயம்புவாகக் காணப் படும் லிங்கத் திருமேனியானது பலவித

அமைப்புகளில் தென்படும். சிதலமடைந்தும் மேடுபள்ளத்துடன் பொந்து சூலம் போன்ற வடிவமைப்பில் காணப்படும் சுயம்புவாகத் தோன்றியதால் இந்த லிங்கம் எப்படியிருந்தாலும் வழிபாடு செய்யலாம் என்று சாத்திரங்கள் குறிப்பிடுகின்றன.

தைவத லிங்கம் அல்லது தெய்வீக லிங்கம் என அழைக்கப்பெறும் லிங்கமானது தீப வடிவத்தை யொட்டியும் மேடு பள்ளங்களோடு பொந்துகள் உள்ளதாகவும் காணப்படும். இதனைத் தேவர்கள் நிர்மாணித்ததாகவும் குறிப்பிடுவர்.

காணப லிங்கமானது மாதுளை, பலா, வெள்ளரி போன்ற வடிவத்தைக் கொண்டதாகும். மேலும் இந்த லிங்கத்தைத் தேவகணங்களினால் பிரதிட்டை செய்யப்பட்டதாகவும் கருதப்படுகின்றது.

தேங்காயின் வடிவத்தையொட்டிய அமைப்பில் காணப்படுவதும் முந்தைய காலத்தில் தவமுனிவர்களால் வழிபாடு செய்யப்பட்டதாகவும் ஆரச லிங்கம் குறிப்பிடப்படுகின்றது.

சிற்பியர் பெருமக்களினால் ஆகம சிற்ப இலக்கணத்தைப் பின்பற்றி உளி சுத்தியல் கொண்டு வடிவமைக்கப்பட்டதே மானுச லிங்கமெனப்படும். இது சம லிங்கம், சகஸ்ர லிங்கம், தாரா லிங்கம், முக லிங்கம் என 12 வகைகளைக் கொண்டதாகும். அந்தந்தக் கோயில் கருவறைக்கு ஏற்றவாறு இந்த லிங்கங்கள் நிர்மாணிக்கப்படும்.

பாண லிங்கமானது புனிதமான நீர்ப்பிரவாகத்திலிருந்து தானாகவே உண்டாகின்ற வகையாகும். இது பார்ப்பதற்கு அடிப்பகுதி சிறுத்தும் மேல் பகுதி பருத்தும் காணப்படும்.

இத்தகைய சிறப்புகளுடன் விளங்குகின்ற சிவலிங்கத் திருமேனிகளும் கிடந்த நிலை(சயனம்), அமர்ந்த நிலை (ஆசனம்), நின்ற நிலை (ஸ்தானகம்) வடிவங்களில் அமைகின்றன என்று சாத்திர நூல்கள் கூறுகின்றன. அதாவது கண்களுக்குப் புலப்படும் ருத்திர பாகம் உயர்ந்து காணப்படும் போது அந்த லிங்கத் திருமேனியானது நின்ற கோலத்தையும், அதுவே சம அளவுடன் காணப்படும்போது வீற்றிருந்த திருக்கோலத்தையும் மற்றும் குறைந்த அளவுடன் காணப்படும்போது சயனத் திருக்கோலத்தையும் சுட்டிக் காட்டுகின்றது.

இதனைப் பறைசாற்றும் வகையில் திருவிரிஞ்சையில் அருள்மிகு மரகதாம்பிகை சமேத வழித்துணைநாதர் திருக்கோயிலில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சிவலிங்கத் திருமேனியின் ருத்திர பாகமானது உயர்ந்து காணப்படுவதால் இது நின்ற திருக்கோலத்தினையே குறிப்பதாகும்.

பழங்கோயில்களைப் புதுப்பிப் பதாலும் புனருத்தாரனம் செய்வதாலும் உலகில் அனைத்து நன்மைகளுடன் தலைமுறை தலைமுறைக்குப் புண்ணியம் கிட்டும் என்று ஆகமங்களில் சொல்லப்பட்டுள்ளது.

மேலும் நம் முந்தையோர் சொல்லிய

புல்லினால் வருடம் கோடி

புது மண்ணினால் வருடம் நூறு கோடி

துல்லிய செங்கல்லினாலே தூய
முந்நூறு கோடி
அல்லியங்கோதை கேளாய்
அருள்தரும் ஆலயங்களை
கல்லினால் அமைத்த பேர்கள்
கயிலையை விட்டு அகலார்தானே!

என்பதைச் சுட்டிக்காட்டி அனைவரும் அருள்மிகு மரகதாம்பிகை சமேத வழித்துணைநாதர் அருளை நாடிடுவோம்.

அடிமுடி தேடல்

பிரமனும் மாலும் பிரானே நான் என்னப்
பிரமன்மால் தங்கள் தம் பேதைமை யாலே
பரமன் அனலயாய்ப் பரந்து முன் நிற்க
அரன்அடி தேடி அரற்றுகின்றாரே

குருவே சிவம்

குருவே சிவம் எனக் கூறினன் நந்தி
குருவே சிவம் என்பது குறித்து ஓரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்
குருவே உரை உணர்வற்றதோர் கோவே.

இலிங்கம்

இலிங்கமது ஆவது யாரும் அறியார்
இலிங்கமது ஆவது எண்திசை எல்லாம்
இலிங்கமது ஆவது எண்எண் கலையும்
இலிங்கம் அதுஆக எடுத்தது இவ்உலகே.

அண்டலிங்கம் - விமான லிங்கம் - பலிபீடலிங்கம்

தூய விமானமும் தூலம் - அது ஆகுமால்
ஆய சதாசிவம் ஆகும் நல் சூக்குமம்
ஆய பலிபீடம் பத்திர லிங்கமாம்
ஆய அரண்நிலை ஆய்ந்து கொள்வார்கட்கே

பிண்ட லிங்கம்

மானுடர் ஆக்கை வடிவு சிவலிங்கம்
மானுடர் ஆக்கை வடிவு சிதம்பரம்
மானுடர் ஆக்கை வடிவு சதாசிவம்
மானுடர் ஆக்கை வடிவு திருக்கூத்தே

சதாசிவ லிங்கம்

இலிங்க நல்பீடம் இசையும் ஓங்காரம்
இலிங்க நல்கண்டம் நிறையும் அகாரம்
இலிங்கத்துள் வட்டநிறையும் உகாரம்
இலிங்க மகார நிறைவிந்து நாதமே.

ஆத்மலிங்கம்

அன்று நின்றான் கிடந்தான் அவன் என்று
சென்று நின்று எண்திசை ஏத்துவர் தேவர்கள்
என்று நின்று ஏத்துவன் எம்பெருமான் தன்னை
ஒன்றி என் உள்ளத்தின் உள்ளிருந்தானே.

ஞானலிங்கம்

எந்தை பரமனும் என்னம்மை கூட்டமும்
முந்த உரைத்து முறை சொல்லின் ஞானமாம்
சந்தித்திருந்த இடம்பெறும் கண்ணியை
உந்தியின் மேல் வைத்து உகந்திருந்தானே

சிவலிங்கம்

மேவி எழுகின்ற செஞ்சுடர் ஊடுசென்று
ஆவி எழும் அளவன்றே உடல்உற
மேவப் படுவதும் விட்டு நிகழ்வதும்
பாவித்து அடக்கில் பரகதி தானே

திருநீற்றின் சிறப்பு

கா. இராமநாதன், பி.ஏ., பி.எல்., கோலாலம்பூர்.

பெயர்

சைவச் சின்னங்களில் திருநீறு மிகச் சிறப்புடையது. **அது ஆன்மாக்கள் செய்யும் பாவங்களை நீறாக்கி விடுவதால் அதற்கு பஸ்பம் அல்லது திருநீறு என்றும் பெயர்.** அது, அந்தமில் இன்பத்து அழிவில் வீடாகிய முத்திச் செல்வத்தைத் தருவதால் **விபூதி** (மேலான செல்வம்) ; ஆணவம் முதலிய மலங்களை அறுப்பதால் **க்ஷரம்** (தடைகளை அறுப்பது); சிறு தெய்வங்களால் வரும் துன்பங்களைத் தடுப்பதால் **காப்பு** அல்லது ரட்சை ; அறியாமையை நீக்கி எளிமையைத் தருதலால் **பசிதம்** (ஒளியைத் தருவது)

தத்துவம்

விபூதி சில தத்துவக் கருத்துகளை நினைவூட்டுகிறது. வெண்மை சுத்தத்திற்கு அடையாளம். விபூதியைப் போல் நம் உள்ளம் சுத்தமாக வேண்டும். நாம் இட்டுக் கொள்ளும் விபூதி வெண்மையாக இருக்க வேண்டும். நெருப்பு அழுக்கைப் போக்குவது; நெருப்பின் உதவியால் ஆக்கப் பெறும் விபூதியும் அழுக்கற்றது, 'சுத்தமதாவது நீறு' என்றார் சம்பந்தர்.

திருநீறு, உலக அழிவையும் உடல் அழிவையும் காட்டுகிறது. முடி சார்ந்த மன்னரும் முடிவில் ஒருபிடி சாம்பரா கின்றனர். உலகம் அநித்தியம் என்று உணர்ந்து உன் வாழ்க்கையை நடத்த வேண்டுமெனத் திருநீறு ஞாபகப் படுத்துகிறது. ஆண்டவனை வழிபட்டால் மும் மலங்களை நீறாக்குவார் என்ற எண்ணமும் ஏற்படுகிறது.

பெரியோர் வாக்கு

விபூதி அணிவதன் அவசியத்தைப் பல பெரியோர்கள் வற்புறுத்தி உள்ளார்கள. 'தக்கோர் புகழ்வது நீறு'. உபநிஷதங்கள் அதன் பெருமையைப் பேசுகின்றன. நால்வரும் இதனை வற்புறுத்தியுள்ளனர். ஞானசம்பந்தப் பெருமான் ஒரு பதிகமே திருநீற்றுக்காகப் பாடியுள்ளார். மணிவாசகனார் திருநீறே கவசம் என்றும், 'வெண்ணீறு அணிகிலாதவரைக் கண்டால், அம்ம! நாம் அஞ்சுமாறே!' என்றும் அருளியுள்ளார்.

கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை
மங்காமல் பூசி மகிழ்வரே யாமாகில்,
தங்கா வினைகளும்; சாரும் சிவகதி;
சிங்கார மான திருவடி சேர்வரே

என்ற திருமந்திரத்தைக் காண்க. வினைகள் தங்கா என வலியுறுத்தியதையும் நோக்குக.

ஆதிபகவன் ஞானவடிவு அழலிற் பூத்து
நித்தியமாய்
அணிந்தோர் தமக்கு வசிகரமாய்,
அருந்தினோர்கட்கு ஆரமுதாய்,
நீதி அறியும் பசுமலத்தை நீக்கும் ஒரு
நற்குறி காட்டி,
நிகழ் பேரின்பக் கடலூட்டி, நின்ற
புகழ்வெண் திருநீறே.

திருப்போரூர் சந்நிதி முறையிலே சிதம்பர சுவாமிகள் பிள்ளைத் தமிழ் காப்புப்

பருவத்திலே திருநீற்றுக்கு ஒரு காப்புப் பாடல் அமைத்து, அதில் இவ்வாறு கூறுகிறார்.

'நீறில்லா நெற்றி பாழ்' என்பது நல்வழி

திருநீறு அணிந்து யார் கெட்டார்?

சிவனை மறந்து யார் உய்ந்தார்?

என்ற பழமொழிகளும் ஆன்றோர் வாக்குகளை வற்புறுத்துகின்றன.

சில நிகழ்ச்சிகள்

உபதேசம் மட்டுமின்றி அடியார்கள் வாழ்க்கையில் நடந்த பல சம்பவங்கள் விபூதியின் பெருமையை எடுத்துக் காட்டுகின்றன. சம்பந்தப் பெருமான் திருநீற்றால் பாண்டிய மன்னன் நின்றசீர் நெடுமாறனின் வெப்பு நோயை நீக்கினார்.

திருவாலவாயன் திருநீற்றைத் திலகவதி யாரிடமிருந்து திருநாவுக்கரசர் பெறும்போது 'பெருவாழ்வு வந்தது' எனப் பெற்று உய்ந்தார்.

உவர் மண் தோய்ந்த வண்ணானை நீறு நிறையப் பூசிய அடியாரென நினைத்துச் சேரமான் பெருமாள் நாயனார் விழுந்து வணங்கினார்.

அரசு ஏற்று அரி அணை ஏறும்போது திருநீற்றையே அபிஷேகப் பொருளாகக் கொண்டார் மூர்த்தி நாயனார்.

திருநீறு இட்டார்க்குத் தீங்கிழையாதவர் ஏனாதிநாத நாயனார். அதிசூரன் திருநீறிட்டு வந்தபோது அவன் வாளுக்கு இரையாகச் சம்மதித்தார்.

திருநீறிட்டுக் குருவேடந்தாங்கிக் கொலை செய்த முத்தநாதன் என்பவனை மெய்ப்பொருள் நாயனார் தமர் என்றும், அவனுக்குத் தீங்கிழைக்கக் கூடாதென்றும் கூறினார். **திருநீற்றில் அடியார்கள் வைத்த அன்பு அளவிடற்பாலதா?**

யார் அணிவது ?

புண்ணியர் பூசுவது வெண்ணீறு. 'கரிய மேனிமிசை வெளிய நீறு சிறிதே இடும் பெரிய கோலத் தடங் கண்ணன்' என்று நம்மாழ்வார் கூறியிருப்பதிலிருந்து திருமால் திருநீறு அணிவது தெரிகிறது. மேலும் அவர் 'நீறு செவ்வே இடைக்காணில் நெடுமால் அடியார் என்று ஓடும்' என்பதால், வைணவர்கள் திருநீறு அணிந்திருந்தார் களெனத் தெரிகிறது. இராமபிரான் திருநீறு அணிந்திருந்தார். அவர் இராமேஸ்வரம் திருக்கோயில் கட்டிலிங்கம் அமைத்த சிவபக்தர், தேவர்கள் அணிந்தனர்; வானவர் அணிந்தனர். வானவர் மேலது நீறு. இராக்கதர்களின் தலைவனாகிய இராணவன் திருநீறு அணிந்த பெருமையைப் பாராட்டுகிறார் சம்பந்தப் பெருமான். இராவணன் மேலது நீறு. முழுநீறு பூசியவர் முனிவர். அவர்கள் தொகை அடியார் கூட்டத்தில் ஒரு பகுதி, கிறிஸ்தவர்கள் சாம்பல் புதன் (Ash Wednesday) என்ற பண்டிகை கொண்டாடுவார்கள். ஜயினர்கள் பாடிய நாலடியாரில் நீறு விஷத்தைப் போக்குமென்பர்.

அணியும் விதம்

இவ்வளவு சிறந்த திருநீற்றை எவ்வாறு அணிவது?

ஜலத்தொடு கூட்டாது உத்தூளனமாக அணியலாம். ஜலத்தோடு கூட்டிக் குழைத்தும் அணியலாம்.

உத்தூளனம் பரவப் பூசுதல், திரிபுண்டரம் மூன்று குறியாகத் தரிப்பது.

மூன்று குறி இச்சா, கிரியா, ஞானமெனும் மூன்று சக்திகளையும் பதி, பசு, பாசம் எனும் மெய்ப்பொருள் மூன்றையும், உருவம், அருவம், ரூபா ரூபம் எனும் கடவுள் நிலை மூன்றையும், ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று மலங்கள் அறுவதையும், அஉம் என்ற பிரணவ எழுத்துகள் மூன்றையும் காட்டு மென்று கூறுவர்.

குழைத்துப் பூசும் இடங்களாவன : தலை, நெற்றி, மார்பு, கொப்பூழ், இரண்டு முழந்தாள், இரண்டு தோள், இரண்டு முழங்கை, இரண்டு மணிக்கட்டு, இரண்டு விலாப்புறம், முதுகு, கழுத்து ஆகியன.

இப்பதினாறு இடங்களும் பதினாறு பேறுகளைக் குறிக்கும். அவையாவன : ஒழுக்கம், அன்பு, அருள், ஆசாரம், உபசாரம், உறவு, சீலம், தவம், தானம், வந்தித்தல், வணங்கல், வாய்மை, துறவு, அடக்கம், அறிவு, அருச்சித்தல்.

செயல் தொடங்கும்போது, காலை யிலும், நடுப்பகலிலும், மாலையிலும், நீராடல் செய்தவுடனும், பூசைக்கு முன்னும் பின்னும், நித்திரைக்கு முன்னும் பின்னும் திருநீறு பூச வேண்டும்.

பூசும்போது இஷ்ட மூர்த்தியின் நாமத்தை உச்சரித்து, விபூதி நிலத்தில் வீழாமல் அண்ணாந்து, நடுவிரல் மூன்றினாலும் பூச வேண்டும்.

நீரது இட்டு நினைப்பவர் புந்தியில்
நேசம் மெத்த அளித்தமன் சற்குரு
நிலம் உள்ளவெற்புரை பெருமானே
– திருப்புகழ்

ஓதியே செபித்து உகந்து நீறு அணிய
திசைமன்னர் எண்மர் செயலது அருளுவர்

என்கிறது தேவராய சுவாமிகளின் கந்தர் சஷ்டி கவசம்.

குருபாத தாசர் என்பார் குமரவேலனின் பக்தர். அவர் குமரேச சதகம் எனும் நூறு பாடல் கொண்ட நூல் இயற்றியுள்ளார். அதில் திருநீறு வாங்கும் முறைமை பற்றி ஒரு பாடல் பாடியுள்ளார்.

பாடலின் கருத்து :

குதிரை மீது இருந்தோ பல்லக்கில் அமர்ந்தோ உயர்ந்த பலகையில் இருந்தோ, உயர்மண்டப மேடையிலிருந்தோ, கொடிய திண்ணையிலிருந்தோ திருநீறு பெறக்கூடாது.

கொடுப்பவர் கீழ் நிற்க, வாங்குபவர் மேல் நின்று வாங்கக் கூடாது. ஒருகையாலோ, மூன்று விரல் நீட்டியோ விபூதி பெறக்கூடாது. தாம்பூல வாயுடன் விபூதி வாங்கக் கூடாது. பாதையில் நடக்கும்போதும், தூய்மையற்ற இடத்திலும், திருநீறு வாங்குதலும், தரித்தலும் நரகம் தரும்.

விபூதி தரிக்கும் முறைமை பற்றி அவர் ஓர் அரியபாடல் இயற்றியுள்ளதும் கவனத்திற்குரியது.

பக்தியொடு சிவசிவா என்று திருநீற்றைப்
பரிந்துகையால் எடுத்துப்

பாரினில் விழாதபடி அண்ணாந்து செவியொடு
 படுத்தபுயம் மீது ஒழுக
நித்தமும் விரல்களால் நெற்றியில் அமுந்தல் உள
 நினைவாய்த் தரிப்பவர்க்கு
நீருவினை அணுகாது தேகபரிசுத்தமாம்
 நீங்காமல் நிமலன் அங்கே
சத்தியொடு நித்தம் விளையாடுவன் முகத்திலே
 தாண்டவம் செய்யும் திரு
சஞ்சலம் வராது பரகதி உதவும் இவரையே
 சக்தியும் சிவன் என்னலாம்.
மத்தினிய மேருஎன வைத்து அமுதினைக் கடையும்
 மால் மருகனான முருகா
மயில் ஏறி விளையாடும் குகனே புல்வயல் நீடு
 மலைமேவு குமரேசனே.

திருஞானசம்பந்த தேவாரம்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கபடுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாய் உமைபங்கன் திருஆலவாயான் திருநீறே.
(தந்திரம் – ஆகமம்)

வேதத்தில் உள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத்தகுவது நீறு உண்மையில் உள்ளது நீறு
சீதப்புனல் வயல் சூழ்ந்த திருஆலவாயன் திருநீறே.
(சீதப்புனல் – குளிர்நீர்)

முத்தி தருவது நீறு முனிவர் அணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திருஆலவாயான் திருநீறே.
(முனிவர் – மனச்சீலர்)

காண இனியது நீறு கவினைத்தருவது நீறு
பேணி அணிபவர்க்கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந்தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந்தருவது நீறு திருஆலவாயான் திருநீறே.
(கவின்–சிவப்பொலிவு; மாணம்–சிறப்பு; சேணம்–உயர்வு)

பூச இனியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச இனியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம் ஆவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருஆலவாயான் திருநீறே.
(அந்தம் – அழகு)

அருத்தம தாவது நீறு அவலம் அறுப்பது நீறு
வருத்தம் தணிப்பது நீறு வானம் அளிப்பது நீறு
பொருத்தம் அதாவது நீறு புண்ணியர் பூசும் வெண்ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருஆலவாயான் திருநீறே.
(பொருத்தம் – சிவபுண்ணியம், பசுபுண்ணியம்)

எயிலது அட்டது நீறு இருமைக்கும் உள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கிய மாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு பாக்கிய மாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத்து ஆலவாயான் திருநீறே.
(துயில் – கேவலம்; எயில் – திரியும்)

இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவம் அறுப்பது நீறு
தராவண மாவது நீறு தத்துவ மாவது நீறு
அராவணங்கும் திருமேனி திருஆலவாயான் திருநீறே.
(பராவணம் – சிவசக்தி சொரூபம்)

மாலொடு அயனறியாத வண்ணமும் உள்ளது நீறு
மேலுறைத் தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடி நீறு
ஏல உடம்பிடர் தீர்க்கும் இன்பம் தருவது நீறு
ஆலமுதுண்ட மிடற்றெம் ஆலவாயான் திருநீறே.
(ஏல உடம்பு – முழு உடம்பு)

குண்டிகைக் கையர்களோடு சாக்கியர் கூட்டமும் கூடக்
கண்திகைப் பிப்பது நீறு கருத இனியது நீறு
எண்திசைப் பட்ட பொருளார் ஏத்தும் – தகையது நீறு
அண்டத்தவர் பணிந்தேத்தும் ஆலவாயான் திருநீறே.

ஆற்றல் அடல்விடை ஏறும் ஆலவாயான் திருநீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம்பந்தன்
தேற்றித் தென்னை உடலுற்ற தீப்பிணியாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே
(பூமிக்குவந்த தேவன் பூசுரன்)

திருமந்திரத் திருநீறு

கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை
மங்காமல் பூசி மகிழ்வரே யாமாகில்
தங்காலிணைகளும் சாரும் சிவகதி
சிங்காரமான திருவடி சேர்வரே

பலன்

திருநீறணிந்தால் ஒரு அழகு தோன்றுகிறது. நீறணிந்த கோலம் நெஞ்சம் பறிக்கும்.

உடல் நோய் தீரும்; தோல் வியாதிகள் நீங்கும், உளநோய் விலகும். வெம்துயர் தீர்ப்பது நீறு, அவலம் அறுப்பது நீறு, சுடலைப் பொடி பூசியை நினைப்பூட்டி உயிர் நோயைப் போக்கும். மந்திரமாவது நீறு. முத்தி தருவதும் நீறு.

எல்லாவிதமான இடையூறுகளுக்கும் திருநீறே காப்பு. வேறுபல காப்பு மிகை என்பர் சேக்கிழார்.

நடராஜன் தத்துவம்

நடராஜரின் திருவுருவத்திற்கு ஊன நடனம் என்றும், ஞான நடனம் என்றும் இரண்டு விதமான விளக்கங்கள் உண்டு.

ஊன நடனம், சிறிது சிறிதாக ஜீவர்களைப் பாசக் கட்டிலிருந்து விடுவித்துப் பேரின்பம் பெறச் செய்கிறது. ஞான நடனம், பேரின்பத்தில் ஈடுபட்டுள்ளவர்களை மேலும் மேலும் அதில் மூழ்க வைத்து, அதிலிருந்து அவர்கள் ஒருபோதும் நீங்காத நிலையைத் தருகிறது.

ஊன நடனம் என்பது ஸ்தூலமாக நடைபெறும் பஞ்ச கிருத்தியங்களை (ஐந்து செயல்களை) உணர்த்துகிறது. எனவேதான் 'ஐந்தொழில் ஆண்டவன்' என்று சிவனார் அழைக்கப் பெறுகிறார். ஊன நடனம் என்பதில் பின்வரும் கருத்துகள் அடங்கியுள்ளன.

1. சிவபெருமான் ஒரு கையில் டமருகம் (துடி) என்ற உடுக்கையை ஏந்தியுள்ளார். அதை அவர் அசைத்து ஒலி எழுப்பும்போது உலகங்கள் சிருஷ்டிக்கப்படுகின்றன. எனவே, உடுக்கையை ஏந்திய கரம் சிருஷ்டித் தொழிலை உணர்த்துகிறது,
2. அபயக் கரம் ஸ்திதி என்ற காக்கும் தொழிலைக் குறிக்கிறது,
3. நெருப்பை ஏந்திய கரம் விநாசம் என்ற அழிக்கும் தொழிலைக் குறிப்பிடுகிறது,
4. இறைவனின் ஒரு திருவடி முயலகனை மிதித்தபடி உள்ளது. ஊன்றிய இந்தத் திருவடி திரோதானம் எனப்படும் மறைத்தல் தொழிலை உணர்த்துகிறது.
5. எடுத்த பதம் எனப்படும் தூக்கிய திருவடி அருளல் என்ற தொழிலைச் செய்கிறது. எண்ணற்ற பிறவிகளில் உழன்றபடியே உள்ள ஜீவர்களை அதிலிருந்து விடுவித்து, இறைவன் தன் திருவடிகளில் சேர்த்துக் கொள்கிறான் என்பதை உணர்த்துவதே அருளல் என்ற தூக்கிய திருவடியாகும்.

தமிழ்நாட்டுக் கோயில்கள்

எஸ். சரவணன்

(கட்டுரையாளருடைய இயற்பெயர் சுப. நல்லகருப்பன். இராமநாதபுரம் மாவட்டம் சண்முகநாதபட்டணத்தைச் சேர்ந்தவர். பிறந்த தேதி 15-3-1952. தமிழ்ப்பற்றும் தெய்வபக்தியும் உடையவர். மஞ்சரி, தினமணி கதிர் முதலியவற்றில் இவருடைய எழுத்துகள் வெளி வந்துள்ளன.)

முன்னுரை

தமிழ்நாட்டின் சிறப்பே, கோயில்கள் தான் என்று சொல்லலாம். மதச்சார்பில்லாத நமது மாநில அரசாங்கம் அதன் சின்னமாகக் கோயில் கோபுரத்தைப் பொறித்துக் கொண்டிருப்பது குறிப்பிடத் தக்கது. கோயில்களைச் சிறப்பாக உடையது தென்னிந்தியா. எனினும், அதனுள் சிறப்பானது தமிழ்நாடு என்பது பொருந்தும். வட இந்தியாவுக்கு வரும் வெளி நாட்டார் காண்பவை அல்லது அவர்களுக்குக் காட்டப் படுபவை தாஜ்மகாலும், குதுப்மினாரும், ஜெய்ப்பூர் அரண்மனைகளும், கோட்டை களும்தாம்.

உலகெங்கும் தமிழர் கோயில்கள்

தமிழர்கள் உலகெங்கும் கோயில் களைக் கட்டியுள்ளனர். அமெரிக்காவில் மெக்சிகோ நாட்டில் திக்கல் என்னும் நகரில் மதுரை மீனாட்சியம்மன் கோயிலைப் போன்ற ஒரு கோயில் உள்ளது. தென் அமெரிக்காவின் பல பகுதிகளில் தம்முடைய கோயில் கட்டிடக்கலைப் பாணியையும் இறை உருவங்களையும் காண்கிறோம். ஆசிய நாடுகள் பலவற்றிலும் இத்தகைய இயல்பு நிலவுகிறது. கம்போடியா நாட்டிலுள்ள அங்கோர்வாட் கோயிலைப்பற்றி அறிந்து கொள்ளாமல் தமிழர் நாகரிகத்தை விளக்கி எழுதுவதற்கும் பேசுவதற்கும் இயலாது. தாய்லாந்து நாட்டில் திருப்பாவையும், திருவெம்பாவையும் அந்த நாட்டு அரசர் முன்னிலையில் ஓதப்படுகின்றன. இந்தோனேசியாவில் பல நகரங்களில் சோழர் அமைத்த கோயில்கள் இன்றும் காட்சிப் பொருள்களாய் விளங்குகின்றன. 3,000 தீவுகள் கொண்ட நாடாக இந்தோனேசியா இருப்பினும், வெளிநாட்டுப் பெருமக்களை இந்தோனேசியா அரசாங் கத்தார் சின்னஞ்சிறு பாலித் தீவுக்குத்தான் அழைத்துச் செல்கின்றனர். இதற்குக் காரணம், தமிழர் அத்தீவில் குடியேறிய காலந்தொட்டுக் கடவுள் மணமும் கலைமணமும், அங்கே கமழ்வதேயாம்.

பிலிப்பைன்ஸ் தீவில் தமிழ்க் கடவுளாகிய முருகனின் திருவுருவங்களும், சிவலிங்க வழிபாட்டின் சின்னங்களும் அகழ்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறு அகழப்பட்ட பொருள்களுக்கும், திருநெல்வேலி மாவட்டத்து ஆதிச்சநல்லூரில் எடுக்கப்பட்ட பொருள்களுக்கும் மிகுந்த ஒற்றுமை இருப்பதாக அறிஞர்கள் கூறியுள்ளனர்.

பர்மாவிலும் மலேசியாவிலும் வியட்நாமில் செய்கோனிலும் தமிழர்கள் கட்டிய நூற்றுக்கணக்கான கோயில்கள்

இன்றும் இருக்கின்றன. இலங்கையில் பொலன்னறுவை முதலிய இடங்களில் 10, 11-ஆம் நூற்றாண்டுகளில் சோழ அரசர்கள் அமைத்த கோயில்களைக் காணலாம். அவை சிதைந்தால்தான் என்ன? சிதைந்தாலும் அவை சோழர் கோயில்கள் அல்லவா?

வடநாட்டுக் கோயில்கள்

வடஇந்தியாவில் முகலாயர் படையெடுப்பின் காரணமாக ஹிந்து மதமும் 14-ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றது. பிரிட்டிஷ் ஆட்சியில்தான் அங்கு ஓரளவு அமைதி ஏற்பட்டது. உரிமை பெற்ற பிறகுதான், வட இந்தியாவில் சிறிய அளவிலேனும் ஹிந்து மதம் மறு மலர்ச்சி பெற்று வருகிறது. இந்த மறுமலர்ச்சியின் அடையாளமாக, குஜராத்தில் சோமநாதபுரத்தில் சர்தார் வல்லவாய் பட்டேல், கே.எம். முன்ஷி ஆகியோர் ஆதரவில் புதுப்பிக்கப்பட்டுள்ள சோமநாதர் கோயிலையும், கல்கத்தாவில் ராஜஸ்தான் சலவைக்கல்லில் தமிழ்நாட்டுப் பாணியில் காஞ்சிபுரத்து ஸ்தபதிகளைக் கொண்டு மார்வாரிச் செல்வர் பங்கூர் கட்டியுள்ள வைகுந்தநாத் கோயிலையும், இமயத்தின் அடிவாரத்தில் ரிஷிகேசத்தில் சுவாமி சிவானந்தா அவர்கள் அமைத்துள்ள சிவகுமாரன் (வட இந்தியாவில் முருகனை இவ்வாறு குறிப்பிடுவர்) கோயிலும் குறிப்பிடத்தக்கவை.

லெனின்கிராடில் 40 விநாயகர்

பல நூற்றாண்டுகளுக்கு முன் காஷ்மீரம், சைவ சமயத்தின் நிலைக்களனாக இருந்தது. முகலாயர் படையெடுப்பின் விளைவாக அங்கிருந்து விக்கிரகங்கள் காஷ்மீருக்கு வடக்கேயுள்ள நாடுகளுக்குப் பாதுகாப்பாக அனுப்பப்பட்டன. அதன் பயனாய் ரஷ்யாவில் லெனின்கிராடு காட்சிக்கூடத்தில் இன்று 40 வகையான விநாயகர் உருவங்களைக் காண்கிறோம்.

வடஇந்தியப் பாணிக் கோயில்கள்

வட இந்தியாவிலுள்ள கோயில்களைப் பின்பற்றித் தமிழ்நாட்டிலும் சில கோயில்கள் கட்டப்பட்டுள்ளன. காஞ்சி மாநகரத்தில் அநேகதங்காபுரம் என்ற கோயில் இமயமலைப் பகுதியில் அதே பெயருடன் அமைந்த கோயிலைப் பின்பற்றி அமைந்தது. கல்கத்தாவின் சிறப்பு, காளி கோயில். அக்கோயிலைப் போன்று தஞ்சாவூர் மாவட்டத்து மாவூரில் சர்.ஆர்.எஸ். சர்மா ஒரு கோயிலை நிர்மாணித்துள்ளார். திருப்பனந்தாள் காசி மடத்தின் தலைவராக இருந்த அருள்நந்தித்தம்பிரான் அவர்கள் மடாலயத்தின் மைய மண்டபத்தின் முன்புள்ள திருக்குளத்தில் வடநாட்டுப் பாணியில் திருக்கோயில் அமைத்துக் காசியிலிருந்து வெண்பளிங்கு விநாயகர் உருவத்தை வரவழைத்துப் பிரதிட்டை செய்துள்ளார்கள்; தமிழ்நாட்டிலுள்ள விநாயகர் கோயில்களுள் காண்பவர் மனத்தைக் கொள்ளை கொள்ளும் கவினுறு ஆலயங்களுள் இதுவும் ஒன்று.

ஆறு இரண்டும் காவேரி, அதன் நடுவே திருவரங்கம்

இனி, தமிழ்நாட்டில் நெடுங்காலமாக நிலவி வரும் ஏனைய கோயில்களைக்

காண்போம். இவை எத்தகைய இடங்களில் கட்டப்பட்டிருக்கின்றன என்பதை முதலில் கூறுவேன்.

திருத்தணிகை மலை, திருச் செங்கோட்டு மலை, திருக்கழுக்குன்றம், திருச்சி மலைக்கோட்டை, பழனி மலை முதலிய ஏராளமான இடங்களில் மலைமீது கோயில்கள் கட்டப்பட்டுள்ளன. மலை களைக் குடைந்தும் கோயில்கள் அமைக்கப் பெற்றிருக்கின்றன. திருவொற்றியூர், மயிலை, திருவான்மியூர், மாமல்லபுரம், காவிரிப்பூம்பட்டினம், கோடிக்கரை, திருச்செந்தூர் முதலிய கடற்கரைகளிலும், முக்கடலும் கூடி முழங்கும் கன்னியா குமரியிலும் கோயில்கள் உள்ளன. கடல் சூழ்ந்த தீவாகிய இராமேச்சுரத்திலும், ஆறு சூழ்ந்த தீவாகிய ஸ்ரீரங்கத்திலும் கோயில்கள் உண்டு. 'ஆறு இரண்டும் காவேரி அதன் நடுவே திருவரங்கம்' என்பது நாட்டுப் பாடல். ஆறுகள் கூடும் இடங்களிலும் கோயில் களுக்குக் குறைவில்லை. சான்று, காவிரியும் பவானியும் கூடும் பவானி கூடுதுறை (ஈரோடு மாவட்டம்); வெள்ளாறும் மணிமுத்தாறும் கூடும் கூடலையாற்றூர் (தென் ஆர்க்காடு மாவட்டம்) ; ஆறு, திசை திரும்பும் இடங்களில் கூடத் தமிழர்கள் கோயிலைக் கட்டியிருக்கிறார்கள். எடுத்துக்காட்டு. 1. ஓகனேக்கல் (தர்மபுரி மாவட்டம்), 2. திருவலஞ்சுழி (தஞ்சை மாவட்டம்), ஆற்றங்கரைகளிலும் கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. காவிரி, கொள்ளிடம், பாலாறு, வைகை, பொருநைக் கரைகள்தோறும் தலங்களைக் காணலாம். சோழநாட்டிலுள்ள பதிகம்பெற்ற தலங்களைக் குறிக்கும்போது, ஆற்றை எல்லையாக வைத்துக் காவிரியின் வடபாலும் தென்பாலும் உள்ளவை என்று குறிப்பதே மரபு.

ஆற்றங்கரையில் கோயில்களை அமைத்தவர்கள் அருவிக் கரைகளையும் விட்டு வைக்கவில்லை. நெல்லை மாவட்டத்தில் குற்றாலம், பாபநாசம் முதலிய இடங்களுக்குச் சென்றவர்கள் இதை அறிவார்கள்.

இயற்கை அழகை எங்கெங்கே கண்டார்களோ அங்கெல்லாம் தமிழர்கள் அந்த இடங்களைப் படைத்த இறைவனுக்கும் கோயில் எடுத்தனர். 'காடும் காவும் கவின்பெறு துருத்தியும் யானும் குளனும் வேறு பல் வைப்பும் சதுக்கமும் சந்தியும் புதுப் பூங்கடம்பும் மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும்' என நக்கீரர் இறை வழியும் இயங்களைத் திமுருகாற்றுப் படையில் சுட்டுகிறார். இத்தகைய இயற்கைக் காட்சிகள் மேலை நாடுகளிலும் உள்ளன. அவற்றின் அழகில் ஈடுபட்ட ஆங்கிலேயரும் அமெரிக்கரும் என்ன எண்ணினார்கள்? எழில்மிக்க இந்த இடத்தில் மனைவியோடு இன்பமாய்ப் பொழுது போக்கலாம். அதற்காக மாடமாளிகை கட்டி உணவு விடுதி நடத்துவோம் என்று கருதி அவ்வாறே செய்தனர். சில இடங்களில் மங்கையரோடு மகிழ்ந்து உலா வர, ஒரு பூந்தோட்டமும் உண்டாக்கினர். தமிழர்களும் பூந்தோட்டம் ஏற்படுத்தினர். அவற்றுக்கு நந்தவனம் எனப் பெயரிட்டனர். இறைவனை வழிபடுவதற்கு உரிய நிலப்பூ, கோட்டுப்பூ,

கொடிப்பூ முதலியவற்றுக்குரிய செடிகளை வைத்து வளர்த்தனர். தாமரைப்பூ, அல்லிப்பூ போன்ற நீர்ப்பூக்களை வளர்ப்பதற்காகக் குளங்களை வெட்டினர். மலர்களின் தன்மைகளை நினைத்து நம்மைத் திருத்திக் கொள்வதற்காக வேண்டித்தான் மலர்களால் தினந்தோறும் இறைவனை வழிபடச் செய்தார்கள் போலும்!

தெப்பக்குளங்களுக்கு நடுவேயும் கோயில் அமைத்திருக்கின்றனர். உதாரணம் : மாரியம்மன் தெப்பக்குளம், வண்டியூர் (மதுரை மாநகர்).

கோயில்களையொட்டி ஊர்கள்

எழில்மிக்க இடங்களில் இவ்வாறு தோற்றுவித்த கோயில்களையொட்டி ஊர்கள் உருவாயின. இக்காரணத்தால் கோயில் பெயரே ஊருக்கும் வழங்குவதாயிற்று. திருவானைக்கோயில் (திருவானைக்கா), சங்கரநயினார்கோயில், காளையார்கோயில், நாகர்கோயில், இராமேச்சுரம், பட்டீச்சுரம் என்ற பெயர்கள் இதை உணர்த்தும்.

நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் உயிர் நாடியாகக் கோயில் விளங்குகிறது. அதனால், தமிழ்நாட்டில் நகரத்துக்கும் கிராமத்துக்கும் உள்ள வேறுபாடு குறைவு. இந்தியாவிலுள்ள பிற மாநிலங்களில் அரசியல், தொழில் வளர்ச்சிகளால் மட்டும் ஒரு சில நகரங்கள் ஏற்பட்டுள்ளன. அந்த மாநிலங்களில் நகரத்துக்கும் கிராமத்துக்கும் இடையேயுள்ள மிகப்பெரிய வேறுபாடு, மலைக்கும் மடுவுக்குமுள்ள வேறுபாட்டுக்குச் சமமாகும். இதற்குக் காரணம் அங்கு கோயில்கள் இல்லாமை அல்லது இருந்தும் முக்கியத்துவம் பெறாமை.

தமிழ்நாட்டில் கோயில்களை அமைத்தவர்களுள் (முற்காலச்) சேர சோழ பாண்டிய அரசர்கள். அவர்கள் காலத்தால் முற்பட்டவர்கள். அவர்களுக்குப் பின்னர் பல்லவர்களும், பிற்காலச் சோழ பாண்டிய அரசர்களும் அரசிகளும் கோயில் கட்டுவதையே தங்கள் வாழ்க்கையின் தலையாய கடலமயாகக் கொண்டிருந்தனர். 15–ஆம் நூற்றாண்டு முதல் விஜயநகரப் பேரரசர்களும் அவர்களுடைய பிரதிநிதி களாக இருந்த மதுரை நாயக்க மன்னர்களும், ஆங்கிலேயர் ஆட்சியில் நாட்டுக்கோட்டை நகரத்தார்களும் கணக்கற்ற கோயில்கள் கட்டினர். இவ்வாறு கோயில் கட்டியவர்கள் எவரும் கோயில்களில் தங்கள் பெயர்களைப் பொறித்துக்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

உரிமைபெற்ற இந்தியாவில் பொதுமக்களும் ஹிந்து அறநிலைய நிறுவனத்தாரும் அக்கோயில் களைப் புதுப்பிக்கும் பணியில் சிறப்பாக ஈடுபட்டிருக்கின்றனர். காஞ்சிபுரத்துப் பெருமக்கள் இத்தகைய பணிகளைச் செய்திருப்பதை இங்கு சுட்டிக் காட்டலாம். சிதம்பரம் நடராஜர் கோயில் திருப்பணியில் பச்சையப்ப முதலியாருக்குப் பங்கு உண்டு. காஞ்சிபுரம் ரெங்காச்சாரியார், கோவர்த் தனத்தில் கிருஷ்ணன் கோயிலைக் கட்டி தமிழ்நாட்டு ஆகம முறைப்படி பூசைகள் நடத்தி வருகிறார். காஞ்சிபுரம் ஸ்ரீ காதி அநந்தாச்சாரியார் பம்பாய்பனஸ்வாடியில்

ஸ்ரீநிவாசப்பெருமாள் ஆலயம் கட்டியிருக்கிறார். திருநாங்கூரிலிருந்து பம்பாய் வரை பெருமாளை எழுந்தருளச் செய்தவர் இவர். கோயில் கட்டும் பல்வகைத் தொழிலாளர்களும் காஞ்சியிலிருந்தே வேற்றூர்களுக்கும் வெளிநாடுகளுக்கும் சென்றுள்ளனர்.

இவ்வாறே தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு முக்கிய நகரத்திற்கும் கோயில் வளர்ச்சியில் தொடர்பு உண்டு.

கோயில் திருப்பணியாளர் எல்லோரும் பொருள் மிகுந்தவர் அல்லர். பலர் வேதனையும் சோதனையும் பட்டு, பக்தி மிகுதியால் சிறுகச் சிறுகப் பணம் சேர்த்துப் பலரிடமும் வசூலித்தும் கோயில்களைக் கட்டி முடித்தனர். எனவே, அவர்கள் நமது பாராட்டுக்கும் புகழுக்கும், வாழ்த்துக்கும், வணக்கத்துக்கும் உரியவர்கள் ஆவர். தமிழ் மக்கள் உள்ள அளவும், கலையார்வமுள்ள வெளிநாட்டார் தமிழ் நாட்டுக்கு வரும்வரையும் இந்தத் திருப்பணியாளர்கள் மற்றும் கலைஞர்கள் ஆகியோர்களின் புகழ்ச் சிந்தினை இக்கோயில்கள் பாடும்.

அமைப்பு முறை

கோயில்களின் அமைப்பு முறையை இனி ஆராய்வோம். சின்னஞ்சிறு தளிகள் முதல் மிகப்பெரிய கோயில்கள்வரை பல்வேறு வகையான கோயில்கள் உள்ளன. சிதம்பரம் நடராஜர் கோயிலின் பரப்பு 40 ஏக்கர், வாட்டிகன் என்னும் தனி நாட்டின் பரப்பு 100 ஏக்கர்தான் என்பதை இங்கே நாம் நினைவுபடுத்திக்கொள்ளலாம். திருஆனைக்கா, தஞ்சாவூர், திருவாரூர், மதுரை, திருநெல்வேலி, இராமேச்சுரம், திருவண்ணாமலை, காஞ்சி ஏகாம்பரேசுவரர் கோயில்களும் இவ்வாறே பரப்பில்பெரிய கோயில்களாகும். திருவாரூக் கோவில் மிகப் பெரியது; 'கோயில் ஐந்துவேலி, குளம் ஐந்து வேலி' என்பர்.

இவ்வாறு பெரிய கோயில்களை ஏன் கட்ட வேண்டும்? சிறிய கோயில்கள் போதுமே என்றும் நம்மில் சிலர் நினைக்கிறோம். உடல் நலத்துடன் வாழ்வதற்கு நாள்தோறும் நெடுந்தொலைவு நடக்க வேண்டும். உடற்பயிற்சியும் செய்ய வேண்டும். இந்தப் பழக்கங்கள் ஏற்படுவதற்காக நம் முன்னோர்கள் பெரிய அளவில் கோயில்களைக் கட்டினார்கள். தரையில் விழுந்து இறைவனை வணங்கவேண்டும் என்ற முறையை வகுத்தார்கள். விநாயகரை வழிபடுவதற்கு, காதுகளில் குட்டிக்கொண்டு உக்கி அல்லது தோப்புக்கரணம் போடும் வழக்கத்தை ஏற்படுத்திக்கொண்டனர். காஞ்சி நகரத்து கயிலாசநாதர் கோயில் கருவறையை வலம்வர, உடம்பை ஒடுக்கி ஒவ்வொருவராய்ப் போக வேண்டும். ஐம்புலனையும் அடக்கி ஒடுக்கமாய்ச் சென்று இறைவன் சந்நிதியில் வழிபட வேண்டும் என்பது இதில் அடங்கியுள்ள தத்துவமாகும்.

கோயில்களின் அமைப்பு முறை பற்றிப் பல சாத்திரங்கள் உண்டு. சில கோயில்களில் குறிப்பிட்ட நாளில் சூரியனுடைய ஒளிக்கதிர் இறைவனுடைய திருவுருவத்தில் விழுமாறு கருவறை கட்டப்பட்டிருக்கிறது. கும்பகோணம்

நாகேசுவரர் சுவாமி கோயிலில் ஆண்டுதோறும் சித்திரை 11, 12, 13 மூன்று நாட்களிலும் அதிகாலையில் இருபது நிமிடங்களுக்குச் சூரிய ஒளி மூலத் தானத்தின் மீது படுவது குறிப்பிடத் தக்கது.

கோயில்கள் முதலில் மண்ணாலும் பிறகு செங்கல்லாலும் கட்டப்பட்டன. பின்னர் மலையைக் குடைந்து கோயில் கட்டும் கலை பரவிற்று. பல்லவ அரசர்கள் முதன் முறையாகக் கற்றளிகளைக் கட்டினார்கள்.

மாடக் கோயில்கள்

கற்கோயில்கள் ஏற்பட்டபோது கோயில் கட்டிடக்கலைபெரு வளர்ச்சி அடைந்தது. மாமல்லபுரம், மாகறல் போன்ற பல இடங்களில் யானைக்கோயில்கள் கட்டப் பட்டன. பெண்ணாடகம் சுடர்க்கொழுந்து நாதரும் கடந்தைநாதரும் கோயில் கொண்டுள்ள பாடல்பெற்ற தலம், மற்றும் காஞ்சி வைகுந்தப் பெருமாள் கோயில் போன்ற 72 கோயில்கள் இரண்டு மூன்று அடுக்குள்ள மாடக் கோயில்களாகச் செங்கட் சோழனால் கட்டப்பட்டுள்ளன.

சில இடங்களில் ஓம்கார அமைப்பில் கருவறை கொண்ட வட்ட வடிவமான கோயில்கள் கட்டப்பட்டுள்ளன. இவ் வகையில் காஞ்சி ஏகாம்பரேசுவரர் கோயிலுக்கு அருகேயுள்ள ஜுரஹரேச்சுரர் கோயிலைக் குறிப்பிடலாம். கோயம் புத்தூருக்கு அருகேயுள்ள பேரூர்ப் பட்டீசுவரன் கோயிலிலுள்ள கூத்தர் சந்நிதியின் அமைப்பு தனிச் சிறப்புடையது. இவ்வாறு, சில கோயில்கள் உடலியல் தத்துவத்தை விளக்குகின்றன.

விமானங்கள்

சோழர்கள், கருவறையின்மீது விமானங்களைக் கவினுற எழுப்பினர். தஞ்சைப் பெரிய கோயிலிலுள்ள விமானம் 13 மாடிகளையுடையது. மேலே பொன் தகடு போர்த்தது. விமானத்தின் உச்சியிலுள்ள பிரமரந்திர தளம் என்ற கருங்கல் 90 மெட்ரிக் டன் எடையுள்ளது.

கோபுரங்கள்

சோழர் காலத்தில் விமானங்களுக்கே சிறப்பிடம் இருந்தது. விஜயநகரப் பேரரசர்களும், நாயக்க மன்னர்களும் கோபுரங்களை உயரமாகவும் அழகாகவும் அமைப்பதில் பேரார்வம் காட்டி, அவற்றைச் செம்மைப் படுத்தி வானோக்கி உயர்ந்த கோபுரங்களைக் கட்டினர். இவை எழுநிலை மாடமாயும், ஒன்பது நிலை மாடமாயும், பதினொரு நிலை மாடமாயும் அமைந்து நெடுந்தொலைவிலுள்ளவர்களையும் கோயிலுக்கு அழைக்கும் கலங்கரை விளக்கங்கள் போன்று உள்ளன. கோயிலுக்கு வர இயலாதவர்கள் ராஜ கோபுரத்தை வழிபடுவதற்குரிய வாய்ப்பையும் அவை நல்குகின்றன. சில நூறு ஆண்டுகளாயினும் எத்தனையோ புயல்களுக்கு அறைகூவி நின்று அவற்றால் சிறிதும் பாதிக்கப்படாமல் இருப்பது இவற்றின் பெருமையாகும். நம் தலைமுறையில் சில கோயில்களில் கோபுரங்களைப் புதுப்பிக்கும்போது பழைய சுதை வேலைகள் சேதம் அடைந்துள்ளன. அவற்றின் கலைச் சிறப்பை, காலம் கடந்த காரைச் சிற்பங்களின் அழகை நம்மில் சிலர் உணரவில்லை. குட நீராட்டு என்றால் ஏதோ

வண்ணம் தீட்டுவது என்று கூடத் திருப்பணிக்குழுவினர் கருதினர். மதுரை மீனாட்சி கோயில் திருப்பணிக்குப் பிறகு 1963-ல் இதைப் பற்றி ஒரு கிளர்ச்சி உருவாயிற்று. திருப்பணி செய்தபோது, கோபுரத்தில் உள்ள பொம்மையினை நிழற்படமாக எடுத்து, அந்தப் படங்களைப் பார்த்தே மீண்டும் சுதை வேலை செய்யவேண்டும் என்ற முடிவு இப்போது ஏற்பட்டிருக்கிறது. பெருமைக்குரிய நமது பழக்கங்களைப் பாதுகாக்க (UNESCO) ஐக்கிய நாடுகளின் கல்வி அறிவியல் பண்பாட்டுக் கழகமும் முன் வந்திருக்கிறது. சிற்ப வல்லுநர்களும் கே.சி.எஸ். பணிக்கர் போன்ற நுண்கலை அறிஞர்களும் நமது கலைச் செல்வத்தைப் போற்றும் மேலை நாட்டார் சிலரும் இம்முயற்சிக்கு உறுதுணையாக இருந்திருக்கிறார்கள்.

மண்டபங்கள்

கோயில்களின் மற்றொரு முக்கிய மான பகுதி மண்டபங்கள். இவை 10-ஆம் நூற்றாண்டு முதல் பெரிய அளவில் கட்டப்பட்டன. ஒற்றைக்கால் மண்டபம், 16 கால் மண்டபம், நூற்றுக்கால் மண்டபம், ஆயிரங்கால் மண்டபம் என்று மண்டபங்களில் பல வகை உண்டு. கல்வியும் கலையும் வளர்க்க இவை கட்டப்பட்டன. பட்டிமன்றங்கள் இங்கே நடைபெற்றன. தந்தையிடமிருந்து மகனும் பாட்டனிடமிருந்து பேரனும், இந்த மண்டபங்களில் மேளம் முதலிய இசைக் கருவிகளைப் பயின்று வந்தனர்.

ஆயிரங்கால் மண்டபங்கள், திருவிழாக்களில் இறை உருவங்கள் காட்சி கொடுக்கப் பயன்பட்டு வருகின்றன. மதுரையிலும் திருநெல்வேலியிலும் இந்த மண்டபங்கள் கோயிற்கலையை விளக்கும் காட்சிக் கூடங்களாக இப்போது இருந்து வருவது, மகிழ்ச்சி தருகிறது. வட ஆர்க்காடு மாவட்டம் வேலூர் ஜலகண்டேசுவரர் கோயில் கல்யாண மண்டபம் தமிழ் நாட்டின் சிற்பக் கலையின் களஞ்சியமாக விளங்குகிறது. இந்தக் கல்யாண மண்டபத்தைப் பற்றி அரசாங்கம் ஒரு திரைப்படமாக எடுக்க வேண்டியது முக்கியமாகும்.

ஏராளமான மண்டபங்கள் தமிழ் நாட்டிலிருப்பதால் நமக்கு அவற்றின் பெருமை தெரியவில்லை. மதுரை, மேலமாசி வீதியிலுள்ள மதனகோபாலசுவாமி கோயிலில் இருந்த 16 கால் மண்டபத்தை, கோயில் குருக்களிடம் விலைக்கு வாங்கி அமெரிக்கர் ஒருவர் தம்முடைய நாட்டுக்குக் கொண்டுபோய் பிலடெல்பியா மியூசியத்தில் வைத்திருக்கிறார். இந்த நூற்றாண்டில் அமெரிக்கருள் தலை சிறந்த அறிஞருள் ஒருவராய் விளங்கும், பேராசிரியர் டாக்டர் நார்மன் பிரௌன் இம்மண்டபத்தின் சிறப்பைப் பற்றி ஒரு நூல் எழுதியுள்ளார்.

மண்டபங்கள், கலைச் சிறப்பு மிக்கன. மரச் சட்டக் கதவில் செய்வது போன்ற பலகணி, திருவலஞ்சுழியில் கல்லில் செதுக்கப்பட்டிருக்கிறது. ஆவுடையார் கோயில் கொடுங்கை போலவும், திருவீழிமிழலை வௌவால் நெற்றி மண்டபத்தில் இருப்பது போலவும் வேலைப்பாடுகளை எத்தனைப் பொறியியல் வல்லுநர்கள் சேர்ந்தாலும் செய்ய முடியாது.

வெளவால் முதலியவற்றால் கோயில்களின் தூய்மை கெடாமலிருக்கவும் விமான ஆவரணங்களில் முளைக்கும் செடிகளை அவ்வப்போது வெட்டி எறியவும், சேர சோழ பாண்டிய அரசர்கள் *வெளவாலடி மானியம், திருவாத வெட்டி மானியம்* என்று நன்செய், புன்செய் நிலங்களை வழங்கினர். இவ்வாறே விமான ஆவரணங்களில் முளைக்கும் செடிகளை அவ்வப்போது வெட்டி எறியவும் நிலங்களை மானியம் கொடுத்தனர்.

விக்கிரக வழிபாடு

இனி, விக்கிரக வழிபாட்டைப் பற்றிச் சிறிது கவனிப்போம். வைதீக சமயத்தின் வளர்ச்சிக்கு, விக்கிரகங்கள் இன்றியமை யாதன.

ஐரோப்பாவில் கிறிஸ்தவம், யூதம் என்ற இரண்டு முக்கியமான மதங்கள் இருக்கின்றன. யூதம், கிறிஸ்தவத்தினும் பழமையானது. ஆனால், அந்த மதத்தில் இறைவனுக்கு உருவம், படம், சிலை ஒன்றுமே இல்லை. இதனால் யூதர்களில் கலைஞர் தோன்றவில்லை. இதற்கு மாறுபாடாகக் கவினுறு தேவாலயங்களும், இயேசு பெருமானின் வடிவங்களும், வண்ண ஓவியங்களும் உருவாக்கியதால் கிறிஸ்தவர்கள் கோதிக் கட்டிடக் கலையை (GOTHIC ARCHITECTURE) உண்டாக்கி யுள்ளனர். நுண்ணிய புலமையுடைய கலைஞர்கள் பலர் தலைமுறை தலை முறையாக, கிறிஸ்தவர்களில் தோன்றிய வண்ணமாய் உள்ளனர்.

இவ்வாறே கோயில்களின் அமைப்பால் திராவிடக் கட்டிடக் கலை உருவம் பெற்றது. கல்தச்சரும், மரத்தச்சரும், கொத்தனாரும், கொல்லரும் ஏனைய கைவினைக் கலைஞர்களும் உருவாயினர். பின்னர், சிற்பக் கலையும் விக்கிரக வார்ப்புக் கலையும் வளர்ந்தன.

விக்கிரகங்களில் மூலவர் விக்கிரகம், உற்சவர் விக்கிரகம் என இரு வகை உண்டு. உற்சவர் உருவங்கள் திருவிழாக்களில் மட்டுமே பயன்படுவன. உற்சவரை அனைவரும் கண்டு வழிபட வசதியாக, தேர்கள் செய்யப்பட்டன. தேர் ஓடும் வீதிகளும் அமைக்கப்பட்டன. தேர்மீது உலாவரும் இறை உருவத்தைக் கண்டுகளிக்க, வீடுகளின் முன்புறத்தில் தெருவையொட்டி உயர்ந்த திண்ணைகள் அமைக்கப்பட்டன.

விக்கிரகங்களில் எத்தனையோ வகை உண்டு. தஞ்சைக் கோயிலில் பிரகதீசுவரர் திருவுருவம் பெரிது; ஏணி வைத்தேறி இறைவனுககு அபிஷேகம் செய்ய வேண்டிய அளவு உயரமானது. காஞ்சிபுரம் உலகளந்த பெருமாள் உருவம் எத்துணைப் பெரியது! நீண்ட கம்பு (துறட்டிக் கம்பு) ஒன்றில் தீபக் கம்பியைச் செருகி இறைவன் உருவத்தை, நாம் காண ஒளி காட்டுகிறார்கள்.

தென் ஆர்க்காடு மாவட்டம் திருவக்கரையிலுள்ள விநாயகர் திருவுருவம் 18 அடி உயரமானது. நாள்தோறும் பூஜை செய்வதற்கு ஏணிமீது ஏறித்தான், குருக்கள் செல்லுகிறார். திருவக்கரை அமுதாம்பிகை அம்மன் கோயில், சிற்பக்கூடமாக

விளங்குகிறது. இராமநாதபுரம், புதுக் கோட்டை மாவட்டங்களின் எல்லையில் கடலோரச்சாலை அருகே திருப்புனல்வாயில் என்னும் பாடல்பெற்ற தலம் உள்ளது. இங்குள்ள இறைவனான பழம்பதிநாதர் திருவுருவத்திற்கு அபிஷேகம் செய்ய, ஏணி ஏறித்தான் அர்ச்சகர் செல்லுகிறார். இது, அவ்வளவு உயரமானது. பாண்டி நாட்டில் தேவாரம் பெற்ற 14 தலங்களுக்கும் உரிய இறைவன் திருவுருவங்கள் இருப்பது இத்தலத்தின் பிறிதொரு சிறப்பு.

மூலவர் உருவங்கள்

மூலவர் உருவங்கள் எத்துணை வகைப் பொருள்களால் செய்யப்பட்டிருக் கின்றன? காஞ்சிபுரத்துக்கு அருகேயுள்ள திருமாற்பேறு என்னும் ஊரில் மண்ணாலான சிவலிங்கம் இருக்கிறது. திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கருங் குளத்தில் இறையுருவம் சந்தனத் தாலானது. மரம், சுதை, கல், படிகம், (வெள்ளைக்கல்) ஆகியவற்றாலான உருவங்களும் உண்டு. பழனி மலை மீதுள்ள தண்டாயுதபாணி திருவுருவம் நவபாஷாணத்தால் ஆனது. திருவலஞ் சுழியிலுள்ள விநாயகர் உருவம் கடல் நுரையால் ஆனது. புற்றால் ஆன உருவங்களும் உண்டு; சங்கரன் கோயிலிலும், நாகர்கோயிலிலும் புற்று மண், பிரசாதமாகக் கொடுக்கப்படுகிறது.

உற்சவ உருவங்கள் செய்யத் தொடங்கியபோது தமிழர்கள் அந்த உருவங்களைச் செம்பிலேயே செய்தார்கள். பொன், வெள்ளி போன்ற உயர்ந்த உலோகங்கள் இருப்பினும் மின்சார ஆற்றலைப் பாய்ச்சுவதற்குச் செப்புக் கம்பிதானே பயன்படுகிறது! இதையறிந்து தான் செப்பு விக்கிரகங்கள் செய்யப்பட்டன.

பின்னர், செப்பு, பித்தளை, வெள்ளி, வெள்ளீயம், பொன் ஆகியவை கலந்த பஞ்ச உலோகங்களில் திருவுருவங்கள் செய்யப்பட்டன.

திருவுருவங்களில் கலைச் சிறப்பு நிறைந்தது நடராஜர் விக்கிரகம். நமது மதத்தில் நம்பிக்கை இல்லாதவர்கள் கூட நடராஜ உருவத்தின் அழகில் மயங்கி, அவற்றைக் கலைக்கூடங்களிலும், வள மனைகளான மாளிகைகளிலும் பேணி வைத்திருக்கின்றனர். இதன் விளைவாக, கோயில்களில் நடராஜர் உருவங்கள் திருட்டுப் போகின்றன அல்லது உருமாறிவிடுகின்றன. அவ்வாறு நிகழா வண்ணம் நம் கலைச் செல்வமான சிலைகளைத் தக்கபடி பாதுகாப்பது நம் கடமை.

தஞ்சை மாவட்டத்தில் ஆடுதுறை அருகே கோனேரிராஜபுரம் என்ற வளமான ஊர் இருக்கிறது. அங்குள்ள நடராஜர் உருவத்தின் உயரம் ஆறு அடி. கலைநயம் மிக்க இந்த உற்சவ விக்கிரகத்தை அடிக்கடி எடுத்தால் அது பழுதடையக்கூடும் என்பதற்காக எடுக்க இயலாதபடி பாதுகாப்பாக அதைச் சுற்றிக் கற்சுவர் அமைத்துவிட்டனர். கோயிலுக்கெனப் பல அறங்காவலர்கள் இருந்தபோதிலும், இந்த நடராஜ விக்கிரகத்துக்கு மட்டும் தனி டிரஸ்டி இருந்து வருகிறார்.

விக்கிரங்களின் சிறப்பை நன்றாக உணர வேண்டுமானால் வழிபட்டால் மட்டுமே

போதாது. அவற்றைக் கையால் தூக்கியும் பார்க்க வேண்டும். திருச்சி மாவட்டம் கங்கை கொண்ட சோழபுரத்து உற்சவ விக்கிரகங்கள் கையால் தூக்க முடியாத அளவுக்குக் கனமானவை.

மேற்குத் தொடர்ச்சி மலையருகே, திருநெல்வேலி மாவட்டக் களக்காட்டிலுள்ள விக்கிரகங்கள் மிக மென்மையானவை. காரணம், அப்பகுதிகளில் அடிக்கடி சேரர்களுக்கும் பாண்டியர்களுக்கும் போர்கள் நடைபெற்றன. விக்கிரகத்திற்குக் கீழே, ஒரு வழி வைத்து, பாதாள மண்டபம் அமைத்திருக்கிறார்கள். போர் போன்ற ஆபத்துக் காலங்களில் கீழிருக்கும் சுரங்கங்கள் வழியாக சிலைகளைப் பாதுகாப்பான இடங்களுக்கு எடுத்துச் செல்வர்.

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்

போர்க்காலங்களில் பெண்களைப் பாதுகாக்க, விமானப் படையெடுப்பு நேரங்களில் தங்கும் இடங்கள் (AirRaid Shelter) போல, கோயில் மண்டபங்கள் பயன்படுத்தப்பட்டன. 1971-ல் வெள்ளம் வந்தபோது வீடுகளை இழந்த மக்கள், தஞ்சைப் பெரிய கோயிலில் தஞ்சம் அடைந்தார்கள். இவ்வாறு சமுதாயத்துக்குத் தேவையான எல்லா வழிகளிலும் கோயில்கள் பயன்பட்டமையால்தான் கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற பழமொழி ஏற்பட்டது.

தங்க விக்கிரகங்கள்

பல கோயில்களில் தங்க விக்கிரகங்கள் உள்ளன. காஞ்சிபுரத்திலிருந்த பங்காரு காமாட்சி என்னும் தங்கத்தினாலான விக்கிரகம், அதற்கென ஏற்பட்ட கோயிலில் தஞ்சை மேல ராஜவீதியின் வடகோடியில் இருக்கிறது. முகமதியர் படையெடுப்புகளின் போது தஞ்சைக்குவந்து தஞ்சமடைந்த காஞ்சி சங்கராச்சாரிய சுவாமிகள் அவர்களுடன் வந்த அர்ச்சகர்கள் இந்தத் திருவுருவத்தைக் கொண்டு வந்தனர். இதை அறிந்த தஞ்சை அரசர், இந்த அம்மனுக்கு ஒரு கோயில் எடுப்பித்தார்.

இறை உருவங்கள்

மூர்த்திகளின் அமைப்பில் நம் முன்னோரின் கலையறிவும் சுவையுணர்வும் தெள்ளத் தெளியப் புலனாகின்றன. லிங்கங்களில்தான் எத்துணை வகை? பஞ்சமுக லிங்கம், எட்டுப் பட்டை லிங்கம், 16 பட்டை லிங்கம், 108 பட்டை லிங்கம், 1008 பட்டை லிங்கம் (சகஸ்ரலிங்கம்) உள்ளன. இவ்வாறே வலம்புரி விநாயகரும் இடம்புரி விநாயகரும் நின்ற கோல விநாயகரும் ஆடுங்கோல விநாயகரும் சிலை வடிவில் இருக்கின்றனர். தமிழ்க் கடவுளாகிய முருகன், பாலசுப்பிரமணியன் என்னும் குமரக் கடவுளாயும், தண்டாயுதபாணியாயும், வள்ளி தெய்வானையுடன் கூடிய சுப்பிரமணியராயும் காட்சியளிக்கிறார்.

இறை உருவங்கள் மண்ணாலும் பொன்னாலும் மற்றும் பல உலோகங்களாலும் ஆனவை. இராமேச்சுரத்து மணலை எடுத்து, வட இந்தியாவுக்குக் கொண்டு போய் லிங்கம் அமைக்கும் பழக்கம் இன்றும் உள்ளது. சிதம்பரத்தில் படிகலிங்கமும் (சிவப்பு) ரத்தின சபாபதியும்

திருவையாற்றில் பிருத்விலிங்கமும் (மண்ணாலானது) திருமறைக்காட்டில் மரகத விடங்கரும் உத்தரகோச மங்கையில் மரகத நடராஜரும் சிலையாக உள்ளனர். காஞ்சிபுரத்தில் சொர்ணகாமாட்சி அருளாட்சி செலுத்துகிறாள். சங்கர நயினார் கோயிலில் கோமதி அம்மனுக்குத் தங்கப்பாவாடை அணிவிக்கப் பெறுகிறது. மதுரை, இராமேச்சுரம், திருவரங்கம் முதலிய கோயில்களில் உள்ள அணிகலன்களின் அளவும் அமைப்பும் மதிப்பும் சொல்லி முடியாது.

வாகனங்கள்

வாகனங்களில்தான் எத்துணை வகை? பழநியில் டவுன் கோயில் என்றும் ஊரம்பலம் என்றும் சொல்லப்படும் பெரியநாயகி கோயிலில், பழநி தேவஸ்தானத்தைச் சேர்ந்த எல்லாக் கோயில்களின் வாகனங்களும் உள்ளன. இவை அரியதொரு காட்சிக் கூடம்போல இங்கு ஒருசேரக் காட்சியளிக்கின்றன. இவற்றின் அழகும் வேலைப்பாடும் கண்டு இன்புறத்தக்கன. தஞ்சை மாவட்டத்தில் உள்ள சிக்கல் சிங்காரவேலர் கோயில் வாகனங்களும் இத்தகைய சிறப்புக்கு உரியன. ஒவ்வோர் இறைவனுக்கும் குறிப்பிட்ட ஓர் உயிரினம் வாகனமாக அமைந்திருக்கிறது.

விநாயகர்	–	பெருச்சாளி
சிவபெருமான்	–	ரிஷபம்
இறைவி	–	அன்னம்
முருகன்	–	மயில், ஆடு
சண்டிகேசுவரர்	–	குதிரை
திருமால்	–	கருடன்
பிரம்மா	–	அன்னம்
சனீஸ்வரர்	–	காக்கை
ஐயனார்	–	யானை
ஐயப்பன்	–	யானை
பைரவர்	–	நாய்
துர்க்கை	–	சிங்கம்

இயந்திர வாகனங்களை அமைக்காது உயிரினங்கள், விலங்கு வகைகளைத் தேர்ந்தெடுத்தது ஏன்? அவற்றை வழிபடும் இடங்களில் பொறித்தது ஏன்? அவைகளிடம் நாம் அன்பு காட்ட வேண்டும் என்பதே இதில் அடங்கிய தத்துவம்.

உயிரினங்களை வடிப்பதில் கலைஞர்கள் பெற்றிருந்த ஆற்றலை அவற்றில் பார்க்கலாம். குறிப்பாக, செங்கற்பட்டு மாவட்டத்தில் ஆடும் தெய்வங்கள் அங்கிங்கெனாதபடி எங்கும் காட்சி தருகின்றன. திருவொற்றியூர், திருவான்மியூர், திருக்கச்சூர் கோயில்களில் தியாகராசர் நடனத்திற்கென்றே வில் வைத்த பட்டறைகள் உள்ளன. எவ்வளவுதான் குலுக்கினாலும் கவிழ்ந்தாலும் ஆடவல்லான் திருமேனி நலுங்காது. திருவான்மியூரில் ஒவ்வொரு பௌர்ணமி நாளிலும் தியாகராசர் நடனத் திருவிழா நடைபெறுகிறது. அப்போது பல்லக்கைத் தூக்கிக்கொண்டு நடனமாடுவதும் சுத்த மத்தளம் என்ற இசைக் கருவியை இந்த ஆட்டத்தில் பயன்படுத்துவதும் மரபு.

காஞ்சிக்கு அருகேயுள்ள திருப்புட்குழி விசயராகவப் பெருமாள் கோயில் குதிரை வாகனமும் விசைச்சூட்சமத்தில் இயங்கும்.

கல்லில் வடித்த உயிரினங்களின்

அருமையான வேலைப்பாட்டுக்குச் சான்றாக இருப்பது எட்டுக்குடியில் முருகனைத் தாங்கும் மயில், அதன் மென்மையான கால்கள் எத்துணைத் திறமையாகக் கல்லில் செதுக்கப்பட்டிருக்க வேண்டும்.

உயிரினங்களும் மரவகைகளும்

மரம், செடி, கொடிகளைச் செதுக்கு வதில் சிற்பிகளுக்கு இருந்த பெரும் புலமையைத் தாரமங்கலம், கும்ப கோணத்தையடுத்த ராஜராஜேச்சுரம் (தாராசுரம்) கோயில்களில் பார்க்கலாம்.

இவ்வாறு சிற்பத்தில் மட்டும் காட்சிதரவல்ல யானையும், ஒட்டகமும், கிளியும், குரங்கும் உள்ள கோயில்கள் நூற்றுக் கணக்கில் உள்ளன. தலங்களுக்கெல்லாம் தலமரம் உண்டு. ஸ்தல விருட்சத்தை வழிபடுவதும் பக்தர்களின் மிக முக்கியமான கடமை ஆகும்.

ஆவணக்களரி

தேவாரச் சுவடிகள் தில்லைக் கோயிலில் பேணி வைக்கப் பெற்றிருந்தன. திருமந்திரச் சுவடிகள் திருவாவடுதுறையில் கிடைத்தன. இவற்றிலிருந்து, அரிய ஆதாரங்களை – இலக்கியச் செல்வங்களை – சேமித்து வைக்கும் நிறுவனமாகக் கோயில்கள் விளங்கியது புலனாகிறது.

உணவு வகைகள்

உணவு வகைகளைச் சற்று சிந்திப்போம். சின்னக் காஞ்சிபுரத்தில் வரதராஜப்பெருமாள் கோயில் மடப்பள்ளியில் அவிக்கப்படும் காஞ்சிபுரம் இட்லி பெரும் புகழ்பெற்றது. திருவரங்கம் திருப்பாவாடை – பாகு, வெல்லம், நெய் அடைத்த – சுவை உணவு, இராமநாதபுர மாவட்டம் அரியக்குடிக் கோயிலில் புளியோதரை செய்வதற்கென்று நில மானியம் கொடுத்திருக்கிறார்கள்.

சிதம்பரம் கோயில் பிரசாதமான கற்கண்டுப் பொங்கல், வங்காளிகளின் உள்ளத்தை ஈர்த்து, உடலை மகிழ்வித்து வருகிறது.

இந்தக் கற்கண்டுப் பொங்கல், தில்லை மூவாயிரவர்களான தீட்சிதர்களால் செய்யப்படுகிறது; அல்வா போன்று இன்சுவையுடைது; இரண்டுபடி (10 லிட்டர்) வடிக்கக் கூடிய பானை அல்லது பாத்திரத்தில் திட்டமாகத் தண்ணீரைக் கொதிக்க வைத்து, பிறகு அரைப்படி அரிசியையும் பருப்பையும் சேர்த்துக் கிளறிக் கொண்டேயிருக்க வேண்டும். சோறு குழைந்து கெட்டியான பிறகு, சீனாக் கற்கண்டையும் குங்குமப் பூவையும் அதே பானை அல்லது பாத்திரத்தில் சேர்த்துச் சோற்றுடன் கிளற வேண்டும்; இது கெட்டியான பிறகு ஏலப்பொடி, திராட்சை, கிஸ்மிஸ், முந்திரிப்பருப்பு, சாதிக்காய் முதலியவற்றைச் சேர்த்து நெய்யையும் விட்டுக் கலந்து அடுப்பிலிருந்து இறக்க வேண்டும்.

அரைப்படி அரிசிக்கு, 1/8 படி பயத்தம் பருப்பும், 2450 கிராம் சீனாக் கற்கண்டும் 840 கிராம் நெய்யும் 210 கிராம் பாதாம்பருப்பும், சிறிதளவு குங்குமப்பூ, ஏலக்காய், திராட்சை (கிஸ்மிஸ்), சாதிக்காய் (ஒரு காயில் பாதி ஆகியவையும் வேண்டும்.

சிதம்பரம் கோயிலுக்கு உரிய

மற்றொரு உணவு, சம்பா கொஸ்து என்ற வெண்சோறு; நெய்யும் மிளகும் சேர்த்துச் சமைத்தது; இதைக் கத்திரிக்காய்த் துவையலுடன் உண்ணுவர்.

பழநிப் பஞ்சாமிர்தத்தின் புகழ் பார் முழுதும் பரவியிருக்கிறது. பஞ்சாமிர்தம் அடைக்க, தகரம் செய்தனர். அதன் விளைவாக புனல், தகரக் குவளை, வாளி, அரிக்கன் விளக்கு ஆகியவை செய்யும் தொழில்களும் ஏற்பட்டன. பிள்ளையார்பட்டி மோதகமும், திருச்செந்தூர்ப் பிட்டும், திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில் திருக்கணமுதும், ஆழ்வார்திருநகரி வங்காரத் தோசையும் இவ்வாறே புகழ் பெற்றவை. திருப்பதி லட்டு பற்றி கூறவும் வேண்டுமோ?

பண்பொழி திருமலைக் குமரன் கோயிலில் திருக்கார்த்திகையன்று முருகனுக்கு ஒரு நூறாயிரம் வடைகள் கொண்ட மாலை அணிவிக்கிறார்கள்.

பிற மதத்தார் ஈடுபாடு

நமது கோயில்களில் பிற மதத்தாரும் பிற நாட்டினரும்கூட ஈடுபாடும் பக்தியும் கொண்டிருந்தனர் என்பதற்குப் பல நிகழ்ச்சிகளைக் கூறலாம். இறையருளால் தாம் பெற்ற நலங்களுக்கு நன்றி கூறுமுகத்தான், பவானி சங்கமேஸ்வரர் கோயில், விருத்தாசலம் (திருமுதுகுன்றம்) பழமலைநாதர் கோயில் ஆகியவற்றிற்கு கலெக்டர் வில்லியம் காரோவும், கலெக்டர் சார்லஸ் ஹைடும் முறையே தங்கச் கட்டிலும், தேர் வடம் இழுக்கும் சங்கிலியும் காணிக்கை செலுத்தியிருக்கின்றனர். இவ்வாறே திருவரங்கம் கோயிலுக்கு ராபர்ட் கிளைவும், மதுரை மீனாட்சியம்மன் கோயிலுக்கு ரூஸ் பீட்டர் துரையும் நகைகளை அன்பளித்துள்ளனர். புதுச்சேரியிலுள்ள மணக்குள விநாயகர், பிரெஞ்சுக்காரரும் வழிபடும் சிறப்புடையது.

திருமுட்டம் (உற்சவர்) பூவராகப் பெருமாள் பரங்கிப்பேட்டையில் நீராடச் சென்றபோது, வழிபட்ட முசுலிம் ஒருவர் பெருமானின் அடியாராகி பூரான் சாகிப் ஆன வரலாறும் குறிப்பிடத்தக்கது.

இந்நாளில் நமது மதத்தில் ஈடுபாடுள்ள பல பிற நாட்டு இளைஞர்கள் அமெரிக்கா முதலிய பல நாடுகளில் உள்ளனர்.

மருத்துவம்

பழநியில் தண்டாயுதபாணியின் திருவுருவம் மூலிகைகளால் ஆனது. இதனாலேயே பழநியில் அபிஷேகம் செய்யப்பெறும் பொருள்கள் சித்தவைத்தியர் களால் கண்கண்ட மருந்தாகப் பயன்படுத்தப் பெற்று, நாடெங்கும் பரவியுள்ளன.

திருக்குற்றாலத்திலும் அபிஷேகத் தைலம், மருந்தாகப் பயன்பட்டு நோயுற்ற வர்க்கெல்லாம் வாழ்வளிக்கிறது.

திருவான்மியூர் இறைவன் மருந்தீசர்; அங்கு கிடைக்கும் நீரைக் குடித்து நோயைக் குணப்படுத்திக் கொண்டவர் சில ஆயிரம் பேர். வைத்தீசுவரன் கோயிலில் கோயில் கொண்டிருக்கும் வைத்தியநாதர் தீராத நோயெல்லாம் தீர்க்கும் பெருமானாகக் காட்சி தருகிறார்.

ஆகமங்கள்

ஆகமங்களுக்கு மூல நூல்கள் அனைத்தும் தமிழிலேயே உள்ளன. இந்த ஆகமங்களின் அடிப்படையில்தான் அத்தனை சிற்ப சாஸ்திரங்களும் ஏற்பட்டுள்ளன. கோயில் கட்ட எப்படி இடம் தேர்ந்தெடுப்பது? அஸ்திவாரம் எத்தனை அடிபோடுவது என்பது போன்ற எல்லா விவரங்களும் தமிழிலுள்ள ஆகம நூல்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. இதை அறிந்து புதுச்சேரியிலுள்ள பிரெஞ்சு இன்ஸ்டிடியூட், ஆகமங்களைத் தமிழிலிருந்து பிரெஞ்சுக்கு மொழி பெயர்த்திருக்கிறது. ஆனால், நாம், நமது ஆகமங்களைப் போற்ற வேண்டிய அளவு போற்றவில்லை. ஆகமங்கள் வடமொழியில் மட்டும் இருப்பதாயும் அவை தமிழாக்கப் பட்டிருப்பதாயும் தவறாக நினைத்துக் கொண்டிருக்கிறோம்.

இசை

தமிழ் இசை, கோயில்களிலேயே வளர்ந்திருக்கிறது. கோயில்களை நம்பியே நீங்கள் வாழுங்கள், உங்கள் வாழ்க்கையைக் கோயில் வளர்ச்சிக்கே செலவிடுங்கள்; உங்களுக்கு வாழ்க்கைக் கவலைகள் வேண்டாம் என்று சொல்லி, பழந்தமிழ் அரசர்கள் சிவாச்சாரியார் களையும், மேளக்காரர்களையும் நியமித்து அவர்களுக்கு ஏராளமான நில புலன்களை வாரி வழங்கினர்.

சிவாச்சாரியார்கள் என்பவர்கள் முப்போதும் திருமேனி தீண்டுபவர்.

மேளக்காரர்கள் மேளம் வாசித்ததோடு ஆடற்கலையையும் வளர்த்தனர். பரத நாட்டிய முத்திரைகள் யாவும் சிவ பூஜைகளில் வருகிற முத்திரைகளே. தெய்வீக உணர்ச்சிகள் உள்ளத்தில் தோன்றுவதை, விரலிலும் முகபாவத்திலும் அபிநயத்துக் காட்டுவதே இக்கலை.

கி.பி. 1014-இல் ராஜராஜ சோழன் பொறித்த கல்வெட்டு ஒன்றிலே, தஞ்சைக் கோயிலில் திருப்பதிகம் ஓதும் நாற்பத்து எட்டு இசைவாணர்களுக்கும் இவர்களோடு தாளக் கருவி வாசிக்கும் இருவருக்குமாக ஒரு நிவந்தம் ஏற்பாடு செய்திருக்கிறான். இதன்படி, இந்த ஐம்பது பேருக்கும் ஆடவல்லான் என்று அழைக்கப்பெற்ற மரக்காலால் நாள்தோறும் ஆள் ஒன்றுக்கு முக்குறுணி நெல் வழங்க வேண்டும் என்றும், இவர்களில் யாராவது மடிந்தால் அல்லது பிற நாடுகளுக்குச் சென்றுவிட்டால், அந்த இடத்தில் அவருக்கு நெருங்கிய உறவினர் இதே நெல்லைப் பெற்றுத் திருப்பதிகம் விண்ணப்பம் செய்ய வேண்டும் என்றும், அப்படி நெருங்கிய உறவினர் இல்லையெனில் நியாயத்தாரே தகுதி யுடையவரை நியமித்து இந்த இசை வழிபாடு தவறாமல் நடந்துவரச் செய்யவேண்டும் என்றும் கல்லிலே எழுதினான்.

தேவாரத்திற்கு இங்ஙனம் நிவந்தம் செய்து காத்த ராஜராஜனைப் போலவே வேறு பல மன்னர்களும், செல்வர்களும் மானியங்கள் வழங்கினார்கள். இவற்றோடு மக்களிடையே நிலவிய பக்தியும் சேர்ந்து ஓரளவு இந்த மரபைக் காத்தது என்று சொல்ல வேண்டும்.

நமது கோயில்களில் சாரங்கி வாத்தியம் இருந்தது. மாலை நேரத்தில் சிவசந்நிதியில் தேவாரம் பாடி சாரங்கி வாசித்தால் சிவபக்தி விளையும் என்று யாழ்ப்பாணத்து ஆறுமுக நாவலர் போன்ற பெரியவர்கள் சொல்லுவார்கள். எனவே தமிழ்நாட்டுக் கோயில்களில் சாரங்கி வாத்தியம் மீண்டும் புத்துயிர் பெற வேண்டும்.

தமிழ் இசை, ஒளி மங்கியிருந்தபோது, சமயத்தைப் பின்னணியாகக் கொண்டு, ஞானசம்பந்தப் பெருமான் நாளும் இன்னிசையால் நற்றமிழ் பரப்பினார். அவர் பிறந்த சீர்காழிப் பகுதியும் அதன் சுற்றுவட்டாரமுமே பிற்காலத்தில் முத்துத் தாண்டவர், மாரிமுத்தா பிள்ளை, அருணாசலக் கவிராயர் போன்ற முப்பெரும் இசைப் புலவர்களை வழங்கிற்று.

தமிழ் நாட்டிலுள்ள சில கோவில்களில் இசைத் தூண்கள் நிற்கின்றன. அந்தத் தூண்கள் நிற்கும் மண்டபத்துக்கும், அந்த மண்டபத்துக்கு உரிய உற்சவத்துக்கும் ஏற்பவே, சில குறிப்பிட்ட பண்களைக் கட்டளைப்படுத்திக் கல்லிலே ஒலிக்கும்படி செதுக்கி நிறுத்தியிருக்கிறார்கள் நம்முடைய முன்னோர்கள்! இந்தத் தூண்களின் பண்ணமைப்பை ஆராய்ந்தால் பயனுள்ள பல செய்திகள் கிடைக்கும். மதுரை, நெல்லை, சுசீந்திரம் முதலிய கோவில்களிலே சிதைந்தன போகச் சில தூண்கள் இன்றும் நன்னிலையில் நிற்கின்றன. இவற்றிற்குச் சேதம் ஏற்படாதவாறு காப்பாற்றுவதோடு, மேற்கொண்டு சேதம் ஏற்படுமுன் ஆராய்ச்சியைத் தொடங்குவதும் அவசியமாகும்.

திருக்குற்றாலம், தென்காசி, செந்தில், ஆத்தூர், திருநெல்வேலி, செப்பறை முதலான கோயில்களில் நாதஸ்வரத்திற்கும் தேவார மரபுக்கும் இணையச் சிலராக தாள இசை முறைகளை உற்சவங்களோடு சேர்த்துக் கடைப்பிடித்து வருகிறார்கள். இவ்விதமே நம்முடைய கோவில்கள் பலவற்றிலும் வழங்கி வருகிற வழிபாட்டு இசையின் உற்சவச் சம்பிரதாயங்களை ஆராய்வது பயனுள்ள முயற்சியாகும்.

கலை வளர்ச்சி

நாதஸ்வரம் முதல் நாட்டியம் வரை அனைத்துக் கலைகளையும் நமது கோயில்களே வளர்த்து வந்திருக்கின்றன. நாட்டிய நூலில் சொல்லப்பெற்ற 108 நடனங்களும் நாட்டியக் கலையைப் பற்றிய செய்திகளும் தில்லை நடராஜர் கோயிலில் சிவகாமி அம்மனின் கோயிலில் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. இவற்றை அமைத்த பிற்காலச் சோழர்கள், இந்தோனேசியாவில் பிரம்பானான் நகரத்து திருமூர்த்திகள் கோயிலிலும் ஜாவாத் தீவிலும் இத்தகைய நாட்டிய முத்திரை களைப் பொறித்திருக்கிறார்கள்.

வரலாறு

நமது அரசர்களின் வரலாறுகளும் பிற செய்திகளும் கோயில் கல்வெட்டுகளிலேயே உள்ளன. தமிழ்நாட்டில் கிடைக்கும் கல்வெட்டுகளில் நூற்றுக்குத் தொண்ணூறு பங்கு கோயில்களிலேயே காணப்படு கின்றன.

வாழ்க்கை முறை

நமது சமூக வாழ்க்கை முழுவதும் கோயில்களுடன் பின்னிப்பிணைந்தது. தமிழர்களாகிய நாம் ஆடி, புரட்டாசி, மார்கழி, மாசி மாதங்களில் திருமணங்கள் நடத்துவதில்லை. மங்கல நிகழ்ச்சிகளுக்கு இந்தத் திங்கள்கள் விலக்கப்பட்டது ஏன்? இந்நான்கும் கெட்ட மாதங்களா? இல்லை.

ஆடி, இறைவனின் திருக்கல்யாண மாதம். மதுரையில் மீனாட்சி திருக் கல்யாணம் ஆடிப்பூரத்தில் நிகழும். சங்கரன்கோயிலில் ஆடித் தபசும், பிறகு திருமணமும் நடைபெறும். எல்லாச் சிவன் கோயில்களிலும் முறைப்படி ஆண்டவனை மணம் செய்து கொள்ள அம்மை தவம் கிடந்தது, ஆடிப்பூர நாளில்தான்.

புரட்டாசி – நவராத்திரிக்காலம்
மார்கழி – திருப்பள்ளி எழுச்சி மாதம்
மாசி – சிவராத்திரி விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவதற்கு உரியது

இந்த நான்கு மாதங்களிலும் திருமணங்கள் நிகழ்வதாயின், கோயில் ஊழியர்களும் பொதுமக்களும் திருமண ஏற்பாடுகளில் ஈடுபட்டிருப்பார்கள். இதன் விளைவாகத் திருவிழாவைக் கவனிக்கவும், அதற்குரிய பணிகளைச் செய்யவும், தேவையான ஆட்கள் கிடைக்க மாட்டார்கள். எனவே, திருவிழாவுக்காகச் சில மாதங்களும் திருமணத்திற்காகச் சில மாதங்களும் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

முடிவுரை

நமது கோயில்களின் அமைப்பை மேலை நாட்டார் உணருகின்றனர். எத்தனை கோடி வேண்டுமானாலும் கொட்டிக்கொடுத்து நமது கோயில்களைத் தங்கள் நாடுகளுக்குக் கொண்டுபோக அவர்கள் தயாராக உள்ளனர். நமது நாகரிகம், பண்பாடு, கலை வளர்ச்சி அனைத்துக்கும் அடிப்படை நமது கோயில்கள், அந்தத் தாயக ஊற்றை, நமது பெரிய பாரம்பரித்தை நாம் இன்னும் நன்றாகப் போற்றிப் பாதுகாக்க வேண்டும்.

ஆதாரம்

1. சிவஸ்தல மஞ்சரி
2. திருத்தலப் பயணம் – தமிழ்க்கடல் ராய.சொ.
3. திரு. சோமலெ எழுதிய தமிழ்நாடு மாவட்ட வரிசை நூல்கள்
4. Thiru Somalay - Palani - The Hill Temple of Muruga.
5. Thiru Somalay - Madurai Temple Renovation or Ruination?
6. கடலூர் சீதாராமநகர் திரு. தி.க. நாராயணசாமி நாயுடு அவர்களும் அறிஞர் மு. அருணாசலம் அவர்களும் திரு. மீ.ப. சோமசுந்தரம் அவர்களும் தெரிவித்த கருத்துகள்.
7. சதாசிவப் பண்டாரத்தார் – சோழர் வரலாறு.

சைவம் வளர்த்த தமிழ் இலக்கியங்கள்

செந்தமிழ் வாரிதி முனைவர் **இரா. செல்வகணபதி**

தமிழ் இலக்கியப் பகுப்புகள்

கடந்த 2500 ஆண்டுகளில் தமிழில் தோற்றம் கொண்டு வளர்ந்தமைந்த இலக்கியங்களைத் தமிழ் இலக்கியங்கள் எனக் கூறலாம். எழுந்த காலம், மற்றும் இலக்கியத்தின் யாப்பியல், கருப்பொருள் முதலியன தொடர்பாகத் தமிழ் இலக்கியங்களை வேறு பிரித்து ஆராயும் முறை நிலவி வருகிறது. சங்க இலக்கியம் எனப் பாகுபடுத்தல் ஒருவகை. யாப்பியல் மற்றும் கட்டமைப்பு வகையில் பெருங்காப்பியம், சிறு காப்பியம் எனப் பகுத்தல் மற்றொரு வகை. தமிழ்நாட்டு மக்களால் வழிபடப் பெறும் கடவுளர்களை மையப்படுத்தி எழுந்த இலக்கியங்களைச் சமய இலக்கியங்கள் என்றல் வழக்கு. மேற்குறித்த சமய இலக்கியங்களில் ஒருவகை, சிவனைக் குறித்து எழுந்த சைவ இலக்கியங்கள். இரண்டாவது, திருமாலைப் பாடுபொருளாகக் கொண்ட வைணவ இலக்கியங்கள். இவற்றுள் சிவனை மையப்படுத்தி எழுந்த சைவ இலக்கியங்களே இக்கட்டுரையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

சைவ-இலக்கியங்கள் என்ற குறியீடு

திருமுருகாற்றுப்படை காலம் தொடங்கித் தமிழ் மக்கள் வழிபடு கடவுளர்களிடையே உறவுமுறை கற்பிக்கும் பழக்கம் ஏற்பட்டது. எனவே, அவ்வகையில் தாய்த்தெய்வ வழிபாடாகிய சக்தி வழிபாடு, முருக வழிபாடு, கி.பி. 5 ஆம் நூற்றாண்டுக்குப் பின் தமிழகத்தில் தோற்றம் கொண்டு வளர்ந்த கணபதி வழிபாடு, சிவன்-சக்தி-முருகன் அம்சமாகக் கருதப்பட்ட சிறுதெய்வ வழிபாடு என்பன எல்லாம் ஒருங்கிணைந்து சிவவழிபாட்டின் அங்கங்களாயின. எனவே, சைவ இலக்கியங்கள் என்ற குறியீட்டில் மேற்குறித்த அனைத்து வழிபாட்டு இலக்கியங்களும் ஒருங்கிணைத்துக் கொள்ளப்பட்டன. வைணவம் மட்டும் தனித்து ஆராயப்பட்டது.

16 ஆயிரம் சைவத் தமிழ் நூல்கள்

உலக மொழிகளோடு ஒப்பிடுகையில், எண்ணிக்கை, காலப்பழமை, யாப்பியல், இசை வடிவங்கள் கொண்ட தமிழ் இலக்கியப் பரப்பே பரந்ததும், விரிந்ததும் ஆகும். தமிழில் கடைச்சங்க காலம் முதற்கொண்டு, 20ஆம் நூற்றாண்டின் இறுதி வரை தோற்றம் கொண்ட பல்வேறு வகையான இலக்கியப் பரப்பில், அறுபது விழுக்காட்டு இலக்கியங்கள் சைவ சமயம் குறித்து எழுந்தன என்பது நன்கு நினைவு கூறப்பட வேண்டியதாகும். சைவ சமயக் களஞ்சியம் ஒன்றைத் தயாரிக்கும் எனது கடந்த ஐந்தாண்டுக் கால முயற்சியில், சைவ சமய இலக்கியங்களின் தொகை பதினாறு ஆயிரத்தை நெருங்குவது வியப்பாக இருந்தது. இவற்றில், எண்பது விழுக்காட்டு நூல்கள் அச்சிடப்பட்டுள்ளன. இவற்றுள்

இடம் பெற்ற பாடல்களின் தொகை பல இலட்சங்களைத் தாண்டும்.

தொல்காப்பியம் முதல் சிலம்பு வரை

கால வரிசைப்படி, சைவ சமயம் தந்த தமிழ் இலக்கியங்களை இச்சிறிய பதிவில் அடையாளப்படுத்த மட்டுமே இயலும். விரிவான ஆய்வுகளுக்கு வாய்ப்பு இல்லை. 2750 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழந்தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில், வெற்றி தருபவளாகக் கொற்றவை குறிக்கப்படுகிறாள். 'கொடி நிலை கந்தழி' என்று தொடங்கும் நூற்பாவில், முருகன் பற்றிய குறிப்புள்ளதாக ஒரு சிலர் கருதுகின்றனர். தனிப்பாடல்களாக எடுத்துக் கொண்டால், எட்டுத் தொகையுள் ஒன்றாகிய பரிபாடலில், இசை வடிவாக முருகன், காடுகிழாள் (காளி) குறித்தெழுந்த சைவ-தனி-இசைப்பாடல்களைக் காண முடிகிறது. சைவம் தந்த தனி நூலாக, முதல் கொடையாகக் கிடைத்துள்ள நீண்ட வரிகளால் அமைந்தது நக்கீரனாரின் திருமுருகாற்றுப்படை. சிறிய இடை வெளிக்குப் பின் கி.பி. 3ஆம் நூற்றாண்டினதாகக் கொள்ளத்தக்க இளங்கோவடிகளின் சிலப்பதிகாரத்தில், சிவ-சக்தியாகிய உமையைப் போற்றிப் பாடும் தனிக் காதையாக வேட்டுவ வரியும், முருகனைப் புகழ்ந்து பாடும் 'குன்றக்குரவை' யும் அமைந்தன.

முதல் சிற்றலக்கிய வடிவங்கள்

கி.பி. 7ஆம் நூற்றாண்டுக்கு முன்னதாகச் சங்க இலக்கிய அகப்பாட்டு நெறியில் சிவனைப் பாடுபொருளாகக் கொண்டு கல்லாடம் என்ற அரிய நூல் தோன்றியது. 'கல்லாடம் கற்றவனிடம் சொல்லாடாதே' என்பது பழமொழி. முதல்கணபதி வாழ்த்து இந்நூலில் இடம் பெற்றது. தொடர்ந்து காரைக்கால் அம்மையாரின் மூத்த திருப்பதிகங்கள் இரண்டும், அற்புதத் திருவந்தாதியும், திருஇரட்டை மணிமாலையும் தோற்றம் கொண்டன. பதிகம் (10 பாடல்களைக் கொண்டது). அந்தாதி - (ஒரு பாடலின் நிறைவை அடுத்த பாடலின் தொடக்கமாகக் கொண்டு 100 பாடல்களில் அமைவது). இரட்டை மணிமாலை (இரண்டு வகை யாப்புகள் அமைந்த பாடல்களை மாறிமாறி அடுக்கி 20 பாடல்களில் நிறைவிப்பது) என்ற புத்திலக்கிய வடிவங்கள், அம்மையார் தமிழுக்குத் தந்த இலக்கியக் கொடைகளாகும்.

தமிழ் ஆகமம் - திருமந்திரம்

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற தொடருக்கு அடுத்துத் தமிழ் இனப்பெருமை பேசும் 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்ற சமய சமரசத்தை முன்வைத்த திருமூலரின் திருமந்திரம், சைவம் தந்த தமிழ் இலக்கியக் கொடைகளுள் சிறப்பாகக் குறிக்கத் தக்கது, 'என்னை நன்றாக இறைவன் படைத்தனன், தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே' எனக் கட்டியம் கூறித் தொடங்கும் திருமூலர், சைவத்தைத் தோத்திர நெறியிலிருந்து சாத்திர நெறிக்கு எடுத்துச் சென்றார். கி.பி. 14ஆம் நூற்றாண்டுக் காலப் பகுதியில், அறிவாராய்ச்சிக்கு உட்படுத்தக் கூடிய அறிவியல் பூர்வமான, 'சைவ

சித்தாந்தம்' என்ற பெருநெறி தோன்ற வித்திட்டவர் திருமூலர். தென்னாட்டு அறிஞர்களால் வடமொழியில் படைக்கப்பட்ட ஆகமங்களை, மொழிபெயர்ப்புச் செய்யாமல், தமிழ் ஆகமமாகத் திருமந்திரம் படைக்கப்பட்டது. அறம், யோகம், மருத்துவம், தத்துவம் எனத் தமிழில் எழுந்த ஒரு சைவக் கலைக்களஞ்சியமாகவே திருமந்திரம் நிற்கிறது. உணர்வுகளை ஒதுக்கி வைத்து விட்டு, இந்நூலை அறிவாராய்ச்சிக்கு உட்படுத்தினால் கிடைக்கும் புதையல்கள் அன்னைத் தமிழுக்கு அளப்பரிய செல்வங்களை வழங்கும்.

500 ஆண்டு பொற்காலம்

கி.பி. 650 காலப்பகுதி தொடங்கி, 550 ஆண்டுக் காலம் தமிழ்மொழியைச் சைவ சமயமே ஆட்சி செய்தது. கி.பி. 7ஆம் நூற்றாண்டு முதல் 12ஆம் நூற்றாண்டு வரை அளப்பரிய சிறப்புடைய சைவப் பனுவல்களும், சிற்றிலக்கியங்களும், பெருங்காப்பியங்களும் தோன்றின. பிற்காலச் சோழர்களின் எழுச்சியும், நால்வர் பெருமக்களின் வருகையும், சைவம் வழித் தமிழ்மொழிக்கு விலைமதிப்பற்ற ஆபரணங் களை அணிவிக்கக் காரணமாயின. பாலி மொழியை முன்வைத்துத் தமிழை அழிக்க முயன்ற பௌத்தர்களின் முயற்சியையும், வடமொழியை முன்வைத்துத் தமிழர் உயர்கலைகளைச் சீரழிக்க முயன்ற சமணர் முயற்சிகளையும் எதிர்த்துப் பெரும் சமயப் போராட்டம் நிகழ்த்திய சைவர்கள், வெற்றிவாகை சூடி, தமிழ் அன்னைக்கு அரியணை தந்தனர். 'நாளும் இன்னிசையால் தமிழ் வளர்க்கும் ஞானசம்பந்தன்', 'நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன் நாவினுக்கு அரையன்' என்ற சுந்தரர் பதிவுகள் அன்னார் இருவரும் சைவத்தின் பெயரால் தமிழ்வளர்த்த திறம் உரைத்தன.

சைவத் திருமுறைகள்

மூவர் தேவாரம், சங்க காலத்தில் நிலவிப் பின் அழிவுற்ற தமிழ் இசை வடிவங்களாகிய 103 பண்களில் 22 பண்களை மீட்டெடுத்தது. புத்திலக்கிய வடிவங்களை ஞானசம்பந்தர் படைத்தளித்தார். தாண்டகம் நாவரசர் கொடையாக அமைந்தது. கருவறையில் நிகழ்த்தப்படும் அருச்சனை என்பது தமிழ் இசையால் பாடுவதே என்பதைச் சுந்தரர் வரலாற்றில் வைத்துச் சேக்கிழார் புரட்சி செய்தார். உலகச் சமய இலக்கியங்களுள் நெஞ்சத்தை உருக வைக்கும் அனுபவ வெளிப்பாடாகத் திருவாசகத்தை மாணிக்க வாசகர் தமிழுக்குக் கொடையாக வழங்கினார். ஒன்பதாம் திருமுறை இசைப் பாமாலையாய் வந்தது. 11ஆம் திருமுறையில் புத்திலக்கிய வடிவங்களில் 40 சிற்றிலக்கியங்கள் இணைந்தன. *வரலாற்றுப் பெட்டகமாகக் கடவுளினும் பெரியன் மனிதன் என்பதை நிலைநாட்டிச் சேக்கிழார் பெரியபுராணம் என்ற காப்பியம் உபகரித்தார்.*

சைவ சித்தாந்தம்

சைவம் தமிழ்மொழிக்குத் தந்த விலைமதிப்பற்ற கொடைகளுள் ஒன்று சைவ

சித்தாந்தம். விவேகானந்தருக்கு அது, ஜே.எம். நல்லசாமி பிள்ளையால் மொழிபெயர்த்துத் தரப்பட்ட போது, அவரை அது வியக்க வைத்தது. மூவர் தேவாரம், திருமந்திரம் தந்த ஒளியில் மெய்கண்டார் படைத்த சிவஞான போதமும், அதற்கு சிவஞான யோகிகள் வரைந்த பேருரையும் அளவற்ற தமிழர்களின் நுண்மாண் நுழைபுலனுக்குக் கட்டியம் கூறி நின்றன. இந்நூலுக்கு அருணந்தி சிவாச்சாரியார் எழுதிய செய்யுள் வடிவிலான உரை நூலே, சிவஞான சித்தியார் என்பது. தமிழின் பெருமை பேசும் ஆறு நூல்களில் இதுவும் ஒன்றாகக் குறிக்கப்பட்டது. மெய்கண்ட சாத்திரங்களும், பண்டார சாத்திரங்களும் தமிழ்மக்கள் கற்றுணர்ந்திருந்த வடமொழி மற்றும் தருக்க அறிவுக்குச் சான்று கூறுவன.

சைவம் தந்த அறக்கொடைகள்

வள்ளுவத்தையும், பதினெண் கீழ்க்கணக்கில் உள்ள ஏனைய நூல்களையும் வழிமொழிந்து, சைவநெறி நின்ற ஔவையார், குமரகுருபரர், சிவப்பிரகாசர், உலகநாதர் போன்றோர் அரிய எளிய அறநூல்களைச் சைவத்தின் பெயரால் வடிவத்தமைத்தனர். கச்சியப்பரின் கந்தபுராணம், பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடல் புராணம், சிவஞான சுவாமிகளின் காஞ்சிப் புராணம் என்பன தமிழன்னைக்குச் சூட்டப்பெற்ற விலை மதிப்பற்ற ஆபரணங்கள். சிற்றிலக்கியம், தனிப்பாடல் வரிசையில் சித்தர்கள் ஆற்றிய பங்கும் மகத்தானது. ஒட்டக்கூத்தர், புகழேந்தி, பட்டினத்தார், தாயுமானார், சிவப்பிரகாசர், குமரகுருபரர், சைவத் திருமடத்துத் தலைவர்கள், அருளாளர்கள் வழங்கிய நூல் தொகுதிகள் கணக்கில் அடங்காதன.

பல்வகை இலக்கியச் செல்வங்கள்

சிவநெறி வழாது நின்று முருகனைப் பாடுபொருளாகக் கொண்டு, சந்தத் தமிழ் தந்த அருணகிரியாரின் திருப்புகழ் ஓர் தமிழ் அற்புதம். முருகனை மையப் பொருளாக்கிய வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள், சிதம்பர சுவாமிகள், பாம்பன் சுவாமிகள் நெஞ்சுருக்கும் கவிமழை பொழிந்தனர். ஈழத்து அறிஞர்களின் சைவப் பணிகள் தனியே ஆராயத்தக்கன. மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை பிற்காலக் கம்பராகவே திகழ்ந்தார். சீர்காழி மூவராகிய முத்துத்தாண்டவர், மாரிமுத்தாப்பிள்ளை, அருணாசலக் கவிராயர் என்பார் தமிழில் சிவனை மையப்படுத்தி இனிய பதங்களையும், கீர்த்தனைகளையும் வழங்கித் தமிழ் இசைக்கு ஆக்கம் சேர்த்தனர். கோபால கிருஷ்ணபாரதி, சுத்தானந்த பாரதி முதலியோரின் சைவப் பங்களிப்பும் குறிக்கத்தக்கன.

விருப்பு - வெறுப்பற்ற ஆய்வு

இன்னும் சைவத் தமிழ் இலக்கியங்கள் படைத்த நூறு நூறு கவிஞர்களும், ஆயிரக்கணக்கான நூல்களும் தமிழன்னை செம்மொழி சிம்மாசனம் ஏறத்துணை நின்றன. அவற்றை எல்லாம் விரிப்பின் பெருகும். சைவம் வளர்த்த தமிழை ஒதுக்கிவிட்டுத் தமிழ்மொழியின்

சீர்மையை நிலை நாட்ட முயல்வது நிரம்பாது. விருப்பு வெறுப்புகளை ஒதுக்கி வைத்துவிட்டுத் தமிழ் அறிஞர்களும், ஆர்வலர்களும், பல்துறை அறிஞர்களும் சைவ இலக்கியங்களை ஆய்ந்தால் அவை தரும் பெருமிதம் கடல் அளவுக்கும் மேல் என்பது புலனாகும். காலமாற்றங்களால் யாவும் சரியாக மதிப்பிடப்படவே செய்யும் என்று நாம் நம்பலாம்.

தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும்–கோவைத்
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவாச கம்என்று உணர்.

சைவத்தின் சமூகப் பெருமிதப் பதிவுகள்

சைவத்தமிழ் இலக்கியங்களில் காணப்படும் அரிய தொடர்கள் கீழே தரப்பட்டுள்ளன. இத்தகு நூல்களின் சமயங்கடந்த சமூக நாட்டத்தை இவை பறைசாற்ற வல்லன.

'இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை'

'நாமார்க்கும் குடியல்லோம் நமனை
அஞ்சோம்'

'யாவர்க்கும் ஆம் உண்ணும் போது
ஒரு கைப்பிடி'

'எல்லாரும் இன்புற்றிருக்க
நினைப்பதுவே அல்லாமல்
வேறு ஒன்று அறியேன் பராபரமே'

'என் கடன் பணி செய்து கிடப்பதே'

'வான் முகில் வழாது பெய்க;
மலிவளம் சுரக்க'

'சாத்திரம் பல பேசும் சழக்கர்காள்'

'கோத்திரமும் குலமும் கொண்டு
என் செய்வீர்'

'பறைச்சி ஆவது ஏதடா?
பனத்தி ஆவது ஏதடா?'

'இறைச்சி தோல் எலும்பிலே
இலக்கமிட்டு இருக்குதோ?'

'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம்
வாடினேன்'

'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்'

இத்தகு தொடர்களும், இவை போல்வன பலவும், சமயம் சார்ந்த பண்பாட்டில் செழித்த அரிய தமிழ்க் கொடைகள்.

நீறணி பவளக் குன்றமே! நின்ற
நெற்றிக்கண் உடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே! யோக
வெள்ளமே! மேருவில் வீரா!
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா!
அம்பொன்செய் அம்பலத்து அரசே!
ஏறணி கொடியெம் ஈசனே! உன்னைத்
தொண்டனேன் இசையுமாறு இசையே.

– திருமாளிகைத்தேவர்

திலக நுதல் உமை நங்கைக்கும்
திருவாவடுதுறை நம்பிக்கும்
குலக அடியவர்க்கு என்னையாட்
கொடுத்தாண்டு கொண்ட குணக்கடல்
அலதொன்று அறிகின்றிலேம் எனும்
அணியும் வெண்ணீறு அஞ்செழுத்து அலால்
வலதொன்றிலள் இதற்கு என செய்கேன்!
வயலந்தண் சாந்தையர் வேந்தேனே!

– சேந்தனார்

திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத் தமிழ் – ஓர் அறிமுகம்

பேராசிரியர், முனைவர், புரிசை **ச. நடராசன்,** திருப்பத்தூர்.

முன்னுரை

தமிழ் மாநிலம் செய்த அருந்தவப் பயனால் அருள் தன்மையும், புலமைத் திறமும் வாய்க்கப்பெற்றுத் தோன்றிய கவிவாணர்களில் சிறப்பிடம் பெற்றுத் திகழ்பவர் மார்க்கசகாய தேவர் ஆவார். திருவிரிஞ்சைப் பதிவாழும் ஆலமுண்ட நீலகண்டப் பெருமானுக்கு வழங்கும் திருப்பெயர் 'வழித்துணை நாதர்' என்பதாகும். இப்பெயரை வடமொழியில் 'மார்க்க சகாயர்' எனக் குறிப்பிடுவர். இவ்விறைவன் பெயரையே தன் இயற்பெயராகக் கொண்டு தமிழ் இலக்கண, இலக்கியங்களை ஐயம் திரிபறக் கற்று, அத்தலத்துக்கோயில் கொண்டு எழுந்தருளி யிருக்கின்ற முருகப்பெருமான் மீது சிற்றிலக்கியங்களில் ஒன்றான பிள்ளைத் தமிழைப் பாடிய பெரும்புலவர் அவர். பத்துப் பருவங்களால் இயன்ற அந்த நூலில் காப்புப் பருவத்தில் பதினோரு பாடல்கள் காணப்படுகின்றன. ஆண்பாற் பிள்ளைத் தமிழுக்குரிய காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர் எனப் பத்துப் பருவங்கள் ஆகிய இந்நூலில் மொத்தம் 101 பாடல்கள் உள்ளன.

கணபதி காக்க

பிள்ளையார் வணக்கமாக நூலின் முகப்பிலே காணப்படும் வெண்பாவில் மயில்வாகனன் மீது சந்தம் மிகுந்த பிள்ளைத் தமிழ் பாடுவற்குச் செந்தமிழ்சேர் வார்த்தைகளைத் தனக்கு யானைமுகக் கடவுள் ஊக்கமுடன் அளித்துக் காப்பான் என்று நம்பிக்கையோடு ஆசிரியர் பாடுகின்றார். அதற்கேற்ற வகையில் திருவருள் அவருக்குத் துணைபுரிந்து அருளிய பான்மையை, இன்பத்தமிழ் அருவியாய்ப் பொங்கிவரும் இப்பிள்ளைத் தமிழ் பாடல்களைப் படிப்பவர் நன்கு உணர்வர். **விழுமிய கற்பனை வளமும், வீறு சான்ற புராணச் செய்திகளும், முருகப்பெருமான் திருவிளையாடல் களும், அழகொழுக வடித்துக் காட்டப்படும் இலக்கியமாக இப்பிள்ளைத் தமிழ் இலங்கு கின்றது.**

பாலும், தேனும்

இறைவனுடைய திருவருள், திருவெண்ணீறு, வழித்துணை நாதர், மரகத வல்லியம்மை, கங்கை, கணபதி, வயிரவக் கடவுள், நெடுவேல், ஏறுமயில், தேவர்கள் இவர்களெல்லாம் திருவிரிஞ்சைப் பதிவாழும் ஆறுமுகனைக் காத்தருள வேண்டும் எனப்பாடுகின்றார். முருகன் கை ஆயுதமாகிய வேலும், அவன் ஏறி வரும் மயிலும், அவனால் காக்கப்பெற்ற தேவர்களும் முருகனைக் காக்க வேண்டும் என வேண்டுவது புதுமையாக உள்ளது. நக்கீரர் இடத்திலும், அருணகிரிநாதர் இடத்திலும் நூலாசிரியராகிய மார்க்கசகாய தேவர் ஈடுபாடு உள்ளவர் என்பதனைக் காண முடிகின்றது. வளரும் குழந்தைக்குப் பாலும், தேனும் உணவாக அமைத்து ஊட்டம் அளிக்கும் என்பர். முருகனாகிய அக்குழந்தைக்குத் திருமுருகாற்றுப்

படையாகிய தேனும், அருணகிரி நாதர் ஓதிய பதினாறாயிரம் திருப்புகழ் எனும் அமுதப்பாலும் ஊட்டம் சேர்க்கும் உணவாக அமைந்து காக்கும் என்று பாடுகின்ற அருமையில் அவருடைய தமிழ்ப்பற்றையும் நாம் அறிந்து கொள்ளலாம்.

திருத்தலச்சிறப்பு

திருவண்ணாமலையை நினைக்க வீடுபேறு ; தில்லைச் சிற்றம்பலத்தை வணங்க வீடுபேறு ; திருவாரூரில் பிறக்க வீடு பேறு ; காசிப்பதியில் இறக்க வீடுபேறு என்று அருளாளர் மொழிவர். **திருவிரிஞ்சை புரத்து வீதிகளில் நடந்து செல்வார்க்கே வீடுபேறு தரும் பெரும் கருணையாளன் வழித்துணை நாதன்** என்று இத்தலத்தின் பெருமையை ஆசிரியர் (47) பாடுகின்றார்.

இயற்கை எழிலும், வயல் வளமும்

பாலாற்றின் கரையில் அமைந்துள்ள விரிஞ்சிபுரத்தின் இயற்கை வளத்தையும், வயல்களின் எழிலையும் ஆசிரியர் கவினுறப் பாடுகின்றார். தென்னை மரங்களில் குரங்குகள் ஏறி முற்றிய தேங்காய்களைக் கீழே உதிர்த்துத் தள்ளுகின்றன. அவை நீர் நிலைகளில் விழுகின்றன. அத்தகைய நிலையில் அங்குள்ள வாளை மீன்கள் அதிர்ந்து பாய்ந்து மேலே சென்று பலாப்பழங்களை மோத அதன் சுளைகளில் இருந்து பெருகும் தேன் வயல்களில் பாய்கின்றன என்று பாடுகின்றார் (44). பொய்கையில் விளங்கும் அழகிய தாமரை மலரைக் கலக்கியும், குவளை மலரைச் சார்ந்தும் தேன் அருந்தி கரையேறிச் சோலையில் எருமை இனங்கள் உறங்க, அவை வண்டுகள் பாடும் காந்தார இசையைக் கேட்டு மடியில் இருந்து சொரியும் பால் கரும்புக்குப் பாய, நறுமணம் கமழும் விரிஞ்சிபுரம் (55) என்றும் பாடுகின்றார். **'விரிஞ்சிபுரம் மதில் அழகு' என்பது பழமொழி.** சூரியனுடைய ஒற்றைச் சக்கரத்தேரில் உள்ள குதிரைகள் வருந்துமாறு உயர்ந்தோங்கும் அழகிய மதில் மீது இடபக்கொடி விளங்க, அக்கொடி தேவலோகத்தின் கற்பக மலர்களில் மோத அம்மலர்களில் இருந்து தேன்மழை பொழிய வயல்களில் உள்ள பயிர்கள் தழைத் தோங்கும் பதி (80) என்று பாவலர் பாடுவது பலாச்சுளையில் தேன் கலந்து உண்ட இன்பத்தைத் தருகின்றது.

தல வரலாறு

அளவற்ற கருணையின் வடிவமாகத் திகழும் அம்பிகை தன் கருநிறம் நீங்கி மரகதவல்லியாகப் பொலிவு பெற இயற்றிய தவம் ; துந்து என்ற அரக்கனையழிக்கத் திருமால் மார்க்கசகாயப் பெருமானைத் துதித்துச் சக்கரம் பெற்றது ; கரன் என்ற கழுதை முகம் பெற்ற அசுரன் வழிபட்டுய்ந்தது ; நான்முகன் படைப்புத் தொழிலின் முறைமையையறிந்து கொள்ள முயன்ற முயற்சி ; **குந்தளதேசத்து மிளகு வணிகன் தனபாலனுக்கு திருவிரிஞ்சி நாதர் வழித்துணையாக வந்து, வேடர்களை விரட்டி உதவி புரிந்து 'வழித்துணை நாதர்' என்னும் திருப்பெயர் பெற்றது ;** சிவநாதன் என்ற அந்தணன் மகனாகிய சிவசருமன் என்ற சிறுவனுக்காக வளைந்து கொடுத்து அவன் செய்த திருமஞ்சன நீராட்டையேற்று அருள் பாலித்த சிறப்பு ஆகிய திருவிரிஞ்சிபுரத்து

வரலாறுகளையெல்லாம், மார்க்கசகாய தேவர், திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத் தமிழில் (03-22-27, 51, 94) அருமையாகப் பதிவு செய்துள்ளார்.

புராணச் செய்திகள்

எந்தக் காலத்தில் நிகழ்ந்தது என்று வரையறுத்துச் சொல்ல முடியாத செய்திகளைப் புராதனமானவை என்று குறிப்பிடுவர். 'புராதனம்' என்ற சொல் மருவி 'புராணம்' என்று ஆயிற்று என்பர். திருப்பாதிரிப் புலியூர் தவத்திரு. ஞானியார் அடிகள், சமய உலகில் நம்பிக்கையின் அடிப்படையில் செவிவழிச் செய்தியாக உலவும் பல்வேறு நிகழ்வுகளையும் புராண ஆசிரியர்கள், தாம் பாடும் இலக்கியங்களில் குறிப்பிட்டுச் சொல்வதுண்டு. இவ்வகையில் மன்மதனை எரித்த வரலாறு (85) திருமால் சக்கரம் பெற்ற வரலாறு (34) வீரபத்திரர் தட்சனுடைய யாகத்தை அழித்த திருவிளையாடல் (88) தேவர்களும், அசுரர்களும் பாற்கடலைக் கடைந்த போது தோன்றிய நஞ்சினை அமரர்களின் வேண்டுகோளை ஏற்றுச் சிவபெருமான் நஞ்சுண்ட வரலாறு (57) முப்புரங்களை எரித்த செயல் (95) ஆகிய புராதனச் செய்திகளை எல்லாம் வரகவி யாகிய மார்க்க சகாயர் பிள்ளைத் தமிழில் பாடிச் செல்கிறார்.

சமண சமயத்தில் இருந்து தாய்ச் சமயமாகிய சைவ சமயத்திற்குத் திரும்பிய திருநாவுக்கரசரைக் கல் தூணிலே கட்டி முரட்டுச் சமணர்கள் கடலிலே விட்ட பொழுது அதனையே தெப்பமாகக் கொண்டு மிதந்து அவர் கரை சேர்ந்த வரலாற்றை,

கற்ற அறிவிற் பெரிய அப்பரை முருட்டறிவு
கற்றவர்கள் கற்றூணிலே
கட்டி உத திக்குள் விட அப்பொழுது அவர்க்கது
கடக்க அருளைத் தூவுவார் – (பாடல் 40)

என்று மார்க்கசகாயர் கூறுகின்றார்.

திருநாவலூரில் சடையனார் மகனாகத் தோன்றியது ; சடங்கவியார் மகளை மணக்க முற்பட்டபோது அந்தணப் பெரியாரால் தடுத்தாட்கொள்ளப் பெற்றது, திருவாரூரில் நெற்குவியலைக் கண்டது ; புகலூரில் செங்கற்கள் பொன்னாகியது ; மணிமுத்தாற்றில் இட்ட பொன்னைத் திருவாரூர்க் குளத்தில் எடுத்தது ; திருவொற்றியூரில் சங்கிலியாரை மணந்தது; ஊடல் கொண்ட பரவையாரிடத்து ஆரூர்ப்பெருமானைத் தூதுவராக விடுத்தது; ஏயர்கோன் கலிக்காமரின் கோபத்தை மாற்றியது ; அவிநாசியில் முதலையுண்ட பாலகனை உயிர்பெறச் செய்தது ஆகிய சுந்தர சுவாமிகளின் அருள்திறத்தை அழகொழுக முத்தப் பருவம் பாடலில் (50) பாடியிருக்கின்றார் மார்க்கசகாயதேவர்.

மாலவன் கதை கூறும் மாண்பு

பகலிலும், இரவிலும், மனைக் குள்ளேயும், வெளியேயும் சாகக் கூடாது என்று வரம்பெற்று உலகம் முழுவதும் தன்னுடைய பெயர் நிலவுமாறு ஆட்சிபுரிந்த இரணியனை நரசிங்க வடிவம் கொண்டு வாயிற்படிக்கு இடையில் கிடத்தி அவனுடைய மார்பைப் பிளந்து குடலைக் கீறி, இரத்தத்தை அருந்திய மேகவண்ணம் உடைய திருமாலைப் பாடும் (83) ஆசிரியர், யமுனை நதியில் இருந்த காளிங்கன் என்னும் பாம்பின் படத்தின் மீது நின்று அதன் முதுகு ஒடியுமாறு நடனம் புரிந்தவரும், இரணியன்

மீது சினம் கொண்டு நரசிங்க மூர்த்தியாகத் தோன்றி வதம் செய்தவரும், ஏழுலகத்தையும் தன் மலரடியால் அளக்கும் வகையில் திரிவிக்கிரமனாகியவரும், தேவர்கள் வறுமை நீங்கிச் செல்வம் பெருகப் பாற்கடலைக் கடைந்து அமுதம் வழங்கியவரும், இடைவிடாது இந்திரன் பெய்வித்த மழையால் ஆயர்குல மக்களும், பசுக்களும் இடர்படாதவாறு கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்துக் காத்தவரும், ஆயர் மனையில் வெண்ணெயைத் திருடி உண்டவரும், நாரதரால் சாபம் பெற்ற குபேரனின் புதல்வர்கள் மருதமரமாக நிற்கத் தனது இடுப்பில் வலிமையாகப் பிணிக்கப் பட்டிருந்த உரலை இழுத்து அம்மரங்களை முறித்துச் சாபவிமோசனம் செய்தவரும், கம்சனால் ஏவப்பட்ட பூதனையென்னும் பேய்ப் பெண்ணை அவள் தந்த பால் அருந்துவதுபோல் கொன்றவரும் ஆகிய கண்ணபிரானுடைய திருவிளையாடல்களை நிரல்படக் கூறுவது சுவையான பகுதியாகும். (பாடல் 54)

கந்தவேளின் கருணை

மார்க்கசகாயதேவர் திருவிரிஞ்சைப் பதி வாழும் முருகப் பெருமானைக் குறித்துப் பிள்ளைத் தமிழ் பாடுவதற்கு அடிப்படையாய் அமைந்தது கச்சியப்ப சிவாச்சரியார் பாடிய கந்தபுராணமேயாகும். எனவே, கந்தப் பெருமானின் சுந்தர வரலாற்றுச் செய்திகளைப் பிள்ளைத் தமிழில் பற்பல இடங்களில் கூறி அகமகழ்கின்றார் ஆசிரியர். சிவபெருமானின் நெற்றிக் கண்ணிலிருந்து முருகப் பெருமான் திருவவதாரம் செய்த அருமை (12) வீரவாகுதேவர் உள்ளிட்ட ஒன்பது வீரர்களின் தோற்றம் (13) மகாமேருமலையைப் பம்பரமாக்கி, ஆதிசேடனைக் கயிறாகக் கொண்டு திருமால் எடுத்த ஓர் அவதாரமாகிய ஆமை முதுகின்மீது அப்பம்பரத்தைச் சுழல விட்டது, நாரதர் செய்த வேள்வியில் எழுந்த ஆட்டுக்கிடாவை அடக்கி ஊர்ந்தது (14, 15), பிரணவத்திற்குப் பொருள் தெரியாத பிரமனைக் குட்டிச் சிறையில் இட்டுத் தானே படைப்புத் தொழிலைச் செய்தது (16), சூரபத்மன் முதலிய அசுரரை வாட்டி, அமரர்க்கு வாழ்வளித்தது (17, 82, 86, 87) ஆகிய குமரக் கடவுளுடைய வரலாறுகளை ஆசிரியர் இனிமை ததும்பப் பாடுகின்றார்.

குமரன் குடியிருக்கும் கோயில்கள்

குன்றமெல்லாம் குமரன் குடியிருப்பான் என்பது முதுமொழி. அவன் கோயில் கொண்டு, அடியார்களுக்கு இகபர நலன்களையெல்லாம் அருளுகின்ற இடங்களாகப் பிள்ளைத் தமிழாசிரியர், சுவாமிமலை, நாகமலை, ஈஸ்வரமாமலை, செங்கழுநீர் மலை, தில்லை, திருச்செந்தூர், திருவண்ணாமலை, மதுரை, திருவாரூர், பழநி, திருத்தணிகை, திருவிடைக்கழி, பழமுதிர்ச் சோலை, திருப்பரங்குன்றம், கயிலைமலை ஆகிய ஊர்களைக் குறிப்பிடுகின்றார். இப்படிப் **பல்வேறு இடங்களில் எழுந்தருளியுள்ள ஆறுமுகச் செல்வர் கரபுரி எனப்பெறும் திருவிரிஞ்சையில் மகிழ்வுற வீற்றிருக் கின்றார் என்றும் பாடுகின்றார்.** முருகப் பெருமான் என்றும் இளையவனாகத் திகழ்கின்ற குமாரக் கடவுளாவார். அவர்

தனது தந்தையாராகிய சிவபிரானை, வழிக்குத் துணையாய் வருவாரை, 'ஐயா, ஐயா' என்றழைப்பார் என்றும் (75), மரகத வல்லியாகிய அன்னையாரை, 'ஆத்தே, ஆத்தே' என்று கூப்பிடுவார் என்றும் (74), வையம் அளந்த மாயவனாகிய மாமனை, 'அம்மான், அம்மான்' என்று (76) அன்பு பெருக வாய் மலர்ந்தருளுவார் என்றும் கூறும் பத்திகள் அருமையானவை. பக்திச் சுவை ததும்ப வரும் பாடல்களில், அடியவர்தம் இழிநிலையையும், பாடு பொருளாகிய இறைவனின் உயர் நிலையையும் தவறாமல் பாடுவர். திருவாசத் தேனும், திருப்புகழ் அமுதமும் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகள் எனக் கொள்ளலாம். திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத் தமிழிலும், அளவிலாக் கருணையுள்ள இறைவனது உயர்வும், குறைகளே மிகுதியாகப் பெற்ற அடியவரின் தாழ்வும் பல இடங்களில் இடம் பெற்றுக் கற்பார் உள்ளங்களைக் கனலிடையிட்ட மெழுகாய் உருகச் செய்கின்றன. 'உருகா மனமும், சிவஞானம் உணரா அறிவும், உனது புகழ் ஓதா நாவும், ஓதக்கேட்டு உவந்தே இனிய நதிபோலப் பெருகா விழியும் உடையேன்' என்றும், உருகாத மன இருளை உடையவன், இரக்கமுடன் யாருக்கும் உதவாதவன், உலகோர் பழித்த செயல் புரிபவன், பிறரிடம் யாசிக்க விரும்புவன், வழிபாடும், அர்ச்சனையும் அறியாதவன் (48) என்றும், தன்னைக் குறிப்பிடுகின்றார். கூர்மையான அம்புகள் போன்ற பார்வையால், மலரைச் செருகிய கூந்தலால், வஞ்சனை பொருந்திய சிரிப்பினால், மலைகள் போன்ற பெருத்த முலைகளால், கொடி போன்ற இடையால், மயக்குகின்ற மகளிரின் காமவலைக்குட்படும் தன்மையன் (91) என்றும் தன்னைப் பற்றிக் கழிவிரக்கம் தோன்றப் பாடுகின்றார்.

குமரக் கடவுளின் இணையிலாக் கருணையை அருணகிரிநாதர், அண்ணா மலையார் திருக்கோயிலின் வடபால் உள்ளகோபுரத்தில் ஏறித் தன்னுயிர் விடத் துணிந்த போது, அவரைக் காப்பாற்றிய முருகன் என்றும், தன்னைப் பாடுமாறு முருகன் வேண்ட, எப்படிப்பாடுவது என்று தன் அறியாமையைப் புலப்படுத்தியதன்றி அருணகிரிநாதர்க்கு '**பத்தி தரு முத்த நகை இறைவா**' எனப்பாடு என்று அடியெடுத்துக் கொடுத்து அவர் நாவில் வேலாற் பொறித்த இறைவர் (92) என்றும் அன்பு ததும்பப் பாடுகின்றார். மேலும், கற்கி முகி என்ற குதிரை முகம் கொண்ட பூதத்தினிடமிருந்து தன்னையும், தன்னோடு பூதத்தால் சிறை வைக்கப்பட்டுள்ள 999 பேரையும் மீட்டுக் காத்தருள திருமுருகாற்றுப்படை என்ற பனுவலை நக்கீரதேவர் பாடவும், ஆறுமுகத்தே அண்ணல் அங்கே தோன்றி, அப்பூதத்தை யழித்து, அடியார்களைச் சிறை விடுத்த சிறப்பையும் (93) ஆசிரியர் ஆர்வமொடு பாடுகின்றார். தன்னைப் பாடுமாறு வேண்டுவது இறைவனின் வழக்கம். சுந்தரரை அப்படித்தான் திருவெண்ணெய் நல்லூர்ப் பெருமான் பாடுமாறு பணித்தான். அருணகிரிநாதரை, ஆறுமுகநாதன் அண்ணாமலையில் தன்னைப் பாடுமாறு கட்டளையிட்டான். ஆனால், இதற்கு நேர்மாறாக 'முட்டை' என்று தன்னைப் பாடுமாறு பொய்யா மொழிப்

புலவரை வேடனாக வந்த முருகப்பெருமான் வேண்டவும், அப்புலவர் பாடிய பாட்டுப் பொருட்குற்றம் உடையதாகயிருக்கவே வேடனாக வந்த அவ்வேலவன் 'பொய்யாமொழி' என்ற பெயர் இடம் பெறுகின்ற வகையில் அப்புலவனே ஒரு வெண்பாவைப் பாடினான் என்ற வரலாற்றை, மார்க்கசகாயர் சப்பாணிப் பருவத்தில் (35) குறிப்பிட்டு, கந்தவேளின் கருணையைப் போற்றிப் பரவுகின்றார்.

திருவடிகளைப் போற்றல்

கவிபாடும் புலவர்களுக்குச் சொற் பஞ்சமோ, பொருட்பஞ்சமோ இருத்தல் கூடாது. 'கவிதையில் தன்னை வைத்திடுக, தன்னை வைத்திடுக' என்று சொற்கள் கவிஞர் முன் நின்று கெஞ்சவும், தேவைப்படும்போது 'உன்னை வைப்பேன் ; உன்னை வைப்பேன்' என்று பதில் உரைக்கவும் வல்லவர்களே காலம் கடந்தும் வாழ்கின்ற கவிவாணர்களாவர். அத்தகைய கவிவாணர் வரிசையில் நம் மார்க்கசகாய தேவரும் நிச்சயம் இடம்பெறும் ஆற்றலாளர் என்பதில் எட்டுணையும் ஐயம் இல்லை. சான்றாக வொன்று காண்போம். 'சிற்றில் பருவம்' என்பதோர் பகுதி பிள்ளைத் தமிழில் இடம் பெறுவதுண்டு. சிறுமியர்கள் மண்ணில் சிறிய வீடுகளைக் கட்டி விளையாடுவர். சிறுவர்கள் அத்தகைய வீடுகளைத் தம் பாதங்களால் மிதித்து அழித்து விளையாடுவர். திருவிரிஞ்சிபுரத்து வீதிகளில் சிறுமியர் இழைத்த மண் வீடுகளைக் குமரக் கடவுளாகிய குழந்தை வீதிக்கு விளையாட எழுந்தருளும்போது அழித்துவிடக்கூடாது என்று பெண் குழந்தைகள் வேண்டுவதாக அமைந்த பாடல்களைக் கொண்டது இப்பருவப் பாடல்களாகும். அப்பருவத்தின் முதற் பாடலில் ஆசிரியர், முருகன் திருப்பாதங் களைத் தாமரைக்குள்ள பல்வேறு பெயர்களால் குறிப்பிடும் அழகு கற்போர் உள்ளத்தையெல்லாம் கொள்ளை கொள்ளும் பான்மையதாகும்.

வேதன்முடியிற் படும் **கமலம்**
விண்ணோர் சிரத்தில் அணி**பதுமம்**
விசய மயில் மேல் **எழுமு ளரி**
விமலர் புயம் சேர் திருக் **கஞ்சம்**
சாதம் ஒழிக்கும் **அம்புயம்**
எம்தலை மேல் இருக்கும் **புதுநளினம்**
தண்மை சதங்கை கிங்கிணிசேர் **சலசம்**
(சாதம் – பிறப்பு)

பிள்ளைத்தமிழ் பாடல்களில், பாட்டின் இறுதியடிகள் எனப்பெறும் மகுடங்களை யமைப்பதில் மார்க்க சகாயப் புலவர் வல்லவராகத் திகழ்கின்றார்.

திருமுருக அரிமருக வரதகுரு பரகுமர
செங் கீரை யாடி யருளே
சங்கரி திகம்பரி சிதம்பரி தரும்குமர
சப்பாணி கொட்டி யருளே
சிறு தாமரைக்கு நிகர் அறுமாமுகக் குழவி
திருவாயின் முத்தம் அருளே
முழுத்தமிழ் தெரிகர புரத்து அறு முகமணி
முழக்குக சிறுப றையே
சிவசிதம் பரநடன மிகு திகம் பரர்குமர
சிறுதேர் உருட்டி யருளே

என்பன அவர் அமைத்த மகுடங்களில் சிலவாகும்.

அம்புலிப்பருவத்து அற்புதம்

விண்ணில் தவழும் அம்புலியைக் குமரக் குழந்தையோடு மண்ணிலிருந்து விளையாட வருமாறு அழைப்பதுதான் மையப் பொருளைக் கொண்ட பாடல்களின் தொகுப்பே அம்புலிப்பருவமாகும். குமரனுக்கும், அம்புலிக்கும் இடையே நிலவும் ஒற்றுமைகள் (சமம் 62) வேற்றுமைகள் (பேதம் 63, 66, 68) குமரக்கடவுள் அம்புலிக்கு வழங்கும் கொடைகள் (தானம் 64, 65, 69, 70, 71) விளையாட வராமல் விண்ணிலேயே இருந்தால் அம்புலிக்கு முருகப்பெருமான் கொடுக்கும் தண்டனைகள் (தண்டம் – 67) என நான்கு வகையான உபாயங்கள் விளங்கப் பாடுவது புலவர்க்குச் சற்றுக் கடுமையானதாகும். என்றாலும் கருவிலே திருவுடைய கவிவாணர்க்கு இப்பருவப் பாடலும் எளிதானதேயாம். இப்பிள்ளைத் தமிழில், மார்க்கசகாயப் புலவர் நிலவுக்கும் நிர்மலனாகிய முருகனுக்குமிடையே காணப்படும் வேற்றுமைகளைப் பின் வருமாறு கூறுகின்றார். அம்புலி : மேருமலையை வலம் வரும் ; சூரியனுக்குப் பின்னடைவது ; களங்கமான மறு முகம் உடையவன் ; புற இருளைப் போக்கும் ; பாம்பின் உணவாக இருப்பவன் ; கலைகள் வளர்வதும், தேய்வதுமான இயல்பினை யுடையவன் என்கிறார்.

முருகப் பெருமான்: நல்லுல கத்தையே வலம் வருவான்; முச்சுடரையும் விஞ்சும் ஒளிபடைத்தவன்; களங்கமற்ற ஆறுமுகத் தோன்; மனத்திருளைப் போக்குபவன்; பாம்பை உண்ணும் மயல்வாகனன்; எக்காலத்திலும் எழிலோடு ஒளிர்பவன் என்று தெரிவிக்கின்றார்.

நிறைவுரை

பிள்ளைத் தமிழுக்குரிய இலக் கணங்கள் யாவும் நிரம்பப் பெற்று, விரல்விட்டு எண்ணக் கூடிய சிறந்த பிள்ளைத் தமிழ் நூல்களில் ஒன்றாகத் திகழும் இடம்பெற்ற இந்த இனிய நூலைப் பாடிய புலவர் பெருந்தகை மார்க்க சகாயதேவர் அவர்களின் வாழ்க்கை பற்றி குறிப்பொன்றும் காணக்கிடைக்காதது நம்மனோரின் தவக்குறைவேயாகும். எனினும், தமிழ் மொழியின் பால் அளவற்ற ஈடுபாடும், அருணகிரிநாதர், நக்கீரர் ஆகிய முருகனடியார்களிடத்தில் மிகுந்த மரியாதையும், சைவ, வைணவ வேறுபாடு கருதாமையும், இயற்கையை ஊன்றிப் பார்க்கும் இயல்பும், மடை திறந்த வெள்ளம்போல் கவிபாடும் ஆற்றலும் உடைய அரும்புலவர் ஆகிய அவர் புகழ் என்றென்றும் நிலைத்திருக்கும் என்பது உறுதி. முருக பக்தர்கள் விரும்பிப் பாராயணம் செய்யும் நூல்களில் இப்பிள்ளைத் தமிழ் நூலும் ஒன்று என்பதை இலக்கிய ஆய்வாளர்கள் நன்குணர்வர்.

எம்தாயும் எனக்கு அருள் தந்தையும்நீ ;
சிந்தாகுலம் ஆனவை தீர்த்து எனைஆள்;
கந்தா, கதிர்வேலவனே, உமையாள்
மைந்தா, குமரா, மறைநாயகனே
– அருணகிரி கந்தர்அனுபூதி.

திருத்தொண்டர் புராணமே சைவ இலக்கணம்

ஆன்மிகச் சுடர், திருத்தொண்டர் மாமணி **ஆ.வீ. தட்சிணாமூர்த்தி,** தலைவர், சேக்கிழார் மன்றம், ஆர்க்காடு.

சைவத்தின் தோற்றம்

மிகத் தொன்மையான காலத்திலேயே தமிழகத்தில் சைவம் தோன்றியது. தமிழ் தோன்றியபோதே சைவமும் தோன்றியது. ஆதி முதற் பரமாய பரஞ்சுடர், சங்கம் ஏறி தமிழைத் தந்தார். மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் இதை,

"கடல் கொண்ட குமரிக் கண்டத்தில் கி.மு. 5000 ஆண்டளவில் தமிழ்த் தோன்றியது".

என்கிறார்.

சிந்துவெளி அகழாய்வுகளும் **இதை** உறுதிப்படுத்துகின்றன.

தமிழ் தந்த விரிசடைக் **கடவுளையே** தனிப்பெருந்தலைவராகக் கொண்டு, சைவம் தழைத்தது. உலகில் சைவ சமயமே முதலில் தோன்றிய சமயம். பல்வேறு சமய ஆய்வாளர்களும் இதை ஏற்றுக் கொண்டுள்ளனர். ஆங்கிலப் பாதிரியார் **போப்** என்பவர் முதன்முதலில் சமயத்தைத் தந்தவர்கள் தமிழர்களே என்று கூறுகிறார். அனாதி காலந்தொட்டு தமிழும் சைவமும் தமிழர்களின் இரு கண்களாக விளங்கிக் கொண்டுள்ளன.

அரிய சித்தாந்தங்களைக் கொண்டது சைவம். ஒன்றே குலம் ஒருவனே இறைவன் என்பதுடன் முப்பொருள் உண்மைகளையும் எடுத்துக் கூறுகிறது. உயிர் **உய்தி** பெற மனமெய்வாக்கால் இறைவனை வழிபடச் சொல்வதுடன், உயிர்களுக்கு ஒல்லும் வகையால் தொண்டுகள் செய்ய வேண்டுமென உணர்த்துகிறது. சைவ சித்தாந்தக் கோட்பாடுகளை அருணகிரியார் சிறப்பித்துப் பாடுகிறார்.

"சுருதிமுடி மோனம் சொல் சிற்பரமமான சிவசமய வடிவாய் வந்த அத்துவிதம்"

சைவம் சிறந்திருந்த காலத்தில் சிறந்திருந்த தமிழகத்தில் வைதீகம் மெல்ல நுழைந்தது. சிந்தனையை முடக்கி உணர்ச்சிகளைத் தூண்டும் பல பொய்க் கதைகளை அது மக்களிடையே பரப்பி விட்டது. இதனால் சைவ சமயத்தில் விரிசல்கள் ஏற்பட்டுவிட்டன. சைவம் ஆறு சமயங்களாகப் பிரிந்தன. சைவம், வைணவம், சாக்தம் சௌரம், காணாபத்தியம், கௌமாரம் ஆகும். மேலும், அதில் **சிவாத்து**வித சைவம், சுத்தசைவம், சித்தாந்த சைவம், வீரசைவம், காஷ்மீர் சைவம் எனக் கிளைத்தன. சைவம் மேலும் இளகி ஆறு அகச்சமயங்களாகப் பிரிந்தன. அவை பாடாணவாத சைவம், பேதவாத சைவம், சிவசமவாத சைவம், சிவசங்கிராந்த சைவம், ஈசுரஅவிகாரவாத சைவம், சிவாத்துவித சைவம் என்பன. மேலும் அது வெடித்து ஆறு அகப்புற சமயங்களாகச் சிதறின. அவை, பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், **வைரவம்**, ஐக்கியவாத சமயம் ஆகும்.

அருவருப்பும் அச்சமும் ஊட்டக்கூடிய பலியிடும் பயங்கர சடங்குகளைக் கொண்ட அகோரிகளும், ரணபத்ரகாளி பக்தர்களும்

தோன்றி கஞ்சாமயக்கத்துடன் எங்கும் திரிந்தனர்.

இதனால் மக்கள் மனதில் சைவத்தின்பால் இருந்த பற்று மறைந்து வெறுப்பு ஏற்பட்டது. கடவுளை மறுக்கும் பரசமயங்கள் இந்தச் சமயத்தைப் பயன்படுத்திக்கொண்டன. தீமைக்கு வலிவும் வேகமும் அதிகம் என்பார்கள். அதற்கிணங்கக் கொல்லாமை எனும் போர்வையில் மறைந்து வந்து மக்களைப் பிடித்துக் கொண்டன. பொல்லாத சமணமும், பௌத்தமும். மக்களுக்கு நல்வழிகாட்ட பெரியவர்கள் யாரும் இல்லை. அதனால்தான் அப்பர் பெருமான்.

"நல்லாறு தெரிந்துணர நம்பர்
அருளாமையினால்
கொல்லாமை மறைந்துறையும்
அமண்சமயம் குறுகுவார்"

என்று கூறுகிறார் சேக்கிழார் (திருநாவுக்கரசர் 37)

அதேபோல் ஈசன் திருவிளை யாடல்கள் நடந்த மதுரையில் இருவர் மட்டுமே சைவர்களாக இருந்தனர் என்கிறார் சேக்கிழார் சுவாமிகள்.

"செல்வப் பாண்டிமா தேவியாரும் குறைகழல் அமைச்சனாராங் குலச்சிறையாரும் என்னும் இருவர்தம் பாங்கு மன்றிச் சைவம் அங்கெய்தாததாக".

- திருஞானசம்பந்தர் 603.

தமிழகத்தின் இந்த அவல நிலையைக் கண்ட அன்பர்கள் இறைவனிடம் அன்றாடம் முறையிட்டு அழுதனர். இரக்கம் கொண்ட இறைவன் காரைக்காலில் 'புனிதவதி' என்ற தெய்வத்தாய் தோன்ற அருள் புரிந்தார். பேயுரு பெற்று கயிலை சென்று இறைவனிடம் வேண்டிய வரங்கள் பெற்ற அம்மையே முதன்முதலில் சைவத்திற்குச் சரியான விளக்கத்தைத் தந்தவர். அதன்பிறகு நாயன்மார்களும் சமயக் குரவர்களும் தோன்றினர். தன்னை இறைவனே அனுப்பியதாகத் திருத் துருத்தியில் திருஞானசம்பந்தரே கூறுவார். சமயக் குரவர்களும் நாயன்மார்களும் சைவ சமயத்தை வளர்த்தனர். மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும் வகையில் விளக்கிக் கூறி, மக்களை நல்வழிக்குத் திருப்பினர். மக்கள் அன்புடையவர்களாகவும் பண்புடை யவர்களாகவும் இன்பமுடன் வாழ்ந்து வந்தனர்.

மறதிமிக்க இம்மனிதர்கள், நாயன் மார்கள் புரிந்த தொண்டுகளை எளிதில் மறந்து விடுவார்கள் என்று கருதிய ஈசன், ஆலாலசுந்தரனாரை அனுப்பி '**திருத்தொண்டத்தொகை**' என்ற அற்புத ஆவணத்தை அளிக்கச் செய்தார். இத்திருத்தொண்டத் தொகையின் விரிவே திருத்தொண்டர்புராணம் என்னும் பெரிய புராணம் சேக்கிழார் செய்தது ஆகும்.

திருத்தொண்டர் புராணம்

ஒப்பற்ற பெரும் புலவரால் எழுதப்பட்ட ஒப்பற்ற இலக்கியம். சைவ அடியார்களைப் பற்றித் தமிழகத்துப் புலவரால் தமிழில் எழுதப்பட்ட முத்தமிழ்க் காப்பியம். கருணை பொழியும் பெரியவர்களைப் பற்றிப் பேசுவதால் இதைப் பெரியபுராணம்

என்றனர். தில்லை கூத்தப் பெருமானால் அடியெடுத்துக் கொடுக்கப்பட்டதால், 'இது உலகம் அனைத்துக்கும் உரிய நூல் எனலாம்' என்று சேக்கிழார் கூறுவார்,

"உலகம் உய்யவும் சைவம் நின்றோங்கவும்"

(40 திருமலைச் சிறப்பு)

12ஆம் திருமுறையான பெரியபுராணம் பதியும் பசுவும் இரண்டறக் கலப்பதை விளக்குகிறது. பசு, தான் தனது என்ற நிலை கெட்டு, தற்போதம் பெற்று, எல்லாம் பதியே என்ற உணர்வு கூட ஒருமை மனத்துடன் வழிபாடு செய்து வீடு பேறு பெறுவதையே கோட்பாடாகக் கொண்டது சைவம். இந்தக் கோட்பாட்டைப் பெரியபுராணம் எல்லா நாயன்மார்கள் சரிதத்திலும் விளக்குகிறது. அதில், உயிர் வீடு பேறு அடைய, அதனுடைய வழிபாடு மட்டும் காரணமல்ல. அதற்குக் காரணம் இறைவனின் எளிவந்த தன்மையே என்றும் உணர்த்துகிறது.

சிவபெருமான் (பதி)

சிவனைப் பற்றியதால் சைவம் எனப்பட்டது. அவர் பிறப்பு இறப்பு என்பது இல்லாதவர்.

"ஆதியும் முடிவும் இல்லா அற்புதன்"

(1 திருநீலகண்டர்)

அவர் இங்கங் கெனாதவாறு எங்கும் இருப்பவர்.

"பொங்கு மாமறைப் புற்றிடங் கொண்டவர் எங்குமாகியிருந்தவர்"

(16 திருநகரச் சிறப்பு)

அவர் எல்லாம் வல்லவர். எதையும் அளிக்கும் வள்ளல்.

"தில்லையுள் மாநடஞ்செய் வரதா"

(1. திருநீலகண்டர்)

அவர் தன்மையை நம்மால் அறிந்துகொள்ள இயலாது.

"இன்ன தன்மையன் என்றறியாச் சிவன்"

(13 திருமலைச் சிறப்பு)

சிவனே சைவர்களின் முழுமுதற் கடவுள். சிவனைத் தவிர வேறு தெய்வத்தை வணங்காதவர்கள் சைவர்கள்.

"சம்புவின் அடித் தாமரைப் போதலால்...... இறைஞ்சார்"

(19. திருமலைச் சிறப்பு)

ஈசன் இயற்கையோடு இயற்கையாய் இருப்பவன். எனவேதான் சேக்கிழார் சுவாமிகள் இறைவன் வீற்றிருக்கும் ஆலயங்கள் எல்லாம் சோலை சூழ்ந்த இடத்தில் அமைந்திருப்பதைக் காட்டுவார்.

"மன்றல் விரவு மலர்ப்புன்னை மணஞ்சூழ்
சோலை உப்பளத்தின்
முன்றில் தோறுஞ்சிறுமடவார் முத்தங்
கொழிக்கும் மறைக்காட்டுக்
குன்ற வில்லியார் மகிழ்ந்த கோயில்"

(265-திருநாவுக்கரசர்)

"தேனடைந்த மலர் பொழில் தில்லை"

(2-பாயிரம்)

இறைவனுக்கு ஊருமில்லை, பேருமில்லை, உருவமும் இல்லை. ஆனால், சைவர்கள் அவரை மூன்று நிலைகளில் பூசிக்கிறார்கள். இதைச் சேக்கிழாரும் கடவுள் வாழ்த்துப் பாடலில் குறிப்பிடுகிறார்.

உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன் - அருவநிலை
அலகில் சோதியன் - அருவுருவ நிலை
அம்பலத்தாடுவான் - உருவ நிலை

இறைவன் சோதியாய் இருக்கும் நிலையே அருவுருவ நிலை. அதுவே இலிங்கம். இதை சாக்கிய நாயனார் புராணத்தில் 8ஆம் பாட்டில் விளக்குகிறார்.

"காணாத அருவினுக்கும்
உருவினுக்கும் காரணமாய்
நீள்நாகம் அணிந்தார்க்கு
நிகழ் குறியாஞ் சிவலிங்கம்
நாணாது நேடிய மால்
நான்முகனுங் காண நடுச்
சேணாருந் தழல்பிழம்பாய்த்
தோன்றியது தெளிந்தாராய்"

வேறு வேறு உருவம் வேறு வேறு இயற்கை நூறு, நூறாயிரம் இயல்புடையவராக இருந்தாலும் பெருமான், யார் யார் எப்படி எப்படி எண்ணி வழிபடுகிறார்களோ அப்படி அப்படி உருக் கொண்டு வரக்கூடியவர்.

ஈசன் கருணையே உருவானவர்

"கற்பனை கடந்த சோதி
கருணையே உருவமாகி"
(2 - தில்லை வாழ் அந்தணர்),

"ஏதமில் பல யோனி யெண்பத்து
நான்கு நூறாயிர ந்தனுள் வைத்த
பேதமும் புரந்தருளும் அக்
கருணைப் பிரான்"
(54 திருக்குறிப்புத் தொண்டர்)

என்கிறார் சேக்கிழார் சுவாமிகள். உடுப்பூரைச் சேர்ந்த திண்ணனார் திருக்காளத்தி மலையில் குடுமித் தேவரைக் கண்டு அன்புப் படிவமாகி ஆரா அன்பினால் அண்ணலைக் கண்டு பிரியாதிருந்தார். வழக்கமாகக் குடுமித் தேவரைப் பூசனை செய்யும் சிவகோசரியார், இறைவன் முன் திண்ணனார் செய்திருந்த அனுசிதங்களைக் கண்டு வருந்தி வேதனைப்பட்டார். அவர் கனவில் தோன்றிய இறைவன் திண்ணனின் அன்பைப் புகழ்ந்து அதைக் காட்டுவதாகவும் கூறினார். அதன்படி தன் ஒரு கண்ணில் தன் குருதி ஒழுகக் காட்டினார். அதைக் கண்டு பதறிய திண்ணன் பச்சிலையெலாம் இட்டுப் பலனின்மையால் தன் ஒரு கண்ணைத் தோண்டி அப்ப, குருதி நின்றுவிட்டது. உடனே மற்றொரு கண்ணிலும் குருதி வருமாறு காட்டினார் இறைவன். அதற்கஞ்சாத திண்ணன், இன்னும் ஒரு கண் என்னிடம் உள்ளது என்று கூறித் தன் வலது காலை அடையாளங்காண இறைவன் மேல் வைத்து இருக்கும் தன் ஒரு கண்ணையும் தோண்டப் போனான். கருணை உருவமான இறைவன், தன் அடியவனின் துன்பத்தைக் காணப் பொறுக்கதாவராய் தன் கையால் திண்ணனின் கையைத் தடுத்து '**கண்ணப்ப நிற்க**' என்றார். இதைச் சேக்கிழார்,

"திண்ணனார் கண்ணில் ஊன்றத்
தரித்திலர் தேவதேவர்"
(182 கண்ணப்ப நாயனார்)

என்பார். அடியவர்களின் துயர்கண்டு பொறுக்காதவர் ஈசன்.

திருஞானசம்பந்தர் ஐந்து வயதுக் குழந்தை. திருக்கோலக்கா என்ற தலத்துக்குச் சென்று அங்குள்ள ஆலயத்தில் கைநோக கைத்தாளம் போட்டு பாடிக்

கொண்டிருந்தார். இதைக் கண்ட இறைவன் கருணை கொண்டு அஞ்செழுத்தும் எழுதிய பொற்றாளம் கொடுத்தார். (திருஞான சம்பந்தர் பாடல் 103). கேட்காதவர்களுக்கும் கொடுக்கும் வள்ளல் ஈசன்.

இறைவனின் எளிவந்த தன்மை

நம்பி ஆரூரர் திருக்கச்சூர் வந்து ஆலயத்தில் இறைவனை வணங்கினார். அவருக்குப் பசி வந்துவிட்டது. கூட இருக்கும் ஆட்கள் வரவில்லை. மதில் சுவரின் பக்கம் சோர்வாகச் சாய்ந்திருந்தார். இதைக் கண்டு பொறுக்காத ஈசன் அவர்முன் அடியவனாகத் தோன்றித் தான் பிச்சை எடுத்துச் சோறு கொண்டு வருவதாகக் கூறிச் சென்று வீடுகள் தோறும் பிச்சை ஏற்று வந்து ஊட்டினார். என்னே இறைவனின் எளிவந்த தன்மை! இதில் இன்னொன்றும் விளக்குகிறார். அதாவது, தருமம் செய்கிறவர்கள் தாங்கள் உழைத்துப் பெற்ற தங்கள் பொருள் கொண்டு அறஞ்செய்ய வேண்டும் என்பதாம்.

"மெய்ப்பசியால் மிகவருந்தி
இளைத்திருந்தீர் வேட்கைவிட
இப்பொழுதே சோறிரந்திங்கு
யான் உமக்குக் கொணர்கின்றேன்"
(177 ஏயர்கோன்கலிக்கம்பர்)

ஈசன் ஏழைப் பங்காளன்

பல்லவமன்னன் காடவர்கோன் காஞ்சியில் கட்டிய கற்கோயிலுக்குச் செல்லாமல் பூசலார் மனத்தில் எழுப்பிய கோயிலில் இறைவன் எழுந்தருளியது ஏழைகள் பால் வைத்த கருணையைக் காட்டுகிறது.

"நின்றஊர்ப் பூசல் அன்பன்
நெடிதுநாள் நினைந்து செய்த
நன்றுநீடா லயத்து நாளை
நாம்புகு வோம்நீ இங்கு
ஒன்றிய செயலை நாளை
ஒழிந்துபின் கொள்வாய்"
(10 பூசலார் நாயனார்)

இதனால்தான் 'அழைத்தால் வருவான் அழைத்துவாடி' என்றார் வள்ளலார்.

தொண்டர்கள் - தொண்டு நெறியே சைவம்

தேவையை மறந்து சேவையைச் செய்பவர்கள் தொண்டர்கள். சைவத்தின் வினைக் கொள்கையாவது;

"செய்வினையுஞ் செய்வானும்
அதன்பயனும் கொடுப்பானும்
மெய்வகையால் நான்காகும் விதித்த
பொருள் எனக்கொண்டே
இவ்வியல்பு சைவநெறி
அல்லவற்றுக் கில்லைஎன
உய்வகையாற் ' பொருள்சிவன்' என்று
அருளாலே உணர்ந்தறிந்தார்"
(5. சாக்கிய நாயனார்)

தன்வினையின் பயனாக, **'உயிர் தோற்றம்'** கொள்ளும்போது அதனுடைய வினைப் பயனைத் தக்கவாறு இறைவன் அளிக்கிறார். இதைத் திருவள்ளுவர் பெருமான்,

"வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்த லரிது" (377)

என்றார். நல்வினையானாலும் தீவினை யானாலும் அது பிறப்புக்கு ஏதுவாகும். அதனால்தான் திருவள்ளுவர் அதை **'இருள்சேர் இருவினை'** என்றார். இந்த

இன்னல் இழி பிறவியைத் தடுக்க வினையொப்பு ஏற்படவேண்டும். அதற்கு இறைவனை வழிபடவேண்டும். இது சித்தாந்தம்.

இறையருள் பெறக் காட்டிற்குச் சென்று தவமியற்ற வேண்டும் என்ற கடின முறைகளைத் தள்ளிவிட்டுப் பெரியபுராணம் மிக எளிய முறையைக் காட்டுகிறது. 'அன்புடன் தொண்டு செய்யுங்கள்' என்பதுதான் அது.

1. இறைவனைத் தொழுவதும் அது தொடர்பான செயல்களும் தொண்டு எனப்படும்.
2. எளியோருக்கு இரங்கி உதவி செய்வதும் அது தொடர்பான செயல்களும் தொண்டே .

தொண்டு அன்பின் அடிப்படையில் நடப்பது.

"அருளின் நீர்மை திருத் தொண்டு"
(9 அவையடக்கம்)

தொண்டர்கள் என்போரின் இலக்கண மாவது.

"நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும் மன்றாடும் மகேசனை மறவாது இருப்பவர்களே தொண்டர்கள்". அவர்கள் பண்பில் மிக்கவர்கள். பேத மற்றவர்கள். இத்தொண்டர்கள் மூன்று வகையாக இருப்பதைப் பெரியபுராணத்தில் காணலாம்.

திருக்கூட்டம் (தொண்டர்கள்)

திருநீறிட்ட புனிதர்கள் அவர்களின் திருவாயிலிருந்து அஞ்செழுத் தோசை ஒலிக்கும். எந்த நிலையிலும் ஈசனை மறக்காதவர்கள். ஆதாயமும் இழப்பும் அறியாதவர்கள். ஓட்டையும், பொன்னையும் ஒன்றாகவே எண்ணுபவர்கள். கைத்திருத் தொண்டு செய்யக் கூடியவர்கள். துறவு நிலை கொண்ட தூயவர்கள். இவர்களே திருக்கூட்டத்தவர்கள்.

அடியார்கள்

இவர்கள் இறைவனிடம் மீளா அடிமைப் பூண்டவர்கள். இமைப் பொழுதும் இறைவனை மறக்காதவர்கள். இறை யருளைப் பெறக் கூடியவர்கள். தலங்கள் தோறும் சென்று பக்தர்கள் சூழப் பதிகம் பாடி பரமனைத் தொழுபவர்கள். அன்பர்களுக்கு ஏற்படும் இன்னல்களை இறையருளால் போக்கியருளுபவர்கள். நோய் கொண்ட வர்களைக் குணப்படுத்துவார்கள். பாம்பு கடித்து இறந்தவர்களை எழுப்புவார்கள். பஞ்ச காலத்தில் இறையருளால் மக்களுக்கு உணவு படைத்துக் காப்பாற்றுவார்கள். இவர்களே சித்தத்தைச் சிவன்பால் வைத்த அடித் தொண்டர்கள்.

தொண்டர்கள்

அன்புடன் அறம் செய்ய விரும்பும் சைவத் தொண்டர்கள். அறம் செய்யும் முறையை வகுத்துக் கொண்டு அதன்படி இறைநினைப்போடு தவறாது செய்வார்கள். செய்யும் அறம் தடைப்படுமாயின் இவர்கள் உயிர் வாழமாட்டார்கள். அளவிலா மன உறுதி கொண்ட இவர்கள் இறைவனை எந்நிலையிலும் மறக்காதவர்கள். கருணை மிகுந்த இவர்கள் வேண்டுவார் வேண்டுவதை அளிக்கக்கூடியவர்கள். வறுமையுற்ற காலத்தும் தொண்டு செய்பவர்கள். இவர்களில் பலர் அமுதளிக்கும் தொண்டைச்

செய்தவர்கள். அமுதளிப்பது 'அன்பர் பூசை' யாகக் கருதுபவர்கள். ஈசனே அமுதளிக்கும் தொண்டைச் செய்துள்ளார்.

சிலர் தாங்கள் செய்யும் தொழில் வழி தொண்டு செய்யக்கூடியவர்கள். திருக் குறிப்புத் தொண்டர், திருநீலகண்டர் போன்ற அடியார்கள் அவ்வாறு செய்தவர்கள். இவர்களே 'தான் தனது' என்பதை மறந்த மெய்த்தொண்டர்கள்.

மேற்குறிப்பிட்ட எல்லா வகைத் தொண்டர்களில் இறையருள் பேறு பெற்றவர்களே நாயன்மார்கள்.

ஆன்மா, தான் பெற்ற அரிய உடலைக் கொண்டு தத்துவங்கள் எனும் நிலைகளைக் கடந்து நியமங்கள், விரதங்கள், தவங்கள் மேற்கொண்டு பூசா முறைகளில் பூசித்து இறையருளைப் பெறுதல் என்ற கடின முறையை மிக எளிதாக்கிவிட்டது பெரியபுராணத்துத் தொண்டு நெறி. பூசாமுறைகளைச் சற்றும் அறியாத, எளியவனும் திண்ணிய அன்பால் மனங்கசிந்து இறைவனை எண்ணி ஏழைகளுக்கு விருப்பமுடன் தொண்டு செய்து வந்தால் இறையருள் எளிதில் கிடைக்கிறது என்ற மேலான சைவ இலக்கணத்தைப் பெரியபுராணம் தெளிவாகக் கூறி உலகுக்கு வழிகாட்டுகிறது. உலகில் உள்ள அனைத்தும், நின்றனவும், சரிப்பதுவும் எல்லாம் அறிந்தும் அறியாமலும் சைவமாய் உள்ளன. இயற்கையாய் இருக்கும் சைவம் என்றும் நிலைத்து இருக்கும். இது உண்மை. தொண்டு நெறி வாழ்க!

திருச்சிற்றம்பலம்.

ஞான நடனம்

ஞான நடனம் என்பதில் அடங்கயுள்ள கருத்துகள் வருமாறு :

1. உடுக்கை ஏந்திய கரம், மாயையை (மாயாமலம்) உதறித் தள்ளிவிடுகிறது. உடுக்கை ஒலி என்பது அருளுரையாகிய உபதேசமாகும்.
2. நெருப்பை ஏந்திய கரம், கன்மம் எனப்படும் கர்மத்தைச் சுட்டெரித்து விடுகிறது.
3. முயலகனை மிதித்துள்ள ஊன்றிய திருவடி, ஆணவமலத்தை அடியோடு அழித்து ஒழித்து விடும்.
4. தூக்கிய திருவடி, அருள் என்ற வடிவத்தில் ஜீவர்களைப் பேரின்பத்தில் சேர்க்கிறது.
5. வீசிய திருக்கரம், பக்குவப்பட்ட உயிரை அணைக்கிறது.
6. அமைந்த திருக்கரம் என்று அழைக்கப்படும் அபயகரம் இன்பத்தை ஊட்டுகிறது.

நடராஜரின் திருவுருவத்தைச் சூழ்ந்துள்ள திருவாட்சி எனப்படும் பிரபை ஓங்காரத்தைக் குறிப்பிடுகிறது.

பாம்பன் சுவாமிகள் பரவிய அட்டாட்ட (8x8=64) விக்கிரகம்

கோ. செல்வம், எம்.ஏ., சென்னை வானொலி மேனாள் இயக்குநர்

பாம்பன் சுவாமிகள் பரம முருக பக்தர். செவ்வேள் முருகனே அவரது முதலும் முடிவுமான வழிபடுதெய்வம். ஆயினும் அவருக்குச் செஞ்சிவனும் செம்முருகனும் ஒன்றே. சிவன் ஐந்துமுகம் உடையவர்; முருகன் ஆறுமுகம் உடையவர். 'ஐம்முகச் சிவனும், அறுமுகச் செவ்வேள் பரமனும் ஒன்றே; வேறு வேறு இலர்' என்பார் அருள்திரு பாம்பன் குமரகுருதாச சுவாமிகள்.

அவர், முருகப் பிரானின் புகழ், வீரம், கருணை, அருள்திறம், நலம் பற்றி 6666 பாடல்கள் பாடியுள்ளார். ஆங்காங்கே சிவபிரானைப் போற்றி ஏற்றமிகு பாடல்களும் பாடியுள்ளார்.

அவற்றுள் சிறந்த பாடலாக இலங்குவது அட்டாட்ட விக்கிரக லீலை என்ற நெடும்பாடல். நெடும்பாடல் என்றால் ஒவ்வொரு அடியும் நாற்பத்து எட்டு சீர்கள் கொண்ட கழிநெடிலடி ஆசிரிய விருத்தப்பா அமைப்பில் ஆனது. இவ்வாறு 4 அடிகள் கொண்ட நெடும்பாடல் இது.

முழுமுதல்வன் ஆன சிவபெருமான் உயிர்கள் உய்யக் கருதி நிகழ்த்திய திருவிளையாடல்கள் பல. அவர், அத்திருவிளையாடல்களின் போது கொண்ட திருமேனிகள் அறுபத்து நான்கு என்பர். அவற்றைப் பேரருளாளரான ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் இப்பாடலில் உணர்த்துகிறார். ஐம்முகச் சிவனின் விளையாடல்களை அறுமுகச் சிவன் முருகன் மீது, அந்த 64 திருமேனிகளையும் சாத்திப் பாடி யருளினார். இதுவே இப்பாடலின் சிறப்பாகும்.

இப்பாடலை முதலில் முழுக்க நின்று, நிதானமாகப் படித்துப் பார்ப்போம். சுவாமிகள் முருகனிடம் பிடிவாத பக்தி பூண்டவர். கடும் பக்தர். அவரது சொற்கள் எளிதில் படிக்க இயலாது. ஆகவே பாடலின் முழுப் பொருள் உணர நின்று நிதானித்துப் படிப்போம்.

அட்டாட்ட விக்கிரக லீலை

சந்திரசேகரமர்த்தநாரீ சுரஞ்
சக்கரப்பிரதானம்
தக்ஷிணமூர்த் தமிலிங்கம் லிங்கோற்பவந்
தக்ஷயக்கியபங்கம்
சந்தியனர்த் தனஞ்சந்ததநிர்த்தனஞ்
சண்டேசாநுக்ரகம்
சலந்தரவதமகொராஸ்திரமேகப
தம்மசுவாரூடம்
சத்யச தாசிவம்மிக்கசதாசிவந்
தகுலகுளேசேசுவரம்
சகஜசுகாசனங்கூர்மசங்காரமச்
சாரிவராஹாரி
சற்குருமூர்த்தமுமேசமுமாபதி
ஜயபுஜங்கத்ராசம்
சார்த்தூலஹரிபைரவங்கலியாணசுந்
தரம்வடுகங்கிராதம்

சுந்தரவிருஷபவூர் திவிஷாபஹ
ரணஞ்சுவராபக்நம்
துகளறுக்ஷேத்திரபாலகந்தொல்கரு
டாந்திகம்முகலிங்கம்

துங்ககங்கா தரங்கங்காவிஸர்ஜநஞ்
சுபசோமாஸ்கந்தம்
சூரஸிம்ஹாரி கமாரியமாந்தகஞ்
சுசி மாணவபாவம்
சுபகரபிரார் த்தனைமூர்த்தநறுந்திரி
புராந்தகஞ்சுரர்பரசும்
சுமுககங்காளமிரக்தபிஷைப்பிர
தானமிருஞ்சுடரே
சுடர்கவுரீ வரப்பிரதம்மஹாபா
சுபதசொரூபமணி
தோன்றுபுஜங்கலளிதம்ரிஷபாந்திகந்
தோமறுகஜயுத்தம்

விந்தைவிளம்புகஜாந்திகம்வீணை
தயங்குதக்ஷிணமூர்த்தம்
மேதகயோகவினோதமதாக
விளங்குதக்ஷிணாமூர்த்தம்
விமலபிக்ஷாடனங்கவலையுத் தாரணம்
வேதகணம்புகழும்
விதிசிரகண்டனங்கவுரிலிலாசமந்
விதமெழிலரியர்த்தம்
வீரபத்திரந்திரிமூர் த்திமுப்பாதம
ஹாவேதாளிநடம்
வெருவறுமேகபதத்திரியுருவாய்
விளம்பறுபதுநான்கும்
விலாசவளிப்புநிமித்தமெடுத்தவொர்
மெய்ப்பொருளெதுவதுவே
விண்ணவர்மண்ணவர்கண்ணவர்யாவரும்
வீடருளாயெனவே

வந்தனைபுரியவிருந்துளனீயென
வண்டமிழான்மனசான்
வாழ்த்திவணங்கெனையாளவெனிருதய
மலரிலெழுந்தருளாய்
மந்திரநாயகதந்திரநாயக
மங்களநாயகவோம்
மயதவரீசுரபரமகுஹேசுர
வசனமனாதீத
வரதக்ருபாகரகுமரபராபர
வரைவறுஷாட்குண்ய
வஸ்துவெனற்புதசத்தியவித்தக
மரணமொடயனாமிலா
வானவஞானநபோமணியேதிரு
மாலயனறியாவோர்
மாமலையின் பெயரான் குருநாதவென்
மருடெறுமாமுனியே.

பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் ஒவ்வொரு மையக்கருத்தில் தனிப்பாடலோ, பதிகப் பாடல்களோ, தொகுதிப் பாடல்களோ இயற்றும்போதெல்லாம் எழுதிய சுவடிகளை முருகன் திருவடிகளில் வைத்துக் கற்பூரம் ஏற்றி, எழுதி அளித்த அப்பாடல்களை ஏற்று அருளுமாறு வேண்டுவார்.

முருகப் பெருமான் தாம் ஏற்றுக் கொண்டதற்கான அறிகுறி தருவார். அதன்பின் அப்பாடல்களைத் தமது அடியார்களுக்கும் பாடி அருள்வார்.

அவர் இயற்றிய பல பாடல்கள் பாராயணப் பாடல்கள். அவை மந்திர பூர்மாக அமையப்பெற்றவை. மந்திரம் படிந்த பாடல்களுக்கும் பயன் உண்டு. அந்தப் பயன் யாது என்று சுவாமிகளே பாடலின் கீழே குறிப்பிடுவார்.

அவர் சண்முக கவசம், குமாரஸ்தவம், பகைகடிதல் முதலான மந்திர பூர்வமான பாடல்களை எழுதி, அவற்றை எவ்வாறு பாடவேண்டும் என்று குறிப்பு எழுதுவார். கூடவே பாடலைப் பாராயணம்

செய்தோருக்கான பலனையும் குறிப்பிட்டு எழுதுவார்.

இந்த அட்டாட்ட விக்கிரக லீலைப் பாடல் பற்றிச் சுவாமிகள் குறிப்பிட்டிருப்பதாவது :

இவ்விருத்தத்தினை உள் உருக்கத்தோடு முப்போதும் பாடியாடுக. ஆடாவிடினும் பாடுக. அங்ஙனம் செய்வார்க்கு உரோக நாசம், பாப நாசம், ஆயுள் விருத்தி, தைரிய விருத்தி, வீரிய விருத்தி, புத்திர விருத்தி, புண்ணிய விருத்தி உண்டாதலோடு சர்வார்த்த சித்தியும், வாய்க்கும் என்பது வாய்மை.

சுவாமிகள் குறித்துள்ள பாடல் பாடும் முறை பாராயண நன்மை பற்றிய விவரங்கள் கண்டோம்.

சிவபெருமான் நல்லோருக்கு அனுக்கிரக (அருள்) நிமித்தமாகவும், அல்லோருக்கு நிக்கிரக (அழிவு) நிமித்தமாகவும் வடிவங்கள் மேற்கொண்டார். அவற்றைச் சிலர் 25 என்பர். சிலர் 64 என்பர். அருள்திரு பாம்பன் சுவாமிகள் சிவன் நிகழ்த்திய திருவிளையாடல்கள் 64 என்று கொண்டு அந்த லீலா உருவங்களை நிரல்படுத்திப் பாடியுள்ளார்.

வடமொழியில் அஷ்டம் என்றால் எட்டு என்பது பொருள். எட்டு என்றால் எட்டு என்ற எண். எட்டெட்டு என்றால் 64 என்பது பொருள் என அறிவீர்கள். வடமொழிச் சொல்லான அஷ்டாஷ்ட என்பதைச் சுவாமிகள் 'அட்டாட்ட' என்று குறிப்பிட்டார். உயரிய சிறப்புகள் பலவற்றை உள்ளடக்கிய அற்புதப் பாடல் இது.

64 மூர்த்தங்களைப் பற்றிய விளக்கம் வாதுளம், மகுடம் என்னும் இரண்டு ஆகமங்களில் மட்டுமே இடம் பெற்றுள்ளது என்பர் ஆகமநூல் அறிஞர்.

இனி இவ் அட்டாட்ட விக்கிரகலீலை என்னும் அற்புத நெடும்பாடலினுள் ஊடாடும் பொருளைக் காண்போம். அதனைக்காண முதற் கட்டமாகப் பாடலை உரைநடையில் நிரல்படுத்திப் பார்ப்போம்.

சந்திரசேகரம், அர்த்தநாரீசுரம், சக்கரப் பிரதானம், தட்சிணாமூர்த்தம், இலிங்கம், இலிங்கோற்பவம், தக்ஷயக்கிய பங்கம், சந்தியில்நிர்த்தனம், சந்ததநிர்த்தனம், சண்டேசஅநுக்ரகம், சலந்தரவதம், அகோராஸ்திரம், ஏகபதம், அசுவாரூடம், சத்யசதாசிவம், மிக்க சதாசிவம், தகுலகுலேசுவரம், சகஜ சுகாசனம், கூர்மசங்காரம், மச்சாரி, வராஹாகி, சற்குருமூர்த்தம், உமேசம், உமாபதி, ஜயபுஜங்கத்திராசம், சார்த்துாய ஹரி, பைரவம், கலியாணசுந்தரம், வடுகம், கிராதம்.

இதில் உள்ள முப்பது மூர்த்தங்களும் முதல்வர்க்கு உரியவை. இனி இரண்டாம் அடி :

சுந்தர விருஷபஊர்தி, விஷாபஹ ரணம், சுவராபக்நம், துகலறு க்ஷேத்திர பாலகம், தொல் கருடாந்திகம், முகலிங்கம், துங்ககங்காதரம், கங்கா விசர்ஜனம், சுப சோமாஸ்கந்தம், சூரசிம்ஹாரி, கமாரி (காமாக்ஷி), ஏமாந்தகம், சுசிமாணவ பாவம் (சிஷ்ய பாவம்), சுபகர பிரார்த்தனை மூர்த்தம், நறுந்திரிபுராந்தகம், சுரர்பரசும் சுமுககங்காளம், இரத்த பிட்சைப்பிரதானம்,

இருஞ்சுடரே சுடர், கவுரி வரப்ரதம், மகா பாசுபதசொரூபம், ரிஷபாந்திகம், தோமறு கஜயுத்தம் – இவை சிவ லீலை 31 முதல் 52 வரையிலானவை.

விந்தை விளம்பு கஜாந்திகம், வீணை தயங்கு தக்ஷிணாமூர்த்தம். மேதகு யோக வினோதமதாக விளங்கு தக்ஷிணமூர்த்தம், விமல பிக்ஷாடனம், கவலை உதாரணம், வேத கணம் புகழும் விதிசிரகண்டனம், கவுரி விலாச மீநவிதம், எழில் அரியர்த்தம், வீரபத்திரம், திரிமூர்த்தி முப்பரதம், மஹா வேதாளிநடம், வெருவறுமேக பதத்திரியுரு – (53 முதல் 64 வரையான லீலைகள் இவை) ஆய்விளம்பு அறுபது நான்கும்விலாச வளிப்பு நிமித்தம் எடுத்த மெய்ப் பொருள் எது அதுவே விண்ணவர் மண்ணவர் கண்ணவர் யாவரும் வீடு அருளாய். எனவே (3ஆம் அடி நினைவுறுகிறது)

வந்தனைபுரிய இருந்துளன் நீ என வண்தமிழால் மனசால் வாழ்த்தி வணங்கும் எனைஆள என் இருதய மலரில் எழுந்தருளாய்; மந்திரநாயக! தந்திர நாயக! மங்கள நாயக! ஓம்மய! பரம! குஹேசுர! வசனமனாதீத! வரத! கிருபாகர! குமர! பராபர! வரைவறு ஷாட்குண்ய வஸ்துவென் அற்புத சத்திய வித்தக! மரணமொடு அயனம் இலா வானவ! ஞான தபோமணியே! திருமால் அயன் அறியா ஓர் மாமலையின் பெயரான் குருநாத! என்மருள்தெறு மாமுனியே!

நான்காவது அடியை சுவாமிகள் தன்குருநாதரான அருணகிரிப் பெருமானை விளித்தபடி முடித்து அருளியுள்ளார்.

இனி பதவுரை காண்போம். பாம்பன் அருள்திரு குமரகுருதாசரின் பரம சீடரும் அவரது அருட்பாடல்களில் திளைத்தவரும், நம் இராணிப்பேட்டை, நவல்பூரைச் சார்ந்தவருமான புலவர் பி.மா. சோமசுந்தரனார் வகுத்துள்ள அற்புதமான உரையைக் கண்டு பொருளைத் துய்ப்போம்.

1. சந்திர சேகரம் : பிறை நிலவைத் திருமுடியில் அணிந்த திருக்கோலம். (சந்திரன் தக்கனின் மகளிர் இருபத்தெழுவரை மணந்தனன். அவரில் கார்த்திகை, உரோகிணி என்னும் இருவரையே விரும்பி ஏனையரைச் சிறிதும் காதலோடு பாராட்டினானல்லன். இஃதறிந்த தக்கன் சினந்து நாள்தோறும் ஒவ்வொரு கலையாகக் குறைந்து சந்திரன் முடியக் கடவன் என்று சபித்தான். அவ்வாறே திங்களும் கலைகளை இழந்து வரலாயினன். தக்கன்பால் கொண்ட அச்சத்தால், சந்திரனைக் காப்பாற்ற எவரும் முன்வந்திலர். அந்நிலையில் தனக்குப் புகல் அருளக் கூடியவர் பரமசிவனே என்று உணர்ந்து சந்திரன் அவர் திருவடியடைந்தான். பெருமான் ஒரு புதிய மலரை எடுத்து அணிவதுபோல அவனைத் திருமுடியில் அணிந்து இறவாப் பெருவாழ்வை அருளினான்.

இத்திருக்கோலம் உயிர்களின் பிறப்பு இறப்பு ஆகிய துன்பங்களை நீக்கி அழியாத பேரின்ப வீடு அருள விளங்குவதாகும்.

2. அர்த்தநாரீகரம் : ஒரே திருமேனியில் இறைவன் வலப்பக்கத்தும் இறைவி இடப்பக்கத்தும் விளங்கும் அம்மையப்பர் என்னும் திருக்கோலம். (தோல் உடை, குழையணி,

திருநீற்றுப்பொலிவு, சூலப்படை ஆகியவை வலப்பக்கத்திலும், துகில் உடை, தோடு அணி, பசுஞ் சாந்து அழகு, அழகிய வளையல் விளங்கும் கையில் பசுங்கிளி ஆகியவை இடப்பக்கத்திலும் கொண்டது இத்திருக்கோலம் ஆகும்).

3. சக்கரப்பிரதானம் : திருமாலுக்குச் சக்கரப் படையை வழங்கி யருளிய திருக்கோலம்.

(சிவபிரான் சக்கர வடிவமாகத் தம் கால் விரலால் தரையில் கீறியதைச் சலந்தரன் எடுத்துத் தலையில் வைத்தலும் அது சக்கரப்படையாகி அவனுடம்பைப் போழ்ந்து கொன்றது. அச்சக்கரப்படையைப் பெறவிரும்பிய திருமால் சிவபிரானை நாள்தோறும் ஆயிரம் தாமரை மலர்கள் கொண்டு வழிபட்டு வந்தார். ஒருநாள் இறைவன் திருவிளையாட்டாக ஆயிரம் மலர்களில் ஒன்றைக் குறையச் செய்தார். வழிபட்டுக் கொண்டிருந்த திருமால் ஒரு மலர் குறைவது கண்டு தம் கண்ணைப்பிடுங்கி மலராக இறைவன் திருவடியிலிட்டு வழிபாட்டை முற்றுவித்தார். அதுகண்டு மகிழ்ந்த இறைவன் திருமாலுக்குச் சக்கரப்படையும், கண்ணும், செந்தாமரைக் கண்ணன் என்ற பெயரும் வழங்கியருளினார்).

4. தக்ஷிணாமூர்த்தம் : தென்முகப் பரமனாய் விளங்கும் திருக்கோலம். (மெய்ப்பொருள் உணரமாட்டாத நான்முகன் மக்களாய சனகர், சனாதநர், சனந்தனர், சனற்குமரர் ஆகிய நால்வருக்கும் கல்லால மரத்தின் கீழ் எழுந்தருளி வாக்கு இறந்த பூரணமாய், மறைக்கப்பாலாய் இருந்ததனை இருந்தபடி இருந்து வலக்கையால் காட்டிச் சொல்லாமல் சொன்ன திருக்கோலம்.

5. இலிங்கம் : எல்லாத் தேவர்களையும் தன்னுள் அடக்கி ஐம்புலன்களுக்கும் புலனாகும்படி விளங்கும் இலிங்கத் திருமேனி. (இது அருவுருவத் திருமேனியாம்).

6. இலிங்கோற்பவம் : தாமே முதற்பொருள் என்று மயங்கிய பிரம விட்டுணுக்கள் ஆண்டுத் தோன்றிய பேரொளிப் பிழம்பின் முடியும் அடியும் காணமுடியாது அயர்ந்து தருக்கொழிந்து வழிபட்டார்கள். அவர்கள் வழிபாட்டுக்கு இரங்கிச் சிவலிங்கத்தில் தோன்றிக் காட்சியளித்த திருக்கோலம்.

7. தக்ஷயக்கிய பங்கம் : தக்கன் வேள்வியை அழித்த திருக்கோலம்.

8. சந்தியில்நிர்த்தனம் : மாலையில் செய்த நடனத் திருக்கோலம் (யாவரையும் காப்பாற்றுமாறு ஆலகால நஞ்சையுண்ட இறைவன் திருமால் முதலிய தேவர்கள் மத்தளம் முதலிய இசைக்கருவிகளை வாசிக்கும்படிச் செய்து இறைவர் நடனமாடிய திருக்கோலம்).

9. சந்தத நிர்த்தனம் : ஆக்கல், அளித்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களும் நிகழும்படி ஆடும் நடனத் திருக்கோலம்.

10. சண்டேசாநுக்ரகம் : சண்டேசுவர நாயனாருக்கு அருள்செய்த திருக்கோலம்.

11. சலந்தரவதம் : சலந்தரன் என்னும்

அசுரனைச் சக்கரப்படையால் பிளந்து கொன்ற திருக்கோலம்.

12. அகோராஸ்திரம் : அகோராத்திரம் என்னும் அம்பால் சத்ததந்து என்ற அசுரனைக் கொன்றதிருக்கோலம்.

13. ஏகபதம் : கடையூழிக் காலத்தில் எல்லா உயிர்களும் தம் திருவடியில் பொருந்த ஒரே திருவடியுடன் விளங்கும் திருக்கோலம்.

14. அசுவாரூடம் : மாணிக்கவாசகப் பெருமான் பொருட்டுக் காட்டிலிருந்த நரிகளையெல்லாம் பரிகள் ஆக்கித் தாம் குதிரைச் சேவகனாகி மதுரையில் பாண்டியன் முன் எழுந்தருளிய திருக்கோலம்.

15. சத்ய சதாசிவம் : சத்தியோசாதம், வாமதேவம், தற்புருடம், அகோரம், ஈசானம் ஆகிய ஐந்து திருமுகங்கள் கொண்டு வேதமும் ஆகமமும் அருளிய திருக்கோலம்.

16. மிக்க சதாசிவம் : ஐந்து திருமுகத்துடன் விளங்கும் சதாசிவர், நிவர்த்தி, பிரதிஷ்டை வித்தை, சாந்தி, சாந்தியதீதை என்னும் அபரவிந்து கலைகளானும், இந்திகை, தீபிகை, ரோசிகை, மோசிகை, ஊர்த்துவகாமிநி என்னும் அபரநாத கலைகளானும் சூக்குமை, அதிசூக்குமை, மிருதை, அமிருதை, வியாபிநி என்னும் பரவிந்து கலைகளானும், வியாபிநி, வியோமரூபை, அநந்தை, அநாதை, அநாசிருதை என்னும் பரநாத கலைகளானும் இருபத்தைந்து திருமுகங்களுடன் கூடி விளங்கும் திருக்கோலம்.

17. தகுலகுளேசுவரம் : தகைமை பெற்ற இலகுளம் என்னும் உலகத்தில் மணிகள் இழைத்த அரியணை மீது எழுந்தருளியிருக்கும் திருக்கோலம்.

18. சகஜ சுகாசனம் : சிவபெருமான் ஆறுதிருக்கைகளோடு தேவி இடப்பாகத்தில் விளங்கச் சுகாசனத்தில் எழுந்தருளி யிருக்கும் திருக்கோலம்.

19. கூர்மசங்காரம் : திருப்பாற்கடலைக் கடையும் மத்து ஆகிய மந்தரமலையை ஆடையாகித் தாங்கிய திருமால் செருக்குற்று தமது ஆமை வடிவத்தை மேன்மேலும் பெரிதாக்க, அதனால் திருப்பாற்கடல் கரைபுரள, உலகும் துன்புற்றது. அதனால் தம்மிடம் புகலடைந்த தேவர்களைக் காக்குமாறு அந்த ஆமையைக் கொன்று அதன் ஓட்டையணிந்த திருக்கோலம்.

20. மச்சாரி : சோமுகாசுரனை மீன் வடிவெடுத்துக் கொன்ற திருமால் தருக்குற்றுக் கடலைக் கலக்க உலகுயிர்படும் வருத்தம்கண்டு தேவர்கள் எம்பிரானிடம் முறையிட எம்பிரான் மீனைக்கொன்று அதன் கண்களை அணிந்து கொண்ட திருக்கோலம்.

21. வராஹாரி : வராக உருவம் கொண்டு இரணியாட்சனைக் கொன்ற திருமால் செருக்குற்று உலகை அழிக்க முற்பட்ட அந்தப் பன்றியைக் கொன்று அதன் பல்லைப் பிடுங்கி அணிந்து கொண்ட திருக்கோலம்.

22. சற்குரு மூர்த்தம் : மாணிக்கவாசகப் பெருமானுக்கு உபதேசம் செய்தருளிய திருக்கோலம்.

23. உமேசம் : இடதுபக்கம் தேவி விளங்க எழுந்தருளிப் பிரமதேவன் படைப்புத் தொழிலைச் செவ்வையாக நிகழ்த்த அருள்புரிந்த திருக்கோலம்.

24. உமாபதி : தேவி ஐந்தொழிலும் இயற்றிவரும்படி அருள்செய்த திருக்கோலம்.

25. ஜய புஜங்கத் திராசம் : தாருகவன முனிவர்கள் தம்மைக் கொல்லும்படி வேள்வியில் படைத்து அனுப்பிய பாம்புகளை அச்சுறுத்தித் தம் திருமேனியில் அணிந்து கொண்ட வெற்றித் திருக்கோலம்.

26. சார்த்தூலஹரி : தாருகவன முனிவர்கள் தம்மைக் கொல்லும்படி வேள்வியில் படைத்து விடுத்த புலியை உரித்துத்தோலை அணிந்து கொண்ட திருக்கோலம்.

27. பைரவம் : அந்தகாசுரனைச் சூலத்தால் குத்திக் கோத்துக் கொள்ளவும் ஆண்டிருந்தபடியே வழிபட்ட அவனைக் கணநாதனாக்க அருள்செய்த திருக்கோலம்.

28. கலியாண சுந்தரம் : இறைவன் உமாதேவியை மணந்த திருக்கோலம்.

29. வடுகம் : துந்துபியின் மகனாகிய முண்டாசுரன் என்பவனை அழிக்க வடுகராகிய திருக்கோலம்.

30. கிராதம் : அருச்சுனனுக்கு அருளுமாறு வேடராக வந்த திருக்கோலம்.

31. சுந்தர விருஷபவூர்தி : அழகிய இடப வடிவமாக வந்த திருமால் மீது அமர்ந்து நடத்தும் திருக்கோலம்.

32. விஷாபஹரணம் : திருப்பாற் கடலில் தோன்றிய ஆலகாலம் என்னும் நஞ்சையுண்டு நீல கண்டராகித் தேவர்களைக் காத்த திருக்கோலம்.

33. சுராபக்நம் : வாணாசுரனோடு போரிடுகையில் கண்ணன் ஏவிய சீதளசுரத்தை அழிக்குமாறு சிவபிரான் உட்டிணசுரத்தை முத்தலை, நான்கு கை, ஒன்பது கண்கொண்ட படையாக ஏவிய திருக்கோலம்.

34. துகளறு க்ஷேத்திர பாலகம் : நீர்ப் பிரளயத்தால் அழிந்து போன உலகத்தை மீண்டும் படைத்துக் காத்தருளும் குற்றமற்ற திருக்கோலம்.

35. தொல் கருடாந்திகம் : சிவனாரைத் தொழக் கண்ணுதற் பரமன் திருமுன் அடைந்த திருமால் திரும்பிவரக்காலங் கடந்து போதலைக்கண்டு கயிலை வாயிலின்கண் இருந்த கருடன் சிவனாரைப் பழித்தலை அறிந்த நந்தியம் பெருமான் தனது மூச்சுக்காற்றால் கருடனைத் தூர எறிந்தும் அண்மையில் இழுத்தும் அலைத்து அவன் தருக் கடக்கிய திருக்கோலம்.

36. முகலிங்கம் : இலிங்கத்திலேயே புன்முறுவல் திகழும் திருமுகம் கொண்ட திருக்கோலம். இது 5, 4, 3, 2, 1, இவ்வகைய முகவேறுபாடுகளைக் கொண்டிருக்கும்.

37. துங்க கங்காதரம் : ஒரு காலத்தில் தேவி திருவிளையாட்டாகச் சிவபிரானின் இருவிழிகளையும் தம் திருக்கைகளால் மூட அதனால் .உலகெங்கும் இருள் பரவி உலகுயிர்கள் துன்புறல் கண்ட பெருமான்

தம் நெற்றிக் கண்ணைத் திறக்க அக்கண்ணின் தீயொளி பரவி உலகம் முன்போல் நடப்பதாயிற்று. அது கண்டு தேவியும் எம் பெருமான் கண்களினின்றும் தன் கைகளை எடுத்தனள். அக்காலை அவள் கை விரல் நகக்கால்கள் தோறும் வியர்வை தோன்றியது. அது பெருவெள்ளமாய் உலகங்களை எல்லாம் மூடுதலைக் கண்ட பெருமான் உலகுயிர்களைக் காக்க வேண்டி வெள்ளமாகிய அந்தக் கங்கையினைச் சடையில் ஏற்றித் தாங்கினார். தூய்மையான அந்தக் கங்கையைத் தாங்கிய திருக்கோலமே கங்காதரம் ஆகும்.

38. கங்கா விசர்ஜநம் : பகீரதன் வேண்டுகோளுக் கிணங்க பிரமன் சிவபெருமான் பால் பெற்றுச் சத்தியலோகத்தில் இருக்கச் செய்த கங்கையைப் பூலோகம் செல்ல விடுத்தான். தன் வேகத்தைத் தடுப்பார் யாருமிலர் என்று தருக்குற்று வந்த கங்கையைப் பரமன் தம் சடைமுடியில் ஒரு திவலையாக முடிந்து கொண்டார். பின்னர் பகீரதன் வேண்டுகோட்கிணங்கி எம்பெருமான் கங்கையை மண்ணுலகத்திற்குச் செல்லுமாறு விடுத்த திருக்கோலம்.

39. சுப சோமாஸ்கந்தம் : சத்தாகிய தனக்கும் சித்தாகிய தேவிக்கும் நடுவில் ஆனந்தமாகிய முருகன் விளங்கும் மங்கலமான சச்சிதானந்த திருக்கோலம்.

40. சூர ஸிம்ஹாரி : இரணியனைக் கொன்று அவன் குருதியைக் குடித்த வெறியினால் உலகங்களை அழிக்க முயன்ற வீரத்தைக் கொண்ட நரசிங்கத்தின் தோலை உரித்த திருக்கோலம்.

41. கமாரி : (கௌமாரி) மன்மதனை நெற்றிக்கண்ணால் சாம்பலாக்கிய திருக்கோலம்.

42. யமாந்தகம் : மார்க்கண்டேய முனிவருக்காக இயமனை முனிந்து இடது திருவடியால் உதைத்த திருக்கோலம்.

43. சுசிமாணவபாவம் : முருகனே பரமகுரவன் என்பதை யாவரும் உணருமாறு அவன் பால் பிரணவப் பொருள் கேட்டு நின்ற சீட பாவத்திருக்கோலம்.

44. சுபகர பிரார்த்தனை மூர்த்தம் : இறைவன் திருவிளையாட்டாகத் தேவியை அவள் கொண்ட ஊடல் நீங்குமாறு வேண்டி நின்ற திருக்கோலம்.

45. நறுந் திரிபுராந்தகம் : முப்புரத்தை எரித்த நறிய திருக்கோலம்.

46.சுரர்பரசும் சுமுககங்காளம் : பேரூழிக்காலத்தில் மாய்ந்த பிரம விட்டுணுக்களின் கங்காளந் தரித்த கோலம் என்று உணர்க.

47. இரக்த பிக்ஷைப்பிரதானம் : பிரமனுடைய தலையோட்டில் தேவர்களின் குருதியைப் பிச்சையாக ஏற்ற திருக்கோலம்.

48. இருஞ்சுடரே சுடர்கவுரீவரப் பிரதம்: பேரொளி வீசும் கௌரியாக இறைவி விரும்பிய வண்ணம் அருள் செய்த திருக்கோலம்.

49. மஹா பாசுபதசொரூபம் : அருச்சுனனுக்குப் பாசுபதப்படை அருளிய திருக்கோலம்.

50. அணி தோன்று புஜங்கலளிதம் : கருடனுக்கு அஞ்சித் தம்மை வழிபட்டுப் புகலடைந்த பாம்புகளை (அவைகள் ஏன்கருடா? சுகமா? என்று எக்களிப்புடன் வினவும் ஆற்றலும் சிவசன்னிதியில் தன் ஆற்றலையிழந்து எல்லாரும் இருக்கும் இடத்தில் இருந்தால் சுகம் தான் என்ற விடையை அப்பாம்புகள் கேட்டு மகிழ்வும் கொள்ளும் வண்ணம்) தமது திருமேனியில் அழகு விளங்கும்படி அணியாகக் கொண்ட திருக்கோலம்.

51. ரிஷபாந்திகம் : பேரூழிக் காலத்தில் எல்லாவுலகும் அழிவுறுதலைக்கண்டு உய்திகருதித் தம்மை வந்தடைந்த தருமதேவதையை விடையாகத் தமக்குக் கொண்டு அத்தேவதைக்கு அருளிய திருக்கோலம்.

52. தோமறு கஜயுத்தம் : தேவர்களை வருத்துவதையே தன் தொழிலாகக் கொண்ட கயாசுரன் என்னும் யானை வடிவம் கொண்ட அரக்கனுக்கு அஞ்சிக் காசியம் பதியில் தம்மைப் புகலடைந்த தேவர்களைக் காத்தருளுமாறு கயாசுரனைக் கொன்று யானைத்தோலை உரித்துத் தமது திருமேனியில் அணிந்து கொண்ட குற்றமற்ற திருக்கோலம்.

53. விந்தை விளம்பு கஜாந்திகம் : சூரபதுமனின் மகனாகிய பானுகோபனுடன் நேரிட்ட போரில் தனது கொம்புகள் ஒடிந்து பெருந் துன்பத்துக்கு ஆளான தெய்வயானை ஆகிய ஐராவதம் திருவெண்காட்டில் வழிபட அதற்கு அருள்செய்த வியப்புடைய திருக்கோலம்.

54. வீணைதயங்குதக்ஷிண மூர்த்தம்: தும்புரு, நாரதர், சுகர் முதலிய முனிவர் பெருமக்களுக்கு வீணையின் இலக்கணத்தையுணர்த்தியருளுதற்காகத் தமது திருக்கைகளில் வீணையை ஏந்தி வாசித்துக் காட்டிய தென்முகக் கடவுள் திருக்கோலம்.

55. மேதக யோக வினோதமதாக விளங்குதக்ஷின மூர்த்தம் : சிவபெருமான் முன்னொரு காலத்தில் சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமரர் என்னும் பிரமபுத்திரர்கள் எளிதில் உணரும்வகையாக மேன்மைத் தன்மையுடைய யோக நிலையை வினோதமாக அருளிய யோகதக்ஷிணாமூர்த்தம் ஆகிய திருக்கோலம்.

56. விமல பிக்ஷாடனம் : தாருக வனத்து முனிவர்களுக்கு உண்மையை உணர்த்துவதற்காக எடுத்த பிக்ஷாடனத் திருக்கோலம்.

57. கவலையுத்தாரணம் : தன்னைவந்து புகலடைந்த அடியார்கள் இடுக்கண்களைத் தொலைத்து உதவியருளும் திருக்கோலம்.

58. வேதகணம் புகழும் விதிசிரகண்டனம் : வேதக் கூட்டங்கள் போற்றுகின்ற பிரமதேவனின் தலையைக் கைந்நகத்தால் கிள்ளியெடுத்த திருக்கோலம்.

59. கவுரி லீலாசமந்விதம் : உமாதேவியாருடன் வினோதார்த்தமாகத் திருவிளையாடல் செய்து மணந்து கொண்ட திருக்கோலம்.

60. எழில்அரியர்த்தம் : திருமால் தம்மை நோக்கிச்செய்த அருந்தவம் கண்டு மகிழ்ந்து வேண்டிய வரங்களையும் வழங்கியருளித் தமது உருவில் ஒருபாதியாக (கேசவார்த்த மூர்த்தியாக) விளங்குகின்ற திருக்கோலம்.

61. வீரபத்திரம் : வீரமார்த்தாண்டன் என்னும் அசுரனைக் கொன்ற வீரபத்திரர் ஆகிய திருக்கோலம்.

62. திரிமூர்த்தி முப்பாதம் : மூன்று திருவடிகளோடு அயன், அரன், அரி என்னும் மும்மூர்த்தியாக விளங்கும் திருக்கோலம்.

63. மஹாவேதாளிநடம் : காளியோடு நடனம் செய்த திருக்கோலம்.

64. வெருவறும்ஏகபதத்திரியுரு : ஒருதிருவடியே கொண்டு பிரம விட்டுணுக்களைத் தமது இரு பக்கத்திலும் வைத்துள்ள திருக்கோலம்.

ஆய்விளம்புஅறுபது நான்கும் : ஆக கூறப்படும் அறுபத்து நான்கு திருக்கோலங்களும்.

விலாசவளிப்பு நிமித்தம் எடுத்த : திருவிளையாட்டாகத் தன் பெருமையை உயிர்கள் உணர்ந்து உய்திபெறுமாறு கொண்ட

மெய்ப்பொருள் எது அதுவே : உண்மையான பரம்பொருள் யார் என்பது உணரவேண்டின் அவரே.

விண்ணவர் மண்ணவர் கண்ணவர் யாவரும் : தேவர்களும் பூவுலகத்தவர்களும் மற்ற உலகத்திலுள்ள யாவரும்

வீடருளாய் எனவே : எங்கட்கு வீட்டுப் பேற்றை வழங்கியருள்வாயாக என்று

வந்தனை புரிய : வணங்கிப் புகழ

இருந்துளன் நீ என : விளங்குகின்ற முருகன் ஆகிய நீயே என்று

வண்டமிழான் : வளம் பொருந்திய தமிழ்மொழிகொண்டு வாயாலும்

மனசான் : மனத்தாலும்

வாழ்த்தி வணங்கு எனை ஆள : நின் திருவடியை வாழ்த்தி மெய்யால் வணங்குகின்ற என்னை ஆட்கொள்ளும்படி

என் இருதய மலரில் எழுந்தருளாய் : என் உள்ளத்தாமரையில் எழுந்தருள் வாயாக (என்று வேண்டுகின்ற அடிகளார் பின்வருமாறு மயிலேறும் பெருமானை வழுத்துகின்றார்)

மந்திர நாயக : வேதங்கள் விளங்கும் முழுமுதற்பொருளே!

தந்திர நாயக : ஆகமங்களில் விளங்கும் முழு முதற்பொருளே!

மங்கள நாயக : மங்களங்களுக் கெல்லாம் மங்களமாகிய வீடுபேற்றின் தலைவனே!

ஓம்மய : பிரணவத் திருமேனி கொண்டவனே!

தவரீ சுர : தவம்செய்வார் கருத்தில் திகழும் ஈசுரனே!

பரம : பெரியவற்றுக் கெல்லாம் பெரியவனே!

குஹேசுர : உயிர்களின் இருதயமாகிய குகையில் விளங்கும் ஈசுரனே!

வசனமனாதீத : மனமொழிகளைக் கடந்தவனே!

வரத : வேண்டுவார் வேண்டுவதே வழங்கும் வள்ளலே!

கிருபாகர : அருளே உருவமானவனே!

குமர : என்றும் இளையோனே

பராபர : பராபரப்பொருளே

வரைவறு ஷாட்குண்ய வஸ்துவென் : எல்லையற்ற ஆறு குணங்களையுடைய பகவன் எனப்படும் பொருள் என்று கூறும்.

அற்புத சத்திய வித்தக : சச்சிதானந்தப் பெருமானே!

மரணமொடுஅயன மிலா வானவ : பிறப்பு இறப்பு இல்லாத தெய்வமே!

ஞான நபோமணியே : சிதாகாசத்தில் விளங்கும் மாணிக்கமே!

திருமால யனறியாவோர் மாமலையின் பெயரான்

குருநாத : பிரமவிட்டுணுக்கள் அடியும் முடியும் காணாது திகைத்த ஒப்பற்ற பெருமையையுடைய மலையின் பெயரை (அருணகிரி என்னும் பெயரைக் கொண்ட) நாதரின் குருநாதனே!

என்மருள்தெறு மாமுனியே : எனது அறியாமையாகிய இருளை அழிக்கும் பெருமை பொருந்திய ஆசிரியப் பெருமானே!

அறுபத்து நான்கு மூர்த்தங்களையும் திருப்பெயரிட்டுப் பாம்பன் சுவாமிகள் தமக்கே உரிய பாணியில் தமிழோசை நயம்பட ஒரே பாடலில் *நாம மாலையாக* அணிசெய்து தொகுத்துத் தந்துள்ளார். இதுபோன்று 64 பெயர்களையும் ஒரே பாடலில் வேறு எந்த அடியாரும் இதுவரை பாடித் தந்ததில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சந்திரசேகர மூர்த்தம் முதல் ஏகபாத திரிமூர்த்தி வரை உள்ள 64 மூர்த்தங்களும் சிவபெருமானுக்கு உரியவை. சுவாமிகள் சிவபிரானையும் செவ்வண்ண முருகனையும் ஒரே பொருளாக எண்ணியவர். ஆகவே, இந்த 64 மூர்த்தங்களையும் 'எந்தப் பரம்பொருள் கொண்டதோ, அந்தப் பரம் பொருளே நீதான் என நான் வணங்குகிறேன்' என்று இந்த நீண்ட பாடலில் கூறிக் களிப்புறுகின்றார்.

அருணகிரிநாதப் பெருமான்,

'கனகசபை மேவும் எனது குருநாதக்
கருணை முருகேசப் பெருமாள் காண்'

என்றார். அருகிரியாரைக் குருவாக ஏற்று அவர் வழி நின்ற சீடரான பாம்பன் சுவாமிகளும், சிவனும் செம்மாந்த சேயோன் முருகனும் ஒன்றே என்ற கருத்தில் 'அட்டாட்ட விக்கிரக அருள் லீலை'களை நெடும்பாடலில் பாடியருளினார்.

நாமும் சேயோனைச் சிவபிரானாக எண்ணிப் பாடுவோம். பாடி ஆடுவோம். அப்பரமனின் பேரருள் பெற்று நம்மை அண்டும் உரோக நாசம், பாபநாசம், சத்தும நாசம் நிகழ வேண்டுவோம். ஆயுள்விருத்தி, தைரிய விருத்தி, வீரிய விருத்தி, புத்திர விருத்தி, புண்ணிய விருத்தியுடன் சர்வார்த்த சித்தியும் பெற்று மங்கலமாய் வாழ்வோம்.

சிவாய நம : சரவண பவ.

நால்வரும் வள்ளலாரும்

அருள்திரு **ஊரன் அடிகளார்**

சைவ சமயத்தில் தாசமார்க்கம், சற்புத்திர மார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என மார்க்கங்கள் நான்கு உண்டு. இந்நான்கையும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்று சொல்வர். இந்நான்கையும் விளக்கியருள்வதற்குச் சைவசமயகுரவர் நால்வரும் வந்தனர்.

சரியையாகிய தாசமார்க்கத்தை விளக்க வந்தவர் திருநாவுக்கரசராகிய அப்பர் சுவாமிகள். கிரியையாகிய சற்புத்திர மார்க்கத்தை விளக்க வந்தவர் திருஞானசம்பந்தர். யோகமாகிய சகமார்க்கத்தை விளக்க வந்தவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள். ஞானமாகிய சன்மார்க்க்தை விளக்கவந்தவர் மாணிக்கவாசகர்.

பாதம் நான்கு : சரியை, கிரியை, யோகம், ஞானம். **மார்க்கம் நான்கு :** தாச மார்க்கம், சற்புத்திர மார்க்கம், சன் மார்க்கம், சக மார்க்கம். **விளக்க வந்த நால்வர் :** திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசகர்.

இவ்வாறு பட்டியலிட்டால் தெளிவாக உள்ளத்திற் பதித்துக் கொள்ள ஏதுவாகும்.

இந்நால்வருக்குப் பின் வந்த வள்ளலார், மாணிக்கவாசகர் விளக்கிய சைவ சன்மார்க்கத்தை, சமரச சுத்த சன்மார்க்கமாக விளக்கியருளினார். சைவம் கூறும் நான்காவது மார்க்கம் சன்மார்க்கம். அதனுடன் சமரசம், சுத்தம் என்ற இரண்டு அடைமொழிகளைச் சேர்த்துச் சன்மார்க்கத்தை, *சமரச சுத்த சன்மார்க்கமாக* வள்ளலார் விளக்குகிறார்.

சைவம் கூறும் சன்மார்க்கம், சித்தாந்தத்திற்குரியது. வள்ளலார் கூறும் சமரச சுத்த சன்மார்க்கம் ஆறந்தங் களுக்கும் பொதுவானது ; *ஷடாந்த சமரசம்.*

சமயகுரவர் நால்வருக்குப்பின் அவர்களளவுக்குப் பேரும் புகழும் சீரும் சிறப்பும் பெற்று விளங்குபவர் வள்ளலாரே. நால்வர் அருளிய தேவார திருவாசகங்களுக்குப்பின், அவற்றின் அளவுக்குப் பேரும் புகழும் சீரும் சிறப்பும் பெற்று விளங்குவது வள்ளலாரின் திருவருட்பாவே.

தேவாரத்தின் பிழிசாறு – பக்தி

திருவாசகத்தின் பிழிசாறு – பக்தியோடு ஆன்ம உருக்கம்

திருவருட்பாவின் பிழிசாறு – பக்தி உருக்கங்களோடு இரக்கம், உயிர் இரக்கம், ஜீவகாருண்யம், எல்லா உயிர்களுக்கும் இரங்கல், அனைத்துயிர் நேயம், ஆன்மநேயம்.

நால்வருக்குப் பின்வந்த வள்ளலார், நால்வரின் மீதும் பெரும்பற்றுக் கொண்டிருந்தார். திருஞானசம்பந்தரை வழிபடு குருவாகக் கொண்டார். திருவாசகத்தை வழிபடு நூலாகக் கொண்டார். வழிபடு கடவுள் முருகன், வழிபடு நூல் திருவாசகம் என்பது வள்ளலார்

இளமையில் அமைத்துக் கொண்ட முறை.

திருக்குறள், திருமந்திரம், திருவாசகம் ஆகிய மூன்று அருள் நூல்களையும் தமக்கு வழிகாட்டி நூல்களாக வள்ளலார் எடுத்துக் கொண்டார்.

அறத்துக்கு (நீதிக்கு)த் திருக்குறள்
சாத்திரத்துக்குத் திருமந்திரம்
தோத்திரத்துக்குத் திருவாசகம்

என்பது வள்ளலார் தேர்வு. இம்மூன்றையும் வள்ளலார் கண்ட தமிழ்ப் பிரஸ்தானத் திரயங்கள் என்று நாம் கூறுவதுண்டு. உபநிடதங்கள், பிரம்மசூத்திரம், பகவத்கீதை ஆகிய மூன்றும் வேதாந்த உலகில் **'பிரஸ்தானத்திரயம்'** (முக்கிய மூன்று) என வழங்கப்பெறும். அப்படித் தமிழ்ச் சைவ உலகில் வள்ளலாரால் தேர்ந்தெடுக்கப்பெற்ற தமிழ்ப் பிரஸ்தானத்திரயங்கள் (முக்கிய மூன்று நூல்கள்) திருக்குறள், திருமந்திரம், திருவாசகம் ஆகிய மூன்றுமாம்.

திருவாசகத்தின் மீது வள்ளலார் எல்லையற்ற ஈடுபாடு கொண்டவர். தாம் சொந்தமாகவே அருட்பாடல்களைப் பாடும் ஆற்றல் பெற்றுவிட்ட பின்பும், இளமையில் ஒற்றியூர் வழிபாட்டுக் காலத்தில், தாம் சொந்தமாகப் பாடுவதோடு, திருவாசகப் பாடல்களையும் இறைவன் சந்நிதியிற் பாடி உருகுவாராம். சமகாலப் பெரியோராகிய அட்டாவதானம் கலியாணசுந்தரயதீந்திரர் இதைக் கூறுகிறார். **'வள்ளலார் திருவாசகத்தில் ஊரம் வாய்ந்தவர்'** என்று அட்டாவதானம் கலியாண சுந்தர யதீந்திரர் கூறியுள்ளார்.

வள்ளலார் திருமணத்தின்போது முதல் இரவில் மணமகளுடன் அமர்ந்து திருவாசகம் முழுவதையும் இரவு விடிய விடிய இருவரும் ஓதினர். முற்றோதல் செய்தார்கள் என்பதே வரலாறு. அதுவே அம்மையாருக்கு உபதேசமாகவும் ஆகிவிட்டது. **வள்ளலார் திருவாசகத்திற்கு வாழ்க்கைப்பட்டவர்** என்றும், **திருவாசகத் தோடு தேனிலவு கொண்டவர்** என்றும் நாம் எமது நூல்களில் பலவிடங்களில் கூறியுள்ளோம்.

வள்ளலார் நால்வரைப் பற்றியும் நான்கு பாமாலைகள் பாடியுள்ளார்.

1. ஆளுடைய பிள்ளையார் அருள்மாலை
2. ஆளுடைய அரசுகள் அருள்மாலை
3. ஆளுடைய நம்பிகள் அருள்மாலை
4. ஆளுடைய அடிகள் அருள்மாலை.

என அவை நான்கும் பெயர் பெற்று விளங்குகின்றன.

ஆளுடைய பிள்ளையார் – திருஞானசம்பந்தர்
ஆளுடைய அரசுகள் – திருநாவுக்கரசர்
ஆளுடைய நம்பிகள் – சுந்தரமூர்த்திகள்
ஆளுடைய அடிகள் – மாணிக்கவாசகர்

இந்நால்வருக்குப்பின் வள்ளலார், ஆளுடைய வள்ளலாராக வந்து, நால்வரை ஏற்றுப் போற்றி, நால்வருக்கும் நான்கு அருள்மாலைகளைப் பாடித் துதிப்பவரானார். இந்நான்கு மாலைகளைத் தவிரத் திருவருட்பாவில் பல்வேறு இடங்களில் ஆங்காங்கே இந்நால்வரைப் பற்றிப் பாடிய பாடல்களும் பல உள்ளன.

இந்நான்கையும் சேர்த்து, வள்ளலார் அருளிய ஆளுடைய நால்வர் அருள்மாலை

என்று கூறலாம். சிவப்பிரகாசர் பாடியருளிய நால்வர் நான்மணி மாலையைப் போன்றது வள்ளலார் அருளிய இம்மாலைகள்.

வள்ளலார் பாடிய நால்வர் அருள்மாலையில் ஒவ்வொன்றிலிருந்தும் ஒரு பாடலை எடுத்துக்காட்டுக்காகக் கீழே தருகிறோம்.

உலகியல் உணர்வோர் அணுத்துணை யேனும்
உற்றிலாச் சிறியஓர் பருவத்து
இலகிய எனக்குள் இருந்தருள் நெறியில்
ஏற்றவுந் தரமிலா மையினான்
விலகுறுங் காலத் தடிக்கடி ஏற
விடுத்துப்பின் விலகுறா வண்ணம்
அலகிலா உணர்ச்சி அளித்தனை உன்றன்
அருட்கடற் பெருமைஎன் புகல்வேன்
திலகநற் காழி ஞானசம் பந்தத்
தெள்ளமு தாஞ்சிவ குருவே.

– *ஆளுடைய பிள்ளையார் அருண்மாலை*

திருத்தகுசீர் அதிகைஅருள் தலத்தின் ஓங்கும்
சிவக்கொழுந்தின் அருட்பெருமைத்
திறத்தால் வாய்மை
உருத்தகுமெய் உணர்ச்சிவடி வாகிச் சைவ
ஒளிவிளங்க நாவரசென் றொருபேர் பெற்றுப்
பொருத்தமுற உழவாரப் படைகைக் கொண்ட
புண்ணியனே நண்ணியசீர் புனித னேஎன்
கருத்தமர்ந்த கலைமதியே கருணை ஞானக்
கடலேநின் கழல்கருதக் கருது வாயே.

-1(3237)

தேன்படிக்கும் அமுதாம்உன்
திருப்பாட்டைத் தினந்தோறும்
நான்படிக்கும் போதென்னை
நானறியேன் நாஒன்றோ
ஊன்படிக்கும் உளம்படிக்கும்
உயிர்படிக்கும் உயிர்க்குயிரும்
தான்படிக்கும் அனுபவங்காண்
தனிக்கருணைப் பெருந்தகையே

- 7(3253)

வான்கலந்த மாணிக்க
வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால்
நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து
செழுங்கனித்தீஞ் சுவைகலந்தென்
ஊன்கலந்து உயிர்கலந்து
உவட்டாமல் இனிப்பதுவே.

- 7 (3263)

இப்படி எல்லாம் கூறுவதால், வள்ளலாரையும் அவரது சமரச சுத்த சன்மார்க்கத்தையும் சைவத்துக்குள்ளேயே அடக்கிவிடுவதாகக் கருதிவிடலாகாது. சைவசித்தாந்தம், வீரசைவம், சித்தர் நெறி, திருக்குறள் முதலான பண்டைத் தமிழ் அறநூல்கள் முதலியனவற்றிலிருந்து ஏற்றனவற்றையெல்லாம் எடுத்துக் கொண்டு தமக்கு இறைவன் (அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர்) அருளியவற்றையும், தமது சுய சிந்தனைகள், சுய அனுபவங்களையும் சேர்த்து, சமரச சுத்த சன்மார்க்கம் என்னும் ஒரு பொதுநெறியை, புதுநெறியை, வள்ளலார் கட்டமைக்கிறார் என்பதே நாம் உளங்கொள்ள வேண்டிய உண்மையாகும்.

சைவசித்தாந்தம் பூர்வமும் வள்ளலாரின் ஷடாந்த சமரச சுத்த சன்மார்க்கம் உத்தரமும் ஆகும் எனக் கொள்ளலாம்.

நால்வர் பாடியருளிய தில்லைச் சிதம்பரத்தைப் **பூர்வஞானசிதம்பரம்** என்றார் வள்ளலார். தாம் புதிதாக நிறுவிய வடலூர் சத்தியஞானசபையை **உத்தரஞான சிதம்பரம்** என்றார். சிதம்பரம் பூர்வமும் வடலூர் உத்தரமும் ஆகும் என்பது இதனால் பெறப்படும். சிதம்பரத்திற்கே பொது என்று ஒரு பெயருண்டு. '**எச்சமயத்தோரும் வந்திறைஞ்சா நிற்பர்**' என்று தாயுமானவர் பாடுகின்றார். தாயுமானவர் கண்ட பொதுமைச் சிதம்பரத்தை மேலும் பொதுமையாக்கிக் காண்கிறார் பின் வந்த வள்ளலார். புதுமையாக ஒரு உத்தரஞானசிதம்பரப் பொதுவையே வடலூரில் படைக்கிறார்.

வள்ளலார் கழல் வாழ்த்தல் வாழ்வாவதே!

ஆசை என்பது தாழ்ந்த விஷயங்களில், தீய விஷயங்களில் மனம் ஈடுபடுவதைக் குறிக்கும். பெண்ணாசை, பொன்னாசை, மண்ணாசை போன்றவை.

விருப்பம் என்பது உயர்ந்த விஷயங்களில், நல்ல விஷயங்களில் மனம் ஈடுபடுவதைக் குறிக்கும். உதாரணம் – 'அறஞ்செயவிரும்பு'.

தமோ குணம், ரஜோகுணம் ஆகியவற்றின் உந்துதல் காரணமாக லௌகிக விஷயங்களில் கொள்ளும் ஆசை மனிதனைப் பந்தப்படுத்தும்.

சத்துவ குணம் காரணமாகத் தெய்விக விஷயங்களில் கொள்ளும் விருப்பம், மனிதனைப் பந்தத்திலிருந்து விடுவிக்கும்.

ஆசை படப் படத் துன்பம் மிகும். ஆசை விடவிட ஆனந்தம் மிகும்.

விவேகம், வைராக்கியம், பக்தி, ஞானம் ஆகியவற்றை இறைவனிடம் வேண்டிப் பிரார்த்தனை செய்வதுதான் சிறந்தது.

'ஈசனோடாயினும் ஆசையறுமின்கள்' என்பதற்கு, 'உலகச் சுகங்களுக்காக இறைவனை நாடாதே' என்பதே பொருள். உலக ஆசை அப்போதைக்கு இன்பம் தருவது போல் தோன்றினாலும், முடிவில் அது துன்பத்தையே தரும்.

'ஆசையே துன்பத்திற்குக் காரணம்' என்று இரத்தினச் சுருக்கமாகப் புத்தர் கூறினார்.

'எல்லா உயிர்களுக்கும், எந்தக் காலத்திலும் இடைவிடாமல் தொடர்கிற பிறப்பைக் கொடுக்கும் விதை – அவாதான்' என்று பெரியோர்கள் கூறுகிறார்கள்.

'அவாஎன்ப எல்லா உயிர்க்குமஎஞ் ஞான்றும்
தவாஅப் பிறப்புஈனும் வித்து' (361)

இந்த உண்மையை தமிழ்மறையாம் திருக்குறள் கூறுகிறது.

அவா, ஆசை எல்லாம் ஒரே நிலையில் பொருள் கொள்ளத் தக்கவையாகும்.

'............ திருமாலாம் அவன் விருப்பெய்தவும் மலரவன் ஆசைப்படவும்' என்று திருவாசகம் திருப்பள்ளியெழுச்சியில் இடம் பெற்றுள்ளது. இதில் திருமால் கொண்டது விருப்பம் என்றும், தாமரை மலரில் இருக்கும் நான்முகன் கொண்டது ஆசை என்றும் குறிப்பிடப் பெற்றிருப்பதைக் காண்க.

மையல் மானுடம் உயர்திணையாம் நெறி

திருமுறைமணி சித்தாந்தசரபம் புலவர் **எ. வேலாயுதன்,** எம்.ஏ.,

கைகள் அஞ்சலி கூப்பிக் கலங்கினான்
செய்ய சேவடி நீங்கும் சிறுமையேன்
மையல் மானுடமாய் மயங்கும் வழி
ஐயனே தடுத்தாண்டருள் செய் என!
(திருத்தொண்டர் புராணம்)

உலகியல் வாழ் உயிர்கள் எல்லாம் மாயைத் திறத்தின் மையல் வலைப்பட்டு பிறந்து இறந்து உழல்கின்றன. அம்மயக்கமே இன்பம் என்றும் கள்ளுண்பார் போலத் திரிகின்றன. இவ்வுயிர்களுள் ஒன்றுதான் மக்கள். ஆயினும் ஐம்புலன் அறிவின் மேவும் பிறவுயிரினங்களைவிட ஆறறிவு. ஆம், மனம், என்னும் உள்ளுணர் அறிவுபெற்ற மக்களினம், இம்மனம் உடைமையால் மனிதப் பிறவி என்று உணரப்பெறுகின்றது.

'மக்கள் தாமே ஆறறிவுயிரே' ஆறறிவதுவே அவற்றொடு மனனே! என்னும் தொல்காப்பியம் 'உயர்திணை யென்மனார் மக்கட்சுட்டே' என்று அறிஞர் போற்றும் திறமும் உரைக்கின்றது.

மனிதப் பிறவி, மனம் என்னும் உள்கருவியால், கல்வி என்னும் கலையுணர்வு பெற்று உயர் ஒழுக்கம் தெரிந்தொழுகி, பிறவுயிரிகளின் வேறுபட்டு உயர்திணையெனப் பெறுகின்றது என்று,

விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர்

என்னுந்திருக்குறள் தெரியவுணர்த்து கின்றது.

மக்களல்லாத பிறவெல்லாம் தாழ்திணையென்னாமல், 'அஃறிணை யென்மனார் அவரல பிறவே' என்றும், படைப்புக்காலந்தொட்டு உயர்வுறு ஒழுக்க மில்லாமல் உயர்வின்றி இருப்பதனைச் சுட்டுகின்றது தொல்காப்பியம். இதற்குக் காரணம் மனம் இன்மையும், மனம் சிறிது இருப்பினும் கல்வியுறாமையே விலங்கு இனம் என்றும் திருக்குறள் தெரிவிக்கின்றது.

மையல் மானுடம்

இத்தகு உயர்திணையாம் மக்களினம், ஆக்கைக்கே இரைதேடி சிறிய பொழுதில் அழியும் சிற்றின்பத்தில் மையல் உற்று மயங்குதல் புரியின் பெறுதற்கரியதாகிய பேரின்பப் பேற்றினைப் பெறும் வாய்ப்பை இழப்பதுடன் உயர் மானிடப் பிறவியையும் இழித்து பேரிழப்பே கொண்டு அலையும் அல்லவா? என்று 'வாய்த்தது நந்தமக்கு ஈதோர் மனித்தப் பிறவி மதித்திடுமின்' என்று அறை கூவல் விடுகின்றார் அப்பரடிகள்.

மேலும்,

மனம் எனும் தோணிபற்றி மதியெனும்
கோலையூன்றி!
சினம் எனும் சரக்கையேற்றி
செறிகடலோடும் போது
மதன் எனும் பாறைதாக்கி மறியும்போது
அறியவொண்ணாது
உனையுனும் உணர்வை நல்காய் ஒற்றியூர்
உடையகோவே!

என்னும் அப்பரடிகள் திருப்பாடல்.

மனிதன் மனம் என்னும் தோணியில் சினம், காமம், வெகுளி, மயக்கம் என்னும் பொருள்.

சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று

என்பது குறள் ஏற்றி அறிவுக்கோலையூன்றி உலகியற்செறிவின் அலைமோதும் வாழ்வில் ஓடும்போது எதிர்நிலையினும் மதன் என்னும் திண்ணிய பாறையாய்த் தாக்க. மறியும் போதாகிலும் உலகின் ஒவ்வொருவருக்கும் சினம் என்னும் சரக்கால் அலமருதல் பெருகுமே தவிர அமைதியுறாது என்று தெரிந்து, திருவருட்பற்றே எல்லாவுயிரையும் வாழ்விக்கும் என்றுணர்ந்து உனை (இறையருளை) யுனும் உணர்வை நல்காய் ஒற்றியூர் உடையகோவே! என்று உணர்த்துகின்றது. காண்க!

மனித அறிவு காமம், வெகுளி, மயக்கமுறு பொருள்களே ஏற்றியியங்கு வதால் தான் நாடு, அரசு குடிகள் அனைத்து போராட்ட வாழ்வாகவே மறியலாக்கி அமைதியின்றி அலைந்து கொண்டுள்ளன என்பதை வரலாறுகள் உணர்த்துகின்றன. மற்று,

மனிதன் மனமெனும் தோணியில், திருவருள் அன்பின் திருவடி சேர்ந்து, அறிவு எனும் கோலையூன்றி பிறவிப் பெருங்கடல் நீந்துவர் என்றும், இறைவனடி சேராதார் இப்பெருங்கடலை நீந்தார் என்றும்,

‘பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார்’

என்னும் திருக்குறள், பொருளும் அப்பரடிகள் திருப்பாடலால் தெரியலாம்.

மனிதனை விலங்கின் பிற உயிரினின்றும் வேற்றுமை செய்வது கல்வியே என்று

விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர்.

என்னும் திருக்குறள் உணர்த்துகின்றது. கல்வியின் பயன்

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு

என கல்வியே அறிவூற்றூ பெருகுதிறம் என்றும் குறிப்பிடுகின்றது.

இங்ஙனம் அறிவூற்றம் உறுகல்வி உச்சமாக

கற்றதனாலாய பயன் வாலறிவன்
நற்றாள் தொழல்

என்றும் தெரிவிக்கின்றது.

ஆக கல்வியே மனிதனை அஃறிணையுயிர்களிடமிருந்து வேறுபடுத்தி உயர்திணையாக்குகின்றது. உயர்திணை யாம் மக்கள் பொய்தீர் ஒழுக்கநெறியில் நின்று இறைவன் பொருள் சேர் புகழ் புரிதல் முடிமணியும் உச்சி எல்லை என்றும் உய்த்துணரக் காட்டுகின்றது திருக்குறள்.

இத்தகு கல்வியும்மையலுறாது பிழைத்து தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகி முனிவிலாததோர் பொருளது கருதலும் ஆறுகோடி மாயாசத்திகள் வேறு வேறு தம் மாயைகள் தொடங்கின. அறிவு என்னும் பெயரால் அறிவு மயக்கம் கூட்டின

என்கின்றார் மாணிக்கவாசகர் (போற்றித் திருவகவல்)

நாத்திகவாதமும், மாயாவாதமும், பிறவும், மனத்தைக் குழப்பமாக்கி மனக்கவலையை உண்டாக்கின என்றும் தெரிவிக்கின்றார்.

தாள்சேர்ந்தார் மனக்கவலை மாற்றல்

முந்திய முதல்வன், ஒருவன் என்னும் ஒருவன், ஆதியும் அந்தமும் இல்லாதவன். தனக்குவமையில்லாதவன் இறைவன்.

தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது

என்கின்றது திருக்குறள் (அரிது – இன்மைக் குறிப்பு) இத்திருக்குறள் முழுமுதற் பொருளாம் இறைவன் திருவடி நினைவின் சேர்ந்திருக்கின்ற மனமே எத்தகு மனக்கவலையும் மாற்றல் இயலும் என்பதும் மற்றபற்றினால் இயலவே இயலா என்பதும் உறுதியாக உரைக்கின்றது தெரியலாம்.

இங்ஙனமின்றி ஐம்புல வேட்கையால் விரும்பு பொருள் எல்லாம் பெறும் காமமும், பெற இயலாவிடின் சினமும் பெற்றால் வருமவற்றுள் மயங்கும் மயக்கமும் பிறவிநோயில் ஆழ்த்துகின்றன. இங்ஙன மின்றி மனத்தில்

காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய்

என்கின்றது திருக்குறள். 'மனம் என்னும் தோணியில்.... சினம் என்னும் சரக்கையேற்றி' என்னும் அப்பரடிகள் வாய்மையில் சினம் (வெகுளி) என்றதன் இனமாய, காமம், மயக்கங்களும் ஏற்றப்படுகின்றன என்றே தெரிதல் வேண்டும்.

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றை
பற்றுக பற்று விடற்கு.

என்னும் திருக்குறள் பற்றற்ற இறைவன் திருவடி பற்றுக! என்னும் காமம் வெகுளி மயக்கம் என வரு பற்றுவிடற்கும் அப்பற்றுதான் முதன்மையெனவும் தெரிவிக்கின்றது.

'மையலாய் இந்த மண்ணிடை வாழ்வெனும்
ஆழியுளகப்பட்டு தையலாரெனும்
சுழித்தலைப் பட்டு நான் தலை தடுமாறாமே
பொய்யெலாம் விடத் திருவருள் தந்துதன்
பொன்னடி இணைகாட்டி மெய்யனாய் வெளி
காட்டிமுன் நின்றதோர் அற்புதம்
விளம்பேனே! '

என்னுந்திருவாசகம் பொய்ப் பொருளின் மயக்கம் கெட மெய்ப் பொருள் பொன்னடி காட்டிய அற்புதம் தெரிவிக்கின்றதும் இதனையுணர்த்தும்.

அதிசூரன் படை ஏனாதிநாதர் முன்போர்க்களத்தைவிட்டு, ஓடிய விரைவைத்தெரிவிக்கும் சேக்கிழார்.

'நிலைப்பட்ட மெய்யுணர்வு நேர்பட்டபோதில்
அலைப்பட்ட ஆர்வ முதற் குற்றம்
போலாயினார்'

என்னும் உவமை கூறும் முகத்தான் மனத்துள் இறையருளின் மெய்யுணர்வு நேர்படின் அலைப்பட்ட (காமம்) ஆர்வமுதல் (வெகுளி) குற்றம் (மயக்கம்) நில்லாது விரைந்தோடும் என்றே உணர்த்துகின்றார்.

முடிவுரை

மக்கள் மனவுணர்வில் உள்ளுவ வெல்லாம் உயர்வுள்ளலாம் அன்புறு திறத்தின் இறையருள் நிரம்ப நிறை வாழ்வுறுதலே பொய்தீர் ஒழுக்கமாம் உயர்திணைத்திறம் என்பதும், மற்று மறந்து உடலின் ஐம்புல வேட்கையின் ஆக்கைக்கே இரைதேடி, உடல் வேட்கையின் சிறுமையே விழைந்து, நிலையிலாப் பொருள்களே நிலையென எண்ணி தனிமுடி கவித்து ஆறுதல் பெறினும் மையல் மானுடமாய் மயங்கும் கீழ்மையே என்பதும் தெரியவுணர்த்துகின்றன தமிழ் மறைகள் – திருக்குறள் – திருமுறைகள்.

மானிடப் பிறவிதானும் வகுத்தது மனம் வாக்கு காயம்
ஆனிடத்தைந்து மாடும் அரன்பணிக்காக வன்றோ?

என்கின்றார் சிவஞானசித்தியார். எனின் இதனை மறக்கலாமோ?

இல்லறம், துறவறம், சாதி, குலம், பிறப்பு, தொழில் முதலிய எத்திறத்தின் உள்ளவராயினும் தத்தமக்கு வாய்த்த தொழிலில் பொருள் தேடி உண்டுடுத்தி இருப்பினும், அருள் உணர்வின் இறைவன் திருவடிப் பற்றிய மனத்தினராய் வாழவேண்டும். திருத்தொண்டராக விளங்க வேண்டும்.

திருத்தொண்டர் புராணத் திருத் தொண்டர்கள் யாவரும் இங்ஙனம் வாழ்ந்துயர்ந்தவரே! தமிழர் திருநெறியும், உயர்திணையாம் வாழ்வும். இவர் தம் வரலாறும் தெரியக் காணலாம் உணர்ந்துயரலாம்.

கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை

என்கின்றது திருக்குறள்.

இறைவன் திருவடியை மறந்து நீங்கினால் மையல் மானுடமாய் மயங்குதல் ஆகுமே என்பதே தலைப்பில் காணும் திருப்பாடல். பூவினைக் கொண்டு மலரடி போற்றுதும் நாமடியோம்! தீவினை வந்தெமை தீண்டப்பெறா! திருநீலகண்டம்!

வீரம் என்பது உடல் முழுவதும் இருக்க வேண்டும். இதைத்தான் சிவனின் பாதியாக பராசக்தி இருப்பது உணர்த்துகிறது.

செல்வம் பெற்றவர்கள் நல்ல இதயம் கொண்டவர்களாக இருக்க வேண்டும். திருமால் திருமகளைத் தமது மார்பில் வைத்திருப்பதை உணர்த்துகிறது.

நாக்கு நல்ல தெய்விக வாக்கையே பேச வேண்டும். இதுதான் பிரம்மா தன் நாவில் கலைமகளைக் கொண்டிருப்பது உணர்த்துகிறது.

'சிவாய நம' என்பது சிவனுக்கே உரிய திருவைந்தெழுத்தாகும். இதில் **சி** என்பது துடி, **வா** என்பது வீசுகரம், **ய** என்பது அபயகரம், **ந** என்பது அங்கி, **ம** என்பது முயலகனையும் உணர்த்துகின்றன.

சர்வக்ஞர் போற்றும் சிவனார் அமுது

கலைமாமணி டாக்டர் வேலூர் **ம. நாராயணன்,** எம்.ஏ., பி.எச்.டி.,

இன்றைக்கு ஏறத்தாழ 400 ஆண்டுகளுக்கு முன்பு கர்நாடகத்தில் வாழ்ந்த சிவ பக்தர், சித்தர், கவிஞர், சீர்திருத்த அறிஞர் சர்வக்ஞர். பசவரசர் மாலி என்னும் பெற்றோர்க்குப் பிறந்த இவரது ஊர் கர்நாடகம் தார்வாடு நகரின் அருகேயுள்ள அம்பலூரு ஆகும். சிறந்த ஆன்மிகக் குடும்பத்தில் பிறந்த இவர்க்கு இயல்பாகவே சிவ பக்தி வாய்த்திருந்தது என்றாலும் சாதி – மதங்களைக் கடிதல், மது – மாது ஆகியவற்றில் மூழ்கியிருப்பவர்களை நல்வழிப்படுத்துதல் போன்ற தொண்டு களையும் இவர் புரிந்துள்ளார்.

சர்வக்ஞரின் பாடல்கள் மூன்று வரிகள் கொண்டவை. அவற்றைத் திரிபதிகள் என்கின்றனர். தமிழில் சித்தர் பாடல்ளுக்கு நிகராக அவற்றைக் கொள்ளலாம். ஒவ்வொரு பாடலின் ஈற்றுச் சீரும் 'சர்வக்ஞ' என முடியும். தெலுங்கில் வேமன்னா, தமிழில் திருஞானசம்பந்தர், திருமங்கை யாழ்வார் போன்றோர் தங்கள் பாடல்களில் தங்கள் பெயர் வருமாறு பாடும் முறையைப் பின்பற்றியுள்ளனர். சர்வக்ஞரின் திரிபதி கள், அதாவது உரைப்பாக்கள் 1198 இன்று நமக்குக் கிடைத்துள்ளன.

அண்மையில் 13.08.2009ஆம் நாளில் சர்வக்ஞரின் திருவுருவச் சிலையை சென்னை அமைந்தகரையில் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் தலைமையில் மாண்புமிகு கர்நாடக முதல்வர் திரு.எடியூரப்பா அவர்கள் திறந்து வைத்தார்கள். இஃதொரு சிறந்த, இனிய வரலாற்று நிகழ்வாகும்.

முன்னதாக 09.08.2009 ஆம் நாளில் பெங்களூருவில் வான்புகழும் நம் திருவள்ளுவரின் திருவுருவச் சிலை மாண்புமிகு கர்நாடக முதல்வர் திரு.எடியூரப்பா தலைமையில் மாண்புமிகு நம் தமிழக முதல்வர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப் பெற்றது. இதன்மூலம் கர்நாடகம் வாழ் தமிழர்களின் கால் நூற்றாண்டுக் காலக் கனவு இனிதே நிறைவேறியது.

தென் மாநிலங்களில் வீர சைவம் பெரிதும் போற்றப்பட்ட, பின்பற்றப்பட்ட மாநிலம் கர்நாடகம் ; சர்வக்ஞரும் அதைப் பின்பற்றியுள்ளார். ஒல்லும் வகையான், இலிங்க வழிபாட்டையும், சிவபெருமானை யும் தமது பாடல்கள் வழிப் போற்றித் துதித்துள்ளார் ; அவற்றை இங்கு ஆராய்வோம்.

'இலிங்கமே அனைத்தும்' என வாழ்ந்திருக்கின்றார் சர்வக்ஞர் ; 'சர்வக்ஞர்' என்ற சொல்லுக்கு 'அனைத்தும் அறிந்த இறைவன்' என்பது பொருள். வீர சைவர்கள் லிங்கத்தைக் கழுத்தில் அணிந்திருப்பர். சர்வக்ஞரும் இம்மரபைப் போற்றியுள்ளார்.

'இலிங்கம் தரித்தோன்
உயிர்தரித்தோனாம்
மேன்மை உடைத்தோனாம்
உலகின்பம் துய்ப்பவனு மவனாம் –
பிறப்பெடுப்பதுவும்

இலிங்கம் வழியாம் சர்வக்ஞ' (87)

தாம் அனுபவிக்கும் உலகியல் பொருள்கள் அனைத்தையும் சிவனுக் கென்று படைப்பவரே மேன்மேலும் மேன்மை எய்துவர் என்பது சர்வக்ஞர் கருத்து.

'துய்க்கும் பொருள் துய்த்து – உலகில்
துய்ப்பதைச் சிவனுக்கு
அன்போடு படைப்பவரே
எய்துவர் மேன்மை சர்வக்ஞ.' (101)

எல்லாம் சிவனருள் என நம்பி வாழ்பவர்க்கு மறு பிறப்பு இல்லை என்கிறார் பிறிதொரு பாடலில்;

'சிவனே கணவன்; தானே
மனைவியென
சிவனுள் கூடாமல் கூடும்
சிவனடியார்க்கு
எவனுண்டு மறுபிறப்பு சர்வக்ஞ.' (108)

இஃது, நம் தமிழ் மரபில் உள்ள நாயக நாயகி பாவத்தை ஒத்துள்ளது எனலாம். தொடர்ந்து பாடுகின்றார்.

'இலிங்கமே காட்சியாம்; இலிங்கமே
நிலையாம்
இலிங்கமே அனைத்து இன்பமாம்
என்போர்
இலிங்கமே ஆவர் சர்வக்ஞ.' (114)

இலிங்கம் தன்னுள்ளே உறைகிறது என்ற உணர்வு தெளியாமல் பலரும் சிவனருள் வேண்டிக் கங்கை போன்ற நதிகளைத் தேடிச் சென்று மூழ்குவதேனோ என்கின்றார்.

'தன்னுள் உறைகின்ற இலிங்கமதை
மறந்தே
தண்கங்கை கோதாவரி காவிரி
யமுனையில் தான் மூழ்கின்
பயனென் சர்வக்ஞ.' (131).

மும்மூர்த்திகளில் சிவனே உயர்ந்தவர்; சிறந்தவர் என்பதில் உறுதியாக இருந்துள்ளார் சர்வக்ஞர்.

'பிரம்மனும் அரியும் அரனின்
படைப்பே
அரசர்க்குக் குடியும் இணையோ? –
யாருளார்
அரனினும் உயர்ந்தவர் சர்வக்ஞ.'
(157)

சர்வக்ஞரின் காலத்தில் தமிழ்நாட்டைப் போலவே, கர்நாடகத்திலும் பல தெய்வ வழிபாடு, சிறு தெய்வ வழிபாடுகள் ஆதிக்க நிலையில் இருந்துள்ளன போலும்; அதனால் தான் மனம் நொந்து இவ்வாறு பாடுகிறார்;

'நிலம் நீரிருக்க நீள்துயிலும்
கொள்ளுவரோ?
நிலமீது சிவனிருக்க பிற தெய்வம்
நம்புவோர்
நிலமீது மூடரே காண் சர்வக்ஞ.' (160)

'கரவினும் களவில்லை வேள்வியிலும்
வலிமையில்லை
எரிகதிரினும் ஒளியில்லை பற்பல
தெய்வங்கள்
பரமனுக் கிணையில்லை சர்வக்ஞ.'
(161)

பிறர்க்குப் பயன்படும் வண்ணமாகத் தம்மிடம் உள்ள பொருள்களை மறைத்து வாழ்வது திருட்டிற்கு ஒப்பாகும்; நமக்குத் தெரியாதவற்றைக் கேட்டுத் தெளிதல் சிறந்த பலமாகும்; ஒளி வெள்ளம் பாய்ச்சுவதில்

சூரியனே சிறந்ததாகும். என்றெல்லாம் உவமைகளை அழகுற அடுக்கி நிறைவாக இவ்வுலகில் தெய்வங்களுளெல்லாம் சிறந்த தெய்வம் சிவனே – பரமனே என்று சர்வக்ஞர் கூறுவது அவர் போற்றும் சிவனார் அமுது சிறப்புடைத்து என்பதைக் காட்டுகிறது.

கவிதைகள் சிறக்க ஒன்பது மெய்ப்பாடுகள் தேவை; காதுகட்குச் சிறந்த இனிமையான இசை தேவை; பந்த பாசங்களில் மூழ்கித் தத்தளிப்பவர்களுக்குக் குருவின் வழிகாட்டுதல் தேவை. உயிர்க் குலங்கள் அனைத்தும் வீடு பேறு பெறச் சிவமந்திரமே தேவை என்கிறார் சர்வக்ஞர்.

'கவிக்கு ஒன்பான் சுவைநன்று
செவிக்கு இசை நன்று
தவிப்போர்க்கு பந்தமகற்றும் குரு
நன்று – வீடு பெற
சிவமந்திரமே நன்றாம் சர்வக்ஞ.' (211)

மற்ற எவற்றை அறிதலையும் விடவும் தாம் போற்றுகின்ற சிவனை அறிதல் சிறப்புடைத்தாம் என்கிறார் சர்வக்ஞர்.

'ஏற்ற நாற்று உழவுக்கழகு
தோட்டத்துக்கழகு மல்லிகை
கற்ற பெரியார் நட்பழகு
சிவனையறிதல்
மற்றவற்றினும் சிறப்பாம் சர்வக்ஞ.'
(222)

தேவாரம் பாடிய மூவருள் மூத்தவர்; முதியவர்; எண்பது வயது வரை மண்ணில் வாழ்ந்து சிவத்தலங்கள் தோறும் சென்று சிவனைக் கண்டு பாடிப் பரவியவர் திருநாவுக்கரசர். தமது அருட்பார்வையில் சிவபெருமான்,

'விறகில் தீயினன்; பாலில்
படுநெய் போல்
மறைய நின்றுளன்;
மாமணிச் சோதியான்...'

எனத் திகழ்கின்றான் என்று அருமையாகப் பாடியுள்ளார் திருநாவுக்கரசர். இதே கருத்து நம் சர்வக்ஞருக்கும் தோன்றியுள்ளது; இவர்

'நீருள் வெப்பமும்; பாலுள் நெய்யும்
பாருள்ளோர் கண்ணில் படாத
தன்ன – சிவனும்
மறைய நின்றுளான் சர்வக்ஞ.' (228)

என்று பாடியுள்ளார்.

உயர்ந்த உள்ளங்கள் ஒன்று போலவே சிந்திக்கும் என்பது இயற்கையின் நியதி அல்லவா?

தமது திரிபதியில் 'சிவயோகம்' எனும் பகுதியில் சிறந்த சிவயோகிகளின் இலக்கணத்தையும், சிவயோகிகளை நிந்திப்பவர்க்கு நேரும் கேடுகளையும் பாடியுள்ளார் சர்வக்ஞர்;

சான்றாகச் சில பாடல்கள் பார்ப்போம்; சிவயோகியின் இலக்கணம்;

'தோள் வலிமையேன்?
பொன்னுமேன்? மென்
தோளுடை பெண் துணையுமேன்?
சிருங்காரமேன்?
கோளுறவு துறந்தார்க்கு சர்வக்ஞ.'
(289)

மண் – பொன், பெண் எனும் மூவாசைகளைத் துறந்தவர்களே சிறந்த சிவயோகிகள் என்கிறார் சர்வக்ஞர்.

பொதுவாகச் சிவயோகிகளின் புறத்தோற்றம் வித்தியாசமான கோலத்தில் தான் இருக்கும்; அவற்றைக் கண்டு வெகுமக்கள் அவர்களைக் கேலி பேசுவதோ, நிந்தனை செய்வதோ கூடாது என்கிறார் சர்வக்ஞர்;

'கடையனென இகழற்க!
துறவியைத் தூற்றற்க
சடையோனென இகழ்ந்த
தட்சன் தலையும்
உடைந்த கதையறியாயோ சர்வக்ஞ.'
(293)

இங்ஙனம், தாம் போற்றிய வீர சைவத்தின் சிறந்த அடையாளங்களான இலிங்கம் – சிவபெருமான் – சிவயோகியர் ஆகியோரை சர்வக்ஞர் தமது உரைப்பாவில் பாடியிருப்பது இவரது ஏனை உரைப்பாக்களின் திறனையும் அறிய விரும்பும் வேட்கையை நம்முள் எழுப்புகின்றது அல்லவா? ஆம்! மேன்மேலும் சர்வக்ஞரைப் பயில்வோம்; ஆய்வோம்; அகங் குளிர்வோம்.

சூரியன் ஒன்றே. அது தோன்றுவதுமில்லை, மறைவதுமில்லை, இருந்தது இருந்தபடியே இருக்கிறது. ஆனால் விவகாரத்தில சூரியன் உதிப்பது போலவும், அஸ்தமிப்பது போலவும் காணப்படுகிறது.

பரம்பொருள் ஒன்றே. அது பாரமார்த்திக நிலையில் நிர்க்குணமானது, அருவமானது, செயலற்றது. அதுவே வியாவஹாரிக நிலையில் சகுணமானது, உருவமானது, செயல்புரிவது.

ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போல ஒரு காகிதத்தின் இரண்டு பக்கங்கள் போல – நிர்க்குணப் பிரம்மமும் சகுணப் பிரம்மமும் விளங்குகின்றன.

எனவே, நிர்க்குணப் பிரம்மத்தின் மற்றொரு பக்கம்தான் சகுணப் பிரம்மம், சகுணப் பிரம்மத்தின் மற்றொரு பக்கம்தான் நிர்க்குணப் பிரம்மம்.

சிவபெருமான் கீழே படுத்திருப்பது நிர்க்குண பிரம்மத்தைக் குறிப்பிடுகிறது. அதில் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய செயல்கள் எதுவுமில்லை.

சிவபெருமான் மீது காளி நிற்பது நிர்க்குணத்தை ஆதாரமாகக் கொண்டு சகுணப் பிரம்மம் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய செயல்கள் புரிவதை உணர்த்துகிறது.

ஆறு தரிசனங்களில் ஒன்றாகிய யோக தத்துவம், புருஷன் பிரகிருதி பற்றி குறிப்பிடுகிறது. அதன்படி சிவபெருமான் கீழே படுத்திருக்கும் நிலையே புருஷன், அந்தப் புருஷனைச் சாட்சியாகக் கொண்டு பிரகிருதியாகிய (இயற்கையாகிய) காளி, உலக இயக்கம் என்ற செயலைச் செய்கிறது.

கடலின் அடிப்பகுதியாகப் பூமி இருக்கிறது. அதை ஆதாரமாகக் கொண்டு அதன் மீது கடலின் பரந்த நீர்ப்பரப்பும் கோடானுகோடி கடல் அலைகளும் உள்ளன. படுத்திருக்கும் சிவபெருமான் கடலின் தரைமட்டம் என்றால், அதன்மீது உள்ள பரந்த நீர்ப்பரப்பும் அலைகளும் காளியாகும்.

ஒரு பெரிய கட்டிடத்தை அதன் அஸ்திவாரம் தாங்கியிருக்கிறது. படுத்திருக்கும் சிவபெருமான் கட்டிடத்தின் அஸ்திவாரம் என்றால், அதன் மீதுள்ள கட்டிடமே காளியாகும்.



பன்னிரு ஜோதிர்லிங்கம்

1. சோமநாதம் : குஜராத் மாநிலத்தில் சௌராஷ்டிரப் பகுதியில் வீரவால் இரயில் நிலையத்திற்கு 3 கல் தொலைவில் உள்ள பிரபாச பட்டினத்தில் உள்ளது.

2. மல்லிகார்ஜுனம் : அர்ச்சுனனுடைய திருத்தலம். கர்நூல் மாவட்டத்தில் நந்தியால் புகைவண்டி நிலையத்திலிருந்து 32 கல் ஆத்மகூர். அங்கிருந்து 28 கல் பெத்த செருவு. அங்கிருந்து 14 கல் ஸ்ரீ சைலம். இங்குள்ள மூர்த்தி மல்லிகார்ஜுனர். இது சம்பந்தர் தேவாரம் பெற்ற திருப்பருப்பதம் என்னும் தலமாகும்.

(திருப்பதி, ஒங்கோல், குண்டூர், மர்காபூர் ஆகிய ஊர்களிலிருந்து பஸ் கோயிலுக்கு நேரே போகிறது)

3. திரியம்பகம் : நாசிக் பஞ்சவடியிலிருந்து 18 கல். சிவமூர்த்தி.

4. மகாகாளம் : மத்தியபிரதேசத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க உஜ்ஜையினியில் உள்ள சிவமூர்த்தி.

5. ஓங்காரம் : உஜ்ஜையினியிலிருந்து 90 கல் தொலைவில் உள்ள ஓங்காரேஸ்வர ரோடு, ரயிலடியிலிருந்து 7 கல் அழகான நர்மதைக் கரையிலுள்ளது.

6. பீமசங்கரம் : புனாவுக்கு அருகிலுள்ள நேரளம் புகைவண்டி நிலையத்திலிருந்து 8 கல் தொலைவிலுள்ள காண்டசத்தியிலிருந்து 4 கல். மலைமீது உள்ளவர் சிவமூர்த்தி.

7. இராமேச்சுரம் : விவரம் தனியே காண்க

8. குஸ்ருணேஸ்வரம் : எல்லோராக் குகைக்கு அருகிலுள்ளது.

9. நாகநாதம் :

(நாகேசம்) சவுண்டி ரயிலடிக்கு மேற்கே 14 கல், அவுண்டா என்னும் ஊரில் இத்தலம் இருக்கிறது.

10. வைத்தியநாதம் :

பீஹார் பாட்னா – ஜஸித் சந்திப்பிற்கு 4 கல் தொலைவில் வைத்தியநாதம் என்ற இரயில் நிலையத்தின் அருகிலுள்ளது.

11. கேதாரேசுவரர் : இமாலயத்திலுள்ளது

12. விஸ்வேசுரம் : காசி (வாரணாசி)

மனிதப் பிறவி எடுத்த ஒவ்வொருவரும் பன்னிரண்டு ஜோதிர் லிங்கங்களையும் வழிபட வேண்டும். இவற்றைப் பக்தியுடன் பரவி வணங்குபவருக்கு மறு பிறப்பு உண்டாகாது. ஆன்மாவில் ஒளி விளக்கம் உண்டாகும்.

– திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்

பிரதோஷம்

பிரதோஷத்தின் முக்கியத்துவம் என்ன?

அமுதம் பெறுவதற்காகத் தேவர்களும் அசுரர்களும் சேர்ந்து பாற்கடலைக் கடைந்தார்கள். அப்போது பாற்கடலிலிருந்து கற்பகமரம், காமதேனு, தன்வந்திரி, உச்சைசிரவஸ் போன்ற பொருள்கள் தோன்றின. இறுதியில் ஆலகால விஷம் தோன்றியது. கடுமையான அந்த விஷம் உலகத்தை அழித்துவிடும் என்ற நிலை ஏற்பட்டது. அப்போது உலக நன்மைக்காக சிவபெருமான் அந்த ஆலகால விஷத்தை உட்கொண்டார். விஷத்தின் கடுமை காரணமாக அவர் சிறிது நேரம் மயக்கமடைந்தார். அந்த நேரத்தில் தேவர்கள் அனைவரும் சேர்ந்து சிவபெருமானை வழிபட்டனர். அவ்விதம் அவர்கள் வழிபட்ட நேரமே பிறகு, பிரதோஷம் என்று சிவாலயங்களில் சிவபூஜை செய்யும் நேரமாக அமைந்தது.

சிவன் கோயிலில், பிரதோஷ நேரத்தில் எல்லாத் தேவர்களும் வந்து சிவனை வழிபடுகிறார்கள் என்பது ஐதீகம்.

பிரதோஷம் சிவபூஜைக்குச் சிறப்பான காலம் என்று சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ளது. அப்பொழுது பூஜை செய்தால் பரமசிவம் அருளால் எண்ணிய காரியம் கைகூடும்.

அஷ்ட புஷ்பம் என்பதில் இடம் பெற்றிருக்கும் மலர்களின் பெயர்கள் யாவை?

1. புன்னை, 2. வெள்ளெருக்கு, 3. சண்பகம், 4. நந்தியாவர்த்தை, 5. நீலோற்பலம், 6.பாதிரி, 7. அலரி, 8. செந்தாமரை ஆகிய இவை எல்லாக் காலத்திற்கும் பொதுவான அஷ்ட புஷ்பங்களாகும்.

இந்த மலர்களைவிட இறைவனுக்கு உகந்த மலர் வேறொன்று உண்டு. அதுதான் சொல் மலர். இறைவனைத் துதிக்கும் சொல் அனைத்தும் சொல்மலர் ஆகும். இறைவனைக் குறித்துப் பேசாத நாள் அனைத்தும் பிறவா நாளுக்கே சமம். வாயே வாழ்த்து கண்டாய் என்பது, நாவுக்கு அரசராகத் திகழ்ந்த அப்பர் வாக்கு.

1. அகிம்சை, 2. புலனடக்கம், 3. க்ஷாந்தி (பொறுமை) புஷ்பம், 4. தயாபுஷ்பம், 5. ஞானபுஷ்பம், 6. தவபுஷ்பம், 7. சத்திய புஷ்பம், 8. பாவ (தியான) புஷ்பம் ஆகியவற்றையும் அஷ்ட புஷ்பங்கள் என்று சொல்வது மரபு.

சுவாமி விபுலானந்தர் எழுதிய இறைவன் விரும்பும் மலர் பற்றிய ஒரு பாடலிலுள்ள சில வரிகள் இவை.

வெள்ளை நிற மல்லிகையோ
வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு
வாய்த்த மலரெதுவோ
வெள்ளை நிறப் பூவுமல்ல
வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது.

சமயமும் வாழ்வும்

பதிப்பகச் செம்மல் முனைவர் **ச. மெய்யப்பன்,** எம்.ஏ., (அண்ணாமலைப் பல்கலைக் கழக மேனாள் பேராசிரியர்)

உலகத்துச் சமயங்களில் மிகவும் தொன்மையானது சைவ சமயம். சைவ சமயத்துக்கு நாட்டுக்கோட்டை நகரத்தார் ஆற்றியிருக்கும் அரும்பணிகள் அளவிடற் கரியன. சிவநேசச் செல்வர்களாகிய அவர்களின் சமயத் தொண்டுக்குச் சிகரம் போன்றது காசி நாட்டுக் கோட்டை நகரச் சத்திரப்பணி. சமயப் பணிக்கு ஆலயங்கள் எப்படி மையங்களாக விளங்குகின்றனவோ அது போலவே அப்பணிக்குத் துணைத் தூண்களாக நகரத்தார் சத்திரங்கள் விளங்குகின்றன. இறை பணியாற்றும் இத்தகு நிலையங்கள் என்றும் நிறைந்த அறப்பணியாற்றிச் சிறந்தோங்கி வளர்வதாக.

சமயங்கள் மனித சமுதாயத்தில் செழித்து வளர்தற்குக் காரணம் என்ன? நிதியின் குவைகளைக் கொட்டிக் குவித்தாலும், நிலவிலே சென்று குடியேறினாலும் மனித மனம் ஏதோ ஒரு குறைபாட்டைக் கொண்டதாகவே அமைந் துள்ளது. தனக்கு எட்டாத ஒன்றைத் தாவித் தொடத் துடிக்கின்றது. தெளிவாகச் சொன்னால் மனநிறைவை நாடி மனித நெஞ்சம் முயற்சிக் கரங்களை நீட்டிக் கொண்டிருக்கின்றது. எல்லையொன் றின்மை எனும் பொருள்தனை எட்டிப்பிடிக்கும் அந்த இயற்கை நாட்டத்தைத் தான் சமயம் என்கிறோம். மன நிறைவையும் அமைதியையும் நாடிப் பாயும் இன்ப நினைவைத்தான் சமயம் என்கிறோம். எனவேதான் ஒன்றியிருந்து நினைமின்கள் உந்தமக்கோர் ஊனமில்லை என்று திருநாவுக்கரசரும் பாடினர்.

சமயம் எவ்வாறு மனித வாழ்வுக்குப் பயன் தருகின்றது? இன்பமே உயிர்களின் நாட்டம், அந்த இன்பத்தை அடையும் ஆர்வத்தினால் தீமைகளையும் மனிதன் செய்ய நேர்ந்து விடுகின்றது. அத்தகைய சூழ்நிலையில் சமய உணர்வு மனிதனின் சிந்தனைக் கதவுகளைத் திறந்து கீழ்மைக் குப்பைகளை அகற்றி எறிகின்றது. மனிதனுக்கும்மேல் உயர் பொருள் ஒன்று உண்டு என்பதையும், அறமும் அன்புமே இன்பத்தை அடையும் நெறிகள் என்பதையும் சமயம் எடுத்துக் காட்டுகின்றது. அது மட்டுமின்றி இழைக்கும் தீய செயல்களினால் பழியும் பாவமும் குவிகின்றன என்றும் அந்தப் பாவத்தின் விடுதலை, வருந்தி இறைவழிபாடு செய்வதிலும் திருந்தி வாழ்வதிலுமே அமைந்துள்ளது என்றும் சமயம் இடித்துக் கூறுகின்றது. இந்நாள் உளவியல் அறிஞர்களும் குற்ற உணர்ச்சிகள் குறைவதற்குச் சமயம் பெருந்துணையாகும் என்றே கருதுகின்றனர்.

பூமியிலே கண்டம் ஐந்து; மதங்கள் கோடி என்று கவியரசர் பாரதியார் பாடினார். கொள்கையினால், குறிகளினால், கோயில் அமைப்புகளினால் சமயங்கள் பல்கிப் பெருகிப் பிளவுற்றுக் கிடக்கின்றன. வழிகள் பலவாயினும் இலக்கு ஒன்றே; விளக்குகள் பலவாயினும் ஒளி ஒன்றே; நதித் திரள்

பலவாயினும் கூடும் வாரிதி ஒன்றே; அதுபோலவே பல் பெருஞ்சமயம் சொல்லும் பொருளும் ஒன்றே. ஆயினும் சமயம் திசைமாறிச் சென்ற நிலையை வரலாறு காட்டுகின்றது. என் தெய்வம் உன் தெய்வம் என்று எதிர் வழக்கிட்டு நின்ற சமயங்களின் காட்சியையும் ஒன்றே பொருளெனின் வேறென்றும் அன்றெனின் ஆமென்றும் போராடிய வல்லாளர்களின் வாதங் களையும், வெறும் சமயக் குறிகளையே சமய நெறிகள் என்று பூசலிட்டு நின்றவர்களையும் சரித்திரம் தெள்ளத் தெளிவாகச் சுட்டிக் காட்டுகின்றது. இவ்வாறு அன்பை அடிப்படையாகக் கொண்ட சமயம் வன்முறையில் ஈடுபடும்பொழுதெல்லாம் மெய்ஞ்ஞானியர்கள் தோன்றிச் சமயத்தின் உள்ளார்ந்த உண்மையினை வலியுறுத்தி வந்துள்ளனர்.

உயிர்க்குயிராய்த் தழைத்த உண்மை இறைவனை அறிந்த தாயுமானாரும், இன்பத் திருவாசகத்தில் ஊன் கலந்து உயிர் கலந்த இராமலிங்கரும் காட்டிய காழ்ப்பற்ற அன்பு மேவிய பொதுமை நெறியே உலகை உய்விக்கும் நன்னெறி ஆகும். இந்தப் பொதுமை நெறியே சமுதாய நல்வாழ்வுக்குக் காலந்தோறும் ஒளியூட்டும் மணி விளக்காம் எனலாம்.

சமய ஞானிகளின் பெருவாழ்வு நமக்குக் கற்றுத்தரும் பாடம் என்ன? தன்னை மறந்த காதல், தன்னை மறந்த தொண்டு, தன்னை மறந்த தியாகம் ஆகிய பண்புகளை நாம் தனித் தனியாக மனிதர்களிடம் காணுகின்றோம். இத்தனையும் ஒன்றுகூடித் தன்னை மறந்த பக்தியாக மலர்ந்திருப்பதைத்தான் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கிய அடியார்களின் வாழ்வு நமக்குச் சொல்கின்றது. முதிர் ஞானச் செல்வர் களாகிய மாணிக்க வாசகரும், திருநாவுக்கரசரும் வாழ்ந்த வாழ்க்கை இக்கருத்தினை நமக்குத் திறம்பட விளக்குகின்றது.

இவ்விரு மெய்யடியார்கள் வாழ் வினையும் வாக்கினையும் உற்று நோக்குவார்க்கு ஓர் உண்மை புலனாகிறது. புனிதத்தைத் தேடிப் புறப்பட்ட பயணத்தில் ஒவ்வோர் அணுவையும் போராடிப் போராடியே அவர்கள் கடந்தனர். அமைச்சுத் தொழிலும் அரண்மனைச் சுவர்க்க போகங்களும் தரமுடியாத குறைவிலா நிறைவினை எய்த மாணிக்கவாசகர் உள்ளம் பட்ட பாட்டினை அவர் பாட்டெல்லாம் நமக்குக் காட்டுகின்றது. அழுது அடியடைந்து அனுபூதி பெற்ற பக்திக் கடலான மாணிக்கவாசகரே இறைவனைப் பார்த்து, என்னை அடையாளம் கண்டுகொள் என்று விம்மியழும் துயர்க் குரலைக் கேட்கும்போது நம் நெஞ்சம் சிலிர்க்கின்றது. மனிதரில் புனிதரான மணிவாசகர் பல நிலைகளில் உழன்று உழன்று நம் குற்றங்களையெல்லாம் ஓலமிட்டுரைத்துக் கண்ணீரில் கழுவி உய்தி பெறுகின்றார்.

தத்துவங்களிலும் தருக்க நெறிகளிலும் புறச் சமயத்திலும் புகுந்து இறைவனைத் தேடியடைய முயன்றார். நாவுக்கரசுப் பெருந்தகையார். அதற்காக அவர் மேற்கொண்ட தொண்டு நெறித் தூய்மையைக் காணுகின்றோம். அருட்

பேரொளியைக் காணத் துடித்த துடிப்பினை அவர் பாக்களில் கேட்கின்றோம். நிலையற்ற நினைவின் அலைகளினால் உந்தப்பட்டு, இறைவன் தன்னையாட்கொள்ளும் பக்குவம் தனக்கு வரவில்லையோ என்று ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் தன்னைப் பரிசோதனைக் கருவியாக்கிக் கொண்டு வருந்தும் குரல் நம்மை நெகிழ்விக்கின்றது. தன்னைப் புனிதப்படுத்திக் கொள்ளும் சோதனை நெறியினாலும் தொண்டு வாழ்க்கை யினாலும் இறைவனை நெருங்க முடியும் என்று கோடிட்டுக் காட்டுகின்றது. இவ்வடியார்களின் வாழ்க்கை.

மண்ணில் நல்ல வண்ணம் வாழக் கடவுள் நம்பிக்கை வேண்டும். தெய்வம் என்னும் சிந்தை உண்டாகுமேயானால் மனித குலம் உய்வது உறுதி, சமயங்களின் உட்கிடைதான் (Essence of Religion) மிகவும் இன்றியமையாதது. இவ்வாறு ஊனினைச் சுருக்கி உள்ளொளி பெருக்க ஞானியர்கள் நமக்கு விட்டுச் சென்றுள்ள பெருஞ்செல்வம் தேவார திருவாசகங்களே.

எங்கேனும் யாதாகிப் பிறந்திடினும் தன்னடியார்க்கு
இங்கே என்று அருள் புரியும் எம்பெருமான் எருதேறிக்
கொங்கேயும் மலர்ச்சோலைக் குளிர் பிரமபுரத்துறையும்
சங்கேயொத்து ஒளிர் மேனிச் சங்கரன் தன் தன்மைகளே.

– திருஞானசம்பந்தர்

தொழுது தூமலர் தூவித் துதித்து நின்று
அழுது காமுற்று அரற்றுகின்றாரையும்
பொழுது போக்கிப் புறக்கணிப்பாரையும்
எழுதுங் கீழ் கணக்கு இன்னம்பர் ஈசனே.

– திருநாவுக்கரசர்

பண்ணிடைத் தமிழ் ஒப்பாய் பழத்தினில் சுவையொப்பாய்
கண்ணிடை மணியொப்பாய் கடுவிருள் சுடரொப்பாய்
மண்ணிடை அடியார்கள் மனத்திடர் வாராமே
விண்ணிடைக் குருகாவூர் வெள்ளாடை நீயன்றே.

– சுந்தரர்

வணங்கத் தலை வைத்து வார்கழல் வாய் வாழ்த்த வைத்து
இணங்கத் தன் சீரடியார் கூட்டமும் வைத்து எம்பெருமான்
அணங்கொடு அணிதில்லை அம்பலத்தே ஆடுகின்ற
குணங்கூறப் பாடி நாம் பூவல்லி கொய்யாமோ.

– மாணிக்கவாசகர்

சைவ நெறி

தெய்வத்திரு **தி. மாணிக்கவாசகம் செட்டியார்,** பெருந்தொழில் அதிபர், மதுரை

உலகச் சமயங்களில் மிகவும் பழமையானது இந்து சமயம். இந்து என்ற சொல் சிந்து என்பதன் திரிபாகும். சிந்து என்பது சிந்து நதிப் பகுதியைக் குறிக்கும். வரலாற்றுக் காலத்துக்கும் முன்னரே சிந்துச் சமவெளியில் நாகரிகத்தோடு வாழ்ந்தவர்கள் தமிழர்கள் என்பது புதைபொருள் ஆராய்ச்சியால் விளங்குகிறது. அப்பகுதிகளில் இலிங்கம் முதலிய சிவநெறிக்குரிய அடையாளப் பொருள்கள் கண்டெடுக்கப் பட்டுள்ளன. இவற்றை நோக்கும்போது மிகப்பழங் காலத்திலேயே அங்குச் சைவ சமயம் பரவியிருந்தது என்பது விளங்கும். எனவே இந்து சமயம் என்று சொல்லும்போது, அது சைவ சமயத்தையே முதன் முதலில் குறித்தது. பின்னர் வைணவம் அதனின்றும் கிளைத்தது. சைவம், வைணவம் இரண்டும் சேர்ந்து இக்காலத்தில் இந்து சமயம் என்று வழங்கி வருகிறது.

இந்து சமயத்தின் காலத்தை வரையறுத்துக் கூற முடியாது. மற்றச் சமயங்களின் தோற்ற காலத்தையும் அவற்றைத் தோற்றுவித்த பெரியார் களையும் கூறிவிட முடியும். ஆனால் இந்து சமயத்திற்கு இவ்விரண்டையும் கூற முடியாது. இந்து சமயத்தைத் தோற்றுவித்தவர் யார்? அதன் காலம் என்ன? இவைகளைக் கூற முடியாது. காரணம் வரலாறு காணாத மிகப்பழமை வாய்ந்தது இந்து சமயம்.

சைவம்

இன்று இந்து சமயத்தில் ஒரு பிரிவாகக் கொள்ளப்படும் சைவ சமயமும் வரலாற்றுக்கு முற்பட்டது. சைவம் என்னும் சொல் சிவ சம்பந்தமுடையது எனப் பொருள்படும். சிவம் என்னும் சொல் முழுமுதற் கடவுளைக் குறிப்பதாகும். 'அரிக்கும் பிரம்மாவிற்கும் அல்லாத தேவர்கட்கும், தெரிக்கும் படித்தன்றி நின்ற சிவம்' என்பது திருவாசகம். இத்தகைய சிவமாகிய செம்பொருளைக் குறிக்கும் எல்லாக் கொள்கைகளையும் சைவம் என்ற சொல்லால் குறிப்பிடலாம். சைவ நெறியின் அடிப்படையான கோட்பாடு கொலை மறுத்தலும், புலால் மறுத்தலும். இன்று உலகியலில் நான் சைவம் என்று கூறும்போது சைவம் என்பது சைவ சமயத்தைக் குறிப்பதற்குப் பதிலாகப் புலால் உணவு கொள்ளாமையையே வெளிப் படையாகக் குறிக்கும். இதனால் சைவ சமயத்தின் ஆணிவேர் உயிர் பாது காப்பாகும் என்பது தெளிவு. மற்றொரு இன்றியமையாத பண்பு அன்பாகும். அன்பே சிவம் என்பது யாவரும் அறிந்தவொன்று.

கோவில்கள்

சைவ உலகில் கோவில்கள் பெரிதும் மதிக்கப்படுவனவாகும். கோவில் இல்லா ஊரில் குடியிருத்தலாகாது என்ற பழமொழியும் இது பற்றியே எழுந்தது. கோவிலின் அமைப்பு முறை பல சமய தத்துவங்களைக் கொண்டதாகும்.

ஆண்டவனை அடைய கோவில் ஒரு வாயிலாகக் கொள்ளப்பட்டது. சுருங்கச் சொல்லின், மக்கள் உயிர் தங்குவதற்கு உடம்பு அமைந்திருத்தல் போல, எங்கும் நிறைந்த இறைவனுக்கும் ஒரு கோயில் கட்டித் தங்க வைத்து மகிழ்ந்தான் பழந்தமிழன். இத்தகைய கோயில்கள் நாடெங்கும் எண்ணிலவாய்க் காட்சி அளிக்கின்றன. பண்டைக் காலத்திலும் கோயில்கள் தமிழர் சமய வாழ்விலும், சமுதாய வாழ்விலும் நன்கு இடம் பெற்றிருந்தன. சிலப்பதிகாரம் பல வேறு கோயில்களையும் சித்திரித்துக் காட்டுகிறது.

> பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
> அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
> வால்வளை மேனி வாளயோன் கோயிலும்
> நீலமேனி நெடியோன் கோயிலும்
> மாலை வெண்குடை மன்னவன் கோயிலும்

என்று பல்வேறு கோயில்கள் கூறப் பட்டுள்ளன. அக்காலத்துக் கோயில்கள் சுடுமண்ணாலும் சாந்தாலும் அமைந்தவை. உள்ளத்தை உருக்கித் தெய்வ பக்தியில் திளைக்கச் செய்யும் சிறந்த சாதனங்கள் அவை.

இறைவன் எங்கும் இருப்பவன். தூணிலும் இருப்பான் துரும்பிலும் இருப்பான். உருவம் இல்லாதவன். பெயர் இல்லாதவன். இப்படியிருக்க ஆண்ட வனுக்குக் கோயில் கட்டுவது ஏன்? இவ்வாறு சிலர் கேட்கிறார்கள். இது அறியாமை, மின்சாரம் நீர்த்தேக்கங்களில் உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால் அத் தண்ணீரைத் தேக்கி வைத்து உயரத்திலிருந்து சில எந்திரங்களை அமைத்துப் பின்னர் தான் மின்சாரம் எடுக்க முடிகிறது. மின்சாரம் ஒளிதருவது. ஆனால் அவ்வொளியை ஒரு பல்பின் மூலமாகத்தான் நாம் பெற்று மகிழமுடிகிறது. நெல்மணி மிகவும் முக்கியமானது. அதுதான் உணவுக்குரிய முக்கியப்பொருள். ஆனால் அதனை ஏன் உமி மூடியிருக்கிறது. அவ்வுமி இல்லாவிட்டால் அதனை முளைக்க வைக்க முடியுமோ? அது போலத்தான் ஆண்டவனும் ஓர் இடத்தில் மக்களால் எழுந்தருளச் செய்து காணத்தக்கவன். எனவே, கோயிலில் சென்று இறைவனை வணங்குவதும், மனத்தூய்மை பெறுவதும் இன்றியமையாத சைவ சமயச் செயல் முறைகளாகும்.

ஆனால் கோயிலுக்குச் செல்லும் அன்பர்கள் கவனிக்கத்தக்கவை பல உள. அவற்றுள் மிக முக்கியமானது ஆண்டவனிடம் நாம் விடுக்கும் வேண்டுகோள் ஆகும். தூய்மையான எண்ணத்துடன் ஆண்டவனை மனத்தில் அமைத்துத் திருமுன்பு நின்று உலக நலமும் அருளும் பெருக வேண்டுதல் வேண்டும்.

> 'யாம் இரப்பவை
> பொருளும் பொன்னும் போகமும்
> அல்ல நின்பால்
> அருளும் அன்பும் அறனும் மூன்றும்
> உருள்இணர்க் கடம்பின் ஒலி தாரோயே'

என்று கடுவன் இளஎயினனார் எனும் புலவர் பரிபாடலில் பாடியுள்ளார். இவ்வாறு, உலக நலத்தின் பொருட்டு ஆண்டவனை நினைத்து வேண்டுதல் இன்றியமையாப் பண்பாடாம். பிறர் கெடவேண்டும் என நினைத்து ஆண்டவனைப் பணிவது

தன்னையே கெடுத்துக் கொள்ளும் கொடூரச் செயலாகும்.

இராமலிங்க அடிகளார் ஆண்டவனை நோக்கி விடுக்கும் வேண்டுகோள் உண்மையான கடவுளன்பர்க்கு மிகவும் பயனுடையதாகும்.

அவர் வேண்டுகிறார் :

'அப்பா நான் வேண்டுதல் கேட்
டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம் நான்
அன்பு செயல் வேண்டும்
எப்பாரும் எப்பதமும்
எங்கணும் நான் சென்றே
எந்தைநின தருட்புகழை
இயம்பியிடல் வேண்டும்
செப்பாத மேனிலைமேற்
சுத்தசிவ மார்க்கம்
திகழ்ந்தோங்க அருட்சோதி
செலுத்தியிடல் வேண்டும்
தப்பேது நான் செயினும்
நீ பொறுத்தல் வேண்டும்
தலைவநினைப் பிரியாத
நிலைமையும் வேண்டுவனே'

இப்பாடலில் தன்னல மற்ற வேண்டுகோள் அமைந்திருப்பது மகிழத்தகும்.

அன்புநெறி

சைவத்தின் அடிப்படை அன்பு என்று கண்டோம்.

அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று

என்பது வள்ளுவர் வாய்மொழி. ஆண்டவன்பால் இடையறாத அன்பு செலுத்துவதன் மூலம் அவனது திருத்தாளினை அடையலாம் என்பது சைவ அடியார்களின் கோட்பாடு. கண்ணப்ப நாயனார் குடுமித்தேவராய சிவபெருமானின் திருவருள் அனுபவம் பெற்றது அவரது அசைக்க முடியாத அன்பேயாகும். இத்தகைய தூய பண்பினை வியந்த திருவாதவூரடிகளாகிய மாணிக்க வாசகர் தமது திருவாசகத்தில் மனமுருகிப் பாடியுள்ளார். அப்பாடல் வருமாறு :

'கண்ணப்பன் ஒப்பதோர்
அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என்னொப்பில்
என்னையும் ஆட்கொண்டருளி
வண்ணப் பணித் தென்னை
வாவென்ற வான்கருணைச்
சுண்ணப்பொன் நீற்றற்கே
சென்றூதாய் கோத்தும் பீ
அன்பிற்கும் உண்டோ
அடைக்கும் தாழ்'

இவ்வன்பு சாதி குலம் முதலியவற்றை எல்லாம் கடந்து எவ்விடத்தும் எவ்வுயிரிடத்தும் பாயவல்லது. சைவ சமய குரவர்களோ அன்றி அடியார்களாகிய நாயன்மார்களோ தமக்குள் எவ்வித வேறுபாடுகளையும் கொள்ளவில்லை. சிவபெருமான் திருமுன்பு யாவரும் ஒன்று என்று எண்ணினர். திருநாவுக்கரசர் வேளாளர். அப்பூதி அடிகளார் அந்தணர். அவ்விருவரிடையே இருந்த அன்பு உலகறிந்தது. கீழ் குலத்தவரான நந்தனார் தில்லைத் திருமுன்பு முத்திபெற முடிந்தது. ஆண் பெண் பேதமும் இல்லை.

காரைக்கால் அம்மையார் இதற்குச் சான்று.

'ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க்கு
அன்பராகில்
அவர்கண்டீர் யாம் வணங்கும் கடவுளாரே'

என்ற சமரச நெறியைச் சைவ சமயத்தில் நன்கு கண்டு தெளியலாம்.

எனவே சைவ சமயம் மிகவும் தொன்மை வாய்ந்தது என்பதும், திருக்கோவில்கள் மக்கள் சமுதாயத்தில் உயரிய இடம் பெறத்தக்கவை என்பதும், அன்பும் அறிவும் ஆகிய இரு சாதனங்களும் ஆண்டவனை அடைய உதவுகின்றன என்பதும், சமரச சன்மார்க்கமே உயிர்கள் உய்ய உறுதுணைபயப்பது என்பதும் இதுகாறும் நாம் கண்டோம். சைவம் ஓங்குக.

'இன்பம் பெருக்கி
இருளகற்றி எஞ்ஞான்றும்
துன்பம் தொடர்வறுத்துச்
சோதியாய் – அன்பமைத்துச்
சீரார் பெருந்துறையான்
என்னுடைய சிந்தையே
ஊராகக் கொண்டான் உவந்து.'

என்று, பெருந்துறைச் சிவன் தன் சிந்தையை உவர்ந்து ஊராகக் கொண்டு உலவும் விந்தையை மணிவாசகர் வியந்து பாடுகின்றார்.

மாணிக்கவாசகர் பாடிய உலகியல் மற்றும் அருளியல் பாடல்கள்

இரும்புதரு மனத்தேனை ஈர்த்து ஈர்த்து என் என்புருக்கிக்
கரும்புதரு சுவை எனக்குக் காட்டினை உன் கழல் இணைகள்
ஒருங்குதிரை உலவு சடை உடையானே நரிகள் எல்லாம்
பெருங்குதிரை ஆக்கியவாறு அன்றே உன் பேரருளே.

பண்ணார்ந்த மொழி மங்கை பங்காநின் ஆளானார்க்கு
உண்ணார்ந்த ஆரமுதே உடையானே அடியேனை
மண்ணார்ந்த பிறப்பறுத்திட்டு ஆள்வாய நீ வா என்னக்
கண்ணார உய்ந்தவாறு அன்றே உன் கழல் கண்டே.

ஆதமிலியான் பிறப்பு இறப்பென்னும் அருநரகில்
ஆர்தமரும் இன்றியே அழுந்துவேற்கு ஆஆ என்று
ஓதமலி நஞ்சுண்ட உடையானே அடியேற்குன்
பாதமலர் காட்டியவாறு அன்றே எம் பரம்பரனே.

கற்றறியேன் கலைஞானம் கசிந்துருகேன் ஆயிடினும்
மற்றறியேன் பிறதெய்வம் வாக்கியலால் வார்கழல் வந்து
உற்றி இறுமாந்து இருந்தேன் எம்பெருமானே அடியேற்குப்
பொற்றவிசு நாய்க்கிடுமாறு அன்றே நின் பொன்னருளே.

சைவ சமய வரலாறு

மயிலை **சீனி. வேங்கடசாமி,** தமிழ் இலக்கிய ஆய்வாளர், கல்வெட்டு அறிஞர், வரலாற்று நூல் ஆசிரியர்

'தென்னாடு உடைய சிவனே, போற்றி!
எந்நாட்டவர்க்கும் இறைவா, போற்றி!'

என்று அருளிச் செய்தார் மாணிக்க வாசகப் பெருமான். சிவபெருமான் தென்னாட்டுத் தமிழரின் பழம் பெரும் கடவுள். தமிழர் சிறு தெய்வங்களையும் வணங்கினார்கள். ஆனால், அச்சிறு தெய்வங்களுக்கெல்லாம் ஒரு பெருந் தெய்வமாக, முழு முதற் கடவுளாகச் சிவபெருமானைத் தமிழர் வணங்கிப் போற்றினார்கள். பழங்காலத்தில் சிவபெருமானை வணங்கியவர்கள் உருவம் இல்லாத ஒரு அடையாளத்தை வைத்து வணங்கினார்கள். உருவம் இல்லாத அந்த அடையாளத்திற்குப் பெயர் இலிங்கம் என்பது. **சிவலிங்கத்துக்குத் தமிழர் வழங்கிய பெயர் கந்தழி என்பது.** இலிங்கம் என்னும் பெயர் பிற்காலத்தில் வழங்கத் தொடங்கிய பிறகு, பழைய கந்தழி என்னும் பெயர் மறைந்துவிட்டது. கந்தழியாகிய சிவலிங்க வழிபாடு மிக மிகத் தொன்மையானது. சிவபெருமானுக்குப் பல பெயர்கள் உண்டு. ஆதிரை முதல்வன், ஆதிரையான், ஆலமர் கடவுள், ஆனேற்றுக் கொடியான், ஈர்ஞ்சடை வந்தணன், எரிதிகழ் கணிச்சியான், ஏறூர்தியான், கறைமிடற் றண்ணல், காரியுண்டிக் கடவுள், சடையன், செல்விடைப்பாகன், தாழ்சடைக் கடவுள், நீர் சடைக் கரந்தோன், நீலமணிமிடற்றொருவன், புதுத் திங்கட் கண்ணியான், மணிமிடற்றண்ணல், மழுவாள் நெடியோன், முக்கட்செல்வன் முதலிய பெயர்கள் சங்க நூல்களில் காணப்படுகின்றன.

தமிழ்நாட்டிலும் பாரத தேசத்தின் பல பாகங்களிலும் ஆதிகாலம் முதல் சிவபெருமானுக்குத் திருக் கோவில்கள் இருந்து வருகின்றன. காசி முதல் இராமேசுவரம் வரையில், ஏன்? இமயம் முதல் கன்னியாகுமரி வரையில் உள்ள சிவபெருமானின் திருக்கோவில்களுக்குக் கணக்கில்லை.

சிவபெருமானுக்கு அடுத்தபடியாகத் திருமால் (பெருமாள்) வழிபாடு ஆதிகாலம் முதல் இருந்து வந்தது. பழங்காலத்தில் சிவபெருமானுக்கும் திருமாலுக்கும் திருக்கோவில்கள் ஒரே இடத்தில் அமைந்திருந்தன. பல இடங்களில், சிவனும் திருமாலும் ஒரே கோவிலில் வழிபடப்பட்டனர். பிற்காலத்திலே சைவ சமயம் என்றும் வைணவ மதம் என்றும் தனித் தனி மதங்களாகப் பிரிக்கப்பட்டது போல, பழங்காலத்தில் பிரிக்கப்படாமல் இரண்டு தெய்வங்களும் ஒரே சமயக் கடவுள்களாக வழிபடப்பட்டனர். ஆழ்வார்கள் நாயன் மார்கள் காலத்தில்கூட சைவ வைணவ மதப் பிரிவு ஏற்படாமல், சிவன் திருமால் வழிபாடு ஒன்றாகவே நிகழ்ந்து வந்தது. ஏறத்தாழ கி.பி. 10-ஆம் நூற்றாண்டு வரையில் இவ்விதமாக இருந்தது. சிவனும் திருமாலும் ஏற்றத் தாழ்வில்லாமல் வழிபட்டதற்குச் சான்றுகள் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்திலும் தேவாரத்திலும் காணப் படுகின்றன.

'தாழ்சடையும் நீள்முடியும் ஒள்மழுவும் சக்கரமும்
சூழ் அரவும் பொன்நாணும்

தோன்றுமால், சூழும்
திரண்டருவி பாயும் திருமலைமேல்
எந்தைக்கு
இரண்டுருவும் ஒன்றாய் இருந்து'

என்று **பேயாழ்வார்** அருளிச் செய்தார்.

'தேசனைத் தேசமாகுந் திருமாலோர்
பங்கன் தன்னைப்
பூசனைப் புனிதன் தன்னைப் புணரும்
புண்டரீகத் தானை'

என்றும்,

'வடிகொண்டார்ந் திலங்கு மழுவாள்
கைக் கொண்டார்
மாலை இடப்பாகத்தே மருவக்
கொண்டார்'

என்றும்

'சீரேறு திருமாலோர் பாகத்தான் காண்
திருவாரூரான் காண்என்
சிந்தையானே'

என்றும் **அப்பர் சுவாமிகள்** அருளிச் செய்தார்.

இதனால், சிவன் வேறு திருமால் வேறு என்னும் பிரிவுகள் தோன்றிக் கொண்டிருந்த ஆழ்வார்கள் நாயன்மார்கள் காலத்திலுங் கூட சிவபெருமானும் திருமாலும் ஆகிய இரு பெருங்கடவுளர் ஒரு தன்மையராக வழிபடப்பட்டனர் என்பது தெரிகின்றது.

கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலே ஜைன சமயமும் (சமண சமயம்), பௌத்த மதமும் தமிழ் நாட்டிற்கு வந்தன. சந்திரகுப்த மௌரிய அரசன் காலத்தில் ஜைன சமயத் துறவிகள் தமிழ் நாட்டுக்கு வந்தார்கள். சந்திரகுப்தனின் பேரனான அசோக சக்கரவர்த்தி காலத்தில் பௌத்த மதத் துறவிகள் தமிழ்நாட்டுக்கு வந்தார்கள். ஏறத்தாழ அக்காலத்திலேயே வைதிக மதத்தராகிய பிராமணர் (வடமொழி வேதமதம்) தமிழ்நாட்டில் வந்திருந்தார்கள். ஆனால், வைதிகப் பிராமணர் சிறு தொகையினராக இருந்தார்கள். தமிழ் நாட்டுக்கு வந்த ஜைன, பௌத்த மதங்களை பிரசாரம் செய்து தமிழர்களைச் சமணர்களாகவும், பௌத்தர்களாகவும் மதம் மாற்றினார்கள். இந்து மதத்தாருக்குச் சாதி வேறுபாடுகள் கிடையா.

தமிழ்நாட்டுக்கு வந்த பௌத்த ஜைன மதங்கள் நாளுக்கு நாள் வளர்ந்து வந்தன. வைதிகப் பிராமண மதம் வளராமல் குறுகிக் கொண்டிருந்தது. மேலும், இம்மூன்று மதத்தாரும் பிறவிப் பகையுடையவராக இருந்தனர். ஆகவே, இவர்களுக்குள் சமயப் பகை வேரூன்றி இருந்தது. இவர்கள் ஒருவருக்கொருவர் எதிரி மதங்களைப் பழித்துப் பேசினார்கள்.

வைதீகப் பிராமணர், மற்ற சாதியாரைத் தம்முடைய மதத்தில் சேர்க்காமல் இருந்ததோடு அமையாமல், பௌத்த ஜைன மதங்களுடன் பகைமை பாராட்டிக் கொண்டிருந்தபடியால் பௌத்த ஜைனர்கள் இவர்களைத் தாக்கி எதிர்ப் பிரசாரம் செய்து இவர்கள் செல்வாக்கைக் குறைத்துவிட்டனர்.

கடைச்சங்க காலத்துக்குப் பிறகு, கி.பி. மூன்றாம் நூற்றாண்டுக்குப் பிறகு, பௌத்த மதமும் சமண சமயமும் சிறப்படைந்து விட்டன. அவை பொதுமக்களின், ஆதரவைப் பெற்றுச் செல்வாக்கடைந்து விட்டன. ஆகவே, சைவ சமயம், முன்னைய உயர்நிலையை அடைவதற்குப் பௌத்த சமண சமயங்களுடன் போராட

வேண்டியிருந்தது. அதற்காகப் பக்தி இயக்கம் என்னும் ஒரு புதிய இயக்கம் தொடங்கப்பட்டது. பக்திக் கொள்கையை நாடெங்கும் பிரசாரம் செய்வதன் மூலமாகச் சைவ சமயம் மேன்மையடைய முடியும் என்பதை உணர்ந்தனர். ஆகவே, பௌத்த சமண சமயத்துக்கு எதிராகப் பக்திக் கொள்கைப் பிரசாரம் செய்யப்பட்டது. அக்காலத்தில்தான் ஆழ்வார்களும் நாயன்மார்களும் தோன்றிப் பக்தி இயக்கத்தைப் பரப்பி, சமண பௌத்த சமய சமயங்களை ஒடுக்கினார்கள். கி.பி. ஏழாம் நூற்றாண்டிலிருந்து பத்தாம் நூற்றாண்டு வரையில் ஏறத்தாழ முந்நூறு ஆண்டுகள் சைவ வைணவ ஆழ்வார்கள் பிரசாரம் செய்த பிறகுதான் பௌத்த சமண சமயங்களின் செல்வாக்கு அழிந்தது.

பௌத்த சமண சமயங்கள் தமிழ் நாட்டில் வீழ்ச்சியடைந்த பிறகு, சைவ வைணவப் பிரிவு அதிகப்பட்டுவிட்டது. ஏறத்தாழ கி.பி. 10ஆம் நூற்றாண்டிலிருந்து சைவமும் வைணவமும் வெவ்வேறு தனி மதங்களாகப் பிளவுண்டன. கி.பி. 7ஆம் நூற்றண்டிலிருந்து 9ஆம் நூற்றாண்டு வரையில் நிகழ்ந்த மதப் போராட்டத்தின் போது, ஆழ்வார்களும் நாயன்மார்களும் முறையே திருமாலையும் சிவபெருமானையும் போற்றியபோதிலும் பொது எதிரிகளாகிய சமண பௌத்த மதங்களை வீழ்த்துவதிலேயே முக்கியமாக ஈடுபட்டிருந்தபடியால், அவர்கள் சைவ சமயம் வைணவ சமயம் என்னும் வேறுபாட்டுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்காமல் சைவ வைணவ உறவைப் போற்றி வந்தார்கள். பௌத்த சமண சமயங்கள் தோல்வியுற்று வீழ்ச்சியடைந்த பிறகு, சைவ வைணவம் இரண்டும் தனித் தனி மதங்களாகப் பிரிந்துபோயின. சிவபெருமானுக்குத் தனிக் கோயில்களும் திருமாலுக்குத் தனிக் கோயில்களும் தோன்றலாயின.

சைவ சமயமும் வைணவ மதமும் தனித் தனி மதங்களாகப் பிரிந்து போன பிறகுதான், சிவன் கோவில்களில் சிவ சக்தியாகிய அம்மனுக்குத் தனி ஆலயங்கள் புதிதாகக் கட்டப்பட்டன. இதற்குச் சாசனச் சான்றுகளும் கிடைத்துள்ளன. பிற்காலச் சோழர் ஆட்சியில், அதாவது கி.பி. 10ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர், பழைய சிவன் கோவில்களில் புதிதாக அம்மன் கோவில்கள் அமைக்கப்பட்டன என்னும் செய்தி கல்வெட்டெழுத்து ஆராய்ச்சியினால் அறியப் படுகிறது. இக்காலத்திலேதான் சேக்கிழாரின் பெரிய புராணம் தோன்றியது. இக்காலத்திலேதான் பன்னிரண்டு சைவ திருமுறைகள் தொகுக்கப்பட்டன. இக் காலத்திற்குப் பிறகுதான் சிவ ஞானபோதம் என்னும் சைவ சித்தாந்த சாஸ்திரத்தை மெய்கண்ட தேவ நாயனார் இயற்றினார். இவருக்கு முந்தி ஏறத்தாழ கி.பி. 5ஆம் நூற்றாண்டில் திருமூலநாயனார், திருமந்திரம் என்னும் சைவ சமய சாஸ்திரத்தை இயற்றினார். ஆனால், தெளிவான சித்தாந்த சாஸ்திரத்தை இயற்றியவர் மெய்கண்ட தேவ நாயனாரே. இவருக்குப் பிறகு சிவஞான சித்தியார், திருக்களிற்றுப்படியார் முதலிய சித்தாந்த சாத்திரங்கள் எழுதப்பட்டன.

கி.பி. 10ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு, சோழ அரசர் காலத்திலும் அதற்குப் பிற்காலத்திலும், சைவ சமயம் நன்கு வளர்ந்து சிறப்படைந்தது. சோழ அரசர் சைவ சமயத்தைச் சேர்ந்தவராகையால்

அவர்கள் பழைய சிவன் கோவில்களைப் புதுப்பித்ததோடு புதிய கோவில்களையும் கட்டினார்கள். கோவில் பூசை முதலிய வற்றுக்கு வேண்டிய நிலபுலங்களையும் பொன்னையும் பொருளையும் வாரி வழங்கினார்கள். அக்காலத்திலிருந்த சிற்றரசர்களும் பிரபுக்களும் கோவில் களுக்குக் கைங்கரியங்களைச் செய்தார்கள்.

கி.பி. 15ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு சோழ அரசர்களும் பாண்டிய அரசர்களும் மறைந்துவிட்டனர். தமிழ்நாடு அந்நியர் ஆட்சிக்குள்ளாயிற்று. முஸ்லிம் மதத்தினரான நவாப்புகளும், பாளையக் காரர்களும் நாட்டையரசாண்டனர். போர்ச்சுகீசியர், ஒல்லாந்தர், பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர் ஆகிய ஐரோப்பியர் வர்த்தகத்தின் பொருட்டு நமது நாட்டுக்கு வந்து அரசியலில் தலையிட்டுக் கட்சிகளையுண்டாக்கினர். அதனால், அரசியல் குழப்பங்களும் சண்டைகளும் கலகங்களும் நாடெங்கும் பரவி நாட்டில் அமைதியில்லாமற் போயிற்று. பொருளுக்கும் உயிருக்கும் பாதுகாப்பு இல்லாமற்போயிற்று. தடியெடுத்தவன் தண்டல்காரன் என்னும் கதையாயிற்று. 15ஆம் நூற்றாண்டு முதல் 19ஆம் நூற்றாண்டு வரையில் இந்த குழப்பங்களும் கலகங்களும் போர்களும் அராஜகமும் நாட்டில் இருந்தன. அந்தக் குழப்பக் காலத்தில் சைவ சமயத்தைப் போற்றி பாதுகாத்தவர்கள் மடாதிபதிகளே. திருவாவடுதுறை ஆதீனம், திருப்பனந்தாள் ஆதீனம், தருமபுர ஆதீனம் முதலிய ஆதீனங்களின் மடாதிபதிகள் அக்காலத்தில் சைவ சமயத்தைப் போற்றி வளர்த்தார்கள்.

பின்னர் 19 ஆம் நூற்றாண்டிலே நாட்டில் புதிய ஆட்சி ஏற்பட்டு அமைதியும் பாதுகாப்பும் நிலைத்தன. ஆங்கில ஆட்சி அந்நிய ஆட்சியாக இருந்தபோதிலும் நாட்டிலே அமைதியும் பொருளுக்கும் உயிருக்கும் பாதுகாப்பும் நம்பிக்கையும் நிலை நாட்டப்பட்டன. ஆனால், இந்தக் காலத்தில் பல கோவில்கள் பழுதடைந்து சிதலமாய்க் கிடந்தன. அதற்குக் காரணம் முன்னைய நூற்றாண்டுகளில் இருந்த குழப்பக் காலத்தில் கோவில்கள் பழுது பார்க்கப்படாததுதான். பழுதடைந்து சிதலமாகிக் கிடந்த கோவில்களைப் புதுப்பித்துப் புதிதாகக் கட்டியவர்கள் நாட்டுக்கோட்டைச் செட்டியார் மரபைச் சேர்ந்த பிரபுக்களேயாவர். சென்ற நூற்றாண்டிலே நாட்டுக்கோட்டை நகரச் செட்டியார்கள் பல இலட்சக்கணக்கான ரூபாய் செலவு செய்து புதுப்பித்துக் கட்டிய கோவில்கள் பல. சென்ற நூற்றாண்டில் அவர்கள் சைவ சமயத்துக்குச் செய்த பெருந்தொண்டுகள் பற்பல.

சில ஆண்டுகளுக்கு முன்பு இந்து மத அறநிலைய பரிபாலனச் சட்டம் அமைக்கப்பட்டு அதன் பலனாக இந்துமதக் கோவில் பரிபாலன போர்டு என்னும் அலுவலகம் ஏற்படுத்தப்பட்டுக் கோவில் பரிபாலனங்கள் முறையாக நடைபெற்று வருகின்றன. இந்தப் போர்டில் சைவ சமயக் கோவில்களும் அடங்கியுள்ளன.

இது இரண்டாயிரம் ஆண்டுகளாக உள்ள சைவ சமயத்தின் சுருக்கமான வரலாறு. விரிவாக எழுதினால் இடம் பெருகும் ஆகையினாலே மிகச் சுருக்கமாக எழுதப்பட்டது.

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவார வைப்புத் தலமாக அருளிய பாடல்

உரை : ஆரணி வாழப்பந்தல் **அ. குணசேகர்**

தெண்ணீர்ப்புனற் கெடிலவீரட்டமுஞ்
சீகாழி வல்லந்திருவேட்டியும்
உண்ணீரார் ஏடகமும் ஊறலம்பர்
உறையூர் நறையூரரணநல்லூர்
விண்ணர் விடையார் விளமர் வெண்ணி
மீயச்சூர் வீழிமிழலைமிக்க
கண்ணார் நுதலார் கரபுரமுங்
காபாலியாரவர்தங் காப்புக்களே.

திருமுறை 6, பதிகம் 7, ப.எண். 7

தெளிவுரை :

தெளிந்த நீரோடும் கெடிலநதிக் கரைப்பதி திருவதிகை வீரட்டானமும், சீர்காழியும் திருவல்லமும் திருவேட்டியும் உண்பதற்கினிய உள்ளூறும் நீர் நிறைந்த திருவேடகமும் திரு ஊறலும் (தக்கோலம்) திருஅம்பரும் உறையூரும் (முக்கீச்சரம்) திருநறையூரும் திருவீழிமிழலையும் கரபுரமும் (திருவிரிஞ்சை) நெற்றிக்கண் அழகன் உறையும் இடங்கள் எல்லாம் காபாலியாம் சிவபிரான் நீங்காதுறைந்து உலகைக் காத்துவரும் தலங்களாம். 'சீக்காலி' என்பது பாடபேதம். கரபுரமும் திருவேட்டியும் வைப்புத் தலங்களாகும்.

ஆகமங்கள்

ஆகமங்களுக்கு மூல நூல்கள் அனைத்தும் தமிழிலேயே உள்ளன. இந்த ஆகமங்களின் அடிப்படையில்தான் அத்தனை சிற்ப சாஸ்திரங்களும் ஏற்பட்டுள்ளன. கோயில் கட்ட எப்படி இடம் தேர்ந்தெடுப்பது? அஸ்திவாரம் எத்தனை அடிபோடுவது என்பது போன்ற எல்லா விவரங்களும் தமிழிலுள்ள ஆகம நூல்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. இதை அறிந்து புதுச்சேரியிலுள்ள **பிரெஞ்சு இன்ஸ்டிட்டியூட்,** ஆகமங்களைத் **தமிழிலிருந்து பிரெஞ்சுக்கு** மொழி பெயர்த்திருக்கிறது. ஆனால், நாம் நமது ஆகமங்களை போற்ற வேண்டிய அளவு போற்றவில்லை. ஆகமங்கள் வடமொழியில் மட்டும் இருப்பதாயும் அவை தமிழாக்கப் பட்டிருப்பதாயும் தவறாக நினைத்துக் கொண்டிருக்கிறோம்.

நமது கோயில்களின் அமைப்பை மேலை நாட்டார் உணருகின்றனர். எத்தனை கோடி வேண்டுமானாலும் கொட்டிக்கொடுத்து நமது கோயில்களைத் தங்கள் நாடுகளுக்குக் கொண்டுபோக அவர்கள் தயாராக உள்ளனர். நமது நாகரிகம், பண்பாடு, கலை வளர்ச்சி அனைத்துக்கும் அடிப்படை நமது கோயில்கள். அந்தத் தாயக ஊற்றை, நமது பெரிய பாரம்பரியத்தை நாம் இன்னும் நன்றாகப் பாதுகாக்க வேண்டும்.

திருத்தொண்டர் பெருமை

வித்துவான் **பெ.கு. பொன்னம்பல நாதன்,** B.A., (Hons.) தமிழக அரசின் மேனாள் இணைச் செயலாளர்

உலகத்திலுள்ள உயிர்கள் (ஆன்மாக்கள்) எண்ணற்றவை; என்றும் உள்ளவை. அவை எண்பத்து நான்கு நூறாயிரம் யோனிபேதங்களுடையவை என்றும் அவை நால்வகைத் தோற்றங்களில் எழுவகைப் பிறப்புகளை எய்துகின்றன என்றும் ஆன்றோர் கூறுவர்.

'புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப்பேயாய் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅநின்ற இத்தாவர சங்கத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்'

என்று மாணிக்கவாசகர் வருந்திக் கூறுகிறார். அவ்விதம் அநேகம் பிறவிகள் எடுத்த பின்னர், உயிர்கள் மனிதப்பிறவி எய்துகின்றன. 'அரிது அரிது மானிடராத லரிது' என்பது ஔவைப் பிராட்டியின் அமுதவாக்கு. மனிதராகப் பிறந்த உயிர்களுக்குப் பகுத்தறிவும் சிந்தனைத் திறமும் இறைவனால் அருளப்பட்டுள்ள மையே மனிதப் பிறவியின் மாண்புக்குக் காரணமாகும். மக்கள் தமக்கு நல்கப்பட்டுள்ள மனிதப்பிறவியின் மாண்புக்குக் காரணமாகும். மக்கள் தமக்கு நல்கப்பட்டுள்ள சிந்தனையின் பயனாக, வாழ்க்கையின் முடிவான குறிக்கோள் யாதென்று பலகாலும் ஆராய்ந்து, உயிர்களைப் படைத்துக் காக்கும் ஈசனது திருவடிகளை அடைவதேயாகும் என்று தெளிந்தார்கள். வீடுபேறு என்பது இறைவன் திருவடிகளில் உயிர்கள் இரண்டறக் கலத்தலேயாகும் என்னும் உண்மையை உணர்ந்தார்கள். அதற்குரிய மார்க்கம், ஈசனை அல்லும் பகலும் அனவரதமும் வழிபட்டு உருகுகின்ற பக்தி நெறியே என்று அறிந்து அந்த நெறியில் நின்றார்கள். அவ்வாறு பக்திநெறியில் தலைப்பட்டு உய்ந்தவர்கள், தொண்டர்கள் என்றும் அடியார்கள் என்றும் சான்றோர்களால் போற்றப்படுகிறார்கள். இறைவனுக்குத் திருத்தொண்டு புரிவோராதலின் அவர்கள் தொண்டர்கள் எனப்பட்டனர். சிவபெருமானுடைய திருவடிகளையே சதாசர்வகாலமும் சிந்தித்துக் கொண்டிருப்பவர்களாதலின் அடியார்கள் என்று அவர்களுக்குப் பெயர் வந்தது.

'இறைவரோ தொண்டர் உள்ளத்தொடுக்கம்
தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே'

ஆயினும், நெஞ்சிலே அஞ்செழுத்தும், மார்பிலே கண்டிகையும், மேனியெலாம் திருநீறும் உடைய திருத்தொண்டர்களுடைய பெருமைகளைச் சிறிது பார்ப்போம்.

சிவபெருமான் பிரமனாக உருவம் தாங்கி உயிர்களைப் படைக்கிறார். விஷ்ணுவாக கொண்டு அழிக்கிறார். மகேசுவரனாக மறைக்கிறார். சதாசிவனாக வடிவம் தாங்கி அருளுகின்றார். ஆதலின் சிவமே பரம்பொருள் என்று உணர்ந்து, சிவபிரான் மீது பக்தி கொண்டு அவரையே வழிபட்டு உய்ந்தவர்கள் சிவனடியார்கள். அவர்கள் எண்ணற்றவர் ஆயினும்

அவர்களுள் மிகச்சிறந்தவர்களை நாயன்மார்கள் என்று சைவ உலகம் போற்றும். அவர்களுள் தனி அடியார்கள் அறுபத்து மூவர், தொகை அடியார்கள் எழுவர் ஆக எழுபத்திருவருடைய வரலாறுகளை விழுமிய முறையில் எடுத்துரைப்பது திருத்தொண்டர் புராணம். இதனை இயற்றியருளியவர் சேக்கிழார் என்னும் தெய்வப்புலவர்.

உலகெலாம் உணர்ந்தவனும் ஓதற்கு அரியவனும், நிலவுலாவிய நீர்மலிவேணி யனும் அலகில் சோதியனும் அம்பலத்தாடு வானுமாகிய நடராசப்பெருமானுடைய திருவடிகளையே எந்நேரமும் நினைந்து, பஞ்சாட்சரமாகிய திருவைந்தெழுத்தை ஓதி வழிபடுவதும், அவ்வாறு வழிபடுவதைப் பெரும்பேறாகவும் கருதியவர்கள் திருத்தொண்டர்கள்.

'நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்து நினை
என்றும் சிவன் தாள் இணை'

என்று வாழ்ந்தவர்கள் அவர்கள்.

'கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று; அதநெனதிர்
கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று'

என்பது புறநானூறு. சிவனடியார்கள் ஈசனிடம் கொடு என்று எதையும் கேட்டதில்லை. அவர்கள் நாடியதெல்லாம் கூடும் அன்பினில் ஈசனைக் கும்பிடுதல் மட்டுமேயாகும். அவர்கள் வேண்டாமை என்ற விழுச்செல்வம் படைத்தவர்கள். ஓட்டையும் செம்பொன்னையும் ஒக்கவே நோக்கியவர்கள். வாழ்க்கையில் வருகின்ற இன்பத்தையும், துன்பத்தையும் சமமாகப் பாவித்தவர்கள். உருத்திராக்கம் விளங்கு கின்ற தங்கள் திருமேனியின் மீது பூசுகின்ற திருநீற்றைப் போல, உள்ளத்திலும் புனிதமானவர்கள். சிவஞானப் பிரகாசத்தால் எல்லாத் திசைகளையும் விளக்கினவர்கள். ஐந்து பூதங்களும் தத்தம் நிலையில் கலங்கினாலும் ஈசுவரனுடைய திருவடிகளை மறவாதவர்கள். அன்புருவாய் நின்றவர்கள். குணத்தில் மலையை ஒத்தவர்கள். கண்டிகையை ஆரமாகவும் எளிய ஆடையையே உடையாகவும் கொண்டு இறைபணி நிற்றலையே அரும்பேறாக எண்ணிய சீலர்கள். பிற உயிர்களிடத்து அன்பும், சிவ அபராதத்தைத் தண்டிக்கக் கூடிய துணிவும், தீமைக்கு அஞ்சாமையும் உடைய சிவநேயச் செல்வர்கள் அவர்கள்.

'மாசிலாத மணி திகழ்மேனிமேல்
பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்கள்
தேசினாலெத் திசையும் விளக்கினார்
பேச ஒண்ணாப் பெருமை பிறங்கினார்
பூதம் ஐந்தும் நிலையிற் கலங்கினும்
மாதொர் பாகர் மலர்த்தாள் மறப்பிலார்
ஓதுகாதலுறைப்பின் நெறி நின்றார்
கோதிலாத குணப்பெருங்குன்றனார்
கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்
ஆரம் கண்டிகை ஆடையும் கந்தையே
பாரம் ஈசன் பணி அலதொன்றிலார்
ஈர அன்பினர் யாதும் குறைவிலார்
வீரம் என்னால் விளம்பும் தகையதோ.'

என்று திருத்தொண்டர்களுடைய பக்தி மாண்பைப் புகழ்ந்துபாடி மகிழ்கிறார் சேக்கிழார் பெருமான்.

சிவனடியார்களை நடமாடும் கோயில்கள் என்று போற்றுகிறார் திருமூலர்.

சிவனடியார்களுடனான நல்லுறவும் இணக்கமும் உயிருக்கு உறுதி பயக்கும் என்று கருதியே,

'அடியேனுன் அடியார் நடுவுள்
இருக்கும் அருளைப் புரியாய்'

என்று தில்லையம்பலவனை வேண்டுகிறார் மாணிக்கவாசகர்.

அபிராமிபட்டரும்,

'துய்யநின்பாதத்தில் அன்பும் உதவிப்பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்'

என்று அன்னை அபிராமவல்லியைப் பிரார்த்திக்கிறார்.

திருவடிப்பேற்றைப் பெறும் தகுதியை உடைய சீவன் முக்தர்கள் சிவாலயத்தையும் சிவனடியார்களுடைய திருக்கோலத்தையும் சிவம் எனக் கொண்டு வழிபடுவார்கள்; அவர்கள் எப்போதும் அடியார் கூட்டத்துடனே இருப்பார்கள் என்று கூறுகிறார் மெய்கண்டதேவர்.

'செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழிஇ அன்பரொடு மரீஇ
மால் அறநேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரன் எனத்தொழுமே'
(சிவஞானபோதம்)

இனி, திருத்தொண்டர்களுடைய பெருமையை உலகத்தார்க்கு உணர்த்துவதற்காகச் சிவபிரான் அத்தொண்டர்களை எவ்வாறெல்லாம் சோதனைகளுக்கு உட்படுத்தியுள்ளார் என்பதைக் காண்போம். மக்களாகப் பிறந்த அனைவருக்கும் தம் உயிர்மீதும், தேகத்தின்மீதும் தாம் பெற்ற மக்கள் மீதும் மனைவி மீதும் பற்று இருப்பது இயல்பு. மாந்தர்க்குள்ள பற்று அகப்பற்று புறப்பற்று என இருவிதமாகும் என்று சாத்திரங்கள் கூறுகின்றன. அகப்பற்று என்பது நான் என்னும் அகங்காரமாகும். அது தேகத்தையே தான் என்று அபிமானிப்பது. தேகத்திற்குப் புறம்பாகிய தாரம், புத்திரர், மனை, பொன், மாடு முதலானவை என்னுடையவை என்று அபிமானிப்பது புறப்பற்று ஆகும். திருத்தொண்டர்களுக்கு, சிவபெருமான் மீதுள்ள பக்தியே அவ்விரு பற்றுகளையும் விடப்பல மடங்கு விஞ்சியிருந்தது என்னும் உண்மையை அகிலம் அறியும் பொருட்டு, ஆண்டவன் பல திருவிளையாடல்களைச் செய்தருளி யுள்ளார்.

'செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்'

என்ற திருவள்ளுவனாரது தெய்வ வாக்குக்கு இணங்கச் செயற்கரிய செயல்கள் புரிந்த சைவநாயன்மார்களது வரலாறுகளைக் கூறுகின்ற பெரியபுராணத்தில் முதலில் போற்றப்பெறும் அடியார் திருநீலகண்டத்துக் குயவனார் ஆவார். இவர் சிதம்பரத்தில் வாழ்ந்த சிவபக்தர். உலகத்தில் பிறந்துள்ள உயிர்கள் அனைத்தும் விரும்புவது கலவியின்பம் ஆகும். அவ்விருப்பம் உயிரோடு இயல்பாய் அமைந்த விழைவாகும் என்றாலும் 'எம்மைத் தீண்டுவாராயின் திருநீலகண்டம்' என்று தம் மனைவி ஆணையிட்டமையால் சிவபிரான் மீது கொண்ட அளப்பரும்பக்தி காரணமாகத்

தம்வாழ்நாள் முழுதும் மனைவியைத் தீண்டாமல் வாழ்ந்தவர் திருநீலகண்ட நாயனார். 'வென்ற ஐம்புலனால் மிக்கீர்' என்று சிவபிரானே அவரைப் பாராட்டினார் என்பது நோக்கத்தக்கது. அடுத்து, 'கடந்த மக்களும் கடப்பரோ மக்கள் மேல்காதல்' என்றபடி புத்திர பாசத்தைத் துறப்பது மிகக்கடினம். திருச்செங்காட்டங்குடியில் வாழ்ந்த பரஞ்சோதியார் என்னும் சிவபக்தர், சிவனடியார்கள் மீது கொண்டிருந்த பக்தியைப் பலரும் அறியச் செய்வதற்காகச் சிவபெருமானே ஒரு வயிரவத்திருக்கோலம் தாங்கி அவரில்லம் வந்தார். அவர் விரும்பிய வண்ணம் தம் அருமந்த மகனையே அரிந்து கறியாக்கிச் சிவனடியார்க்கு உணவாக அளிக்க முற்பட்டார் அவர். இத்தகைய செயற்கரும் செயலைச் செய்தவர் சிறுத்தொண்டநாயனார் என்று போற்றப்பட்டார்.

பொத்தப்பி நாட்டில் வேடர் குலத்தில் தோன்றிய திண்ணனார் என்பார். சிவபிரான் மீது கொண்ட பக்தியின் சிறப்பை உலகுக்கு உணர்த்தத் திருவுளம் பற்றிய பரமேசுவரன் ஒருநாள் தம்முடைய அருவுருவத் திருமேனியாகிய சிவலிங்கத்தின் வலக்கண்ணிலிருந்து உதிரம் பெருகச் செய்தார். திண்ணனார் பச்சிலைகளைப் பிழிந்து கண்ணில் வார்த்தும் இரத்தம் நிற்கவில்லை. ஊனுக்கு ஊனே உற்ற நோய் தீர்ப்பது என்றெண்ணித் தம் வலக்கண்ணை அகழ்ந்தெடுத்து அப்பினார் திண்ணனார். உதிரம் நின்றது. பின்னும் சோதிக்க விரும்பினார் ஈசன். சிவலிங்கத்தின் இடக்கண்ணிலிருந்து இரத்தம் சிந்தத் தொடங்கியது. உடனே திண்ணனார் தம் இடக்கண்ணைத் தோண்டி எடுத்து அப்ப முற்பட்ட அளவில், மகா தேவர், 'நில்லு கண்ணப்ப, நில்லு கண்ணப்ப, என் அன்புடைத்தோன்றல் நில்லுகண்ணப்ப' என்று திருவாய்மலர்ந்து அவரைத் தடுத்து நிறுத்தித் தம் வலப்புறத்தில் இருக்கும் பேற்றை நல்கினார்.

இந்த மூன்று நாயன்மார்களுடைய அருஞ்செயல்களைப் பற்றுகள் அனைத்தும் துறந்த பரமஞானியாகிய பட்டினத்தடிகள்,

'வாளால் மகவரிந்து ஊட்டவல்லேன் அல்லன்
மாது சொன்ன
சூளால் இளமை துறக்க வல்லேன் அல்லன்
தொண்டு செய்து
நாளாறிற் கண்ணிடந்து அப்பவல்லேன் அல்லன்
நானினிச் சென்று
ஆளாவது எப்படியோ திருக்காளத்தி
அப்பருக்கே'

என்று வியந்து பாராட்டியுள்ளார்.

அடியார்கள் திருவேடத்தையே மெய்ப்பொருளாகக் கொண்டு வாழ்ந்த வேந்தர் ஒருவர், தம் பகைவன் சிவனடியார் வேடம் பூண்டு வந்து வஞ்சகமாகத் தம்மைக் கத்தியால்குத்திய போதும் அவன்மீது கோபம் கொள்ளாமல் அவன் சிவனடியார் வேடம் கொண்டிருந்தமையால் அவனை 'நமர்' என்று கூறிக்காத்தருளிய பின் உயிர்துறந்தார். ஆதலால் தான் 'வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக்கு அடியேன்' என்று சுந்தரர் அவரைப் போற்றினார்.

புகழ்ச்சோழர் என்னும் மன்னர் தாம் வென்ற பகையரசனது சேனை வீரர்களுடைய தலைகளைப் பார்வையிட்ட

போது, அவற்றுள் தலையொன்று சடைமுடி தரித்திருப்பதை அறிந்து மனம் நொந்து தாம் சிவபெருமானுக்குத் தீங்கு இழைத்ததாகக் கருதித் தீப் புகுந்தார். உவர்மண் பூசிய சலவைத் தொழிலாளனைச் சிவவேடத்தை நினைவூட்டியதாகக் கருதி வணங்கினார் கழறிற்றிவார் நாயனார். அதிசூரன் என்பவன் தம் பகைவனாயிருந்தும் அவனது திருநீற்றின் பொலிவைக் கண்டமையால் அவனைக் கொல்லாமல் தம் உயிரைத் தியாகம் செய்தார் ஏனாதி நாயனார். மனக்கோயில் கட்டிச் சிவபெருமானைப் பிரதிட்டை செய்தவர் பூசலார் நாயனார். காடவர் கோன் கழற்சிங்கனுடைய பட்டத்தரசி, சிவாலயத்தில் அவருடைய பாதங்களில் வீழ்ந்திருந்த ஒரு புதுமலரை எடுத்து மோந்தார். அதைக் கண்டு வெகுண்டு சிவபிரான் திருமுடியிலே அணிகின்ற பூவை மோந்து பார்த்த உன் மூக்கை அறுப்பேன் என்று அரசியின் மூக்கினைக் கத்தியால் அரிந்தார் செருத்துணை நாயனார்.

இல்லை என்னாது எதையும் சிவனடியார்களுக்கு அளித்தவர் ஒரு நாயனார். தம் அருமை மனைவியையே சிவனடியாருக்கு ஈந்தவர் அவர். மனித இயல்புக்கு மாறாகச் செயல்பட்ட காரணத்தால் அவர் இயற்பகை நாயனார் எனப்பட்டார். சிவபூசைக்குரிய பாற் குடங்களை உதைத்தார் என்பதால் தம் தந்தையென்றும் பாராமல் அவரது கால்களை வெட்டினார் விசார சருமர் என்னும் சிவநேயர். 'அரனடிக்கன்பர் செய்யும் பாவமும் அறமதாகும்' ஆதலால் அவர் சிவபிரானால் சண்டீசப்பதம் அருளப்பெற்றார்.

இவ்வாறு இளையான்குடிமாற நாயனார், எறிபத்த நாயனார், மானக்கஞ்சாற நாயனார், அரிவாட்டாய நாயனார், மூர்த்திநாயனார், அப்பூதி அடிகள், நமிநந்தி அடிகள், மூர்க்கநாயனார், சத்தி நாயனார் முதலான நாயன்மார்கள் செயற்கரும் செய்கைகளைப் புரிந்திருக் கிறார்கள். அவர்களுடைய செயல்கள் நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன. கூர்ந்து நோக்கினால் சிவபிரான் மீதும் சிவனடியார்கள் மீதும் அவர்கள் கொண்டிருந்த அளவிறந்த பக்தியே அவர்களுடைய செய்கைகளுக்கெல்லாம் காரணம் என்பதை அறியலாம். அவர்களது மனநிலை மிகமிக உயர்ந்த பக்தி உடையவர்களுக்குத்தான் வரும். நாமெல்லோரும் சாமான்யமானவர்கள். நமது அளவு கோலைக் கொண்டு அவர்களுடைய செயல்களை அளக்க முற்படுவது பிழையாகும். ஏனென்றால் திருத்தொண்டர்களாகிய நாயன்மார்கள் பக்தியின் உச்சநிலையில் திகழ்ந்தவர்கள். அவர்களுடைய செயல்களை நம்மால் பின்பற்ற முடியாது என்றாலும் நாமும் தெய்வபக்தியில் அவர்களைப்போல் முறுகிநிற்க வேண்டும் என்னும் உண்மையை அவர்களுடைய வரலாறுகள் புலப்படுத்தி நிற்கின்றன என்பது அறியற்பாலது.

நிறைவுரை :

'நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும்
மென்றாலும் துயின்றாலும் விழித்தாலும் இமைத்தாலும்

மன்றாடும் மலர்ப்பாதம் ஒருகாலும் மறவாமை
குன்றாத உணர்வுடையார் தொண்டராம் குணமிக்கார்'

என்று சேக்கிழார் சுவாமிகளால் போற்றப் பெற்ற சிவநேசச் செல்வர்களுடைய அடிச்சுவட்டைப் பின்பற்றி, சிவபக்தியில் ஈடபட்டுத் திருவருள் பெற்று உய்வோம். நாம் கடைத்தேறுவதற்கு தெய்வபக்தியே சிறந்த மார்க்கம் ஆகும் என்று சொல்லி இக்கட்டுரையை நிறைவு செய்வாம்.

'வைய நீடுக மாமழை மன்னுக
மெய்விரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறி தாம் தழைத்தோங்குக
தெய்வ வெண்திரு நீறு சிறக்கவே.'

தட்சிணாமூர்த்தி சின்முத்திரை

உலகில் பல மதங்கள் இருக்கின்றன. இவற்றைச் சேர்ந்தவர்கள் பல வகையான முத்திரைகளைப் பல்வேறு சமயங்களில் பயன்படுத்துகிறார்கள்.

நாட்டியம், உபதேசம், வழிபாடு, மந்திரங்கள் ஆகியவற்றின்போதும் பலவகையான முத்திரைகள் பயன்படுத்தப்படுகின்றன. ஒவவொரு முத்திரையும் ஒவ்வொரு கருத்தை விளக்குவதாக அமைந்திருக்கிறது.

சுட்டுவிரல் நுனியைப் பெருவிரல் நுனியால் தொட்டும், ஏனைய மூன்று விரல்கள் விலகியும் இருப்பது சின்முத்திரையாகும். இதை ஞான முத்திரை, வியாக்யான முத்திரை என்றும் சொல்வதுண்டு. தட்சிணாமூர்த்தியின் திருக்கரங்களில் ஞானத்தின் அடையாளமாகச் சின்முத்திரையும், தத்துவங்களை உணர்த்துவதாக ருத்திராட்ச மாலையும், பேரின்பத்தை அளிக்கும் அமிர்த கலசமும், தீ அல்லது நாகமும் உள்ளன.

ஞானமூர்த்தியாகிய தட்சிணாமூர்த்தி (சிவன்) ஆலமரச் செல்வனாக அமர்ந்து சனகர், சனந்தனர், சநாதனர், சனத்குமாரர் ஆகிய நான்கு முனிவர்களுக்கும் வேதத்தின் அடிப்படை உண்மைகளை விளக்கி, யோக நிஷ்டையின் தன்மைகளை உபதேசித்து அருளும் முத்திரையே சின்முத்திரையாகும்.

தட்சிணாமூர்த்தி உயர்ந்த தமது அனுபூதியையும் ஆனந்தத்தையும் மௌனத்தின் மூலம் வெளிப்படுத்தி தம் சீடர்களின் உள்ளத்தில் அந்த ஆனந்தம் முழுவதையும் பரவச் செய்து பேரின்ப நிலையை உணர்த்துவதே சின்முத்திரையின் அடையாளமாகும். இந்த முத்திரை ஞானத்தின் அடையாளம்.

ஆணவ மலம் அனாதியானது. ஆன்மாக்களின் அந்த ஆணவ மலம் நீங்கும் பொருட்டு மாயாமலம், கன்மமலம் ஆகிய இரண்டு மலங்களை இறைவன் தந்து, பின்னர் ஆணவமலம், கன்மமலம், மாயாமலம் அகியவற்றிலிருந்து ஜீவாத்மாவை விடுவித்து அருள் புரிகிறார். எனவே சின்முத்திரை, ஒரு மலம் நீங்க இரு மலங்கூட்டி அருமலம் மூன்றும் அகற்றி ஜீவாத்மா பரமாத்மாவுடன் ஐக்கியப் பட்டிருக்கும் இயற்கை நிலையாகும்.


பெருவிரல் இறைவன் என்றும், ஆள்காட்டி விரல் உயிர் என்றும், இரண்டு விரல்களும் இணைந்து ஒருமைப்பட்டு வட்டமாக இருப்பது, இறைவனுடன் இணைந்து ஆன்மா பேரின்பத்தில் திளைப்பதை உணர்த்துகிறது என்றும் கொள்ள வேண்டும். ஆணவத்தை விட்டு மனிதன் இறைவனைச் சார்ந்து வாழ வேண்டும்.

சின்முத்திரையிலுள்ள நடுவிரல் ஆணவ மலத்தையும், மோதிரவிரல் கன்மமலத்தையும், சிறுவிரல் மாயாமலத்தையும் உணர்த்துகின்றன. இந்த மூன்று விரல்களும் விலகி நிற்பது, உயிரை விட்டு நீங்கிய அவை மீண்டும் அந்த உயிருடன் சேரும் செயலற்ற நிலையை உணர்த்துகின்றன.

கோயில் வரைபடமும் விளக்கமும்

1. இராஜகோபுரம் (எட்டு நிலைகள் கொண்டது)
   1A. விநாயகர் 1B. விநாயகர்
2. நான்கு கால் மண்டபம்
3. பதினாறு கால் மண்டபம்
4. சிம்மக்குளம்
5. தெற்கு மதிற்சுவர் மீது நான்கு நிலைகள் கொண்ட கோபுரம்.
6. நாட்டியக் கலை மண்டபம்.
7. மேற்கு நுழைவாயில் (புதிய கோபுரம் திருப்பணி ஆரம்பம்)
8. பதினாறு கால் மண்டபம்
9. 1008 சிவலிங்கம் சன்னிதி
10. சுவாமி திருக்கல்யாண மண்டபம்
11. இரண்டு அடுக்கு மண்டபம்
12. சூலதீர்த்தம்
    12A. வசந்த நீரோட்டக் கட்டிடம்.
13. மணிகாட்டும் கல்
14. வடக்கு மதிற்சுவர் மீது நான்கு நிலைகள் கொண்ட கோபுரம் (திருமஞ்சன நுழைவாயில்)
15. வைப்பு அறை, வாகன மண்டபம்
16. நூற்றுக்கால் திருமண மண்டபம், அருள்தரும் சிவகாமி உடனாய அருள்மிகு நடராஜர் சன்னிதி.
17. அருள்தரும் காலபைரவி உடனாய அருள்மிகு காலபைரவர் சன்னிதி.
18. கொடி மண்டபம் (கொடிமரம், பலிபீடம், நந்தி, ஏரம்ப கணபதி, தண்டாயுதபாணி)
19. இரண்டாம் பிரகாரம் மூன்று நிலைகள் கொண்ட கோபுரம்
20. கிருஷ்ண பரமாத்மா
21. சொர்ண கணபதி சன்னிதி
22. நிர்வாக அலுவலகம்.
23. திருவருட்பிரகாச வள்ளல் இராமலிங்க சுவாமி சிலை
24. மடப்பள்ளி
25. நிர்வாக வைப்பு அறை, பிச்சாண்டவர் சன்னிதி
26. உற்சவ மூர்த்தி மண்டபம், செந்தூர் கணபதி.
27. 18 படி கொண்ட ஐயப்பன் சன்னிதி.
28. ஆறுமுகர் சன்னிதி (வள்ளி தெய்வானை)
29. ஒன்பது சிவலிங்கம், எட்டு நாகலிங்கம், பஞ்சமுக சதாசிவலிங்கம், காரைக்கால் அம்மையார்.
30. அருள்மிகு காசி விஸ்வநாதர் சன்னிதி.
31. சோம தீர்த்தம்
32. திருத்தல விருக்ஷம் (பனைமரம்) இரண்டாம் பிரகாரம், மொத்தம் 11 பலி பீடங்கள்.
33. செல்வ விநாயகர் சன்னிதி.
34. அருள்தரும் மரகதவல்லி அம்மையார் சன்னிதி, சண்டிகேஸ்வரி, காலபைரவர், சுவாமி பள்ளி அறை மற்றும் ஒன்பது பலிபீடங்கள்.
35. அருள்மிகு வெங்கடேசப் பெருமாள் கண்ணாடி அறை

36. கொடிமரம் பலிபீடம், சிம்ம வாகனம்
37. அருள்மிகு நடராஜர் சன்னிதி
38. நவக்கிரகம் மற்றும் சனீஸ்வரன்
39. யாக சாலை
40. வைப்பறை
41. சூரிய பகவான், 108 சிவலிங்கம்
42. அருள்மிகு சந்திர மௌலீஸ்வரர் சன்னிதி
43. மகா மண்டபம், துவார பாலகர்கள்
44. மூலவர் அருள்மிகு வழித்துணைநாதர் சன்னிதி.
45. பொள்ளாப் பிள்ளையார், அருள்மொழித் தேவர், (சேக்கிழார்) நம்பியாண்டார் நம்பி, நால்வர், 63 நாயன்மார்கள், நர்த்தன கணபதி, தட்சிணாமூர்த்தி, விஜயசப்த கன்னியர்கள்
46. லக்ஷ்மி சரஸ்வதி, சுந்தரேஸ்வரர், வாசுதேவப் பெருமாள்
47. பிரம்மதேவர், சண்டிகேஸ்வரர், துர்க்கையம்மன்
48. பிரம்ம தீர்த்தம், நீராழி மண்டபம், பிரம்மபுரீஸ்வரர் திருக்கோயில்.



குடமுழுக்கு என்பது என்ன?

திரு. சி. மூர்த்தி, முன்னாள் இராணுவ அதிகாரி, ஆர்க்காடு.

குடநீராட்டு, குட முழுக்கு என்ற பெயர்களில் வழங்கும் கும்பாபிஷேகம் புதிய கோயில் கட்டப்பெற்றபோதும், பழைய கோயில்களைப் புதுப்பிக்கும்போதும், நடைபெறும் திருவிழா. புனித நீரைக் கும்பங்களிலிருந்து, குறிப்பிட்ட நாளிலும் நேரத்திலும் ராஜகோபுரம், விமானம் ஆகியவற்றுக்கு நீராட்டுவதே தெளிப்பதே இத்திரு விழாவின் முக்கியமான கட்டம். இதற்காக, சில மாதங்களுக்கு முன்னரே பெரிய அளவில் ஏற்பாடுகள் தொடங்கும். யாக சாலைகள் முதலியன அமைக்கப் பட்டுவிடும்.

தமிழ்நாட்டுப் பெருங்கோயில்கள், உருவத்தாலும் பரப்பாலும் மிகப் பெரிய தோற்றம் உள்ளன. அவற்றை ஒரே பார்வையால் முழுமையாக நம் கண்களில் அடக்கிக்கொள்ள இயலாது. தொலை விலிருந்து பார்த்தால் பெரியதும் சிறியதுமான பல கோபுரங்களின் கூட்டம் மட்டுமே தெரியும். நெருங்கிச் செல்லச் செல்ல, பல மண்டபங்களும், தூண்களும் பல வேறு இயல்புகளும் சிற்பங்களும் நம் கண்களுக்கு விருந்தாக அமையும். *கும்பாபிஷேகம் என்பது பல கோபுரங்களையும் ஒருசேரக் காணும் வாய்ப்பு.* அது ஒரு புண்ணியக் காட்சி. குழுமியிருக்கும் திரளான மக்கள் கூட்டத்தின் கண்கள் அந்தக் கோபுரங்கள் மீது புனித நீர் ஊற்றும் காட்சியையே இமை கொட்டாமல் பார்க்கும்.

உலகமும் உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களும் நிலம், நீர், தீ, காற்று, வானம் ஆகிய பஞ்ச பூதங்களால் ஆனவை என்று இந்துக்கள் நினைக்கிறார்கள். இவை ஒவ்வொன்றும் ஒரு கருத்தின் சின்னம். *நிலம், பொருளைக் குறிக்கும். நீர், உயிர் ஓட்டத்திற்கு அறிகுறி. தீ, மனத்தை நினைவூட்டும். காற்று, அறிவியலுக்கு அப்பாற்பட்ட சக்திகளுக்குப் பிரதிநிதி. வானம், பேரின்பத்துக்கு அடையாளம்.* நிலத்துக்கு மஞ்சள், நீருக்கு வெள்ளை, தீக்குச் சிவப்பு, காற்றுக்குக் கருப்பு, வானத்துக்கு நீலம் இவ்வாறு பஞ்சபூதங்கள் பல நிறங்களால் சமயச் சடங்குகளில் உருவகப்படுத்தப்படுகின்றன. நீரும் காற்றும் இன்றி நிலத்தில் யாரும் வாழ இயலாததாகையால், சமயச் சடங்குகளில் ஏனைய மூன்றையும்விட இந்த இரு பூதங்களுக்குமே சிறப்பிடம் கொடுக்கப் படுகிறது.

நீரைச் சிறப்பிக்கும் தலையாய சடங்கு கும்பாபிஷேகம். தூய்மையான தெளிவான நீரை, பக்தி நிறைந்தவர்கள் சுத்தமான பாத்திரங்களில் புனிதமான ஆறுகள் உற்பத்தியாகும் இடங்களில் இருந்து எடுத்துக் கொண்டு வருவார்கள். இவை கும்பங்கள் எனப்படும் குடங்களில் ஊற்றி, மலர்களால் அலங்கரிக்கப்படும். குடநீராட்டு விழாவுக் கென்று போடப்பெறும் கவினுறு கொட்டகையில் அமைந்த யாகசாலையில் வரிசையாகக் கும்பங்கள் வைக்கப்படும்.

கும்பங்களிலுள்ள நீருக்கு மேலும் சக்தியும் புனிதமும் ஊட்டுவதற்காகப் புலமையும் ஒழுக்கமும் உடையவர்கள் மந்திரங்களை ஓதுவார்கள். தமிழ் வேதமான தேவாரம், திருவாசகம், திருப்புகழ் முதலியன பாடுவார்கள்.

இறைவனுக்குக் கோயில் கட்டும் சீரிய முயற்சியின் மங்களமான முடிவுதான் சம்புரோட்சனம். அதாவது கும்பாபிஷேகம், குடமுழக்கு என்ற பெயர்களால் மேற்கண்ட புனித நீரை ஊற்றிவழிபடுதல். *நம் மனத்தில் இறைவன் குடியிருக்கிறான். எனவேதான் நம் ஆன்மிக உணர்ச்சி பெற்ற மனமொழி மெய்களால் தூய்மையாக நடந்து கொள்ளவேண்டும் என்பதே கும்பாபிஷேகத் தத்துவம். குடமுழுக்கு நாளுக்குச் சில நாட்கள் முன்னரே இங்கு கலச பூசை, யாகம் முதலியன தொடங்கிவிடும்.*

கருவறையை இடையிடையே பேணுவதற்குக் கும்பாபிஷேகம் ஒரு வாய்ப்பினைத் தருகிறது. பீடத்தின் மீது வைக்கப்பட்டிருக்கும் திருவுருவங்கள் ஆடாமல் அசையாமல் உறுதியாக நிலைத்து இருக்கவேண்டும் என்பதற்காக **அஷ்ட பந்தனம்** என்ற மருந்தைச் சாத்துவது மரபு. இது கொம்பரக்கு, சுக்கான்தூள், குங்கிலியம், கற்காவி, செம்பஞ்சு, சாதிலிங்கம், தேன்மெழுகு, எருமையின் வெண்ணெய் என்ற எட்டுப் பொருள்களும் சேர்ந்த இரசாயனக் கலவை. இந்த மருந்தைச் செய்ய நியமிக்கப்படும் தொழிலாளர்கள் சுத்தமாகக் குளித்து, தூய மனமும் சிந்தனையும் கொண்டு பக்தியுடன் செய்யவேண்டும். மேலும், எந்த இறைவனுடைய கோயிலுக்குக் கும்பாபிஷேகம் நடைபெற இருக்கிறதோ அந்த இறைவன் பெயரைச் சொன்ன வண்ணமாயும் அவர்க்கு விருப்பமான (அல்லது அவர் புகழ்பாடும்) பாடல்களைப் பாடியவண்ணமாயும் மருந்தை இடிக்க வேண்டும்.

விருப்பமும் வசதியும் இருந்தாலும் *கூட இத்தகைய மங்கலக் காட்சிகளைக் காணும் பேறு கொடுத்து வைத்திருப்பவர் களுக்கே கிட்டும் என்பதும் ஒரு நம்பிக்கை.*

முதற்கட்டமாக, ஏற்கெனவே நாம் விவரித்தவாறு யாகசாலை கட்டி முடித்து அலங்கரிக்கப்படும்.

'இறைவனே உம்முடைய பெருங் கருணையால் கருவறையைப் புதுப்பிக்கப் போகிறோம். திருவருள் பாலித்து, தாங்களே இந்த இடத்தை விட்டு, நாங்கள் ஏற்பாடு செய்துள்ள யாகசாலையில் எழுந்தருள வேண்டும். கருவறைத் திருப்பணிகளை முடித்த பிறகு மீண்டும் எழுந்தருளலாம்' என்று வேண்டிக் கொள்வதே யாகசாலைப் பிரதிஷ்டை என்னும் ஆகமமுறை.

இவ்வாறு யாகசாலையில் எழுந்தருளிய இறைவன் இறைவியர் மற்றும் பரிவார தேவதைகளை வேள்விகள், பூசைகள் செய்த பிறகு மீண்டும் பெருங்கோயிலில் எழுந்தருளச் செய்வதே மகா கும்பாபிஷேகம்.

இறைவனுடைய குடும்பம் மிகப் பெரியது. ஆதலால் இக்குடும்பத்தார் அனைவரையும் ஒரு சேர ஒரே நாளில் ஒரே முகூர்த்தத்தில் எழுந்தருளச் செய்வது மிகச் சிறப்பானது.

அர்த்தநாரீசுவரர்

பேராசிரியர் **மா. வயித்தியலிங்கன்,** சென்னை.

தோலும், துகிலும் குழையும் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்கவளையும் உடைத்தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ!

இது திருவாசகச் செய்யுள்.

இறைவன் உருவமில்லாதவன். மேலைநாட்டுச் சமயங்கள் கூறுவதும் இதுவே. ஆனால் சைவம் சொல்லுகிறது இறைவன் உருவமில்லாதவன். அதாவது தனக்கென்று ஓர் உருவம் இல்லாதவன். எல்லா உருவப் பொருள்களின் உருவத்தையும் தனக்குரிய உருவமாகக் கொள்பவன்.

யார் ஒருவர் உள்குவார் உள்ளத்துள்ளே
அவ்வுருவாய் நிற்கின்ற அருளும் தோன்றும்

இந்த உருவத்தில் நீ வரவேண்டும் என்று அன்பர்கள் நினைத்தால் அந்த உருவத்தோடு வந்துவிடுவானாம் இறைவன்.

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்

என்ற திருக்குறளுக்கு உரை வகுக்க வந்த பரிமேலழகர் அன்பால் நினைவாரது உள்ளக் கமலத்தின் கண்ணே அவர் நினைந்த வடிவோடு விரைந்து சேரலின் ஏகினான் என இறந்த காலத்தாற் கூறினார் என்று உரை கூறினார். நினைந்த வடிவோடு என்னும் தொடர் மீளமீளச் சிந்தித்து மகிழத்தக்கது.

குழந்தை பிறந்த முதன் முதலாக அறிவது தன் தாயையும் தந்தையையும் தானே! தந்தையையும் தாயையும் ஓருருவில் காண அன்பர் விழைந்தால் அதுதானே முதன் முதல் அவன் மேற்கொள்ளும் வடிவம் ஆகும்! அதனால் மணிவாசகப் பெருமான் தொன்மைக் கோலம் என்கிறார்.

இப்பாட்டைச் சற்று நுணுக்கமாகக் கவனிக்க வேண்டும்.

வலப்பால் சிவ உருவமும் இடப்பால் அன்னை உருவமும்

சிவ உருவம்	–	தாயுருவம்
தோல்	–	துகில்
குழை	–	சுருள்தோடு
வெண்ணீறு	–	பசுஞ்சாந்து, பைங்கிளி
சூலம்	–	வளை

அம்மையுருவத்தில் பைங்கிளி கூடுதல் அதற்கு இணையாக வலப்பால் ஏதும் கூறாது முடித்தார் மணிவாசகர்.

இது எதனை உணர்த்துகிறது. அன்னைக்குச் சற்று மிகுதியாகப் பங்கு உண்டென்று உணர்த்துவதற்காகவே என்னலாம்.

திருஞானசம்பந்தப் பெருமான் வண்டார் குழல் உமையாளொடும் உடனாகிய ஒருவன் என்று தொடங்கினார். அப்போதே மாது ஒரு பாதியைக் குறிப்பிட்டது ஆகிறது. ஆனால் பெண்தான் மிக ஆனான் பிறைச்சென்னிப் பெருமானூர் என்கிறார்.

பெண்தான் மிக ஆனான் என்பதன் பொருள் என்ன! கூறியது கூறலாகாதா?

அது மட்டுமா?

உண்ணாமுலை உமையாளொடும்
உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான்

என்கிறார் திருவண்ணாமலைப் பதிகத்தில் பெண் உடனாகிய ஒருவன் பெண் மிக ஆனான் என்கிறார்.

என்ன பொருள்?

இதனால் அர்த்தநாரி திரு உருவத்தைக் கல்லில் வடிக்கும்போது பெண்பாகம் அளவில் சற்றுப் பெரிதாக அமைப்பது சிற்ப மரபு. பொதுவாகப் பெண் பாகத்தில் திருமுலையும், திருஅரைப் பகுதியும் ஆண்பாகத்தைவிடச் சற்று மிகுத்துத் தோன்றுமாறு அமைப்பது வேண்டும். இதற்கு நேரிய எடுத்துக்காட்டு திருக்குடந்தைக் கீழ்க் கோட்டமாகிய நாகேசுரர் கோயிலில் இறைவன் கருவறை மேற்குப் புறத்துக் கோட்டத்தில் அமையும் அர்த்தநாரி வடிவத்தையே பலரும் எடுத்துக்காட்டுவர். அத்துணை அழகிய திருவுருவம் அதுவாகும்.

இறைவன், கருவறை மேற்குப் புறத்துக் கோட்டத்தில் அர்த்தநாரியைப் பிரதிட்டிப்பது பல்லவர் காலத்திலும் அதற்கடுத்த காலகட்டத்தில் திருமாலைப் பிரதிட்டிப்பதும் பிற்காலத்தில் இலிங்கோற்பவரை அமைப்பதும் வழக்கம் ஆதலைக் காண்க.

குடந்தைக் கீழ்க்கோட்டம்
திருத்தவத்துறை – அர்த்தநாரி
திருவான்மியூர் – திருமால்
பல கோயில்கள் இலிங்கோற்பவர்
ஒன்றும் காணப்
பெறாத கோயில் – திருநெல்வேலி

இறைவன் தன் உருவத்தில் உலகத்து உயிர்களைப் படைத்தான் என்பது விவிலியக் கோட்பாடு. உருவவழிபாட்டை ஒத்துக்கொள்ளாத மேலைச் சமயமாகிய விவிலியத்தில் கடவுளுடைய உருவம் உலகத்து உயிர்களின் உருவாய் என்பது ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இதன் பொருள் என்ன? உலகத்து உயிர்கள் யாவும் ஆணும் பெண்ணும் ஆகிய உடம்புகள் உடையன. கடவுள் தம்முருவமாக உலகத்து உயிர்களைப் படைத்தார் எண்ணும்போது அம்முதல்வனுடைய உருவமும் ஆணும் பெண்ணுமாகவே இருத்தல் வேண்டும். அதுவும் ஓருடம்பிலேயே இருத்தல் வேண்டும். எனவே அர்த்தநாரி கோட்பாடு தொன்றுதொட்டதாக இருக்கவேண்டும் என்பதும் தொன்மைக் கோலமே நோக்கிக் குளிர்ந்து ஊதாய் கோத்தும்பீ என்னும் திருவாசக மறைக்கு இது விளக்கமாக அமைவதும் கண்டு மகிழலாம்.

விவிலியமறையில், தம்முருவமாக உலகத்துயிர்களைப் படைத்தார் எனின் உலகத்து உயிர்களையெல்லாம் கடவுள் உருவமாக எண்ண வேண்டும் என்பது பொருளாகாது. மற்ற உயிரினங்களை மனிதனின் பயன்பாட்டுக்காகவே படைத்தார் என்னும் அதன் கோட்பாட்டுக்கு முரணாகும்.

அம்சுமத்பேதம் என்ற ஆகமம் சொல்லுகிறது வலப்பாதம் நேர்நின்று ஊன்றியநிலையிலும் இடப்பாதம் வளைத்தூன்றியதாகவும் அமைக்க. நாற்கரம் கொண்ட உருவில் வலமேற்கை

மழுவும் கீழ்க்கை அபயமும் தாங்கியிருக்க வேண்டும். இடமேற்கை மலர் தாங்கியிருக்க கீழ் முழங்கை இடபத்தின் மீது ஊன்றியதாக அமைக்க வேண்டும். இரண்டு கைத் திருஉருவில் வலப்புறம்வரதம் இடக்கை மலர் தாங்கியிருக்க வேண்டும்.

வலக்கரம் வரதம் இடமுழங்கை இடபத்தின் மேல் ஊன்றியவாறு அல்லது வலக்கரத்தில் கபாலம் (பிச்சைப் பாத்திரம்) இடக்கரம் நாற்றிய நிலை வலக்கண் உருத்த பார்வை. இடக்கண் குளிர்பார்வை வலப்புறம் தொடைகளிடையில் செருகிய ஆடை. இடப்புறம் அவ்வாறே செருகிய சேலை.

இவ்வாறே உத்தரகாமிகம், சுப்பிர பேதம், சிற்பரத்தினம், விஷ்ணுதர்மோத்தரம், பூர்வகாரணம் முதலிய பல ஆகமங்களில் பலப்பல வேறுபாடுகளுடன் அர்த்தநாரி உடை, அணிகலங்கள், உடலமைப்புகள் கொண்டவராய் வருணிக்கப்படுகிறார். விடையுடனும் விடை இன்றியும் அவர் திருவுருவங்கள் அமைகின்றன.

அர்த்தநாரி என்றவுடன் திருச் செங்கோடு என்ற திருக்கோயில் நினைவே யாவர்க்கும் தோன்றும். நெடிய மலையுச்சியில் அமைந்த திருக்கோயிலில் மாதொருபாகர் திருமூலட்டானத்தில் நின்ற திருக்கோயிலில் காட்சி தருகிறார். உளிபடாத தான் தோன்றித் திருமேனி. அவர் திருவடியின் கீழ்ச் சிறு பள்ளத்தில் நீர் ஊறிக் கொண்டிருக்கிறது. அது பக்தர்களுக்கு வழங்கப்படுகிறது.

மூலவர் சதாசிவத் திருமேனியாக இலிங்கமூர்த்தியாக அல்லாமல் மாதொரு பாகராக உள்ள திருக்கோயில் இது ஒன்றே. நடராச மூர்த்தியாகத் தில்லையிலும், மாலொருபாகராக திருவேங்கடத்திலும், திருச்சோலை மலையிலும், ஆலமர் செல்வராகப் பட்டமங்கையிலும், வேறு திரிபுராந்தகராக, காலசம்மாரியாக, அவ்வகை வேறு மாகேசுரமூர்த்தங்களாகத் தனிப்பெருஞ் சந்நிதிகளிலும் இறைவன் கோயில் கொண்டிருக்கக் காணலாம். திருவேங்கடம், சோலைமலை என்பன பிற்காலத்தில் முழு வைணவக் கோயில்களாக மாற்றம் பெற்றன.

தென்பால் உகந்தாடும் தில்லைச் சிற்றம்பலவன்
பெண்பால் உகந்தான் பெரும்பித்தன் காணேடி
பெண்பால் உகந்திலனேல் பேதாய் இருநிலத்தோர்
விண்பால் யோகெய்தி வீடுவர்காண் சாழலோ!

என்று திருவாசகம் கூறுகிறது.

பெண்பால் உகந்த தத்துவம் சத்தியைப் புணர்ந்து உலகு உயிர் எல்லாம் ஈன்று புரந்து வருவதற்காகவே என்பதனை உணர்த்துகிறது.

ஆணும் பெண்ணும் ஒருருவாய தத்துவம் இரு பாலிடையும் வேற்றுமை யில்லை என்பதனை உணர்த்துகிறது.

இறைமை எங்கே எட்டாத தொலைவில் உள்ளது என்று ஏக்கப்படாது இதோ என் அப்பன்; என் அன்னை; என உறவு கொண்டாடுவதற்குரிய உரிமையை உணர்த்துகிறது.

வேண்டும் தெளிவு!

படைக்களப் பாவலர் **துரை. மூர்த்தி**

அறமும் மறமும் அறிவார் திறமும்
சிறந்த தெளிவுமே வேண்டும்! – மறந்தும்
பிறர்க்கின்னல் செய்யாப் பெருநிலை வேண்டிப்
பரவு மனமே பணிந்து.

பணிவும் துணிவும் பயனிசை கூட்டும்
இனிமையே என்றென்றும் வேண்டும்! – கனிந்த
உயரன்பால் என்றும் உலகுய்ய வேண்டும்
துயர்கொய் மனமே துணிந்து.

துணிந்தெலாம் செய்து துயரின்னல் பட்டுச்
பிணியுடன் மாயவா வேண்டும்? – தனித்த
அரும்பெரும் பண்பால் அனைவரும் போற்றும்
அருமனமே என்னைநீ ஆள்.

ஆள்வினை யாவும் அருமறை யாக்கிடும்
நாள்தோறும் நாட்டும் நலம்வேண்டும்! – வாள்போல்
துயரை அறுத்துத் துணிவே துணைகொள்
உயர்மனம் நின்னால் உயர்வு.

உயர்வெலாம் வேண்டும் உலகுயர வேண்டும்
வியர்வையால் வெற்றிகள் வேண்டும்! – செயற்கரிய
செய்யவே வேண்டும்! சிறந்துச் சிறக்கவேண்டும்!
மெய்மனமே மேன்மையால் மீட்டு.

மீட்டுவார் மீட்டின் மிகுஇசை மீட்டிடும்
ஊட்டும் அமுதாய் உயர்வுவேண்டும்! – ஏட்டறிஞர்
வேண்டுவன எல்லாம் விரிக்கும் மனம்எய்தி
வேண்டாத தெல்லாம் விலக்கு.





வாழ்த்து

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்றுளார் அடியார் அவர் வான்புகழ்
நின்றது எங்கும் நிலவி உலகெலாம்.

வையம் நீடுக மாமழை மன்னுக
மெய் விரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறிதான் தழைத்தோங்குக
தெய்வ வெண் திருநீறு சிறக்கவே.

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன் முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகம் எல்லாம்

விரிஞ்சிபுரம்

மார்க்கபந்தீஸ்வரர் ஆலய கும்பாபிஷேகம்

சிறப்புற


நல்வாழ்த்துகள்



J.இலட்சுமணன்


தொழிலதிபர், ஆற்காடு.


செல் : 94433 35151


விரிஞ்சிபுரம்
மார்க்கபந்தீஸ்வரர்
ஆலய கும்பாபிஷேகம்
சிறப்புற நல்வாழ்த்துகள்
Ph : 04172-236250
Cell : 9842362000
ஆற்காடு
கல்லூரி
சேர்மன் A.K. நடராஜன்



விரிஞ்சிபுரம்
மார்க்கபந்தீஸ்வரர்
ஆலய கும்பாபிஷேகம்
சிறப்புற நல்வாழ்த்துகள்
செல் : 9443235666
Rtn.S.குமார்
S.K.டிரேடர்ஸ்
No.17, ஜீவானந்தம் சாலை, ஆர்க்காடு-632 503. வே.மா.


விரிஞ்சிபுரம் மார்க்கபந்தீஸ்வரர் ஆலய கும்பாபிஷேகம்
சிறப்புற
நல்வாழ்த்துகள்




விரிஞ்சிபுரம்
மார்க்கபந்தீஸ்வரர்
ஆலய கும்பாபிஷேகம்
சிறப்புற நல்வாழ்த்துகள்
கு.சரவணன்
நெல், அரிசி வணிகம்,
அண்ணாமலையார் அறக்கட்டளை,
ஆர்க்காடு.
செல் : 9443106875.

விருத்தபுரம்

மார்க்கபந்தீஸ்வரர் ஆலய கும்பாபிஷேகம்

சிறப்புற நல்வாழ்த்துகள்





பென்ஸ். பாண்டியன்

எஸ்.ஆர்.பி. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்

ஆர்க்காடு.

செல் : 94432 33147






விரிஞ்சிபுரம்
மார்க்கபந்தீஸ்வரர்
ஆலய கும்பாபிஷேகம்
சிறப்புற நல்வாழ்த்துகள்
N.P. பழனி (MLT)
ஸ்ரீ S.P.S. செல்வலக்ஷ்மி டிரேடர்ஸ்
காய் கனி கமிஷன் மண்டி
நெ.27/2, நேத்தாஜி மார்க்கட், வேலூர் -4
போன் : 0416 - 2220469, 2233469, செல் : 99943 78687



விரிஞ்சிபுரம்
மார்க்கபந்தீஸ்வரர்
ஆலய கும்பாபிஷேகம்
சிறப்புற நல்வாழ்த்துகள்
N.P. மூர்த்தி
மகாலஷ்மி டிரான்ஸ்போர்ட்
மகாலஷ்மி கார்கோ கேரியர்ஸ்
மகாலஷ்மி என்ஜினியரிங் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்
ஓட்டல் மகாலஷ்மி
எம்.பி.டி.ரோடு, நவல்பூர், இராணிப்பேட்டை - 632 401.
போன் : 04172 - 272744, 272220, 274555, 275111, 275222



T. மோகனசுந்தரம் - M. சுகந்தி

M. கௌதம் B.E., - M. தீபன்

41-A, ஆபிஸர்ஸ் காலனி, போரூர், சென்னை-117.


விரிஞ்சிபுரம் மார்க்கபந்தீஸ்வரர் ஆலய கும்பாபிஷேகம்
சிறப்புற
நல்வாழ்த்துகள்
Rtn. S. இளங்கோவன்,
ஸ்ரீ கலைமகள் டிரான்ஸ்போர்ட்,
நெ. 30, பெங்களூர் ரோடு,
வேலூர் – 632 004.
போன் : 0416-2222339,
செல் : 94433 27939.


விரிஞ்சிபுரம்
மார்க்கபந்தீஸ்வரர்
ஆலய கும்பாபிஷேகம்
சிறப்புற
நல்வாழ்த்துகள்





ஆட்சித் தலைவர் திரு. செ. இராஜேந்திரன் அவர்கள்
அடிகளாரின் தொண்டினைக் கண்டு ஆனந்தப்படுகிறார்

திருமுருகன் அடிமையின் விருப்பங்கள்,
திருப்பணியால் நடந்த திருப்பங்கள்!


















கோபுரம் இல்லா மேற்கு வாயில் - புதிய
கோபுரத்தால் உயர்ந்த அழகு வாயில்









அன்று கலையிழந்த கோபுரங்கள்,
இன்று கலை மிளிரும் சிகரங்கள்!










மோனத் தவசியின் எண்ண வடிவங்கள்,
வானத்தை அளாவும் வண்ண கோபுரங்கள்!









செடி முளைத்த கோபுரங்கள் - இன்று
செம்மை கொண்ட சிகரங்கள்!








அன்று மன்னர் கட்டிய கிழக்கு இராச கோபுரம்
இன்று மாமுனி கட்டிய மேற்கு மஞ்சள் கோபுரம்







கல்லிலே கலைவண்ணம் கண்டான்...











கண்கவர் அற்புதச் சிற்பங்கள்...



வியக்க வைக்கும் விரிஞ்சை ஓவியங்கள்...










ஓவியங்கள் கூறும் காவியங்கள்...





















கல் ஒன்று! தூண் நான்கு!!




ஆலயத்தின் அற்புத சிற்பங்கள்


ஆலயத்தின் அற்புத சிற்பங்கள்



சிவன் பூண்ட பிச்சாண்டவர் கோலம்...

சுவாமியின் தொண்டினைக் கண்டவர் வியந்தனர்!
திருப்பணி நடந்திட நன்கொடைத் தந்தனர்!

















தவத்திரு சுவாமியின் எண்ணங்கள், சிதலங்கள் சீர்பெற்ற வதனங்கள்!





















திருப்பணியை பார்வையிடும் சுவாமிகள்...



விரிஞ்சி மலரை பார்வையிடுதல்.

குடமுழுக்கு விழாவை சிறப்பித்த அருளாளர்கள்





குடமுழுக்கு விழாவை சிறப்பித்த அருளாளர்கள்






குடமுழுக்கு விழாவை சிறப்பித்த அருளாளர்கள்





குடமுழுக்கு விழாவை சிறப்பித்த அருளாளர்கள்





குடமுழுக்கு விழாவை சிறப்பித்த அரசியல் பிரமுகர்கள்





குடமுழுக்கு விழாவை சிறப்பித்த அருளாளர்கள்





குடமுழுக்கு விழாவை சிறப்பித்த அருளாளர்கள்





குடமுழுக்கு விழாவை சிறப்பித்த அருளாளர்கள்






விரிஞ்சிமலர் வெளியீட்டு விழா...

















குடமுழுக்கு விழாவில் கலந்துகொண்ட அருளாளர்கள்






விரிஞ்சியின் சிறப்பாம் சிம்மக்குளம், கார்த்திகை கடைஞாயிறில் திறக்கும் காட்சி!






நன்னீராட்டு பெருவிழாவைக் காணும் பக்த கோடிகள்...





















திருப்பணியை முடித்திட்ட திருவருளை
நன்றியோடு பணிகிறார் அடிகளார்





குடமுழுக்கு விழாவிற்கு வருகை தரும்
பக்தர்கள் அனைவரையும்
வருக! வருக! என வரவேற்கிறோம்...



இரத்தினகிரி

அருள்மிகு பாலமுருகன் திருக்கோயில் பணியாளர்கள்



விரிஞ்சிபுரம்
சிம்மக் குளம்
காலமறிவான்! கருணை புரிவான்! இரத்தினகிரியான்!
இரத்தினகிரி திருக்கோவில் தெப்பக்குள
திருப்பணியில் நீங்களும் பங்கு பெறுங்கள்.
நிரந்தரமான தருமத்தை நீங்கள்
நிலைநாட்டிய பாக்கியம் பெறுங்கள்.
அன்புடன் வேண்டும்...
Rtn. PP. PHF. K.பாஸ்கரன்
நியூ S.கண்ணன் ஸ்வீட் லேண்ட் & AKB பேக்கரி
174, அண்ணாசாலை, ஆற்காடு - 632 503. வேலூர் மாவட்டம்.
போன் : (04172) 235402, செல் : 94434 03443.